முரட்டாட்டத்தை மேற்கொள்ளுதல்

ஆன்மீகக் குஷ்டத்தை சுத்திகரித்தல்

ஓர்
அனுபவ சாட்சியும்
போதனைகளும்

போதகர் பாப் ஸ்வாங்க்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

CLEANSING THE LEPER

OVERCOMING REBELLION

A
PERSONAL
WITNESS
AND
TEACHING

PASTOR BOB SWANK

TRANSLATION
REV. T. SAM JEYAPAUL

முரட்டாட்டத்தை மேற்கொள்ளுதல்

(ஆன்மீகத் தொழுநோயாளியின் சுத்திகரிப்பு)

ஆசிரியர்

போதகர். பாப் ஸ்வாங்க்

CLEANSING THE LEPER

OVER COMING

Rebellion

by

PASTOR BOB SWANK (U.S.A)

தமிழாக்கம்

Rev T. சாம் ஜெயபால்

வெளியீடு

Rev K.P. மைக்கேல் சாமி

எஸ்தர் பப்ளிகேஷன்ஸ்

50L, திருவனந்தபுரம் சாலை,

பாளையங்கோட்டை

திருநெல்வேலி - 627 002

இந்தியா

☎ (0462) 575302

முரட்டாட்டத்தை மேற்கொள்ளுதல்

முதல் பதிப்பு : டிசம்பர் 1999

All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photo-copy, recording, or any information storage and retrieval system, without permission in writing from the author.

Copy right :

Rev. K.P. Michael Samy
Esther Publications
50L, Trivandrum Road
Palayankottai,
Tirunelveli - 627 002
India
Telephone : 0462 - 575302

அறிமுகவுரை

இந்நூலின் ஆசிரியர் பாஸ்டர் பாப் ஸ்வாங்க் அவர்களை இந்நூலின் மூலம் அறிமுகப்படுத்துவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த புத்தகம் யாவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக இருக்குமென்று விசுவாசிக்கிறேன். 1997ஆம் வருடம் அக்டோபர் மாதம் கடைசி வாரத்தில் வடமெரிக்காவில் உள்ள ஆர்கான்சா மாகாணத்தில் உள்ள ஹாட்ஸ்பிரிங்ஸ் என்னும் பட்டணத்தில் ''பைபிள் கேம்ப்'' கூட்டம் நடந்தது. இதில் கலந்து கொள்ளும்படியாக நானும் ஒரு தேவமனிதனுடன் சென்றேன். இந்த கூட்டத்தில் சகோ.ஆரோன் என்பவரை இடைவேளை நேரத்தில் சந்தித்தபோது அவர் பலவிதமான சந்தேகங்களை என்னிடத்தில் கேட்டார். நான் அவருக்கு வேதத்திலிருந்து தெளிவாக சில காரியங்களை விளக்கினேன். கூட்டத்தின் முடிவில் அவருடைய பாஸ்டராகிய சங்கை பாப் ஸ்வாங்கிடம் அவர் ''நான் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டதில் இந்த கூட்டத்தில் பேசினது ஒன்றும் எனக்கு பிரயோஜனமாக இல்லை. ஆனால் இந்தியாவில் இருந்து வந்து கலந்து கொண்ட பாஸ்டர் மைக்கேல் சாமியிடம் சிறிது நேரம் பேசினேன். அது தான் எனக்கு பிரயோஜனமாக இருந்தது'' என்று சொல்லி எனக்கு சங்கை பாப் ஸ்வாங்கை அறிமுகப்படுத்தினார். சங்கை பாப் ஸ்வாங்கும் நானும் பல விஷயங்களை பேசினோம்.

அந்த நேரத்தில்தான் Cleansing the Leper என்ற புத்தகத்தை அவர்கள் என்னிடம் தந்தார்கள். நான் இந்த புத்தகத்தை வாசித்து விட்டு, 1998ஆம் வருடம் அக்டோபர் மாதம் அதே கூட்டத்தில் கலந்து கொண்ட போது சங்கை பாப் ஸ்வாங்கிடம் சொன்னேன். இந்த புத்தகம் எனக்கு மிக பிரயோஜனமாக இருந்தது. விசேஷமாக எனது மருமகன் சங்கை சாம் ஜெயபாலும் வாசித்து விட்டு, இந்த புத்தகத்தை தமிழில் மொழிபெயர்த்தால் தமிழ்நாட்டு ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்று சொன்னார்கள். எனவே இதை தமிழில் மொழி பெயர்க்க அனுமதி தரவேண்டும் என்று கேட்டேன். அப்படியே அனுமதியும் தந்தார்கள்.

''முரட்டாட்டத்தை மேற்கொள்ளுதல்'' எனும் இப்புத்தகம் இதனைப் படிக்கவிருக்கும் ஒவ்வொரு தேவ பிள்ளையையும், ஊழியரையும், ஒரு உண்மையான உயிர் மீட்சிக்குள் வழி நடத்தும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமுமில்லை. குறிப்பாக மற்றோரை தேவனுக்குள் கொண்டு வரும் ஆத்தும ஆதாயப் பணி செய்வோர் தங்களுக்குள் தேவன் தொடர்ந்து கிரியை நடப்பித்து தங்களை சீர்படுத்த அவருக்கு விட்டுக் கொடுப்பதன் அவசியத்தை சங்கை பாப் இந்நூலில் தெளிவுற விளக்கிக் காண்பிக்கிறார்.

சங்கை பாப் ஸ்வாங்க்கும், அவருடைய மனைவியாகிய அன்பிற்குரிய சகோதரி மேரி ஸ்வாங்க்கும் வேதாகம கல்லூரியில் படிக்கும் போதே தேவன் இந்தியாவைப்பற்றி தரிசனம் கொடுத்ததாக சொன்னார்கள். தேவனுடைய ஊழியத்தில் மிகவும் பாரத்துடன் தங்களது வாலிப காலத்தில் ஆப்பிரிக்க தேசம் சென்று கர்த்தருடைய ஊழியத்தை மகிமையாகச் செய்து, பல சபைகளை ஸ்தாபித்தார்கள். தற்காலம் அமெரிக்காவிலுள்ள இன்டியானா என்ற மாகாணத்தில் லாபோர்ட் என்ற பட்டணத்தில் அருமையான சபை ஊழியம் செய்கிறார்கள். பரிசுத்தாவியானவர் ஆதி அப்போஸ்தல சபைகளில் கிரியை செய்த வண்ணமாக இவர்கள் சபைகளிலும் கிரியை செய்கிறார்.

நான் இவர் சபையில் பிரசங்கித்த போது கூட்டத்தின் முடிவில் ஜனங்கள் திரளாக வந்து முன்பு நின்று கதறி கதறி அழுதனர். இயேசுவுக்கு தங்கள் ஜீவியத்தை ஒப்புக் கொடுத்தனர். தேவனுடைய மகிமையை அங்கு நான் கண்டேன்.

இந்த புத்தகத்தை நல்ல தமிழில் மொழி பெயர்த்து தந்த எனது மருமகன் சங்கை சாம் ஜெயபால் அவர்களுக்கும் உடன் உதவிய எனது மகள் லில்லி ஜெயபாலுக்கும், நேர்த்தியாக இப்புத்தகத்தை அச்சிட்டுக் கொடுத்த பாளையங்கோட்டை டயோசீசன் அச்சகத்தாருக்கும் எஸ்தர் பப்ளிகேஷன்ஸ் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பாஸ்டர் K.P. மைக்கேல்சாமி
பாளையங்கோட்டை

தொடர்ந்து ஆவிக்குரிய புதிய புத்தகங்கள் எமது பதிப்பகத்தின் மூலம் வெளிவர ஜெபியுங்கள். உங்கள் பொருளுதவிகளால் எமது ஊழியங்களைத் தாங்குங்கள்

வெளியீட்டாளர்

எஸ்தர் பப்ளிகேஷன்ஸ்,

50 L, திருவனந்தபுரம் சாலை
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி - 627 002. இந்தியா

தொலைபேசி: 0462-575302

பொருளடக்கம்

அறிமுக உரை

முன்னுரை

ஆரம்ப வரிகள்

1 உருவாக்குதலின் ஆண்டுகள்

அழைப்பும் - ஏற்பாடும் 1

ஊழியக்களம் 12

2 வனாந்திர வருடங்கள்

முரட்டாட்டம் எனும் பாவம் 19

தொழுநோயும் முரட்டாட்டமும் 23

வேதத்தில் உள்ள மாதிரிகள் 33

3 ஆண்டவரைப் பற்றும் அன்பு

முரட்டாட்டத்திலிருந்து விடுதலை 39

ஆசாரியனிடம் கொண்டு வரப்படல் - சுத்திகரிக்கப்பட வேண்டியவன் தன்னைக் கழுவுதல் வேண்டும் 48

ஏழாம் நாளில் அவன் சிரைத்து, தோய்த்து ஸ்நானம் பண்ண வேண்டும் 59

பொல்லாத ஆவிகளிலிருந்து விடுதலை 65

குற்ற நிவாரண பலி 71

ஆழாக்கு எண்ணை 73

திருமதி மேரி லோவா ஸ்வாங்க் அவர்களின் சாட்சி 79

4 தவறுகளை சரி செய்தல்

பரிசுத்தத்துக்கு எதிரான தீமைகள் 89

நஷ்ட ஈடு 92

பாவ நிவாரண பலி 101

5 கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற மனிதனின்
நிபந்தனையற்ற அர்ப்பணம் 114
அக்கினியினாலான பேரழிவு 116

6 பிதாவின் முத்திரையை உறுதிப்படுத்துதல்
போஜன பலி 125
பாடுகள் 126
பலத்தினால் இடைக்கட்டப்படுதல் 145
சுருங்கிப்போன கை 147
மரணத்தருவாயில் உண்டான சுகம் 148
அழிவின் விளிம்பில் விடுதலை 154
புகையிலையிலிருந்து விடுதலை 161
நிக்கோட்டின் அடிமைத்தனத்தினின்றும் விடுதலை 164
தற்காலத் தடுமாற்ற இசையிலிருந்து விடுதலை 165
சாட்சிகள் 167
உடன்படிக்கையின் மகத்துவம் 175

7 பிரதிபலிப்புகள்
(எண்ணங்களும் கேள்விகளும்)
1) அவர்கள் எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின் சென்றார்கள் 178
2) நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் 179
3) இதை வாங்கி உங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ளுங்கள் 180
4) எல்லாவற்றையும் துறத்தல் 182
5) யாரோ ஒருவர் என்னைத் தொட்டார் 183
6) அறுவடையின் போது அவர் ஒரு வேலையாளை அனுப்பினார் 184

1. உருவாக்குதலின் ஆண்டுகள்

பின்பு அவர் ஒரு மலையின்மேல் ஏறி, தமக்குச் சித்த மானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார்; அவர்கள் அவரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அவர் பன்னிரெண்டு பேரைத் தெரிந்து கொண்டு, அவர்கள் தம்மோடே கூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர் களாயிருக்கவும் அவர்களை ஏற்படுத்தினார். மாற்கு 3:13-15

அழைப்பும் - ஏற்பாடும்

கர்த்தர் தாம் விரும்புவோரை தமக்கென்று அழைக்க ஒரு வழிமுறையை வைத்திருக்கிறார். அவர்கள் தம்மோடிருக்கவும், தாம் அனுப்பும் இடமெங்கும் சென்று பிரசங்கிக்கவும், உபதேசிக்கவும் அவர்களை ஏற்படுத்துகிறார். தேவனுக்கு மகிமை சேர்க்கும் பலாபலன்களை விளங்கப் பண்ணும் வல்லமையை உடையவர்களாய் அவர்களைக் காண்பதே தேவனால் அழைக்கப்பட்டவர்களைக் குறித்த தேவ நோக்கமாகும். (பார்க்க - மாற்கு 3:13-15)

இரண்டாம் உலகப்போரின் வேளையில் நான் கடற்படைப் பொறுப்பில் இருந்த போது கர்த்தர் தம்முடைய ஆவியினால் என்னைத் தொட்டு தமக்குரியவனாக்கினார். பின்னர், கலிபோர்னியாவிலுள்ள சான்டா அனா கடற்படைத்தளத்தில் முகாமிட்டிருந்த வேளையில், ஆண்டவரின் அருட்பணிக்கான அழைப்பு என்னை அண்டி வந்தது. ஒரு வார இறுதிப்பொழுதில் மிகுந்த அமைதல் அடித்தள மிட்டிருக்க என்னுடையவனாயிருக்கும்படி உன்னை எனக்கென்று அழைத்து ஏற்படுத்துகிறேன் என்ற வார்த்தை தேவனிடமிருந்து என்னை நோக்கிப் புறப்பட்டு வந்தது.

போர்வீரர்கள் தங்கும் பகுதிகள் தனிமையானவைகளாகவும், இடையூறு இல்லாதவைகளாகவும் இருப்பதனால் நான் நிம்மதியாகப் படுத்து குறுக்கீடுகளின்றி வேதாகமத்தைப் படித்துக் கொண்டிருந்தேன் நான் அவ்வாறு படித்துக் கொண்டிருக்கையில் என் நினைவுகள் ஒரு கனவு போல ஆப்பிரிக்காவையும், ஆப்பிரிக்க மக்களையும் வட்டமிட லாயிற்று. ஆப்பிரிக்கா வெகு தூரத்திலுள்ள ஒரு இடம். என்னைப் பொறுத்தவரை அது ஓர் புதிர் நிறைந்த பூமி. ஆப்பிரிக்காவைக் குறித்து நான் கேட்டறிந்திருந்த வினோதமான காரியங்கள் அக்கண்டத்தை எனக்கோர் மாயாஜால மண்டலமாகவே புலப்படுத்தியிருந்தன. அங்குள்ள ஜனங்கள் கறுப்பு நிறத்தவர்களாகவும், விளங்கிக் கொள்ளக் கூடாத

வர்களாகவும் காணப்பட்டனர். அவர்களது கலாச்சாரம் மற்றவர்களால் விளங்கிக் கொள்ளக் கூடாததும், மற்றவர்களுக்கு திகைப்பூட்டக் கூடியதுமாகும். அவர்களது வரலாறு நிழல் படிந்த ஒன்றாகும். ஆப்பிரிக்காவின் பேரில் எனக்கு ஏன் ஒரு திடீர் உந்துதல் உண்டாயிற்று? இருள் நிறைந்த இக்கண்டத்தின் குடிமக்கள் மேல் எனக்குள் பெரும் மன உருக்கமும், அன்பும் உண்டாக, என் எண்ணங்கள் அனைத்தும் அவர்களை மையப்படுத்தியே வலம் வரலாயிற்று. அவ்வாறு நான் திறந்த என் வேதாகமத்தை மார்பின் மேல் போட்டுக் கொண்டு ஆப்பிரிக்கா நோக்கி என் எண்ணங்களை ஓட விட்ட அவ்வேளையில், ஆப்பிரிக்காவைக் குறித்து ஒரு சிறிதும் நான் அறிந்திருக்கவில்லை.

ஆயினும் அருட்பணியாளனான பொழுதோ ஆப்பிரிக்காவை யும், அதன் குடி மக்களையும் குறித்த தெளிவும், பூரண அறிவும் உடையவனானேன். ஆப்பிரிக்கர்களைக் குறித்த அவர்களது சரீரப் பிரகாரமான உணர்வுகள் உணர்ச்சிகள் சமுதாய மற்றும் ஆவிக்குரிய நிலவரம் அனைத்தையும் அறியலானேன். பல பல நூற்றாண்டுகளாகவே இம்மாபெரும் கண்டத்தின் பாமர ஜனங்கள் இளைப்புக்கும் களைப்புக்குமுரியவர்களாகவே காலந்தள்ளி வந்துள்ளனர். விருப்பு வெறுப்பு அறியாதவர்களாக சமத்தற்கரிய பாரத்துடன் நுகத்தடியில் பிணைக்கப்பட்டவர்களாய் ஆப்பிரிக்காவின் வெப்ப நிலை தாளாது கருகி உருவிழுந்து நின்றவர்களே ஆப்பிரிக்க பாமரர்கள். சிருஷ்டிப்பின் கால கட்டத்தில் அனைத்தையும் ஆண்டு அனுபவிக்க அதிகாரப்படுத்தப்பட்ட ஆதி மனிதனின் வம்சா வழி வந்தவர்களில் ஒரு கூட்டமே இவர்கள். தாங்கள் பயிரிட அறிந்திருந்த ஒரு வகை சோள தானியத்தை ஒருநாளைக்கு இருவேளை உணவு என்ற முறையில் உட்கொள்ளவும், தாங்கள் நெய்ய அறிந்திருந்த சாதாரண பருத்தி ஆடைகளைக் கொண்டே தங்களை மூடிக் கொள்ளவும் திருப்தியுற்றிருந்த ஜனங்கள் இவர்கள்.

புதிர்பூமியாகிய ஆப்பிரிக்காவில் புதிதாய் கால்பதித்த அருட்பணியாளனாக, எனது ஆப்பிரிக்க ஊழியத்தில் முதல் ஆண்டில், அப்பாமரர்களினிடையே பல கேள்விகளை எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். மேற்பாங்காய் நான் புரிந்து கொண்டதற்கிணங்க சில பதில்களையும் எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

ஆப்பிரிக்கக் குடும்பம் வீடு எப்படிப்பட்டது? : ஆப்பிரிக்க வீடுகள் வட்ட வடிவமான குடிசைகளாக, களிமண் சுவருடனும், வேயப்பட்ட கூரைகளுடனுமானவை. ஆப்பரிக்கக் குடும்பம் ஒரு அல்லது கூடுதலான மனைவிகளோடு கூடிய புருஷனைத் தலைவனாக கொண்டவை. அவனது மனைவியர் விறகு சேர்க்க, சமைக்க பிள்ளைகளை வளர்க்க புருஷனுக்கு துணை நிற்பர்.

ஆப்பிரிக்கக் குழந்தைகள் குறித்தவை : ஆப்பிரிக்கப் பெண்கள் மண்வெட்டி கொண்டு கடினவேலை செய்ய குனியும்பொழுதும் அயராமல் அவர்களது முதுகில் பாரமாய் அமர்ந்திருப்பவை ஆப்பிரிக்கக் குழந்தைகள். குழந்தைகளின் முதல் இருவருடங்கள் கஷ்ட ஜீவனம் தான் எனினும் பின் அவை பேரிடப்பட்டு வளரத்துவங்கும். குழந்தைப் பிறப்பு ஒன்றை தொடர்ந்து மற்றொன்று என்றபடி சில காலம் தொடர்பவை.

ஆப்பிரிக்கர்களின் அழகு மற்றும் சரித்திரச் சம்பவங்கள் : ஆப்பிரிக்க இனத்தவரிடையே நிகழும் குறிப்பிடத்தக்க காரியங்களிலொன்று திருமண வேளையில் அவர்கள் நடந்து கொள்ளும் முறையில் வெளிப்படும். ஒரு கூட்டம் மணமான பெண்கள் தங்கள் மார்பகங்களை திறந்து விட்டுக் கொண்டு முழங்காலில் நின்று மணப் பெண்ணுக்காக ஏந்திரத்தில் தானியம் அரைத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களது கைகள் ஓய்ந்து, ஏந்திரத்தோடு ஒட்டிக் கொள்ளுமளவும் அவர்கள் தொடர்ந்து அவ்வேலையில் ஈடுபட்டிருப்பர். அப்பெண்களின் கணவன்மார் அவர்கள் பின் இசைந்து வட்டவடிவில் நின்று, வந்திருப்போரை கவனித்துக் கொண்டிருப்பார்கள். என்னைப் பொறுத்தவரை, அவ்வாறான நிலையில் காணப்படும் அப்பெண்களின் உடம்பில் படிந்து பரவி நிற்கும் தூசியோடு கூடிய அங்க அமைப்புகளும், கருநீளக் கூந்தலும் அவர்களது அழகுக்கு மெருகூட்டும் அம்சங்களாகும்.

ஆப்பிரிக்கப் பெண்களின் பாதுகாப்பு அம்சம் : ஆப்பிரிக்கப் பெண்கள் பெற்றிருந்த பாதுகாப்பின் குறிப்பு அம்சம் அவர்களுக்கிருக்கும் பல பிள்ளைகளோடு கூடிய புருஷனும் அவனால் அவளுக்குக் கிட்டும் போஷிப்புமேயாகும். புருஷனில்லாத பட்சத்தில் அவளது வாழ்வு புறக்கணிக்கப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்ட வனாந்தர வாழ்வாகி விடும்.

ஆப்பிரிக்கர்களின் உழவு சாதனம் : ஆப்பிரிக்கப் பெண்களின் கைகளில் காணப்படும் மண் வெட்டும் சாதனம் தான் அவர்களை வறுமைக்கும் பட்டினிக் கொடுமைக்கும் விலக்கிக் காக்கும் ஆயுதமாகும். அவர்களுக்கு உதவும் இச்சாதனமே அவர்களது உயர்வுக்கும் வழி வகுப்பதாகும். இச்சாதனம் ஆப்பிரிக்க கிராமத்தினரிடையேயும் காணப்படும். இதுவே இவர்களது உழைப்புத்திறன் ஒரு காளைக்கு ஒப்பானதாகக் கூடியது என்பதை விளங்கப் பண்ணுவதாகும். உழைக்கும் திறன் கொண்ட மனித சமுதாயத்தினரை காளைக்கு ஒப்பிடுவதைப் பார்க்கிலும் மிஞ்சி வேறு எதனுடனும் ஒப்பிடுதலை இயலாத ஒன்றாகவே நான் கருதுகிறேன்.

ஆப்பிரிக்க கிராம மக்கள் பல நூற்றாண்டுகளாக அந்தகாரத்திற்கு அடிமைப்பட்டு மனிதர்களால் நசுக்கப்பட்டு, சாவை அணைத்துக் கொண்டவர்களாய், எதிர்பார்ப்பு, அன்பு, கவனிப்பு இவை எவற்றையும்

அறியாதவர்களாய் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள். சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைப் பெற்றிராத நிலையில் காணப்பட்ட அவர்கள் ஜீவியம் களையிழந்து வெறுமையில் நிற்கும் மகிமையிழந்த ஆதி சிருஷ்டிக்கு அடையாளமாயிருந்தது. தொடர்ந்தேர்ச்சையாக அவர்களில் நிகழ்ந்த அந்த விதமான பல்வேறு சங்கிலித் தொடர் காரியங்கள் அவர்களை நித்தியத்தைக் குறித்த கரிசனையும், நம்பிக்கையும், வருகைக்கான எதிர்பார்ப்புமற்றவர்களாய் நிறுத்தி விட்டன. தூதர்களை உண்டாக்கி, நட்சத்திரங்களை உருவகப்படுத்தி மனிதனுக்கு ஆளுகையும், அதிகாரமும் தந்து உயர்த்தின தேவன் என்னைக் குறித்து ஆப்பிரிக்க ஊழியத் திட்டத்தை மட்டுமே உடையவராயிருந்தாரோ?

ஆம். நான் கடற்படைத்தளத்தில் படுத்திருந்த இடத்தில் கர்த்தருடைய வார்த்தை எனக்கு நேரே வந்தது. நான் உன்னை அருட் பணிக்கெனவும், சுவிசேஷ ஊழியத்திற்காகவும் அழைத்திருக்கிறேன். என்னுடையவனாயிருக்கும்படி உன்னைப் பிரித்தெடுத்தேன் என்று தேவன் கூறினார். நான் இவ்விதமான விகற்பமான எண்ணங்களை உடையவனா யிருக்கவில்லை. எதிர்காலத்தைக் குறித்த எனது எண்ணங்களும் திட்டங்களும் அதுபோலிருக்கவில்லை. நான் இராணுவத்திலிருந்து கொண்டே கால்நடைத்துறை சம்பந்தப்பட்ட தபால் கல்வித் திட்டத்தில் பயின்று கொண்டிருந்தேன். எனது இராணுவ சேவை ஆண்டுகள் முடிந்தவுடன் கால்நடை பராமரிப்புத்துறை தலைமையகத்தில் பணியில் சேரவே திட்டமிட்டிருந்தேன். மட்டுமின்றி எனது குடும்ப பாரம் பரியத்தின்படி என் தந்தையை பின் பற்றி அவரது பண்ணையை பராமரித்து மேம்படுத்தவும் எண்ணியிருந்தேன். பேச அறியாத, சரளமாக உரையாட இயலாத, பண்ணையில் பிறந்து, வளர்ந்த, பேச்சு வழக்கமற்ற ஒருவனை தமக்காகப் பேசச் செய்ய தேவன் ஏன் தம் அணியில் சேர்த்தார் என என்னால் விளங்கிக் கொள்ள இயலவில்லை.

வடக்கு இன்டியானாவிலுள்ள போர்பான் எனும் ஊருக்கு அருகில் ஒரு எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் நான். எனது தகப்பனாரான திரு ரே. ஜேக்கப் ஸ்வாங்க், எனது பாட்டனாரான திரு ஜேக்கப் ஸ்வாங்கை பண்ணை வேலைக்கு ஏற்படுத்திய எனது பெரிய மாமா ஆதம் ஹெக்காமேனுக்காக வேலை செய்து கொண்டிருந்தார். எனது பெரிய பாட்டனாரான (பூட்டன்) ஆதம் ஸ்வாங்க் சிவில் போரில் ஷெர்மன் இராணுவப் பிரிவில் பணி புரிந்தமைக்காக ஒரு நிலம் பரிசாகப் பெற்று, முன்னமே மரித்துப் போனவர் அவரது மரணத்தை ஒட்டியே அவரது மனைவி மேரியும் பிரசவத்தின்போது மரித்துப் போனதால் எனது தாத்தாவான திரு ஜேக்கப்பும் அவரது சகோதரர்களும், சகோதரிகளும் அனாதைகளாக விடப்பட்டனர். எனது தகப்பனார்

தன்னிலை அறியும் பருவம் வரும் வரை, தனது எதிர்காலத்திட்டத்தை வரையறுக்க அறியும் வரை அவர் எங்கள் உறவினர் ஒருவர் பண்ணையில் வேலை செய்து கொண்டிருந்தார்.

நான் அமெரிக்காவின் புரையோடிப்போன கிராமப் புறங்களிலொன்றில் வளர்ந்து கொண்டிருந்தேன். நான் மிகுந்த குளிர் நிறைந்த நாட்களையும், சூடான, வெப்பம் நிறைந்த பகல், இரவு காலங்களையும் அனுபவித்து பழக்கப்பட்டவன். குதிரைகளைக் குறித்த எனது கடந்த கால பழக்கத்தை நினைவுபடுத்துகிறேன். வயல்வெளிகளின் விதைப்பு பயிர் செய்தல், அறுவடை என அக்காலப் பணிகளை எண்ணிப் பார்க்கிறேன். கொட்டடிகளில் அடைக்கப்பட்டிருந்த குதிரை மற்றும் கால்நடைகளின் பிரத்தியேக வாசனைகளை சிந்தைக்கு கொண்டு வருகிறேன். மாடுகளை குறித்தும் காட்டுப் பன்றிகளைக் குறித்ததுமான எண்ணங்கள் எழும்பி நிற்கின்றன. கோடை காலத்தின் சூட்டினால் வெளியேறும் அதிகமான வியர்வையினிமித்தம் உண்டாகும் கொப்பளங்கள் நினைவுக்கு வருகின்றன. மட்டுமின்றி விருந்தின்போது கிடைக்கும் ரொட்டி, மிட்டாய்கள் போன்ற தின்பண்டங்களின் வாசனை கூட ஞாபகத்திற்கு வருகிறது. குளிர்காலத்தின் போது பயன்படுத்த ஏறகெனவே வெட்டப்பட்டு பாதுகாப்பாய் அடுக்கப்படும் அடுப்பிற்கான விறகுக்கட்டைகளை மறக்கவியலாது. இவை அனைத்தும் கடந்த கால அனுபவங்களாய் நினைவில் தோன்றியுதோடன்றி வாழ்க்கையை சரியாய் வனைந்து கொள்ளுவதற்கேதுவான குணாதிசயங்களை உருவாக்கித் தந்தன.

எனது தகப்பனாரின் சொந்தப் பண்ணை குறித்த கனவு 1929ல் அமெரிக்காவில் உண்டான ஒரு தாழ்வு மண்டலத்தினிமித்தம் தாமதமாகியது. மட்டுமல்ல தகர்ந்தே போனது. நாங்கள் மறுபடியும் 1934இல் கூலிக்கு ஒரு பண்ணையில் வேளையில் அமர்ந்தோம். இம்முறை இது ஒரு அந்நியருடைய பண்ணையில் வேலை. இந்த கால கட்டம் எங்கள் வாழ்வில் கஷ்டமும், பாடுகளும் சூழ்ந்த இருள் நிறைந்த நாட்களாக, ஆத்துமாவுக்கு சோர்வைக் கொண்டு வந்தன. எனது தகப்பனார் இதினிமித்தம் கடூரமானவராக எப்போதும், கோபத்தினாலும், கசப்பினாலும் நிறைந்த நிலைக்கு மாறிப்போனார். தேசமே இயற்கைப் பாதிப்பினிமித்தம் கடும் அவதிக்கும், பற்றாக் குறைக்குள்ளும் அகப்பட்டுக் கொண்ட அபாயகரமான நாட்கள் அவை. இந்நாட்கள் ஜான் புல்லிங்கர் மற்றும் பேபி ஃபேஸ், நெல்சன் ஆகியோர் மேலோங்கி நின்ற பத்தாண்டுகளாகும். கொடுமையும், கலகமும் பெருகிப் போன காலகட்டம் அது.

நான் சிறுவனாயிருந்து, இளைஞனான பின் புருஷனான குறிப்பிட்ட நாட்களனைத்தும் இந்த கால வரையறைக்குட்பட்டவை தான். அந்நாட்களில் எனக்கும் என் தகப்பனுக்கும் ஒரு சரியான உறவு பரிபாலிக்கப்படாமலிருந்தபடியால் கோபமும், கசப்பும் என்னுள் தலைதூக்கி நின்றன. நான் ஒரு துராகிருதனாக, கொடூரமானவனாக, ஆத்துமாவைக் கெடுத்துக் கொண்டவனாக மாறிப்போனேன். என் தகப்பன் மேல் எனக்கிருந்த கசப்பை குடும்பத்தின் அனைத்து அங்கத்தினர் களிடமும் காட்டினேன். நரகத்தின் அடித்தளம் மட்டும் ஒருவன் கடந்து செல்ல, குடும்பத்தில் தகப்பனோடும், மற்றோரோடும் வெறுப்பும், கசப்பும் வந்து விட்டாலே போதுமானது என்பேன். இதனால் தான் தீமையை தங்கள் நடுவிலிருந்து அகற்றும்படி பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்கள் அடங்காத மகனை கல்லெறிந்து கொன்றார்கள் போல் தெரிகிறது. (உபாகமம் 21:18-21); நான் அபகரிக்கப்பட்டவனாக, புறக்கணிக்கப் பட்டவனாக, ஒதுக்கி விடப்பட்டவனாக குடும்பத்திற்குள் என்னை நானே உணர்ந்ததால் வீட்டை விட்டு ஓடிப்போனேன். அந்நாட்கள் என் ஆத்தும வாழ்வில் அந்தகாரமும், ஆற்றாமையும் சூழ்ந்த நாட்கள். இந்த கலக மைந்தனின் எதிர்காலம் என்னவாயிருக்கும்?

ஓ தகப்பன்மாரே, ஆவிக்குரிய தலைவர்களே! உங்கள் ஆண் மக்களும், பெண் பிள்ளைகளும் கலகத்தின் ஆவியினால் அலைக்கழிக்கப் படுகையில் அது உங்கள் ஆத்துமாவுக்கு எப்படியிருக்கும்? உங்கள் குடும்பம் அதை எப்படி சகிக்கும்? தாய், தகப்பன்மாரே அவர்களது அப்படிப்பட்ட நிலைக்கு நீங்களே காரணமெனில் அது உங்களை எந்த அளவுக்கு பாதிக்கும்? அவர்களது கடினமான கேள்விகளுக்கு நீங்கள் என்ன பதில்களை தரக் கூடும்? அவர்களது ஒழுங்கற்ற நிலையை எப்படி நீங்கள் மாற்றியமைக்கக் கூடும். நித்தியத்தைக் குறித்த விலையேறப் பெற்ற காரியங்களை எங்ஙனம் நீங்கள் அவர்களுக்கு கற்றுத் தரக்கூடும்? வாழ்வில் ஒளியையும் நேர்மைத் திறனையும் நீங்கள் எப்படி அவர்களுக்குள் ஏற்றி விடக்கூடும்? மறக்கக் கூடாத, விடக்கூடாத, அவர்களை பாதித்திருக்கக் கூடிய பழக்க வழக்கங்களிலிருந்து அவர்களை விடுவித்து அவர்களை எப்படி சரி செய்வீர்கள்?

இறுதியாக கோபத்தின் விளைவாக வீட்டை விட்டு வெளியேறி நாட்டுக்கு சேவை செய்ய இராணுவத்தில் சேர்ந்த நான் அங்கு என் கோபத்தை விட்டு விட வாய்ப்பு உருவானது. எவ்வாறெனில் அங்கு நான் தேவனை சந்தித்தேன் அல்லது தேவன் என்னை சந்திக்க அவருக்கு வாய்ப்புக் கொடுத்தேன் எனலாம். தகப்பனது தவறுகளால் பாதிக்கப்பட்டு கலகக்காரனானவன் நான். இனி எனக்கு யாரும் உதவத் தேவையில்லை.

என்னை நானே பார்த்துக் கொள்வேன் என்ற சுயாதீன மனநிலைக்கு வந்து விட்டவன். ஆனால் தேவனுக்கு வாய்ப்புக் கொடுத்த போதோ மன நிலையில் எவ்வளவு பெரிய மாற்றம். தேவ தூதனுக்கும் கெட்ட குமாரனுக்கும் இடையில் உண்டான வேறுபாடு. என் தேவனே! நேர்மையை எனக்குள் தாரும். என் உள்ளம் உமக்காகக் கதறுகிறது. என் இருதயத்திற்குள் மறுபடியும் நாதங்களை தொனிக்கப் பண்ணி எதிர்காலக் கனவுகளை ஏற்படுத்திக் கொடும். என்மீதோ என் தகப்பன்மீதோ உம்முடைய உக்கிர கோபத்தை ஊற்றாதிரும் எனக் கதறினேன்.

அமைதலான கால கட்டத்திற்குப்பின் தம்மைக் கண்டு கொள்ள ஆண்டவர் என்னை அனுமதித்தார். தெய்வீக அன்பு கீழிறங்கி வந்து அந்தகாரத்தில் அடைபட்டுக் கிடந்த இந்த கெட்டுப்போன ஆத்துமாவை கலக நிலையிலிருந்து மீட்டெடுத்து தேவராஜ்யத்தின் வெளிச்சத்திலும், ஜீவனுக்குள்ளும் நிலை நிறுத்தியது. மேல் நோக்கிப் பார்க்கும் அனுபவத்தை ஆண்டவர் மீண்டும் ஏற்படுத்தித் தந்தார். கர்த்தருடைய பரிசுத்த நாமம் துதிக்கப்படுவதாக. என்னைத் தமக்கென்று அழைத்ததோடு இப்பொழுது அவருக்காக வேறு பிரித்து அவரது ஊழியனாக்கி அவரது நாமத்தைப் பிரசங்கிக்கும் சிலாக்கியத்தையும் கட்டளையிட்டுள்ளார்.

1946ஆம் ஆண்டு ஆகஸ்ட் இறுதி நாட்களில் நான் இராணுவ சேவை முடித்து வீட்டுக்குத் திரும்பி இருந்த வேளையில் சற்று வயதேறிய இளைஞர்களின் முகாமுக்காக நான் ஆலயத்திற்கு அழைக்கப்பட்டேன். ஜெர்மனிய நகர பிரதரன் குடும்பப் பின்னணியில் என் பிரதரன் சபையில் ஞானஸ்நானம் பெற்று அச்சபையின் அங்கமாயிருந்தேன். இப்பொழுது நான் கூறும் முகாம் இன்டியானாவின் மில்போர்டுக்கு அருகே உள்ள அலெக்ஸாண்டர் மாக் என்னுமிடத்தில் நடைபெற்றபடியால் ஒரு கூட்டம் என்னையொத்த வாலிபர்களுடன் நானும் அங்கு போயிருந்தேன்.

அம்முகாமுக்கு வந்திருந்த தலைவர்களுக்குள் மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவிலிருந்து வந்திருந்த மறைதிரு ஈ. பால் வீவர் எனும் ஓர் மிஷனெரியும் இருந்தார். ஈ. பால் ஆப்பிரிக்காவை சேர்ந்த, வெளி நாட்டு ஊழியங்களை குறித்த விளக்கமான போதனைகளைத் தரக்கூடிய நல்லதொரு போதனையாளராயிருந்தார். அந்த வாரத்தில் வேறெதுவும் முக்கிய பாட வகுப்பு அற்ற நிலையில் பரிசுத்த ஆவியானவர் ஆப்பிரிக்காவிலிருந்து வந்திருந்த ஈ.பால் போதித்தவைகளை கேட்கும்படி என்னை அவரிடம் துரத்திக் கொண்டு போனார்.

முகாமின் முடிவுக்கான நெருக்கத்தில் ஒரு காலை வேளையில் அந்த முதல் விடிவெள்ளி வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. நான் எழுந்து வுவாபி ஏரியின் கிழக்குக் கரை நோக்கி தனியே சென்றேன்.

அங்கு ஓக் மரங்களின் அடியில் ஏரியை நோக்கியிருந்த ஒரு பாறையின் மேல் அமர்ந்து என் வேதாகமத்தை திறந்து என் மடியின் மேல் வைத்துக் கொண்டு கீழ்க்காணும் வசனங்களை அழுகையோடு வாசிக்கலானேன்.

கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன். அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார். பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின் மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி, நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்; அநேகர் அதைக் கண்டு, பயந்து கர்த்தரை நம்புவார்கள். அகங்காரிகளையும் பொய்யைச் சார்ந்திருக்கிறவர்களையும் நோக்காமல் கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான். என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தஞ்செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது; ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லிமுடியாது; நான் அவைகளைச் சொல்லி அறிவிக்க வேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள். பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல் என் செவிகளைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும், பாவ நிவாரண பலியையும் நீர் கேட்கவில்லை. அப்பொழுது நான் இதோ வருகிறேன், புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன். சங்கீதம் 40:1-8

நான் தேவனுடைய சித்தத்திற்கு என் வாழ்க்கையை தாழ்த்தித் தந்தவுடன் பரிசுத்த ஆவியானவர் எனக்குள் கிரியை செய்யத் துவங்கினார். நான் எனது உலகப் பிரகாரமான மேன்மையான எதிர்காலத் திட்டங்களை அப்படியே விட்டு விட்டு எனது வாழ்க்கைக்கும் எதிர்காலத்திற்குமான தேவனது அழைப்பையும், ஏற்பாட்டையும் ஏற்றுக் கொண்டேன். ஆம் பிதாவே அர்ப்பணிக்கிறேன்.

நான் ஆண்டவருக்கு சேவை செய்ய இறங்கும்படி உறுதியான தீர்மானமெடுத்த அதே வேளையில் நான் எதிர்கொள்ளவிருக்கும் காலங்களும், காரியங்களும் எப்படியிருக்கும் என்பதையும் சற்றே விளங்கியேயிருந்தேன். எதிர்காலத்தைக் குறித்த எனது எல்லா திட்டங்களையும் மனப்பூர்வமாய் ஒதுக்கி விட்டு, நான் அறிந்திராத பாடங்களையும், ஊழியங்களையும் கர்த்தரே எனக்குப் போதித்து வழி நடத்த அவரையே முற்றிலும் நம்பலானேன்.

ஆப்பிரிக்கா அனுபவம்

அடுத்த ஒன்பது ஆண்டுகளை ஆண்டவரது ஊழியத்திற்கு என்னைப் பல வழிகளிலும் ஆயத்தப்படுத்திக் கொள்ளும் காலமாகச் செலவிட்டேன். கல்லூரிப் பயிற்சியோடு கூடிய சுவிசேஷக் குழுவுடனான பிரசங்க வாய்ப்பு கிட்டியது. இக்குழு என்னை கல்லூரியிலிருக்கும் போது தானே கோடையில் இல்லினாய்ஸைச் சேர்ந்த ஒக் குரோவ் என்னுமிடத்திலுள்ள குருசேகரத்தில் பணியாற்றும் வாய்ப்புக்கு வழி நடத்தியது. ஊழியத்திற்குத் தேவையான ஒரு பொருத்தமான துணைக்காக ஜெபித்தேன். தொடர்ந்து வார இறுதி நாட்களில் கல்லூரி ஆண்டுகளில் செய்த சுவிசேஷ ஊழியத்தினால், பிரசங்கிக்கிற அனுபவத்தில் தேர்ச்சி உண்டானது.

கல்லூரி ஆயத்த நாட்களில் தேவன் என் மனைவியை எனக்கு வெளிப்படுத்தியதோடு எனது இளம் மனைவியை எனக்குத் தந்தார். வடக்கு இன்டியானாவில் பிரதரன் சபை கோடை முகாம் ஒன்றின் போது முதன்முறையாக நாங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டோம். ஒருவர் மேல் ஒருவர் எங்களுக்குள் உண்டான பற்றுதலினிமித்தம் மாவட்ட இளைஞர் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் நெருங்கி வரலானோம். கல்லூரி நாட்களில் தான் ஒருவரையொருவர் முழுமையாகப் புரிந்து கொண்டோம். வேதபாட வகுப்புகளுக்கும் இளைஞர் ஜெபக் கூடுகைகளுக்கும் என்னோடு வரும்படி அவரை நான் அழைத்தேன். அந்நாட்களில் நாங்களிருவரும் கர்த்தருக்காக பிரித்தெடுக்கப் பட்டவர்கள் என்பதை நாங்கள் கண்டு கொண்டோம். தொடர்ந்து எங்கள் அன்பு கூட நாங்கள் பாசத்தில் மூழ்கி, பின் உறுதி பண்ணிக் கொண்டோம்.

மேரி லோவாவின் ஒன்று விட்ட சகோதரர் எனது கல்லூரி இறுதி ஆண்டுக்கு முந்திய கோடையில் எங்களை திருமணத்தில் இணைத்தார். மேரி லோவாவின் ஒன்றுவிட்ட முதல் சகோதரனான சங்கை வில்லியம் கார்டன் அவர்களால் இன்டியானாவிலுள்ள மிக்சிகன் நகர பிரதரன் சபையில் 1949 ஜூலை 3ல் எங்கள் விவாகம் நடைபெற்றது. எங்களது திருமணத்தைத் தொடர்ந்து நானும் எனது மனைவியும் கல்லூரி இறுதி ஆண்டின் வரை இறுதி நாட்களில் குருத்துவப் பணிகளை மேற்கொண்டோம். கல்லூரியைத் தொடர்ந்து கிராமப்புற ஊழியத்தோடு கூடிய கலாசாலைப் பயிற்சியும் கிடைத்தது.

ஆண்டவர் எனக்கு முதலாவது கொடுத்த தரிசனமே என் மனைவியைப் பற்றியது தான். தேவன் என் மனைவியை எப்படிக் காண்கிறார் என்பதை வெளிப்படுத்தினார். தேவனது அழைப்பிலும், ஏற்பாட்டிலும் நாங்கள் ஊழியம் செய்து வரும் இத்தனை ஆண்டுகளிலும்

என் மனைவி சிறந்ததொரு ஏற்ற துணையாகவே எனக்கு இருந்து வருகிறார். மேரி லோவா தேவனால் அழைக்கப்பட்டு, ஏற்படுத்தப் பட்டவர்.

இப்படிப்பட்ட ஆயத்த ஆண்டுகளில் எங்களைக் குறித்த தேவ அழைப்பு மங்கிப் போகவே இல்லை. பயிற்சி சாலையின் இறுதிவாரம் எழுத்துத் தேர்வுகளோடும், சந்திப்போடும் வந்தது. வெளி தேச ஊழியங்களின் அமைப்பிற்கான தலைமைப் பொறுப்பாளர் எங்களது தங்குமிடத்தின் கதவைத் தட்டி நின்றார். லீலான்ட் புருபேக்கர் எனும் அந்த தேவ மனிதர் எங்களுக்கருளப்படும் ஊழிய வாய்ப்பை ஒரே கேள்வியில் எங்கள் முன் கொண்டு வந்தார், நீங்கள் எவ்வளவு சீக்கிரம் மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவுக்கு கிளம்ப முடியும்? என்பதே அக்கேள்வி.

ஆப்பிரிக்காவிற்கான எங்கள் கடற்பயண வேளை வந்தது. நானும் மேரி லோவாவும் அர்ப்பணிப்பு ஆராதனையில் மேடையில் முழங்காற்படியிட்டிருந்தோம். 1955 ஜூன் 19ல் மிச்சிகன் நகரின் கிரான்ட் ராபிட்ஸ் எனுமிடத்தில் பிரதரன் சபை போதகர்கள், மிஷனெரிகள், சமூகப் பணியாளர்கள் அனைவருக்குமாக ஏற்படுத்தப்பட்டிருந்த வருடாந்தர மாநாடு அது. பிரதம பேராயரின் ஆலோசனைக்கும், அறிவுரையோடு கூடிய நல்வார்த்தைகளுக்கும் கட்டப்பட்டவர்களாக இருவரும் செவிகொடுத்தோம். பிரதம பேராயரின் உரை வருமாறு :

தேவனது ராஜ்யத்தைப் பரப்பச் செய்வதற்கான மாபெரும் சேவைக்கென வெகுதூரம் செல்ல அர்ப்பணிப்புடையோர் அவரது வழிநடத்துதலோடு அவரால் பயன்படுத்தப்பட தங்களை அர்ப்பணித்து முன் செல்லும் ஆடவர் மற்றும் பெண்டிராவார். அவ்வாறு உள் நாட்டிலும், வெளி தேசங்களிலும் அருட்பணி செய்யவும், அவரது வார்த்தையை பிரசங்கித்து, ஆண்டவருக்கு சேவை செய்ய அவரால் பிரத்தியேகமாய் அழைக்கப்பட்டோராய் வந்திருக்கும் அவரது அடியவரை அங்கீகரித்து, ஆண்டவரது ஊழியத்திற்கென பிரதிஷ்டை செய்யும் மகா உன்னத நேரத்திற்குள் கடந்து வந்திருக்கிறோம். அவர்களனைவரும் தேவனது நற்காரியங்களுக்கு ஸ்தானாதிபதிகளும் சுவிசேஷத்தின் வல்லமைக்கு சாட்சிகளும், கிறிஸ்துவுக்கு ஊழியருமாயிருக்கிறார்கள். இவையனைத்தும் வேத வாக்கியங்களின் நிறைவேறுதலாயிருக்கிறது. பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே, தேவனது ராஜ்யத்துக் கடுத்த பணியில் தேவன் உங்களை ஏற்படுத்தி வைத்திருக்கும் உன்னதப் பொறுப்புகளுக்கு இசைந்து வாழ இயலும் என நம்புங்கள். நான் இப்பொழுது திருச் சபையின் பெயரால் உங்களைப் பணியமர்த்திக் கூறுவதாவது, உங்கள் உன்னத அழைப்புக்கு உண்மையுள்ளவர்களா யிருங்கள். ஆவிக்குரிய கிருபையிலும், திட சிந்தையிலும், சரீர காரியங் களிலும் மிகுந்த கவனமாய் கர்த்தருக்குமுன் வளர ஜாக்கிரதையா யிருங்கள். திருச்சபைக்கும் அதன் சட்டதிட்டங்களுக்கும் குறிப்பாக அனைத்திற்கும் மேலாய் எல்லாருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் உங்கள் ராஜ விசுவாசத்தை விளங்கப்பண்ணுங்கள். கிருபையின் வசனத்தை ஜீவியத்தின் மூலமும் பேச்சின் மூலமும் வெளிப்படுத்துங்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு உண்மையுள்ள மாணாக்கர்களாயும், ஊற்றுகளின் ஆழங்களில் இறங்கி தண்ணீர் பருகுகிறவர்களாயும் உங்களை காத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் தேவ அன்பினாலும், வல்லமையினாலும் ஜனத்தை ஆதாயப்படுத்த முயலுங்கள். எல்லா ஜனத்திற்கும் உங்கள் பொறுமையை விளங்கப் பண்ணுங்கள். உடன் ஊழியர்களுடன் சமாதானத்தையும், ஐக்கியத்தையும் பரிபாலியுங்கள். கிறிஸ்து இயேசுவுக்கு நல்ல போர்ச்சேவகராய் தீங்கனுபவிக்கவும், சோதனைகளில் நின்று பிடிக்கவும் நெருக்கங்களில் தைரியமாய்க் காணப்படவும் ஜாக்கிரதையாயிருங்கள்.

பிரதிநிதிகளின் உடன்படிக்கை

பிரதிநிதிகளுக்கு : வழி நடத்துதலுக்காகவும், வல்லமைக்காகவும் தேவனையே நம்பி, உங்கள் வாழ்க்கையில் இப்பொறுப்பை முழுமையாகவும், மன நிறைவுடனும் அப்பியாசப்படுத்த உறுதி ஏற்கிறீர்களா?

பிரதி நிதிகள் : தேவனுடைய கிருபையினால் அப்படியே செய்கிறோம்.

பிரதி நிதிகளுக்கு : ஆண்டவர் உங்களை ஆசீர்வதித்து, உங்களை ஆசீர்வாதமாய் வைப்பாராக.

ஊழியத்திற்கு அமர்த்துதல்

உங்கள் ஊழியங்கள் வாய்க்கப்பெறும்படியாக, எங்கள் ஜெபங்களும், ஒத்தாசைகளும் உங்களுக்கு என்றுமுண்டு என திருச்சபையின் பெயரால் உங்களுக்கு வாக்களிக்கிறேன். பிரதரன் திருச்சபையின் பெயரால் உங்களை சமூக சேவகர்களாக, ஊழியர்களாக, அருட்பணியாளர்களாக இப்பொழுது பணியமர்த்துகிறேன். பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்திலேயே. ஆமென்

அர்ப்பணிப்பு ஜெபம்

கிறிஸ்துவின் திருச்சபையின் ஆதிப்பாரம்பரியத்தின்படி இப்பொழுது உங்களை ஜெபத்தினாலும், மூப்பர்கள் கைகளை வைக்கிறதினாலும் புனிதப்படுத்தி, அர்ப்பணிக்கிறோம்.

(அப்போஸ்தலர் 13:1-3ன்படி மூப்பர்கள் தங்கள் கைகளை எங்கள்மேல் வைக்க, நாங்கள் இறை பணிக்கு அர்ப்பணிக்கப்பட்டு, அனுப்பப்பட்டோம்.)

எங்கள் பிதாவாகிய நித்திய தேவனே, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவே, பூவுலகெங்கும் பரவிக் கிடக்கும் மனுக்குலத்தை ஒரே இரத்தத்தினாலே உண்டாக்கி, உமது சாயலை அவர்கள் உள்ளத்தில் தர சித்தங் கொண்ட நீர் மனுக்குலம் உம்மை உணரவும், உம்மைத் தேடவும், இருளில் அமர்ந்துள்ள அனைவரும் கிறிஸ்துவின் ஒளிக்குள் கொண்டு வரப்படவும் உதவி புரிந்தருளும். இப்பொழுதும் சுவிசேஷத்தின் பல தரப்பட்ட சேவைகளின் பொருட்டு நீர் அழைத்திருக்கும் இவர்கள் மேல் உம்முடைய பலத்த கரத்தை வைத்து இவர்கள் உம்முடைய ஆவியினால் நிறையப்படவும், சுவிசேஷ வேலைக்கான அனைத்து சாத்தியக் கூறுகளையும் சத்துவங்களையும் பெற்றுக் கொள்ளவும் அருள் கூர்ந்தருளும். அவர்களை எதிர்கொள்ளும் குழப்பங்களில் உம்முடைய ஞானமும் சோதனைகளில் உமது தைரியத்தையும் அவர்களில் கட்டளையிடும். அவர்களது தனிமையிலும், வருத்தத்திலும் இவர்கள் உம்முடைய பிரசன்னத்தை உணரச் செய்யும். உம்முடைய பாதுகாப்பினாலும், பராமரிப்பினாலும் அவர்களை சூழ்ந்து கொள்ளும். அவர்களது பிரயாசத்தின் பலனை மிகுந்த மகிழ்ச்சியோடு பெற்றனுபவிக்க அவர்களுக்கு உதவி செய்ய உம்மைக் கெஞ்சுகிறோம். தாங்கள் அனுப்பப்படும் இடங்களிலிருந்து முழு இருதயத்தோடும் தங்களை அர்ப்பணித்து புறப்படும் இவர்களையும், இவர்களுக்குண்டான வைகளையும் அங்கீகரித்தருளும். புனிதப்படுத்தியருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமே. ஆமென்.

ஊழியக்களம்

திருச்சபை என்னை நைஜீரியாவுக்கு அனுப்பியது. ஆப்பிரிக்க ஸ்தல சபையும், ஸ்தாபனமும் நிவ்வா பாலமி என்ற ஆப்பிரிக்க உடன் ஊழியருடன் இணைந்து ஊழியம் செய்யப் பணித்தது. ஆப்பிரிக்காவின் புதர் மண்டிய இருண்ட பகுதியில் புரா ஆதிவாசிகளிடையே மத போதனை மையங்களை புதிதாய் ஏற்படுத்த வேண்டுமென்பதே எங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த பொறுப்பாகும். நாளடைவில்

திருச்சபைகளாய் உருமாறின இருபத்து நான்கு போதனா மையங்களை நாங்கள் ஏற்படுத்தினோம். நாங்கள் களத்தை விட்டு வந்த பின் அந்த சபைகளில் சில, ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமான அங்கத்தினர்களுடன் வளர்ந்து பெருகியதாக பின்னொரு முறை நிவ்வா எனக்குத் தெரிவித்தார்.

எனக்கு தரப்பட்டிருந்த ஊழியப்பொறுப்பில் நான் செயல்பட்டுக் கொண்டிருந்தேன். கர்த்தர் என்னை ஆப்பிரிக்க விவசாயிகளுடனும் வேலை செய்யப் பணித்தார். மற்றொரு மிஷனெரி தமது பகுதியில் விவசாயிகள் நடுவில் சேவை செய்ததுடன் அவர்களுக்கு மாடுகளைக் கொண்டு ஏர்பூட்டி உழும் முறையை பயிற்றுவித்துக் கொண்டிருந்தார். அவரது சேவையைக் கண்ட எனக்கு அதே முறையைப் பின்பற்றி பிலா என்னப்பட்ட புரா ஆதிவாசி கிராமத்தில் மாடுகளை ஏர்பூட்டி உழும் முறையை அறிமுகப்படுத்தி, அனேக விவசாயிகளுக்கு உதவி, அதன் மூலம் ஊழியத்தில் நெருங்க உற்சாகமுண்டானது.

எனவே ஒரு நாடோடி ஆதிவாசியிடமிருந்து இரண்டு இளங்காளைகளை விலைக்குக் கொண்டேன். இரண்டு இளைஞர்களைப பிடித்து மாடுகளை ஏர்பூட்டி உழப் பயிற்றுவித்தேன். எனது இளமையில் பண்ணையில் எனக்கு கிட்டிய மாட்டிற்கு கொம்பு சீவுதல், லாடங்கட்டுதல் போன்ற காரியங்கள் இப்பொழுது எனக்குக் கைகொடுத்தன. எனது தகப்பனார் வீட்டிலிருந்து அனுப்பித் தந்திருந்த சில உபகரணங்கள் இளங்கன்றுகளை லாடங்கட்டி காளைகளாக்கிட எனக்குப் பெரிதும் உதவின. மாடுகள் இரண்டும் நுகத்துக்குட்பட்டவுடன் காயமுற்று மிகுந்த கோபத்துக்குள்ளாயின. எனவே அவைகளை தனித் தனியே தற்காலிகக் கூடாரங்களில் கட்டி வைத்தோம். அவை ஒன்றையொன்று முட்டிக் கொள்ளாதவாறு தூரப்படுத்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து அவ்விரு வாலிபர்களின் உழவுப்பயிற்சி ஏற்றம் பெற்று விரைவில் பலன் உண்டானது. பின் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு உழவுச் சாமான்களை சுமந்து செல்ல ஒற்றை மாட்டு டயர் வண்டி ஒன்று வாங்கப்பட்டது.

இறுதியாக நான் பல கிராமங்களுக்குள் நற்செய்தியை அறிவிக்கச் சென்ற இடங்களிலெல்லாம் இந்த இரு இளைஞர்களும் பல விவசாயிகளுடன் இணைந்து நின்று பணியாற்றியதையும் பயிற்றுவித்ததையும் காண முடிந்தது. அந்த உழவர்களும் இப்புதிய முறையைக் கற்று அதை அப்பியாசிப்பதில் வாஞ்சையுடனிருந்ததையும் அறிய முடிந்தது.

வடகிழக்கு நைஜீரியாவின் அடமாவ் புரோவின்ஸ் எனுமிடத்தில் உடனடியாக ஒரு வேதாகமக் கலாசாலையை நிறுவி அப்பகுதி மக்களின் ஆவிக்குரிய தேவையை சந்திக்க ஒரு திட்டம் எனக்குள் உருவானது.

அப்பகுதியிலுள்ள விவசாயிகளுடன் அமர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்த ஒரு நாளில் கர்த்தர் அக்கலாசாலைக்கான திட்டங்களை எனக்குள் தந்தார்.

அந்த கிராம ஜனங்கள் வறுமையில் பாதிக்கப்பட்டவர்களாகவும், ஒரு போதகரை தாங்கக் கூடாதவர்களாகவும், அதே வேளையில் ஒரு போதகர் அவசியம் தேவை என்ற நிலையிலுமிருந்தனர். பிரதரன் போதகர்களின் பின்னணி என்பது கிராம சூழலுக்கேற்ற அதே வேளையில் விவசாயம் செய்து கொண்டே பிரசங்கிக்கக் கூடியவர்களாகவும், மூப்பர்களாகவும் அவர்களை இருத்தியிருந்தது. ஆண்டவர் திட்டம் கொடுத்தவுடனேயே இந்த கிராமப்புற வேதக் கலாசாலைக்கான வரைபடமொன்று அவசரமாய்த் தோன்றியது. இருள் மண்டிய ஆப்பிரிக்க நாட்டின் இப்புதிய வேத கலாசாலை வேதாகமம், மேய்ப்பர் ஊழியம், நற்செய்தி அறிவித்தல், தெய்வீக வாழ்க்கை இவற்றுடன் விவசாயம், பயிர்மாற்றம், மாடு பூட்டி உழுதல், கால்நடை பராமரிப்பு, பொருளாதார முன்னேற்றம் அனைத்திலும் மக்களை பயிற்றுவிக்கத்தக்கதாய் இருத்தல் வேண்டும்

இந்தக் கலாசாலை முதலாவது ஒரு ஆப்பிரிக்கக் கிறிஸ்தவரையும் அவரது மனைவியையும் வேதத்திலும், ஊழியத்திலும் பயிற்றுவிக்க வேண்டும். அவர் தேவனால் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவராகவும் இருக்க வேண்டும். இவர் ஆவிக்குரிய பயிற்சியுடன் உழவுத் தொழிலையும் கற்று, கால்நடைப் பராமரிப்பு, பயிர்செய்தல் அனைத்திலும் தேர்ச்சியுற வேண்டும். நற்செய்தி அறிவிக்க தரிசனம் பெற்ற இம்மனிதர் அத்துடன் தன் தேவைகளை தாமே பூர்த்தி செய்து கொண்டு, வறுமையை மேற்கொள்ள ஜனத்திற்கு படிப்பிற்கும் மாதிரியாக தம்மை விளங்கப் பண்ண வேண்டும். ஆவி, ஆத்துமா, சரீரத்தில் நிறைவான வளர்ச்சியைத் தெரியப்படுத்த வேண்டும். இத்திட்டம் தேவனால் எனக்கருளப்பட்ட போது நான் பரவசப்பட்டு, கர்த்தருக்கு முன் தலைதாழ்த்தி அவரைத் தொழுது கொண்டேன்.

இந்தத் திட்டங்கள் எனக்குள் உருவானபோது, நான் அமர்ந்திருக்கக் கூடாதவனாய் உடனே வீட்டிற்கு புறப்பட்டுப்போய் தேவன் எனக்கு வெளிப்படுத்திய இத்திட்டத்தை என் மனைவியுடன் பகிர்ந்து கொண்டேன். வீட்டிற்கு வந்தவுடன் நான் என் தட்டச்சு சாதனத்தின் முன் அமர்ந்து, என் திட்டங்களையும் அந்த வேதக் கலா சாலைக்கான வளர்ச்சிக்குரிய சாதக முறைகளையும் தாளில் பதித்தேன். வருடாந்திர கூட்ட வேளை வந்தபோது, எனது குறிப்புத்தாள்களை நிரப்பிக் கொண்டு, அருட்பணியாளர்கள் மாநாட்டில் சமர்ப்பிக்க எடுத்துச் சென்றேன்.

அங்கே பாரமில்லாதவர்கள் ஒருவரும் இல்லை. எல்லாருக்கும் பணிகள் இருந்தன. மேரி லோவா குழந்தைகளை கவனிப்பதிலும், அவரது ஊழியப் பங்கை நிறைவேற்றுவதிலும் கருத்தாயிருந்தார். அவரது பங்கு மிஷன் பள்ளிகளைச் சார்ந்தது தான். அவர் வகுப்பறையில் போதித்துக் கொண்டிருந்தார். பின்னர் மாராமா எனுமிடத்தில் 500 மாணவர்களுக்கும் அதிகம் கொண்ட பள்ளி ஒன்றின் தலைமை ஆசிரியை ஆனார். குழந்தைப் பிறப்புக்குப் பின் முதுகில் பிள்ளைகளை சுமந்து கொண்டு வகுப்பறைகளுக்குச் சென்றார். ஆப்பிரிக்கக் கலாச்சாரத்தில் இது சர்வ சாதாரணம். பின்னர் அவர் ஐந்து குறிப்பிட்ட பள்ளிகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

இந்த நாட்களில் நானும் இளமையில் செய்தது போலவே மீண்டும் பறக்க ஆசைப்பட்டேன். பிரதரன் ஸ்தாபனம் சூடான் உள் ஸ்தாபன விமானங்களையும், விமானிகளையும் அவ்வப்போது பயன்படுத்தி வந்தது. ஊழியப்பணிகள் தாமதமின்றி செயல்படுத்தப்பட விமான சேவை பல மைல் தொலைவு தொடர்புகளுக்கு மிக உதவிகரமாயிருந்தது குறிப்பாக வட நைஜீரியாவின் வர்த்தக நகரமான ஜோஸிலிருந்து பல இடங்களுடன் இதன்மூலம் தொடர்பு கொள்ள முடிந்தது. இதற்கென பணம் அதிகம் செலவானது உண்மை.

நான் அமெரிக்க மற்றும் நைஜீரிய விமானங்களை ஓட்டும் உரிமத்தை ஏற்கெனவே உடையவனாயிருந்தேன். சற்று முன்தான் விமானம் பழுது பார்க்கும் பயிற்சியும் பெற்று அதற்கான சான்றிதழும் வைத்திருந்தேன். ஸ்தாபனத்திற்கு விமானப்பணி செய்ய வேண்டி வருமாயின் அதற்குரிய ஆயத்தத்துடனிருக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் ஏற்கெனவே அனைத்து ஆவணங்களையும் சரியாய்ப் பெற்றிருந்தேன்.

எனக்கிருந்த திறமை நகரத் தொடர்புகளுக்கு உதவியதுடன் புதர்காடுகளுக்குள் இருந்த பணித்தளங்களுக்கு சென்று வரவும் எனக்குதவியது. அதற்காக ஸ்டோல் ரக விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. எனவே ஸ்தாபனத்திற்கு சொந்த விமானத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கில் அதற்கான திட்டத்துடன் நிர்வாக அமைப்பை அணுகினேன்.

கார்க்கிடா எனும் இடத்திலுள்ள மிஷன் மையத்தில் ஆப்பிரிக்கா முழுவதுமுள்ள பிரதரன் ஸ்தாபன திருச்சபைகளின் ஊழியர்கள் அனைவருக்குமாக வருடாந்தர மாநாடு நடைபெறும் நேரம் வந்தது. ஆண்டு முழுவதும் நடைபெறும் ஊழியப் பணிகளைக் குறித்து அலசி, ஸ்தாபனத்தின் செயல்பாடுகளை ஆராயும்படி கூட்டப்படும் அருட்பணியாளர்களின் மாநாடாகிய இது ஆண்டின் சிறப்பு அம்சங்களில் குறிப்பிடத்தகுந்ததாகும்.

சமூக நடைமுறைக்கேற்ப காரியங்களில் புதுமையைப் புகுத்தவும், அனைவரும் ஐக்கியப்படவும் ஸ்தாபனம் இதன்மூலம் அடிகோலியது. மட்டுமின்றி ஒன்றுகூடி தேவனைத் தொழுது கொள்ளவும், அருளுரை களைக் கேட்கவும் இதன்மூலம் ஏதுவுண்டானது. பிரசங்க வேளைகளில் ஒன்றில் நானும் ஒரு பிரசங்கம் செய்தேன். இந்த வருடாந்தர மாநாட்டின் மிகமுக்கிய நோக்கம் ஊழியர்களிடமிருந்து அறிக்கை பெறுவதும், பணித் தளங்களில் நடைபெறும் பணிகளைக் குறித்து கரிசனையுடன் விசாரிப் பதும், பொருளாதார நிலையை மேம்படுத்துவதும், நிர்வாக அமைப்பி னால் அங்கீகரிக்கப்பட்ட செயல்பாடுகளில் பங்கு பெறுதலுமேயாகும்.

கர்த்தர் வேதாகமக் கலாசாலையை நிர்மாணிப்பது குறித்து எனக்குக் கொடுத்த வெளிப்படுத்தலின் அடிப்படையிலான திட்டங்கள் அலசப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுமென பூரணமாக நம்பினேன். ஸ்தாபனம் தனது நிர்வாக பயனுக்கென ஒரு விமான சேவையை சொந்தமாகப் பெற்றிருத்தல் வேண்டுமென ஏற்கெனவே என் நோக்கத்தை அது குறித்துத் தெளிவுபடுத்தியிருந்தேன். ஆயினும் வேதாகமக் கலாசாலை குறித்த எனது திட்ட அறிக்கையை மாநாட்டில் சமர்ப்பிக்க இயலாதென்றும், அதனை உயர்மட்ட நிர்வாகக் குழுவிடம் தான் அளிக்க இயலும் என்றும் வெகு விரைவில் கண்டு கொண்டேன். இக்குழுவே அனைத்து பழைய, புதிய செயல்பாடுகள் குறித்து இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் பெற்ற மூப்பர்களைக் கொண்ட அலுவலர் குழுவாய் மாநாட்டுத் தளத்தில் இயங்கியது.

நான் எனது திட்ட அறிக்கையை உயர்மட்டக் குழுவிடம் அளித்தபொழுது, உங்கள் அக்கறைக்கு நன்றி என்ற வார்த்தையை மட்டும் அவர்களிடமிருந்து வரப்பெற்றேன். எனினும் அவர்களிடமிருந்து ஒரு முடிவும் அறிவிக்கப்படவில்லை. பின்னர், மாநாட்டு வேளையில் வேறு மூன்று பணித்தளங்களைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் என்னைத் தொடர்பு கொண்டனர். மோன்றோய் குட், ஜெரி நெர், இர்வின் ஸ்டெர்ன் எனப்பட்ட அவர்கள் வேதக் கலாசாலைக்கான எனது திட்ட அறிக்கைக் கிடப்பில் போடப்பட்டதைத் தெரியப்படுத்தினார்கள். அதன் அர்த்த மென்னவெனில், எனது தாள்கள் மாநாட்டு தளத்தையே எட்டாது என்பது தான். எப்படியோ அது, அவர்களைத் தொட்டிருந்தது மட்டுமின்றி நான்கு அருட்பணியாளர்கள் ஒருங்கிணைந்து ஒரு திட்டத்தை வடிவமைத்து அனுப்பினால், அது மாநாட்டு தளத்தையும் எட்டி உயர் மட்டக்குழுவிலும் அலசப்படும் என அவர்கள் மூலம் ஒரு செய்தியும் கிட்டியது.

அதற்கடுத்த ஆண்டில் நாங்கள் நால்வரும் எப்பொழுதெல்லாம் கூட முடியுமோ, அப்பொழுதெல்லாம் ஒன்றுகூடி, வேதக் கலாசாலைக் கான திட்டத்தை வரையறுப்பதிலும், அதற்கு இறுதி வடிவம் கொடுப்பதிலும்

ஈடுபட்டோம். அடுத்ததொரு வருடாந்திர அருட்பணியாளர்கள் மாநாடு வருமட்டும் நாங்கள் இதுகுறித்து கலந்தாலோசித்து, திட்டத்துக்கு மெருகூட்டிக் கொண்டிருந்தோம். இந்தமுறை, வேதக் கலாசாலைக்கான திட்டம் நேரடியாக மாநாட்டு தளத்தை எட்டியதுடன், நிர்வாக அமைப்பினால் உடனே திட்டத்திற்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டது. திட்டத்தை ஏற்றுக் கொண்டு, வேதக் கலாசாலைக்கு முதலிடுவதற்கான பிரேரணை ஒன்று நடத்தப்பட்டது. பிரேரணையில் அதிக வாக்கின் அடிப்படையில் வெற்றியும் கிட்டியது. மாநாட்டுக்கும், உயர்மட்டக் குழுவுக்கும் தலைமைப் பொறுப்பிலிருந்தவர் ஆப்பிரிக்க ஸ்தாபனத்தின் உடன் ஸ்தாபகரும், முதிர்ந்த, முதன்மையான அருட்பணியாளருமாவார். நாங்கள் திட்ட அறிக்கையை மாநாட்டுத் தளத்திற்கு அனுப்பிய முறைமையில், தமக்கு ஒப்புதல் இல்லை எனத் தீர்ப்பளித்து அவர் பிரேரணை முடிவைத் தலைகீழாக்கி விட்டார். கடந்த ஆண்டில் உயர்மட்டக் குழு அறிக்கையை கிடப்பில் போட்டபின் இவ்வாண்டும் பாதகமான முடிவே அவரால் எடுக்கப்பட்டது.

எனது ஆசைக்கனவு என் கண்களுக்கு முன்பாகவே தவிடுபொடியானதைக் கண்டேன். இந்த அநீதி அமெரிக்கத் தெருக்களுக்கும், சாக்கடைக்கும் மட்டுமே சொந்தமென்றில்லை என்பதை இப்பொழுது அறியலானேன். நான் ஆப்பிரிக்காவுக்கு வந்த வேளையில் அருட்பணியாளன் என்ற உயரிய அந்தஸ்துடன் வந்தேன். நான் எனது கிறிஸ்தவ நடப்பில் பெற்றிருந்த, பரிசுத்தத்திற்கேதுவான கனி நிறைந்த வாழ்வையும், வேத கோட்பாட்டிற்கடுத்த கிருபையினாலும் விசுவாசத்தி னாலுமுண்டாகும் இரட்சிப்புக்கடுத்த காரியங்களையும் ஆலயத்தில் என்னால் காண இயலவில்லை. ஊழியத்தளங்களை தலைமை தாங்கி நின்ற எங்களுக்குள்ளிருந்த பரிசுத்தவான்களை என்னால் தெளிவாக விளங்கிக் கொள்ளவும் இயலவில்லை. ஏமாற்றப்பட்டது போலவும் உணர்ந்தேன். தேவனுக்கு மாத்திரமே செலுத்த வேண்டிய மிகுந்த கனத்தை நான் மனிதருக்குச் செலுத்தி, அவர்களை எனது விக்கிரகமாக்கி மீறுதல் செய்திருந்தேன். மிஷனெரித் தலைவர்களில் விளங்க வேண்டுமென நான் எதிர்பார்த்த அவர்களது மகிமை என் கழுத்துக்குக் கண்ணியாயிற்று. இது அவர்களது தவறல்ல. மாறாக எனது மீறுதல் அவர்களைப் பற்றிய எனது விக்கிரக வழிபாடாகும்.

பின்னர், லூவிஸ் என்னுமிடத்தில் நான் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருக்கையில் எனது ஆகாய சேவைப் பொறியாளர் பயிற்சி முடிக்க ஏதுவான உற்சாக மூட்டும் செய்தி என்னைக் கிட்டியது. அதற்கான ஆயத்த வேலைகளில் இறங்கவும், விமானமொன்றை விலைக்குக் கொள்ளவும் தேவையான பொருளாதாரத்தையொட்டிய வாக்காக அது எனக்குப்பட்டது. எனவே ஆகாய விமானப் பயிற்சி சம்பந்தமாக சில

ஆண்டுகளுக்கு முன் நான் தொடங்கி இடையில் விட்ட படிப்பைத் தொடர்ந்து அதை முடிக்க லூவிஸிலுள்ள அதற்கான பயிற்சிப் பள்ளியில் சேரத்திட்டமிட்டேன். விடுமுறையினிடையே வெளிதேச ஊழியங்களுக் கான புதிய செயலாளரை நான் சந்திக்க வேண்டுமென்ற ஒரு வேண்டு கோளைப் பெற்றேன். ஆகாய மார்க்கப்பணிகளுக்கென செலவழிப்பதற்கு பதிலாக அத்தொகையை அதிகமான பள்ளிக் கட்டிடங்களைக் கட்ட செலவழிக்கலாமென நிர்வாக அமைப்பு முடிவெடுத்திருப்பதாக அவர் தெரிவித்தார். அதே வேளையில் நானும் எனது மனைவியும் எங்களது விடுமுறை காலத்தை ஸ்தாபன உதவித்தொகை பெறாமலே கழித்து ஸ்தாபனப் பணத்தை மிச்சப்படுத்தச் செய்ய வேண்டுமென அவர்கள் கருதுவதாகவும் கூறினார்.

ஸ்தாபனத் தலைவர்களையே எங்கள் விக்கிரகங்களாக்கி, பாவஞ் செய்ததினால் அவர்கள் மேல் எங்களுக்கிருந்த நம்பிக்கையை இழக்க நேரிட்டது இப்பொழுது ஒரு வாக்குத்தத்தம் என்னிலும், என் மனைவி யிலும் புத்துயிர் பெற்றது. நாங்கள் தீர்மானமெடுக்கும் வேளைக்குள் வந்தோம். பெரிய கேள்வி : பிரதிஷ்டைகள் நொறுங்கி விட்டது போல காணப்பட்ட நிலையிலும், அநீதி நிறைந்த தலைவர்களுக்குக் கீழும் தொடர்ந்து ஊழியம் செய்ய இயலுமா? என்பதே தெய்வீக நடத்து தலுக்கும் அப்பாலுள்ள மனிதனுடைய இயற்கையான நிலையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. (என்னுடையதும் அவர்களுடையதும்) மேரிலோவா தான் மறுபடியும் அதே ஆப்பிரிக்கப் புதர்ப் பிரதேசங்களுக் குள் செல்வதில்லை என அறிவித்து நானும் சரியான முடிவெடுக்க எனக்கு உதவினார். நான் முடிவாகக் கண்டு கொண்டபடி விக்கிரக வழிபாடாகவே ஆகாய மார்க்கப் பணியில் நான் கொண்டிருந்த மோகமும், தலைவர்களைப் பற்றிய எனது விக்கிரக வழிபாடும் தான் எங்களுக்கான தேவ சித்தத்தை நான் சரியாய் அறிந்து கொள்ள இயலாமற் செய்து விட்டது. காரியங்களை எனக்கு நானே கையிலெடுக்கத் தூண்டி விட்டது. ஏமாந்த நிலையில் நான் வெளிதேச ஊழியப்பணியை ராஜினாமா செய்தேன்.

லூவிஸில் நான் பெற்றிருந்த பயிற்சி எங்கள் பணியில் அரசின் வரையறையை எட்டிப் பிடிப்பதற்கு என்னைத் துரத்தியது. அதற்காக நான் எழுத்துப் பூர்வமாகவும், சொல்லாலும், நடைமுறைத் தேர்விலும் வெற்றி பெற்றாக வேண்டும். இறுதியாக விமான தளம் மற்றும் அது சம்பந்தப்பட்ட ஆற்றல் உலை இயந்திர நிபுணராகவும் பரிசோதனை அதிகாரியாகவும் சான்றிதழ் பெற்றேன். அடிவானத்தில் மிதந்து செல்லும் வலிய மேகங்களைப் போல் மிதக்கத் துவங்கினேன்.

2. வனாந்தர வருடங்கள்

உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்திலே விழும். (எண்.14:32)

முரட்டாட்டம் எனும் பாவம்

லூவிஸிலுள்ள விமான சேவைப்பயிற்சிப் பள்ளியில் நான் பயின்று முடித்த பின், வடக்கு இன்டியானா மாவட்ட நிர்வாகி வந்து மேரி லோவாவையும் என்னையும் சந்தித்து சபை விரிவாக்கப் பணிக்குள் கடந்து போகும்படி உற்சாகமூட்டும் வார்த்தைகளைப் பேசினார். நாங்களோ அதற்கென ஜெபித்து முடிவெடுக்க விரும்பினோம். நான் சபை ஊழியத்தை விட்டுவிட விரும்பினேன். ஆவியானவரோ நான் அப்படி விட்டு விடுவதை ஏற்பதாக இல்லை. நான் ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கவில்லை. எனக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து ஒன்றும் தெரியாதிருந்தது. எப்படியோ, ஆண்டவராகிய இயேசு, என் ஜீவியத்தைத் தொட்டதினிமித்தம் நான் இயேசுவை நேசித்தேன்.

என் அனுபவத்தை விளக்கிக் காட்டும்படி, லூக்கா எழுதின சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, கலிலேயாக் கடலின் ஒரு கரையிலிருந்து மறு கரைக்கு இயேசு தமது சீடர்களுடன் பயணமான சம்பவத்தைத் துணைக்கழைக்கிறேன். பின்பு ஒருநாள் அவர் தமது சீஷரோடுங்கூடப் படவில் ஏறி கடலின் அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார்; அப்படியே புறப்பட்டுப் போனார்கள்.

படவு ஓடுகையில் அவர் நித்திரையாயிருந்தார். அப்பொழுது கடலிலே சுழல் காற்றுண்டானதால், அவர்கள் மோசமடையத்தக்கதாய்ப் படவு ஜலத்தினால் நிறைந்தது. அவர்கள் அவரிடத்தில் வந்து, ஐயரே, ஐயரே, மடிந்து போகிறோம் என்று அவரை எழுப்பினார்கள்; அவர் எழுந்து காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார். உடனே அவைகள் நின்று போய் அமைதலுண்டாயிற்று.

அவர் அவர்களை நோக்கி : உங்கள் விசுவாசம் எங்கே என்றார். அவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு இவர் யாரோ, காற்றுக்கும் ஜலத்துக்கும் கட்டளையிடுகிறார். அவைகளும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

லூக்கா 8:22-25

இவ் வேத பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அவர்கள் பயணம் கிளம்பினர். இயேசுவோ தூங்கி விட்டார். கடும் காற்று உண்டாயிற்று.

அது தான் எனக்கும் சம்பவித்தது. நான் சார்ந்திருந்த சபைப்பிரிவை நான் குற்றஞ்சாட்டவில்லை. நியாயந்தீர்க்க வில்லை. அது எந்த சபைப்பிரிவிலும் நடந்தேறலாம். இயேசு சொன்னார், அக்கரைக்குப் போவோம். ஆரம்ப வருடங்களில் அவரது அழைப்பு, ஏற்பாடு, பிரசன்னம், வழிநடத்துதல் அனைத்தையும் நான் அறிந்திருந்தேன். இப்பொழுதோ நான் ஒரு கெடுதி நிறைந்த ஆவிக்குரிய தவறு செய்தேன். நான் அக்கிரமம் செய்தேன் (சுய சித்தம் செய்தேன்). ஊழிய களத்திலிருந்த தலைமைத்துவத்தை குற்றஞ்சாட்டினேன். நியாயந்தீர்த்தேன். இப்பொழுது அந்தக் குறிப்பிட்ட பாவம் நிமித்தமுண்டான குற்ற உணர்வு என் உள்ளத்தில் நிறைந்து நின்றது.

நான் இக்கடூர சூழலை எதிர்கொள்ளும்படி எனது சொந்த பெலத்தில் ஒரு சபையை நிலைநாட்டி ஸ்தாபனமெனும் ஏணியில் ஏறிட சுயமாய் செயல்படத்துவங்கினேன். இன்டியானாவிலுள்ள தெற்கு வளைவில் ஒரு சபையை ஸ்தாபிக்கும்படி எனது சொந்த (சுய) ஆவியில் நான்பட்ட நான்கு வருட பிரயாசங்களால் எரிந்து போனேன். எனது செயல்பாடுகள் இயேசுவை எனக்குள் தூங்க வைத்து, ஆவிக்குரிய ரீதியாகவும் மனநிலையிலும் என்னை எரித்து சாம்பலாக்கி விட்டன. பரிசுத்த ஆவியானவர் எரிந்து போகவில்லை. இயேசு எரிந்து போகவில்லை. நான் மட்டும் எரிந்து போனேன். இயேசு தூங்கிப் போனபடியால் கடும்புயலால் என் படகு மூழ்கிக் கொண்டிருந்தது. நான் கடுமையான ஆவிக்குரிய ஆபத்திலும், அபாயத்திலும் சிக்குண்டேன்.

அதே வேளையில் நான் எதிர்பார்த்தபடி ஜனங்கள் தங்கள் வழியை வகுத்துக் கொள்ளாதது கண்டு, அவர்கள்மேல் இருதயத்தில் கசப்பு கொண்டவனாய் ஆத்திரத்துடனும், மன்னிக்க முடியாதவனாகவும் ஊழியத்தை உதறிவிடும் நிலைக்குள்ளானேன். திருச்சபை ஜனங்கள் என் ஊழியத்தை விமர்சித்தது கண்டு கடுங்கோபம் கொண்டவனாய் காணப்பட்டேன். மற்றொரு பிரசங்க பீடமும், சபைப்பொறுப்புகளும் வேண்டாமென மறுத்தேன். திருச்சபை தலைமை எனக்களித்த அறிவுரைக்கும் வழி காட்டுதலுக்கும் இணங்காமல் கலகம் பண்ணினேன். நான் ஒரு ஆன்மீக தொழுநோயாளியானேன். நான் ஒரு ஆவிக்குரிய குஷ்டரோகியானேன். தேவனது பார்வையில் பாவ குஷ்டத்தால் நிறைந்தவனாயிருந்தேன்.

எங்களது தேசத்தின் மேற்குப் பகுதியின் மலையடிவாரத்தில் காணப்பட்ட தண்ணீர்ப் பரப்பினருகில் ஒரு அழகான சிறு மக்கள் கூட்டம் வாழ்ந்த பகுதிப் பக்கமாய் நானும் மேரி லோவாவும் வந்தோம். நான் இளைஞனாய் இருந்த போது, எப்படி வாழ வேண்டுமென கனவு கண்டேனோ, அதற்கொத்தபடி காணப்பட்டது அம் மக்கள் கூட்டம். சில காலத்திற்குப் பின் நாங்கள் ஓய்வுக்காக அம் மக்கள் மத்தியில் வந்தபோது

நில ஆக்கிரமிப்பாளர்களால் அவர்களது சூழ்நிலைகளில் உண்டான மாற்றத்தைக் கண்டோம். நாங்கள் ஏற்கெனவே கலந்து கொண்டு சென்ற திருச்சபையிலும் மாற்றத்தைக் காண முடிந்தது. அமெரிக்காவில் பரவலாக முற்றிலும் மாறிப்போனவர்களாக இளமையில் நான் கண்ட பல மக்கள் கூட்டங்களை நினைத்தேன்.

எனது ஆவிக்குரிய பின்மாற்ற நிலைமைக்கு ஒத்த ஒரு உவமை என் சிந்தையில் உருவானது. ஆவிக்குரிய குஷ்டரோகம் என்னில் பற்றிப் படர்ந்தது. நான் ஒரு பெரும் ஆவிக்குரிய ஆபத்திலும், கஷ்டத்திலும் சிக்கிக் கொண்டதாகக் கண்டு கொண்டேன். சிறியதொரு அருமையான ஒழுக்கம் நிறைந்த மக்கள் கூட்டம் நாட்டின் கடற்கரைகளிலும், நீரோட்டங்களுக்கருகிலும், மலைப்பகுதிகளிலும் பரவிக் கிடக்கிறது. இது வியாபாரிகளின் அறிவுக்கு எட்டிய பொழுதோ, நிலம் மடக்கி விற்போரும், ஆக்கிரமிப்பாளர்களும் நில விற்பனையாளர்களுடன் தொடர்பு கொண்டு அச்சிறிய மக்கள் கூட்டத்தை சுற்றி வளைத்து அழகுப் பூங்காவாய் காட்சியளித்த அந்நிலப் பகுதியை முற்றிலும் மாற்றி விடுகின்றனர். நிலப்பகுதி கெடுக்கப்பட்டது மட்டுமின்றி, ஒழுக்கம் நிறைந்தவர்களாய் வாழ்ந்த அம்மக்களின் மன நிலையும் பாதிக்கப்படுகிறது. கெட்ட சகவாசமும், பொருளாதார மேம்பாடும் நாகரிகம் என்ற போர்வையில் அவர்களுக்குள்ளிருந்த மேன்மையான குணநலன்களை எடுத்துப் போட்டு அவர்களை மோசமானவர்களாக மாற்றி விடுகிறது. கெட்ட நடத்தை கொண்டோரும், விபசாரிகளும் இரவு நேரங்களில் சுற்றியலையும் தெருக்களாக அப்பகுதி மாறிவிடுகிறது. விக்கிரக வழிபாட்டுக்காரர்களாக தங்கள் இடத்தைக் கெடுத்துப் போட்டு அவர்களது அந்தஸ்தை இழந்து நிற்கும் மனிதர்களாக பொருளாதார நிலை அவர்களை மாற்றி விடுகிறது. (எசே.28:12-18; யோவா.2:14,16; மாற்கு 11:17)

ஆண்டவரை ஏற்றுக் கொண்ட ஆரம்ப நாட்களில் ஒழுக்கம் நிறைந்தவர்களாய் மேன்மையான எண்ணங்களும் நடக்கையும் உடையவர்களாய் நாம் அம்மனிதரைக் காண்கிறோம். காலங்கள் செல்லச் செல்ல அவர்களுக்கென கல்வி, திறமைகள், அனுபவங்கள் மற்றும் குறிப்பிடத்தகுந்த மாற்றங்கள் அவர்கள் வாழ்க்கையில் உருப்பெற்றவுடன் அப்படிப்பட்டோரில் அநேகர் தங்கள் சொந்த மூளையையும், கைத்திறமையையும் நம்பத்துவங்கி விடுகின்றனர். தங்கள் சாதனையைக் குறித்து பெருமை பாராட்டுகின்றனர். சமூக வியாபார ஏணிகளில் ஏற முற்படுகின்றனர். அமைப்பின் முக்கியமான அங்கத்தினர்களாக தாங்கள் ஆகி விடுவதுடன் அறிவு என்னும் பெயரில் ஒன்றுமில்லாத காரியங்களில் ஈடுபாடு காட்டுகின்றனர். சமூகத்தில் தங்கள் உயர்வை நிலைநாட்டுவதற்காகவும் உலகப்பிரகாரமாக தங்கள் அந்தஸ்தைக் கூட்டிக் காட்டுவதற்காகவும் தங்கள் வீடுகளில் கூட பெருத்த மாற்றத்தை கொண்டு வந்து

விடுகின்றனர். இதினிமித்தம் அவர்கள் உண்மையும், அவர்களை நம்பும் தன்மையும் அவர்களை விட்டு முற்றிலும் எடுபட்டுப் போகிறது. அவர்கள் வெறுமையானவர்களாகவும், ஆவிக்குரிய ஜீவன் அற்றுப்போய் வறண்டு போனவர்களாகவும் ஆகிவிடுகின்றனர்.

இக்காரியம் அப்படியே முற்கால இஸ்ரவேலில் நடந்தேறிய ஒன்று. ஏசாயா 5:13,14 வசனங்களும், ஏசா.14:9 வசனமும், எவ்வாறு யூத ராஜ்ஜியத்தின் தெற்கத்திப்புத்திரர் அறியாமையுள்ளவர்களும், ஆவிக்குரிய வெறுமையுள்ளவர்களும் பாதாளத்துக்கு சமீபமானவர்களுமாய் இருந்தார்கள் என்பதை சுட்டிக் காட்டுகிறது. அவர்கள் ஆவிக்குரிய குஷ்டரோகிகளாய் மாறிப் போயினர்.

அதுபோலவே 1தீமோ.4:1,2 விசுவாசத்தை விட்டு விலகிப் போகிற கிறிஸ்தவர்களை குறிப்பிட்டுக் காட்டுகிறது. வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விலகிப் போகிற இவர்களுக்குள் மனசாட்சி மீந்திருப்பதில்லை. மாய்மாலமே நிறைந்திருக்கும். பவுல் சொல்லும் இதே ஆவிக்குரிய நிலவரத்தை யோ.8:34,35 வசனங்களில் நான் கண்ட போது இன்றைய நவநாகரீக ஜனக்கூட்டத்திற்கும். இந்த வார்த்தைகள் பொருந்தி வருவதைக் கண்டேன். இருளின் ராஜ்ஜியத்திற்கு அடிமைப்பட்ட நிலையோடு இயேசு அதனை ஒப்பிடுகிறார். பாவத்தினால் கட்டப்பட்ட நிலையிலுள்ள மனுஷன், அடிமை வாழ்க்கை வாழ்வதையும், விசுவாசத்திற்கு கீழ்ப்படிகிறவன் ஜீவியத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஜெயம் பெற்றவனாய் தேவனுடைய ராஜ்யத்திற்குரியவனாய் சுதந்தரம் பெறுகிறதையும் இயேசு சுட்டிக் காட்டினார்.

இருள் என் ஆத்துமாவில் இறங்கத் துவங்கியபொழுது எனக்குள்ளும் இதே காரியம் தான் சம்பவித்தது. ஆவிக்குரிய முரட்டாட்டத்தின் மீள முடியாத சுழிக்குள் சிக்கிக் கொண்டவனாக என்னை நானே உணர்ந்தேன். ஆவிக்குரிய வீழ்ச்சியில் இருந்து என்னை மீட்டெடுக்க ஆண்டவரால் மட்டுமே இயலும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டேன். சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் தாமே என்னை அந்த பாதாள நிலையிலிருந்து தூக்கி விட முடியும் என்பதை நான் கண்டு கொள்ள வேண்டியிருந்தது.

மேல் வீட்டில் இருந்த வேளையில் இயேசு தம் சீஷருக்கு ஒரு போதனை கொடுத்தார்.

நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள். உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டபடியே, அவர்களுக்கு சாட்சியாகப் பலி செலுத்து. யோவா.14:15; லூக்கா 5:14

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும் விஷயத்தில் வாக்குத்தத்தத்தோடு நிபந்தனையும் இணைந்தே வருகிறது. சத்திய ஆவியாகிய தேற்றவாளனை பெற்றுக் கொள்ளுவதே அந்த வாக்குத்தத்தம். அவர்கள் அவரை நேசித்து அவர் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய முன் வருவார்களானால் சத்திய ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டுமென இயேசு பரிந்துரைத்தார்.

ஆவிக்குரிய குஷ்டரோகத்துடன் காணப்படுவோருக்கு சொல்லப்பட்ட இயேசுவின் கட்டளையாகவே லூக்கா 5:14 எனக்குப்படுகிறது. அவரது கற்பனைக்குக் கீழ்ப்படிவதும் கற்பனையைக் கைக்கொள்வதுமே நாம் அவரை நேசிப்பதற்கு அடையாளங்களாம்.

தொழுநோயும் முரட்டாட்டமும்

குஷ்டரோகம் முரட்டாட்ட பாவத்தைப் போன்றது. தேவன் எனக்கு வெளிப்படுத்தியதும், கடந்த பத்து ஆண்டுகளாக நான் விவரித்துக் கொண்டு வருவதுமான இச்செய்தி என் ஜென்ம சுபாவ மனிதனுக்கு அவ்வளவு பிரியமாயிராது. இயேசு கிறிஸ்துவின் சபையோடு பகிர்ந்து கொள்கையில், சபைக்கு உற்சாக மூட்டாததுமான செய்தி இது.

குஷ்டரோகியை சுத்திகரித்தல் எனும் இச்செய்தி தேவனால் எனக்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன் வெளிப்படுத்தப்பட்ட ஒன்றாகும். பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுத்தலைப் புரிந்து கொள்ளத்துவங்கிய பத்தாண்டுகளுக்குப் பிறகு தான் இதனை முழுமையான செய்தியாகப் பெற்றேன். ஒரு நாள் வேத வாக்கியங்களை வாசித்துக் கொண்டிருக்கையில் லூக்கா 5:12-14 வசனங்களில் குறிக்கப்பட்டுள்ள குஷ்டரோகியினை சுத்திகரித்தல் தொடர்பான பகுதி குறித்து ஆண்டவர் என் ஆவியில் எழுச்சியூட்டினார். சுத்திகரிப்பின் நாளில் குஷ்டரோகி நிறைவேற்றும்படி இயேசு அவனுக்குப் பணித்த காரியங்களைக் கண்ணோக்கலானேன். சுத்திகரிப்பின் பிரமாணம் குறித்து இயேசு கட்டளையிட்டவைகளை பரிசுத்த ஆவியானவர் ஒரு நோக்கத்தோடு தான் எனக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். குஷ்டரோகியின் சுத்திகரிப்பு குறித்து லேவியராகமம் என்ன கூறுகிறது என்பதை கவனிக்க அப்பகுதி நோக்கித் திரும்பினேன். குஷ்டரோகி தன் சுத்திகரிப்பின் நாளில் நிறைவேற்ற வேண்டிய நான்கு பலிமுறைகள் லேவி.14:1-20 வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேவனுடைய செய்தியை சரியாக விளங்கிக் கொள்ளும்படி பலிமுறைகளைப் பிரித்து கிரமப்படுத்த பரிசுத்தாவியானவர் என்னை நடத்தினார். இந்த பலிகளில் அடங்கியுள்ள ஆவிக்குரிய படிப்பினைகள் முரட்டாட்ட பாவத்திலிருந்து நம்மை விடுவிக்க வல்லது

நான் இந்த நான்கு பலிகளையும் கல்வாரி, தேவனுடைய ராஜ்யத்தின் ஒளி, அதற்கான காலகட்டம், ஆவிக்குரிய பிரமாணம் ஆகிய வற்றோடு சம்பந்தப்படுத்திப் படித்தேன். தேவனுக்கும், மனிதருக்கும் எதிராக செய்த தீமைகள் குறித்த எனது அலசல் என் ஆவிக்குக் கிளர்ச்சி யூட்டியது. புதிய உடன்படிக்கையின் வெளிச்சத்தில் குற்ற நிவாரண பலி குறித்த உண்மைகளை கடைபிடிப்பது பாவத்தினால் சேதமுற்றிருக்கும் ஆத்துமாவுக்கு சுத்திகரிப்பைக் கொண்டு வரும். உண்மையான மனந் திரும்புதலின் அடிப்படையில் உண்டாகும் சுத்திகரிப்பு நேர்மையையும், தேவ பக்தியையும், கூட்டிவிடும். கெத்சமெனேயின் நிழலில் சர்வாங்க தகனபலி குறித்தும் கர்த்தருக்கடுத்த வழிகளில் தன்னை அர்ப்பணிப்பது குறித்தும் அலசிப்பார்த்தல் அருவருப்பு, நிந்தை முதலியவற்றிலிருந்து விடுபட வழிசொல்லித் தரும். பரிசுத்தாவியின் அருள்மாரியும் வர விருக்கும் கிறிஸ்துவின் வெளிப்பாடும் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ள வர்களாய் மாறும் படி நம்மை ஏவி எழுப்புகின்றன. (2பேதுரு 1:1-4 பார்க்க)

யோவேலின் தீர்க்கமான வார்த்தைகள் இன்றைய நமது காலத் திற்கும், கலாச்சாரத்திற்கும் திட்டவட்டமான செய்தியைத் தருகின்றன. நமது சமுதாய சீர்கேடுகளும், முரண்பாடுகளும் யோவேல் கூறும் செய்தியை மறுத்துவிடவோ மங்கப்பண்ணிடவோ முடியாது. மாறாகக் கட்டியங்கூறும். சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள்; தேசத்தின் குடிகள் எல்லாம் தத்தளிக்கக்கடவர்கள்; ஏனெனில் கர்த்தருடைய நாள் வருகிறது. அது சமீபமாயிருக்கிறது. அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள்; விடியற்கால வெளுப்பு பர்வதங்களின் மேல் பரவுகிறது போல ஏராளமான பலத்த ஒரு ஜாதி தீவிரமாக வந்து பரவும். . . ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும்; புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்கிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள் . . . கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது; . . . அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங்கொண்டு, தமது ஜனத்தை கடாட்சிப்பார். கர்த்தர் மறுமொழி கொடுத்து, தமது ஜனத்தை நோக்கி : இதோ நான் உங்களை இனிப் புறஜாதிகளுக்குள்ளே நிந்தையாக வைக்காமல் உங்களுக்குத் தானியத்தையும், திராட்சரசத்தையும், எண்ணெயையும் கொடுத்தேன், நீங்கள் அதினால் திருப்தியாவீர்கள். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய

நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப் படுவான். கர்த்தர் சொன்னபடி, சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும். (யோவேல் 2:1-2, 12-13, 17-19, 31-32)

நான் இந்த ஆவிக்குரிய இரகசியங்களை விளங்கிக் கொள்ளத் துவங்கியவுடன் இதுவரை நான் அறிந்திராத விதத்தில் ஆண்டவர் காரியங்களை எனக்குக் கற்றுத் தந்தார். ஆம் அவர் ஒவ்வொரு தேவ பிள்ளையையும் தனித்தனியே பேர் பேராய் ஆசீர்வதிக்க விரும்புகிறார். கிறிஸ்துவின் முழு சரீரமாகிய அவரது திருச்சபையை அவர் ஆசீர்வதிக்கவே விரும்புகிறார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் நியூயார்க் லீமாவிலுள்ள ஏலிம் வேதாகமக் கலாசாலையிலிருந்து வீட்டுக்கு செல்லும் வழியில் ஓர் இரவு பென்சில்வேனியா கோடர்ன்போர்ட்டிலுள்ள சுவிசேஷக் கூடார சபையில் நாங்கள் தங்கினோம். நாங்கள் அவ்விடத்தை விட்டுக் கிளம்பு முன் அச்சபையின் போதகரும், தேவனுடைய தீர்க்கதரிசியுமான டேவிட் மைனர் என்னையும் மேரி லோவாவையும் தமது அலுவலகத்திற்குள் அழைத்தார். அவர், கீழ்க்காணும் செய்தியை கர்த்தரிடமிருந்து எங்களுக்குக் கொடுத்தார்.

ஆழமாக வேர்விட்டு மெதுவாக வளரும் விலை மதிப்புள்ள சிந்தூர (கர்வாலி) மரமாய் உன் ஊழியம் வளரும். தேவன் உனக்கு வெளிப்படுத்தும் காரியங்களை ஒரு புத்தகத்தில் எழுதி வை. புத்தகத்தை எழுதத் தவறாதே.

தேவனுடைய தீர்க்கதரிசியான அம்மனிதன் இவ்வார்த்தைகளை என்னுடன் பகிர்ந்து கொண்டவுடன், நான் எழுத வேண்டியதாக குஷ்டரோகியை சுத்திகரித்தல் புத்தகம் தொடர்பாக பரிசுத்தாவியானவர் என்னை ஏவி எழுப்பினார்.

எட்டு ஆண்டு காலங்கள், புத்தகத்தை எழுதத் தேவையான சாத்தியக் கூறுகள் எனக்குக் கிட்ட வில்லை. நான் பிரசங்கிக்க அழைக்கப்பட்ட சபைகளிலே பல நேரங்களில் இத்தலைப்பின் கீழ் பிரசங்கித்தேன். குஷ்டரோகியை சுத்திகரித்தல் எனும் தலைப்பில் பிரசங்கித்த இடமெல்லாம் முரட்டாட்ட பாவம் வெளியாகுதலைக் கண் கூடாக காண முடிந்தது.

எனவே ஒவ்வொரு இடத்திலும் இச்செய்தியை ஆதாரமாகக் கொண்டு வகுப்பு நடத்தி, தனித் தனியே ஒவ்வொருவரின் ஆவிக்குரிய தேவைக்குமேற்ற படி நேரமெடுத்து, அனைவரது கவனத்தையும் நேரே திருப்பினேன். இவ்விதமான பாடசாலை வகுப்புகள் போதனைக்கேற்ற

சிறப்பான நேரத்தை உடையனவாயிருந்தன. வேதனையில் நொந்து கொண்டிருக்கும் மனிதருக்கு ஊழியஞ் செய்ய இஃது நல்ல தருணத்தை பெற்றுத் தந்தது. இவ்வூழியம் விழுந்து போகும் நிலையிலும் முரட்டாட்ட சுபாவத்திலும் சிக்குண்ட தனி நபர்கள் ஒவ்வொருவருக்கும் உதவும் குழுக்களை ஏற்படுத்திக் கொடுத்தது. பொல்லாத வல்லமைகளிலிருந்து விடுபட மக்களுக்கு உதவும்படி இவ்வூழியம் எமக்கு உற்சாகம் தந்தது.

புத்தகத்தை எழுது என்ற தீர்க்கதரிசன வார்த்தைக்குக் கீழ்ப்படியாமற்போனதினிமித்தமாக வளர்ந்து வந்த என் ஊழியத்தில் 1992ல் தேவனால் உண்டான பலத்த இழப்பு எனக்கு நேரிட்டது. கடைசியாக என் குதிகாலில் உண்டான ஒரு வித பாதிப்பினிமித்தமாக பிளோரிடாவில் நடந்த கிறிஸ்தவ எழுத்தாளர் மாநாட்டில் பங்கேற்று கையெழுத்திட்டேன். வீட்டிற்கு வந்தவுடன் எழுதத் துவங்கினேன். எழுத வேண்டும் என்ற ஆவலை அம்மாநாடு எனக்குள் தூண்டி விட்டிருந்தது. கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய மிகவும் விருப்பமுள்ளவனாய் எழுதலானேன்.

சீரான எனது எழுத்துப் பணி துவங்குமுன் ஆண்டவரிடமிருந்து நான் பிறிதொரு பாடம் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அஃதென்ன வெனில் முரட்டாட்ட முகத்தில் ஒருவன் தேவனுக்கும் மனிதருக்கும் தான் ஆற்ற வேண்டிய கடமைகளை அசையாமல், அலசடிக்குள்ளாகாமல் நிச்சயமுடையவனாய் நிறைவேற்ற வேண்டியது பற்றி நான் ஒரு பாடம் கற்றுக் கொள்ள வேண்டியதாயிருந்தது. இப்படியிருக்க, நான் குஷ்டரோகியை சுத்திகரித்தல் புத்தகப் பிரதியை எழுதத் துவங்கிய சில வாரங்களுக்குள் தங்களுக்கு தங்குமிடம் தேவை என்ற வேண்டு கோளுடன் ஒரு குடும்பம் எம்மை அணுகியது. ஆறு வாரமோ அதற்கதிகமாய் ஒருவேளை மூன்று மாதம் வரையோ தங்களுக்கு புகலிடம் தேவைப்படலாம் என்ற கோரிக்கையுடன் அக்குடும்ப தலைவர் எம்மைத் தொடர்பு கொண்டார். நாங்கள் உதவுவதாக ஒத்துக் கொண்டோம். குடும்பத்தலைவர், ஒருவேளை இக்குறிப்பிட்ட நாட்களுக்குள் வெளி யேறத்தவறிப்போனால் என்ன செய்வீர்கள்? என ஒரு கேள்வி கேட்டார்! நான் சொன்னேன், நாங்கள் உங்களை அடித்துத் துரத்த மாட்டோம். ஆயினும் கண்டிப்பாக மே இறுதிக்குள் இடத்தை காலி செய்து விட வேண்டும் மற்றொன்று நீங்கள் தான் உங்கள் குடும்பத்திற்கான பல சரக்குத் தேவைகளை சந்திக்க வேண்டுமென்றேன். காரியங்கள் இப்படிப்போக, நானோ பெரும் தவறிழைத்திருந்தேன். எங்களது அரவணைப்பிலிருந்தது அவர்களுக்கு மிகவும் சுகமாயிருந்தது.

காலங்கள் செல்ல, செல்ல ஆண்டவர்தாமே உதவி, அடைக்கலம் தேவைப்படும் தனிப்பட்டோர் மற்றும் குடும்பங்களை எம்மைத் தேடி

அனுப்பினார். சிலர் எங்களைத் தேடி வருகையில் ஆவியானவரே கதவை அடைத்தார். மற்றவர்களுக்கு தேவன் கதவைத் திறந்து விட்டார். நாங்கள் எப்பொழுதும் ஜெபித்து, ஆவியானவருடைய வழி நடத்துதலை சார்ந்து கொண்டோம்.

இப்பொழுது எங்களோடிருந்த குடும்பம் எங்கள் ஐக்கியத்தைச் சேர்ந்தது. இது விஷயத்தில் தற்சமயம் நாங்கள் தேவ நடத்துதலுக்காக ஜெபித்துக் காத்திருக்கவில்லை. நமது ஐக்கியத்திலுள்ள ஒரு குடும்பத்திற்கு உதவுவது நாம் ஆற்ற வேண்டிய கிறிஸ்தவ கடமைகளில் ஒன்று என்றே நினைத்தோம். எனவே தற்காலிக உறைவிடமாக ஐக்கியக் கூடம் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது.

எனது அலுவலகம், நூலகம், கோப்புகள், தட்டச்சு இயந்திரம், கணிப்பொறி இயந்திரம், நகல் இயந்திரம், மற்ற அவசிய சாதனங்கள் அனைத்தும் அடங்கியிருந்த ஐக்கியக் கூடத்தில் இக்குடும்பம் ஆறு வாரமல்ல மாறாக ஒன்பதரை மாதங்கள் தங்கி விட்டது. ஒன்றரை வயது முதல் பதினாறு வயது வரை உள்ள பிள்ளைகள் அக்குடும்பத்தில் உண்டு. ஆதலால் எனது எழுத்துப் பணித் தொடர வழியின்றி நின்று விட்டிருந்தது.

முன்னதாக, பெற்றோருக்கு அவசியமான வழிகாட்டி நூல் எம்மிடம் கிட்டியது. நீதிபதி ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்க நான் அவ்வழிகாட்டி நூலை உருவாக்கியிருந்தேன். குற்றவாளி ஒருவர் தமது விடுதலை காரியமாக ஆலோசகராய் செயல்படும்படி என்னை வேண்டிக் கேட்டிருந்தார். அக்குற்றவாளியின் சீரமைப்புக்கு எமது வழிகாட்டி நூல் பெரிதும் உதவியுள்ளது. இன்டியானாவிலுள்ள மார்ஷல் கான்டி காவல் துறையின் போதகர்களில் ஒருவராக நான் நியமிக்கப்பட்டேன். வேளா வேளைகளில் குற்றம் புரிந்தோர் சீரமைப்புக்குள் வர நான் எனது வழிகாட்டி நூலை பயன்படுத்தியுள்ளேன். தமது கோப்புக்கு எமது வழிகாட்டி நூலொன்று தேவை எனப் பெரிதும் அதை சிலாகித்துக் கேட்ட இன்டியானாவிலுள்ள போனி கான்டியின் அதிகாரி ஒருவருக்கு அதன் ஒரு பிரதியைக் கொடுத்தேன்.

எமது வழிகாட்டி நூலில் காணப்பட்ட அம்சங்கள் கிறிஸ்தவக் குடும்பத்திற்குத் தேவையான நற்போதனைகளை உள்ளடக்கியிருந்ததுடன் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் தேவையான ஆலோசனைகளையும் பூரணமாய் அளித்து உதவியது. திருச்சபையில், ஐக்கியங்களில், திருமண உறவில், குடும்பத்தில், சமுதாயத்தில், வேலையில், தொழிலில், ஒய்வு நேரவிளையாட்டுகளில் நமது நடவடிக்கைகளை சீராய் காத்துக்கொள்ள எமது வழிகாட்டி நூல் பெரிதும் பயனுள்ளதாயிருந்தது. எங்களோடிருந்த குடும்பத்தின்

பிள்ளைகள் ஆவிக்குரிய நிலையில் வளர்க்கப்பட, கிறிஸ்தவ குணா திசயங்களை உடையவர்களாய் திகழ எமது வழிகாட்டி நூல் காரண மாயிருந்தது.

இந்தக் குடும்பம் ஐக்கியத்திலுள்ள அனைவராலும் நேசிக்கப்பட்டது. எமது திருச்சபை ஐக்கியத்திலுள்ள பல குடும்பங்கள், இக்குறிப்பிட்டக் குடும்பத்தின் பிள்ளைகளை பல்வேறு சமயங்களில் தமது இல்லங்களுக்கு அழைத்துச் சென்று தைரியமூட்டி உற்சாகப்படுத்தினர். மிகவும் நேசிக்கப்படத்தக்க அக்குடும்பத்தார், தங்கள் நடக்கைகளில் சீர்பெற ஜாக்கிரதைப்பட வேண்டியிருந்தது. வழிகாட்டி நூலின் மிக உன்னத போதனையே உண்மை கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆவிக்குரிய ஆயத்தம் பற்றியதுதான். பிதாவோடும், குமாரனோடும், பரிசுத்த ஆவியானவ ரோடும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையோடும் உண்மையான ஐக்கியம் பெற்றிருத்தல் அவர்கள் அறிய வேண்டியிருந்தது (1யோவா.1:3)

வழிகாட்டி நூலை ஏற்றுக் கொண்ட தாயார் இது தான் எங்கள் தேவை! என்றார்கள். இருந்த போதிலும் வேதத்தின்படியான உண்மைக்கிறிஸ்தவத்தை அவர்கள் பூரணமாய் விளங்கிக்கொள்ள வில்லை. முடிவில் அந்த அம்மையார் கண்ணீரோடு இட்ட அறிக்கை, தம்மால் காரியங்களை ஒழுங்குபடுத்தவும், சுத்தமாய் வைக்கவும் இயலவில்லை என்பதே. தம்மால் வழிகாட்டி நூலில் கூறப்பட்டுள்ள வைகளை கடைபிடிக்க இயலவில்லை என அவர் கூறிவிட்டார்.

பல வருடங்களாய் பரிசுத்த ஆவியானவர் சுட்டிக்காட்டி வந்த காரியங்கள், எனக்கு இப்போது தெளிவாகியுள்ளன. எங்கு அசுத்தமும், குழப்பமும். ஒழுங்கின்மையும், கீழ்ப்படியாமையும், தீய வார்த்தைகளும் காணப்படுகிறதோ அங்கே முரட்டாட்ட பாவமும் தலைதூக்கி நிற்கும். தேனுடைய ராஜ்யமும், நீதியும் இதுவல்ல.

முரட்டாட்டம் மிக்க கிறிஸ்தவ மதவாதிகளாக, மேற்காணும் தன்மைகளை தங்களிடம் பெற்றுள்ள சிலரோ, அனைவருமோ காணப்படுகின்றனர் என்ற உண்மையை ஊழியத்திற்கு அழைக்கப்பட்டு ஐம்பத்தோரு ஆண்டுகளுக்குப் பின் நான் விளங்கிக் கொண்டேன். நான் கிறிஸ்தவமாகிய ஜீவனுள்ள தேவனுடைய சபையைக் குறித்தே பேசுகிறேன். கிறிஸ்து சபையை நேசித்து, அதற்காகத் தம்மை ஒப்புக் கொடுத்தார் என்று என் வேதம் சொல்லுகிறது.

தாம் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். எபே.5:26,27

இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், அவரது சபை பரிசுத்தமும், ஒழுங்கும், தூய்மையும் நிறைந்ததாய் காணப்பட்டு, தேவ சித்தம் நிறைவேற்றுகிற தேவனுடைய ராஜ்யமாய், அவருக்கென பிரித்தெடுக்கப்பட்டதாக தன்னை விளங்கப்பண்ண வேண்டுமென்று சபையைக் குறித்து கர்த்தர் விரும்புகிறார்.

எங்களது ஆரம்ப கால ஐக்கியங்களில் ஒன்று நகரத்தின் ஒய்.டபிள்யூ.சி.ஏ வில் கூடுவதுண்டு. ஒரு வார இறுதியில் நானும் என் மனைவியும் ஐக்கியத்தைப் பார்வையிட வந்தபொழுது நாங்கள் வந்து தங்களை சந்திக்க வேண்டுமென, அந்த இடம் சார்ந்த தலைமைப் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்திருந்தார். காரணம் எங்களது ஐக்கியத்தினர் கட்டிடத்தை விட்டுப் புறப்படுகையில் அதை குப்பைக் கூளங்களுடன், தாறுமாறாக, ஒழுங்கீனமான நிலையில் விட்டுச் செல்வதாகத் தெரியப்படுத்தவே. மட்டுமின்றி எங்களது சந்திப்பின்போது அவர் திட்டமாய், குறிப்பிட்டு எங்களுக்குச் சொன்ன காரியம் தெய்வீகமும், தூய்மையும் இணைந்தே செல்கின்றன என்பது தான்.

ஒய்.டபிள்யூ.சி.ஏ கட்டிடத்தை நாங்கள் பயன்படுத்திக் கொள்ள எங்களுக்கு இன்னும் சில நாட்களுக்கு மட்டுமே அனுமதி என வரையறுத்து அறிவிக்கப்பட்டது. ஐக்கியத்தினரின் தூய்மையற்ற நிலைக் காகவும், ஒழுங்கின்மைக்காகவும் அவர்களை நான் கடிந்து கொண்டேன். குழுவினரிடையே முரட்டாட்ட பாவம் இருப்பதற்கு ஆதாரங்கிடைத்தது. இந்தவிதமான பாவம் குழுவினரிடையே வேரூன்றியிருக்கக் கண்டால், தலைமைப் பொறுப்பில் உள்ளவரை கவனமாகப் பகுத்துப் பார்க்க வேண்டும். நான் மேற்பார்வையாளர் பொறுப்பிலிருந்து விடுபட விரும்பினேன். ஆண்டவரோ என்னை விடுவிக்கவில்லை. விசுவாசிகள் முரட்டாட்ட பாவங்களிலிருந்து வெளிவரும்பொழுது, அது அவர்கள் பேச்சிலிருந்து மட்டுமல்ல, செய்கைகள் மூலமும் தெரிய வரும்.

எங்களது அடைக்கலத்திலிருந்த குடும்பத்தின் பெரிய பிள்ளை களும், பெற்றோரும் திருச் சபைக்கென ஆற்றிய பங்கு பெரிதும் பயனுள்ள தாயிருந்த போதிலும் அவர்களது பங்களிப்பின் ஒரு பகுதி அவர்கள் நடவடிக்கைகள் நிமித்தம் திருச்சபையின் முன் எடுபடாமற் போயிற்று. திருச்சபைக்குள் நடைபெற்ற ஊழியங்களில் அவர்கள் தேவையின்றி தலையிட்டதினிமித்தமே அது அப்படி ஆயிற்று. மட்டுமின்றி தங்கள் வார்த்தைகளில் அவர்கள் தவறிப் போனதினிமித்தமும், வாங்கித் திரும்பச் செலுத்தாமற்போன கடன்கள் நிமித்தமுமே அது அப்படி ஆயிற்று.

போதகர் குடியிருப்புக்குச் சொந்தமான சொத்தில் அத்துமீறி நடந்து கொண்டோரால், ஒருவிசை ஆவிக்குரிய சூழ்நிலையில் சமாதானம் சீர்குலைந்து பாதிப்பு உண்டாயிற்று. சமாதானமும், அமைதியும் அந்நிலைப்

பரப்பை விட்டு எடுபட்டது மட்டுமின்றி, திருச்சபைக்குள்ளும், ஐக்கியத்திலும் அது பிரதிபலித்தது. அந்தகார மண்டலத்தின் ஆவிகள் வெறுமையையும், குழப்பத்தையும் ஒழுங்கீனத்தையும் உட்புகுத்தி, சமாதானத்தை அகற்றிப் போட்டதினிமித்தம் முரட்டாட்ட பாவம் நிலை கொண்டது. இப்பிரச்சனை தீருமுன், திருச்சபைக்குள் பல ஆயிரம் டாலர் பெறுமான நஷ்டங்களும், சேதங்களுமுண்டாயிற்று. ஐக்கியத்தைக் குலைத்துப் போட்ட ஒரு முரட்டாட்டம் மிக்க குடும்பத்தினரின் உணர்ச்சி வயப்பட்ட தீய செயல்களே இப்பிரச்சனையில் விஞ்சி நின்றன.

இறுதியாக அவர்கள் இடத்தைக் காலி செய்யவும், வேறு வழியைப் பார்த்துக் கொள்ளவும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. முதலில் அக்குடும்பத்தலைவரிடம் தாங்கள் வெளியே தூக்கியெறியப்பட மாட்டீர்கள் என்று தான் சொல்லப்பட்டது. எனினும் பின்னர் சூழ்நிலையின் விபரீதங்களினிமித்தம் நான் எனது நிலையை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. தாங்கள் கிளம்பும் வேளை வந்த போது அம்மனிதர் தாங்கள் நீண்ட காலம் தங்கி விட்டதுபோல் தெரிகிறது என்றார்.

அக்கணவரோடு கூடிய எங்களது கடைசித் தொடர்பின் போது, அவருக்கும், அவரது மனைவிக்கும் ஆலோசனைக்காக இன்னும் கதவு திறந்தே இருக்கிறது என செய்தி அனுப்பினேன். அதன் பின்னர், சபையின் அங்கத்தினர் ஒருவர் மூலம் அவர் எனக்கனுப்பியிருந்த கடிதத்தில் ஆலோசனை அவசியமில்லை எனக் கூறப்பட்டிருந்ததுடன், உமக்கே ஆலோசனை அவசியமாயிருக்க, நீர் எனக்கு எப்படி ஆலோசனை கொடுக்க முடியும்? என என்னைக் கேட்டிருந்தார்.

அவர்கள் இடத்தைக் காலி செய்து போகையில், நீண்ட காலமாக அவர்கள் பயன்படுத்தின தொலைபேசி கட்டணங்கள், மற்ற பல கட்டணங்கள் செலுத்தப்படாதிருந்ததுடன், முடித்துக் கொடுக்க வேண்டியிருந்த பல வேலைகளையும் அவர் முடித்துக் கொடுக்காமல் போய் விட்டார். அவர் செய்து தர இருந்த பணிகளுக்காக ஏற்கெனவே அவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்பட்டிருந்தது. வேலைகளோ தவறுகளோடும், ஒழுங்கற்றும் காணப்பட்டன. செய்யப்பட்டிருந்த பல பணிகள் அகற்றப்பட்டு, கூடுதல் பணத்தில் மறுபடியும் வேலைகள் செய்யப்பட வேண்டியிருந்தது. முழுமை பெறாத அவரது வேலைகளால் சபை பெரிதும் பாதிப்புக்குள்ளானது.

திருச்சபை தொடர்ந்து அக்குடும்பத்தினருக்காக ஜெபித்து வந்தது. சபையார் தங்கள் அன்பை அவர்கள் பால் வைத்தே இருந்தனர். அக்குடும்பம் தங்கள் முரட்டாட்ட பாவத்தை உணர்ந்து மனந்திரும்பி, மீண்டும் தேவராஜ்யத்தின் அங்கங்களாய் மாற தொடர்ந்து நாங்கள் அனைவரும் ஜெபித்தோம்.

இந்த வேளையில் நான் விட்ட இடத்திலிருந்து மீண்டும் எழுதத் துவங்க என்னில் ஆவிக்குரிய பெலன் இல்லாமற்போயிற்று. புத்தகப் பணி கிட்டத்தட்ட ஒரு வருடமாக கிடப்பிலிருந்தது. இந்த நிலைமாறி, மறுபடியும் ஆவிக்குரிய ஒரு ஒழுங்கு சபைக்குள் வரவேண்டியது அத்தியாவசியமாயிருந்தது. திருச்சபையை சீர் செய்வதிலேயே எழுத வேண்டிய நேரமும் கடந்து போய் விட்டது. மறுபடியும் புத்தகப்பிரதியை எழுதத் தொடங்க ஆவிக்குரிய பெலத்தை நான் ஒன்று கூட்ட வேண்டியிருந்தது. நான் கணிப்பொறி முன் அதிகநேரம் அமர என் மனைவி எனக்கு மிகவும் ஒத்தாசையாயிருந்தார். மறுபடியும் ஜனங்கள் முடிவில்லாத குறுக்கீடுகளையும், பொறுப்புகளையும் எனது தனிப்பட்ட கவனத்திற்கு கொண்டு வந்தபோது, குஷ்டரோகியை சுத்திகரித்தல் புத்தகப் பிரதி எழுதத் தேவையான ஆவிக்குரிய பெலனையும் திடசிந்தையையும் தவறவிட்டேன். கடைசியாக, நான் புத்தகம் எழுதும்படி தேவன் எனக்குப் பணித்த காரியத்தில் நான் கீழ்ப்படியும் வரை, தேவன் ஊழியத்தை கனப்படுத்த மாட்டார் என சபைக்கு அறிவித்தேன்.

இந்தப்புத்தகம் எழுதப்படுவதை பிசாசு விரும்பவில்லை. புத்தகம் எழுதும் பணியில் நான் தேவனுக்கு கீழ்ப்படிய பெலனில்லாமற்போகப் பண்ணும்படி, எனது சொந்த ஊழியமும், ஜனங்கள் என்மேல் போட்ட பொறுப்புகளுமே எனக்கு இடையூறாய் நிற்கும்படி சத்துரு அவை களையே எனக்கெதிராய் பிரயோகித்தான். புத்தகத்தை முடிக்கும்படியான விஷயத்தில் கர்த்தருடைய சித்தத்தை அறியும்படி நானும், என் மனை வியும் தேவனிடம் ஜெபித்துக் கொண்டிருந்தோம். முடிவாக மேற்குப் பகுதியில் நான் கடந்து செல்லப் போவதாக அறிவித்தேன். கிராண்ட் டேட்டான் மலைப்பகுதியில் ஓய்வெடுக்கக் கடந்து செல்லும்படி தேவன் என்னை நடத்துவதாக உணர்ந்தேன். எனது நேரத்தையும், பெலத்தையும் ஜனங்கள் எடுக்கக்கூடாதபடி அப்பகுதி மிக தொலை தூரத்திலிருந்தது.

திருச்சபைக்குள் காணப்பட்ட முரட்டாட்ட பாவத்தைக் குறித்து எழுத அமருவது, இடையறாத யுத்தகளத்தில் நின்று கொண்டிருப்பதற்கு ஒப்பானது. தேவன் குறிப்பிட்ட சில அங்கத்தினர்களையுடைய சிறு கூட்ட மாக ஊழியத்தை மீண்டும் ஒரு எல்லைக்குட்படுத்தினார். நான் அவர்களுக் காக ஆண்டவரைத் துதித்தேன். அவர்கள் பிசாசினால் தோற்கடிக்கப் படுவதோ நம்பிக்கையிழப்பதோ அவ்வளவு சுலபமானதல்ல எனத் தெரிந்தது. குஷ்டரோகியை சுத்திகரித்தல் புத்தகத்தை நான் எழுதி முடிப் பேன் என்ற நம்பிக்கை திருச்சபையில் மீந்திருந்த மக்களுக்குள் உண்டா யிருந்தது தான் சுத்தமாகும்படி சரீரம் முழுவதும் குஷ்ட ரோகத்தினால் நிறைந்தவனாய் முன் நின்ற மனுஷனுக்கு இயேசு கட்டளையிட்டதை ஒட்டியே இப்புத்தகத்தின் சாராம்சங்கள் அமைந்திருந்தன.

பின்பு அவர் ஒரு பட்டணத்தில் இருக்கையில், குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன் இயேசுவைக் கண்டு, முகங்குப்புற விழுந்து; ஆண்டவரே, உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆகும் என்று அவரை வேண்டிக் கொண்டான். அவர் தமது கையை நீட்டி, அவனைத் தொட்டு எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று. அவர் அவனை நோக்கி : நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல் போய் உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டபடியே அவர்களுக்குச் சாட்சியாகப் பலிசெலுத்து என்று கட்டளையிட்டார். லூக்கா 5:12-14

இந்தப்புத்தகம் எழுதி முடிக்கப்படும்படியாக அவர்கள் உபவாசித்து ஜெபித்தனர். ஜெப உதவியிலும், விசுவாசத்திலும், தேவ சித்தம் நிறைவேற்றுவதிலும் எனக்குத் துணை நின்ற இந்த உத்தம அன்பர்களுக்காக நான் தேவனை நன்றியுடன் துதித்தேன்.

கிராண்ட் டேட்டான்ஸின் அழகிய ஒரு பகுதியில் அமைந்திருந்த எனது இயந்திர அறை ஒன்றிலமர்ந்து நான் எழுதிக் கொண்டிருந்தேன். எழுதுவதற்கான அபிஷேகமும், தேவனது பிரசன்னமும் நிரம்பியிருப்பதை என்னால் உணர முடிகிறது. எனது சிறு மந்தை எனக்காக செய்யும் ஜெபங்களையும், உதவிகளையும் நான் உணருகிறேன். அதே வேளையில் அவர்களையும் சத்துரு தாக்கக் கூடும். எனினும் அவர்கள் ஜெப உதவியிலும், பணிகளில் காட்டும் நேர்மையிலும், ஒருவரையொருவர் நேசிப்பதிலும் தொடர்ந்து நிற்பதாகக் கூட உணர்ந்தேன்.

பிசாசு எனது எழுத்துப் பணிக்கெதிராக ஆயுதங்களைப் பிரயோகித்துக் கொண்டேயிருந்தான் வீடுகளுக்குள் சுகவீனம் மற்றும் பல நஷ்டங்களை ஜனங்களுக்கு கொடுப்பதன் மூலம் சத்துரு அதை விளங்கப் பண்ணினான். கென்யான் மலைப்பகுதியில் ஓய்வெடுக்குமிடத்தில் இருந்த மின் உற்பத்தி இயந்திரம் இருமுறை கோளாறுக்குள்ளானது. கணிப்பொறி செயற்பாடுகளில் சேதமுண்டானது. குறிப்புச் சாதனங்கள் இரண்டில் காணப்பட்ட வாசகங்கள் அழிந்து விட்டன. பதிவு செய்த சிலவும், பணி நேரமும் நஷ்டப்பட்டது போலாயிற்று. கணிப்பொறி மிகவும் தகராறு செய்தது. கணிப்பொறி சரி செய்யும் நிபுணர் ஒருவரிடம் வழி நடத்தப்பட்டு, பின் இயக்கங்கள் அவர் மூலம் சீர் செய்யப்பெற்றேன். இவை அனைத்திற்காகவும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெறுவதில் நான் சந்தோஷப்பட்டேன். எதிரியை சரிவரப் புரிந்து கொள்ளாத பட்சத்தில் விவரிக்க முடியாத பலவீனங்களை அவன் வீட்டில் ஏற்படுத்தி விட்டான்.

வேதத்தில் உள்ள மாதிரிகள்

முரட்டாட்டம் நிறைந்தவர்களாய் தேவனுக்கு எதிர்த்து நின்று, ஆவிக்குரிய குஷ்டரோகிகளாய் காணப்படுவோருக்கு தொடர்புடைய சிலவகை குஷ்டரோகங்களை வேதத்தில் இருக்கக் காண்கிறோம்.

தேவன் மோசேக்குக் கொடுத்த இரண்டாம் அடையாளம் : எகிப்தியர் தன்னை நம்பாமலும், தனக்குச் செவி கொடாமலும் போனால் தான் செய்ய வேண்டியது என்ன? என மோசே தேவனைக் கேட்டார். அதற்கு தேவன், தெய்வீக அதிகாரத்தினால் முத்திரிக்கப்பட்ட கோலை அவன் கையில் முதல் அடையாளத்திற்கேதுவாகக் கொடுத்தனுப்பினார். அதைக் கண்டும் எகிப்தியர் அந்த அடையாளத்தைப் பொருட்படுத்தாமற் போனால் செய்யவே, இரண்டாம் அடையாளத்தைக் குறித்த செய்தியை தேவன் மோசேக்குத் தந்தார். கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுத்தார்.

உன் கையை உன் மடியிலே போடு. யாத்.4:6

அவன் தன் கையை வெளியே எடுத்தபோது அது குஷ்டம் பிடித்ததாயிருந்தது. மறுபடியும் கையை மடியில் வைத்து, எடுத்தபோதோ அந்தக்கை மறுகையைப் போல் சுத்தமாயிருந்தது. கர்த்தர் மறுபடியும் மோசேயோடு பேசினார்.

முந்தின அடையாளத்தை அவர்கள் கண்டு உன்னை நம்பாமலும், உனக்குச் செவி கொடாமலும் போனால், பிந்தின அடையாளத்தைக் கண்டு நம்புவார்கள். யாத்.4:8

அவர்கள் இந்தச் செய்தியை கனவீனப்படுத்துகிற பட்சத்தில் அவர்கள் மேல் நியாயத்தீர்ப்பு வர வேண்டியதாயிருந்தது. நான் இச்செய்தியை பல ஆண்டுகளாக எனக்குள் அசைபோட்டுக் கொண் டிருந்தேன். இன்றைய கால கட்டத்திலுள்ள கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு அவசியமான செய்தி இதில் அடங்கியுள்ளது. தேவனுடைய ஜனத்திற்கும், திருச்சபைக்கும் ஆரோக்கியத்தைக் கொண்டு வருதல் மிக பெரும் அவசியமாகும். ஆவிக்குரிய குஷ்டரோகம் போல் காணப்படுகிற முரட்டாட்டங்களை போதகர்கள் தங்கள் திருச்சபைகளில் எதிர்கொள்ளு கிறார்கள். சாத்தானின் வஞ்சகத்தினிமித்தம், மாம்சத்தில் மீறுதலின் கனிகளை விளங்கப் பண்ணும்படியான சாத்தியக் கூறுகள் காணப்படக் கூடாத துதியோ, ஜெபமோ, ஆராதனையோ, ஊழியமோ இல்லை என்றே நான் நம்புகிறேன் என ஒரு பெரும் தேவ மனிதன் கூறியிருக்கிறார்.

இது போன்ற காரியங்கள் காணப்பட்டவுடன், போதகர்கள் அம்முரட்டாட்டங்களை தெய்வீக ஞானத்திற்குக் கீழ்ப்படுத்தி தீவிரமாக அதனை அடக்கிப் போட வேண்டும். அப்படிச் செய்யாத பட்சத்தில்

கருத்து வேறுபாடுகளும், பிரிவினைகளும் சபைக்குள் தலைதூக்கி விடும். கலிபோர்னியாவிலுள்ள ஒரு போதகர் தன் திருச்சபையிலுள்ள முரட்டாட்டம் மிக்க ஒரு இளம் பெண்ணை தன் அலுவலகத்துக்கு வரவழைத்து அவளைப் பார்த்து பாரபட்சமின்றி கண்டிப்புடன் கூறியது என்னவெனில், பிரியமானவளே, என் முழு அன்போடும் நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ உன் செயல்பாடுகளையும் எண்ணங்களையும் மாற்றிக் கொள்ளும் வரை, நீ சபைக்கு வருவதை நான் விரும்பவில்லை என்பது தான்.

முரட்டாட்டத்துடன் (ஆவிக்குரிய குஷ்டம்) இடைபட பழைய ஏற்பாடு ஒரு ஒழுங்குமுறையை வரையறுத்து வைத்திருக்கிறது. குஷ்டம் உடையவர்கள் பாளையத்துக்குப் புறம்பாக்கப்பட்டு, அந்நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் காலம் வரை தனித்தே வாழ வேண்டும். (லேவி.13:4-6) புதிய ஏற்பாடு ஒரு வரையரையைக் காட்டுகிறது. அது என்னை அச்சமுறச் செய்தது. அனனியா, சப்பீராள் காரியத்தில் பேதுரு அவர்களுக்கானத் தீர்ப்பைக் கூறுகிறான். அவர்கள் விழுந்து செத்தார்கள். (அப். 5:1-10)

தேவனது முதல் அடையாளத்தைப் பொறுத்தவரை நான் தவறிப் போனேன். சரீரமாகிய சபையில் காணப்படும் ஆவிக்குரிய குஷ்டத்தை இந்நாட்களில் தேவன் வெளிப்படுத்திக் காட்டுவாரா? வெளிப்படுத்துவது மட்டுமல்ல, இந்த ஆபத்திலிருந்து திருச்சபையை விடுவிக்கவும் செய்வார்.

இன்றைய திருச்சபைக்குத் தேவையான செய்திகளை எரேமியா தீர்க்கதரிசியும் செப்பனியா தீர்க்கதரிசியும் உடையவர்களாயிருந்தார்கள். அவர்களது நாட்களில் காணப்பட்ட அதே நிலைதான் இன்னும் நமது தேசத்திலும் திருச்சபைகளுக்குள்ளும் காணப்படுகிறது.

மோசேயின் சகோதரி விஷயம் : மிரியாமைப் பொறுத்தமட்டில் குடும்பச் சச்சரவுகளில் தன்னை முதன்மைப்படுத்திக் காட்டுவதில் அவள் முன்னின்றிருக்கலாம்.

எனினும் மோசேயினிடம் தேவன் அருளிச் செய்திருந்த பிரத்தியேகமான அதிகாரத்திற்கும் அவனது தலைமைத்துவத்துக்குமே எதிரானதாக அது கருதப்பட்டது. அவள் குஷ்டரோகியானாள். மோசே மாத்திரம் தேவனது முகத்திற்கு முன்பாக அவள் நிமித்தம் கதறி விண்ணப்பம் பண்ணாமலிருந்திருந்தால் அவள் குஷ்டரோகியாகவே தான் இருந்திருப்பாள். அப்படியிருக்க, அவள் ஏழு நாள் பாளயத்துக்குப் புறம்பேயிருந்ததே ஒரு பெரும் பாடம். எண்.12:1-15

கேயாசியின் விஷயம் : இவன் தன் கீழ்ப்படியாமையினிமித்தம் தனது ஆவிக்குரிய பாதுகாப்பை இழந்துபோனான்.

குஷ்டரோகியாயிருந்த நாகமான் என்னும் சீரிய இராணுவத் தலைவன் சுகம் பெறும்படி எலிசாவினிடத்தில் வந்தான். கர்த்தர் நாகமானை சுகமாக்கியபொழுது, அவன் எலிசாவுக்கு ஒரு பரிசு கொடுக்க நினைத்தான். எலிசா அதை வாங்கிக் கொள்ள மறுத்தான்.

நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன். 2இராஜா.5:16

நாகமான் பின்னும் வற்புறுத்தியும் எலிசா தொடர்ந்து மறுத்துவிட்டான். அதன் பின்னர் கேயாசி என்னும் எலிசாவின் வேலைக்காரன் நாகமானைத் துரத்திப் போய் நான் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறேன் என்றான். தீர்க்கதரிசியின் வேலைக்காரன் பேராசையுடன் எடுத்துக் கொண்டது நாகமானின் குஷ்டத்தையேயாம்.

அவனது கீழ்ப்படியாமையில் அவனுக்கு என்ன சம்பவித்தது? நாகமானிடமிருந்து இடம் பெயர்ந்த குஷ்டரோகத்தினால் கேயாசி குஷ்டரோகியானான். வியாதி அவனைப் பிடித்தது மட்டுமல்ல அவனது சந்ததியைத் தொடர்ந்தது. பேராசை, வஞ்சகமெனும் முரட்டாட்ட பாவங்கள் நிமித்தம் கேயாசி தன் சந்ததியை என்றென்றைக்கும் மீளமுடியாத தீராத வியாதிக்குள் ஆழ்த்திப் போட்டான். 2இராஜா.5:27

உசியாவின் காரியம் : பெருமையினிமித்தம் தன் இருதயத்தை உயர்த்தின உசியா கர்த்தர் வசம் பெருத்த நெருக்கடிக்குள்ளானான். 2நாளா.26:16

முற்காலத்தில் குறிப்பாக அரசர்கள் தாங்கள் விரும்பும் எதையும் நிறைவேற்றக் கூடியவர்களாய் இருந்தார்கள். அதுபோன்றிருந்த உசியாவின் பெருமை அவனுக்கு அழிவைக் கொண்டு வந்தது. தான் பெற்றிராத அதிகாரத்தை அவன் பயன்படுத்தத் துணிந்தது தேவனுக்கு விரோதமான பாவமாக காணப்பட்டது. வரம்பு மீறிய செயல்! திருச்சபைகளில் நடந்தேறும் வரம்பு மீறிய செயல்களைக் குறித்து நீங்கள் ஏதேனும் அறிவீர்களா? தனக்கில்லாத ஒரு அதிகாரத்தை தானே எடுத்துக் கொள்ளுதல் வரம்பு மீறிய செயலாகும். மந்தையை போஷிக்கும்படி தேவன் மேய்ப்பரை ஏற்படுத்தியிருக்கிறார். திருச்சபையினரை மேய்க்கவே தேவன் மேய்ப்பரை ஏற்படுத்தியுள்ளார். ஒரு தனி நபராலோ, குழுவாலோ அறிவிக்கப்பட்ட ஒருவர் பொறுப்பை ஏற்கும்பொழுது, அங்குள்ள ஆவிக்குரிய நிலவரத்தை மிக கவனமாகக் கண்ணுற வேண்டும். தன்னைத் தானே ஏற்படுத்திக் கொள்ளுதல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒரு வரம்பு மீறிய செயலேயாகும்.

வரம்பைத் தாண்டுதலே மீறுதலாகும். மீறுதலே முரட்டாட்டத்தின் விளைவு தான். பிரதான ஆசாரியனும் அவனுடன் எண்பது ஆசாரியர்களும் அரசனைத் தூக்கி வெளியே எறியும்படி கர்த்தருடைய ஆலயத்துக்

குள் போனார்கள். பரிசுத்த ஸ்தலத்துக்குள் தூபபீடத்தின் முன்னின்று தூபங்காட்ட முற்பட்ட அவனோ ஆசாரியரிடம் கோபங்கொண்டான். எனினும் அவ்வேளையில் தானே குஷ்டரோகம் அவனைத் தாக்கினது. எனவே ஆசாரியர்கள் அவனை அகற்றத் தேவையில்லாத நிலையில் அவனே வெளியேறத் தீவிரித்தான். கர்த்தர் உசியாவை அடித்தார். அவன் தன் மரண நாள் மட்டும் குஷ்டரோகியாகவேயிருந்தான். அவர்கள் அவனை ஒரு தனிமையான வீட்டில் பிரித்து வைத்து விட்டார்கள். (2நாளா.26:16-31)

போதகர் பாப் விஷயம் : நான் தேவனுக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினதினால் அதன் விளைவை அனுபவிக்க வேண்டியிருந்தது. நான் மட்டுமல்ல, என் குடும்பமே என் கலகத்தினால் உண்டான விளைவை அனுபவிக்க வேண்டியதாயிற்று.

எனது முரட்டாட்ட நிலையில், நான் மற்றொரு போதகர் பொறுப்பேற்பதை எதிர்த்தேன். எனது மேடையை விட்டு நான் இறங்கிப்போய் விட்டேன். தேவன் என்னை ஏற்படுத்தி வைத்திருந்த நிலையிலிருந்து நானே ஓடி விட்டேன். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை விட்டு, என் கோபத்திலும், ஆத்துமக் கசப்பிலும் வெளியேற முற்பட்டேன். நான் என்ன செய்ய விரும்பினேனோ, அதை மட்டுமே செய்ய நான் தீர்மானித்தேன். நானே விரும்பி கசப்பான பிச்சிலும், பாவக் கட்டிலும் என்னை அகப்படுத்திக் கொண்டேன் (அப்.8:23) நான் ஒரு ஆவிக்குரிய குஷ்டரோகியானேன். எனது முடிவு என்னை ஆவிக்குரிய குஷ்டரோகத் துக்குள் கொண்டு போய் விட்டது. நான் உன்னைப் பொறுப்பேற்கிறேன். உன் காயங்களில் நான் எண்ணெய் வார்த்து உன் காயங்களை கட்ட நான் உதவலாமா? நான் உன்னை இயேசுவிடம் அழைத்துச் செல்லவா? என ஒரு போதகரோ, தலைவரோ கூட என்னிடம் வந்து கேட்கவில்லை.

நான் என் முரட்டாட்டங்களைக் குறித்து விளக்கப் போவதில்லை. ஆயினும் நான் தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தேன். பாவ வனாந்திரத்தில் பாதை தவறி அலைந்தேன். என் குற்றத்தை அடக்கத் தெரியும் வரை மூன்று ஆண்டுகளாக அதைச் சுமந்து கொண்டே அலைந்தேன். இறுதியாக என் தவறுகள் ஆதிக்கம் பெற்று எனது போதனையிலும், வேலையிலும், பயணத்திலும், நிறுவனங்களில் இணைவதிலும், தலைமைத்துவத்தை எட்டிப்பிடிப்பதிலுமே என் முழுநோக்கத்தையும் நிலைப்படுத்தி விட்டன.

எனது முழுக் குடும்பத்தையும் என்னோடு வனாந்திரத்திற்கு எடுத்துச சென்றேன். தங்கள் தகப்பன் ஆத்துமாவில் வியாதியை சுமந்து அலைய, எனது மூன்று அழகிய ஆண மக்களும், தங்கள் சரீரத்தில் வியாதிப்பட்டு பெலவீனரானார்கள். தங்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனை யையும், நடத்துதலையும் தரக்கூடிய தகப்பனற்ற நிலையில் என் மக்கள்

கோபத்திற்கும் கசப்பிற்குமுள்ளானார்கள். அதே வேளையில் அந்த நாட்களில் நீங்கள் என்னையோ என் குடும்பத்தாரையோ அறிந்திருந்தால் நாங்கள் வனாந்தரத்திலிருப்பதாக நீங்கள் கருத மாட்டீர்கள். ஏனெனில் எங்களுக்கு அழகிய ஒரு தோட்டமும், விமானதளமும் கூட உண்டா யிருந்தன. அலாஸ்காவுக்கும் மற்ற தாழ்ந்த பகுதிகளுக்கும் நாங்கள் பயணப்படுவதற்கென எங்கள் குடும்பத்திற்கென சொந்தமான ஆகாய விமானமும் எங்களுக்கு இருந்தது. நானும் எனது மனைவியும் பொது கல்வி சாலையில் கற்பித்து வந்தோம். ஒரு விமானப்பயண ஏஜென்ஸியும் நடத்தி வந்தேன். எமது பகுதியிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் விமானப் பயணம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி ஒன்று குறித்து போதிக்கவும், ஏற்படுத்தவும் நான் கேட்டுக் கொள்ளப்பட்டேன். எனது ஆண் மக்கள் சிறந்த விமானிகளாகத் திகழ்ந்தார்கள். சர்வ தேச ஆகாயப் பயணியருக்கு நாங்கள் ஆலோசகர்களாக செயல்பட்டோம். அமெரிக்கக் கனவுகளை உடையவர்களாகக் காணப்பட்டோம் உள்ளேயோ வெறுமைதானிருந்தது. ஆவிக்குரிய வெறுமையைச் சொல்லுகிறேன்.

ஒரு நாள் நான் என் வேதாகமத்தைத் திறந்து படிக்கத் தீர்மானித்தேன். (நான் வேதத்தை திறப்பதையே நிறுத்தி விட்டிருந்தேன்) அது எனக்கு செத்த புத்தகமாகவே தெரிந்தது. நான் உண்மையான ஆவிக்குரிய நெருக்கடிக்குள் இருப்பதை அறிந்திருந்தேன். நான் கர்த்தரை நோக்கிக் கதற ஆரம்பித்தேன். ஒரு வியாபார ரீதியிலான விமானியாக சிறந்த இயந்திரங்களுடனும் கருவிகளுடனும் கூடிய நிலையில் அந்த வருடங்களில் அதிகம் சாதித்திருந்தேன். ஒரு வேளையில் இரவில் ஓரிடத்தில் விமானத்தை நிறுத்தி வைக்க வேண்டியிருந்த நிலையில், அருகில் ஒரு ஆலயம் அந்த இரவில் திறந்திருக்கக் கண்டு, உள்ளே போய் பின் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அழுதேன். நான் தேவனுக்கு முன் சென்றேன். எனினும் தேவன் எனக்கு மனந்திரும்புதலை அருளவில்லை. வானங்கள் எனக்கு வெண்கலமாகவும், அடைத்துக் கொண்டது போலவுமே காணப்பட்டன. நான் எனக்குள் வேதனைப்பட்டு, மனந் திரும்புதலுக்காக கண்ணீர் விட்டதை என் மனைவி ஒருபோதும் அறிந்திருக்கவில்லை. நான் பதின்மூன்று ஆண்டுகள் ஆவிக்குரிய வனாந்தரத்தில் கழித்தேன். பிந்திய ஐந்து வருடங்கள் நீண்ட, தனிமையான, கடினம் நிறைந்த, சகிக்க இயலாத ஆண்டுகளாக காணப்பட்டன. பிறப்புரிமையை விற்றுப் போட்ட ஏசாவை நினைத்துக் கொண்டேன்.

ஆகையினால் நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, முடமா யிருக்கிறது பிசகிப் போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள். யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களா யிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும்

கர்த்தரைத் தரிசிப்பதில்லையே ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும், ஒருவனும் வேசிக்கள்ள னாகவும், ஒரு வேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனா கவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர் விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான். (எபிரேயர் 12:12-17)

கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக. தேவன் எனக்கு மனந்திரும்புதலை அருளிச் செய்த நாள் வந்தது. அது எனது கொண்டாட்டத்தின் ஆண்டு.

அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்கு யூபிலி வருஷமா யிருப்பதாக; அதிலே விதைக்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும் . . . அது யூபிலி வருஷம்; அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருக்க வேண்டும்; அந்த வருஷத்தில் வயல்வெளியில் விளைந்தவைகளை நீங்கள் புசிக்க வேண்டும். காணியாட்சிக்குத் திரும்பிப் போகக்கடவன் . . . உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக் கூடாது; உன் தேவனுக்கும் பயப்பட வேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். ஒருவன் மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள தன் வாசஸ்தலமாகிய வீட்டை விற்றால், அதை விற்ற ஒரு வருஷத்துக்குள் அதை மீட்டுக் கொள்ளலாம்; ஒரு வருஷத்துக்குள்ளாகவே அதை மீட்டுக்கொள்ள வேண்டும். ஒரு வருஷத்துக்குள்ளே அதை மீட்டுக் கொள்ளாதிருந்தால், மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள அந்த வீடு தலைமுறைதோறும் அதை வாங்கினவனுக்கே உரியதாகும்; யூபிலி வருஷத்திலும் அது விடுதலையாகாது. (லேவி.25:11-13,17,29,30)

நான் பீடத்திற்குமுன் போய் அழுது, ஆண்டவருக்கு முன் மனந்திரும்பினேன். நான் அழுது, பீடத்தண்டை மனந்திரும்பி, எழுந்து, திரும்பியபோது அதே பீடத்திற்கருகே என்னைத் தொடர்ந்து என் முழுக் குடும்பமும் வந்திருந்ததைக் கண்டேன். நாங்கள் அனைவரும் அன்று ஒரு திருப்புமுனையை அந்த பீடத்தினருகில் பெற்றுக் கொண்டோம்.

குடும்பத்தலைவரில் உண்டான ஆவிக்குரிய குஷ்டத்தின் விளைவாக முழுக்குடும்பமும் முரட்டாட்த்திற்குள் சிக்கியிருந்தது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையோடு கோபித்து கசந்து கொண்டு தேவனது அழைப்புக்கு எதிராய் செயல்பட்டதினால் ஆவிக்குரிய குஷ்டத்தோடும், முரட்டாட்டத்தோடும் நான் இடைபட வேண்டியதாயிருந்தது.

3. ஆண்டவரைப் பற்றும் அன்பு

பின்பு அவர் ஒரு பட்டணத்தில் இருக்கையில், குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன் இயேசுவைக் கண்டு, முகங்குப்புற விழுந்து : ஆண்டவரே உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆகும் என்று அவரை வேண்டிக் கொண்டான். அவர் தமது கையை நீட்டி, அவனைத் தொட்டு எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று. அவர் அவனை நோக்கி : நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல், போய், உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டபடியே, அவர்களுக்குச் சாட்சியாகப் பலிசெலுத்து என்று கட்டளையிட்டார். லூக்கா 5:12,13,14.

முரட்டாட்டத்திலிருந்து விடுதலை

நான் என்னத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்? நான் இப்பொழுது லேவியராகமம் பதினான்காம் அதிகாரத்தை கருத்துடன் படித்துக் கொண்டிருந்தேன். சுத்திகரிப்பின் நாளில் குஷ்டரோகி நிறைவேற்ற வேண்டிய நான்கு விதமான பலிகளைக் குறித்து அங்கே எழுதப்பட்டிருக்கிறது.

நான் பலியின் அடிப்படையைப் புரிந்து கொள்ளும் நிலைக்கு வந்தேன். ஆண்டவரைப் பற்றும் அன்பு.

தேவனது எதிர்பார்ப்பை நிறைவேற்ற ஆண்டவரைப் பற்றும் அன்புள்ள இருதயம் எப்பொழுதும் திறந்தும், ஆயத்தத்துடனும் இருக்கும். இப்பொழுது என் இருதயத்திற்குள் இருப்பதுடன் முன் நின்றேன். என் உள்ளத்தில் உறைந்து கிடப்பதை எடுத்துக் காட்ட நான் நேர்மையுடன் தேவனை அனுமதிப்பேனா?

சுத்திகரிப்பின் நாளில் குஷ்டரோகி (நான் ஆவிக்குரிய குஷ்டரோகியாய் என்னைக் கண்டேன்). நிறைவேற்ற வேண்டிய முதல் பலி லேவியராகமம் ஐந்தாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது குற்ற நிவாரண பலி. பாவத்தால் உண்டான பாதிப்புகளை இது சரி செய்கிறது. எனக்குள் இருந்த முரட்டாட்ட பாவம் என்னிலும், என் குடும்பத்திலும், மற்றவர்களிலும் பெருங்கேடு விளைவித்திருந்தது. பலி செலுத்தும் மனிதனைப் பொறுத்த வரை இந்த பலி சற்று கடினமான ஒன்று. என்னவெனில் கர்த்தர் குற்ற நிவாரண பலியில் திருப்தியாகும் வரை அம்மனிதன் வேறு எந்த பலிகளுடனும் ஆண்டவர் சந்நிதியில் வரக்கூடாது.

குஷ்டரோகம் நீங்கி சுத்திகரிக்கப்படுகிறவன் நிறைவேற்ற வேண்டிய இரண்டாவது பலி பாவ நிவாரண பலி. (பிரசங்கியாரின் சுத்திகரிப்பு இங்கே குறிக்கப்பட்டிருக்கிறது) தேவ சித்தம் செய்ய முடியாத உண்மையினின்று வழுவிய, பெலவீனத்தோடு கூடிய, மீட்கப்படாத, புதிதாக்கப்படாத ஜென்ம சுபாவ மனிதனோடு இது இடைபடுகிறது. (உதாரணமாக : நான் தேவனுடைய மனிதனாயிருக்க முயற்சித்தும், முடியாமல், சோர்ந்து போனேன்) இங்கே என் ஆத்துமா பூரண வல்லமைக்குள் இழுத்து வரப்பட்டு தேவ கிருபையினாலே சுத்திகரிக்கப்படுகிறேன். (என் எண்ணங்கள், மனப்பான்மை, குறிக்கோள்கள், பிரதிபலிப்புகள், தீர்மானங்கள் உட்பட அனைத்தும் சுத்திகரிக்கப்பட்டதாகக் கண்டேன்).

மூன்றாவதாக, லேவியராகமம் முதல் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பலி, சர்வாங்க தகன பலி. இந்த பலியின் மூலம் எனது புதிய மனிதன் தேவ பக்தியுடன் அவருக்கு முன் நிற்கவும், அவரைப் பிரியப்படுத்தும் அவரது அழைப்பை நிறைவேற்றவும் ஏது உண்டாக்குகிறது. சர்வாங்க தகனபலி, தேவ சித்தத்தை நிறைவேற்றக் கூடாத பெலவீனப்பட்ட மீட்கப்படாததும், புதிதாக்கப்படாததுமான ஜென்ம சுபாவ மனிதனில் ஒரு கிரியையும் செய்கிறதில்லை. தேவன் மாம்சத்தை நியாயந்தீர்த்து அழிவுக்குட்படுத்துகிறார். (விழுந்து போகும் மனித நிலை) அது ஒரு போதும் தேவனுடைய ராஜ்யத்தில் பங்கடைய முடியாது. மனிதனுடைய ஆவி கிறிஸ்துவுக்குள் புதிதாயிருக்கிறது. பரிசுத்தாவியானவர் என்னை நடத்துகிறபடி என் ஆவியில் நான் நாளுக்கு நாள் அவரைப் போலாகிறேன். நான் எனது பழைய சுபாவத்தை சிலுவையிலறைந்து விடுகையில், பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையின் மூலம் என் ஆத்துமாவில் மீட்பைக் கொண்டு வருகிறார். நான் தேவனுக்குக் கீழ்ப்படிவதால் என்னில் வெளியரங்கமாகவும் இது நிகழுகிறது. கர்த்தர் என்னை தேவனுடைய ராஜ்யத்துக்குள் இணைத்து விடுகிறார்.

கடைசி பலி லேவியராகமம் இரண்டாவது அதிகாரத்தில் இருப்பதாகக் கண்டு கொண்டேன். இது பாவ நிலைக்கு அப்பாற்பட்டது. எனக்குள் பெருகிக் கொண்டிருக்கும் ஆவியின் வாழ்வையும், உண்மையான தேவ பக்தியையும் எடுத்துக் காட்டுவதாய் அது இருந்தது. அவரது திட்டத்தைத் தொடர்ந்து நான் தேவனது பெரிதும், விலையேறப் பெற்றதுமான வாக்குத் தத்தங்களை உரிமை கோரலானேன், அவரது திவ்விய சுபாவங்களுக்கு பங்காளிகளாவதற்கடுத்த சத்தியம் பரவசமூட்டக் கூடிய ஒன்றாகும். அவரது திட்டங்களை பின்பற்றுவதன் மூலம் உலக இச்சைகளை விளையச் செய்வதும் விருத்தியடையப் பண்ணுவதுமான காரியங்களை விட்டு வெளியே வர முடிந்தது. அவரது வழி காட்டுதலுக்கு இசைந்து கொடுப்பதினிமித்தம் மலைகளைப் பெயர்க்கத்தக்க விசுவாசத்தை சுதந்தரிக்கும் அனுபவத்திற்கு வளர்ந்தேறினேன். தேவனையும்,

தேவனுடைய ராஜ்யத்தையும் உள்ளடக்கிய நித்திய மேன்மைகளைப் பற்றிக் கொள்ளும்படி வானத்தின் பலகணிகள் எனக்குத் திறக்கப்பட்டன. ஆதி அன்பு எனக்குள் மீண்டும் கொழுந்து விட்டெரியத் துவங்கியது. அவருக்கு முன்தாழ்மையாய் நடந்து கொள்ள பழகி விட்ட இந்த எளிய ஊழியன் மேசியாவின் இரண்டாம் வருகையை முழு நிச்சயத்துடன் பிரசங்கிக்க முடிந்தது.

கிறிஸ்து இயேசுவானவர் இந்த அரிய பாடங்களை எனக்குக் கற்றுத்தர முன் வந்ததின் காரணம், நான் மறுபடியும் மேலோட்டமான காரியங்களிலேயே நிலைத்திருக்க அல்ல என்பதை நிச்சயமாய் எனக்கு அறியப்படுத்தினார். விசுவாசி என்ற நிலையில் நான் மிகவும் கவனத்துடன் கீழ்ப்படிய வேண்டிய காரியம் ஏதோவொன்று இங்கே உண்டு என்பதை விளங்கிக் கொண்டேன். வேதத்தின் மூன்று சுவிசேஷங்களில் குறிப்பிடப் பட்டுள்ளதாலும் இக்காரியத்தின் முக்கியத்துவத்தை நான் புரிந்து கொள்ள முடிந்தது. (மத்.8:14; மாற்கு 1:4044; லூக்கா 5:1214) இயேசு நமக்கு ஒரு வாக்கினை அருளியுள்ளார்.

நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை கைக் கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்கும் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். யோவான் 14:15,16,17

கிறிஸ்துவின் வார்த்தையின் பேரில் எனக்குண்டான விசுவாசத்தின் அடிப்படையிலும், தேவனுக்குமுன் என் மனசாட்சியோடு கூட நான் ஆண்டவரை நேசிப்பதைப் பொறுத்தும் உண்டான பரிசோதனை இது என நான் சொல்லலாம். ஆரோக்கியமான உபதேசங்களை திருச்சபைக்குப் போதிக்கும்படி எபேசுவில் ஊழியஞ்செய்த தனது உத்தம கூட்டாளியும், உடன் ஊழியனுமான தீமோத்தேயுக்கு மேய்ப்பனுக்குரிய கரிசனையோடு பவுல் எழுதுகிறார். பவுலின் உள்ளக் கிடக்கையையும், உதவியையும் தனக்கு விளங்கப்பண்ணும்படி தீமோத்தேயு எதிர்பார்த்திருந்த வேளை இது. பல்வேறு சிறு குழுக்களாக பல போதகர்கள் கீழ் இயங்கிக் கொண்டிருந்த சபையின் அவலநிலையைக் கண்டு துயருற்று நின்று கொண்டிருந்த தீமோத்தேயுவுக்கு அறிவுரை அவசியப்பட்டது. அதிலும் வளரும் திருச்சபைக்கு உபதேசங்கள் மிக அத்தியாவசியமாகும். பவுலைப்போல முதிர்ந்த அனுபவங்களை உள்ளடக்கிய தேவ மனிதர்கள் தான் ஆவிக்குரிய ஆபத்தான காலகட்டங்களில் திருச்சபைக்கு சீரான உபதேச ஒழுங்குகளை நிர்ணயித்துத்

தர முடியும். எனவே பவுல் தனது ஊழியத்தில் தான் பெற்றெடுத்த குமாரனும் ஊழியனுமான தீமோத்தேயுவுக்கு தைரியமூட்டி அறிவுரைகூறி, வழி நடத்தும்படி தன் எழுதுகோலைக் கையிலெடுத்து, சபைக்குள் காணப்படுகிறதான உபதேசக் கோளாறுகளை அகற்றி ஆரோக்கிய உபதேசங்களைக் கற்பிக்குமாறு தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். தேவனது கற்பனைகள் அருளப்படுவதன் நோக்கத்தை அவர் தன் நிருபத்தில் கோடிட்டுக் காட்டுகிறார்.

''கற்பனையின் பொருள் என்னவெனில் சுத்தமான இருதயத்திலும், நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே'' 1தீமோ.1:5

இந்த வேத பகுதியின் ஆவிக்குரிய உட்கருத்தை கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினார். என்னை ஊழியத்துக்கு தேவன் தெரிந்து கொண்ட பாதையை அவர் எனக்கு வெளிக் காட்டுவதாக உணர்ந்தேன். எனக்குத் தேவையான தெளிவு, விடுதலை, சுகம், புதிதாக்குதல், ஊழியத்திற்குத் தேவையான அபிஷேகம் போன்ற தேவ ராஜ்யத்திற்கடுத்த விதிமுறைகளை என் வாழ்வில் நடைமுறைப்படுத்த ஆண்டவர் உறுதியாயிருந்தார். உண்மையான ஒப்புக் கொடுத்தலுக்கு தேவன் என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். தவறான உபதேசங்களையும், விசுவாசக்கேட்டையும் எதிர்த்து நின்று தேவனுடைய வார்த்தைகளைப் பிரயோகப்படுத்தத்தக்க நம்பகமானவனாக அவர் என்னை உருவகப்படுத்திக் கொண்டிருந்தார்.

கடந்த பத்தொன்பது ஆண்டுகளாக ஸ்தாபன சபைகளிலும், மறுமலர்ச்சி வட்டாரத்திலும், பெந்தெகொஸ்தே கூட்டத்தினரிடையேயும் போதகராக, ஊழியஞ்செய்து நான் கிரகித்துக் கொண்டதெல்லாம், நாம் ஆண்டவரின் ஒழுங்குமுறையில் தவறிப்போயிருக்கிறோம் என்பதைத்தான். நாம் இரட்சிக்கப்பட்டோம். நாம் பரிசுத்தாவியானவரின் நிறைவைத் தேடி, ஆவியானவரால் நிரப்பப்பட்டோம். இப்பொழுது நாம் இருண்ட உலகில் தேவனுடைய பிரதிநிதித்துவத்தை விளங்கப் பண்ணுகிறோம். இது தெளிவாய் இந்த நாட்களில் விளங்குகிறதா? இல்லையேல் நாம் அவர் வைத்திருக்கும் முறைமைகளின்படி தேவ ராஜ்யத்தில் பிரவேசிக்கவில்லை.

இயேசு குஷ்டரோகிக்கு கட்டளை கொடுத்தார்.

''அப்பொழுது அவர் அவனை நோக்கி; நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு'' மாற்கு 1:43

''அவர் அவனை இக்காரியத்தைக் குறித்து ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு கட்டளையிட்டார். லூக்கா 5:14

இயேசு அவனை இதுகுறித்து ஒருவருக்கும் சொல்லாதபடி கட்டளையிட்ட அதே வேளையில் சில காரியங்களை செய்யவும் கட்டளையிட்டார். நான் சில காரியங்களை செய்ய வேண்டியிருந்தது என்று

நான் கண்டு கொண்டேன். நான் பேசக் கற்றுக் கொள்வேனானால் நான் பேசுவது போல நடக்கவும் வேண்டுமென ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள். இயேசு சொல்லியிருப்பதுபோல நான் என்னென்ன செய்ய வேண்டுமென மிகுந்த ஆவலோடு பார்க்க விரும்பினேன். ஏனெனில் அவர் என்னையும் ஆவிக்குரிய குஷ்டரோகத்திலிருந்து வெளியே கொண்டு வந்திருந்தார். எனவே நான் புதிய ஆய்வு வேதாகமம் ஒன்றினையெடுத்து, லேவியராகமம் பதினான்காம் அதிகாரத்தை கண்ணுறலானேன். அந்த அதிகாரத்தில் உள்ளடங்கிய செய்திக்காக ஜெபித்து, கருத்தூன்றிப் படித்தேன். இந்த வேதபகுதியை நான் படித்த போது, அதில் பல அத்தியாவசியங்கள் அடங்கியிருந்ததைக் கண்டேன். ஆவிக்குரிய பரிகாரத்திற்கென நான் நேரடியாகக் கீழ்ப்படிய வேண்டிய விஷயங்களை கீலேயாத்தின் பிசின் தைலமாகிய இயேசு எனக்குக் காண்பித்துக் கொடுத்தார். வரிசைக் கிரமப்படி நான் செய்ய வேண்டியவைகளை பரிசுத்த ஆவியானவர் மூலம் அவர் எனக்குக் குறிப்பிட்டுக் காட்டினார். நான் புதுப்பிக்கப்படவும், உயிர் மீட்சியைப் பெறவும் அவருடைய வழியும், சத்தியமுமே என் பாதைக்கு ஒளி கொடுக்கும் தீபங்கள் என்று தெரியப்படுத்தினார்.

அ) அவன் ஆசாரியனிடம் கொண்டு வரப்பட வேண்டும்

1) பரிசோதனைக்காக
2) தெளிக்கப்படுதலுக்காக
3) சுத்திகரிக்கப்பட

ஆ) ஆசாரியன் அவனுக்காக செய்ய வேண்டியவை

1) குற்ற நிவாரண பலியின் மூலம்
2) பாவ நிவாரண பலியின் மூலம்
3) சர்வாங்க தகன பலியின் மூலம்
4) போஜன பலியின் மூலம்

இ) ஆசாரியன் அவனுக்கு பாவநிவிர்த்தி செய்ய வேண்டும்.

1) அவன் சுத்தமாவான்

பரிசுத்த ஆவியானவரின் ஆய்வு வெளிச்சத்தில் நான் என்னை அலசிப்பார்க்கையில் மேற்கண்ட படிகளைக் கண்டேன். ஆயினும் எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளக் கூடாத மடந்தையாகவும், ஊமையனாகவும் நான் காணப்பட்டேன். இன்னும் எனக்கு ஆவிக்குரிய தெளிவு அவசியப்பட்டது. தேவனே எனக்காக சுத்திகரிப்பின் படிகளில் என்னை எடுத்துச் சென்றார். அவருடைய வார்த்தையில் அவர் உண்மையுள்ளவர். எனது ஆரம்ப பெலவீனங்களைக் குறித்த தெளிவு, அவருடைய நோக்கத்தின் படியே என் ஆவியில்

ஊடுருவியது. சுத்தமான இருதயத்தில் பிறக்கும் அன்போடு கூட தேவ சித்தம் செய்வதும், நல்மனசாட்சியோடு அவருக்கு முன் நிற்பதும் அவருடைய வசனத்தைக் குறித்து சந்தேகப்படாமல் விசுவாசத்தை செயல்படுத்துவதுமே என்னைப் பற்றிய அவரது நோக்கமாகும். அவர் என்னை தேவனுடைய ராஜ்யத்திற்குட்படுத்தினார். எனினும் பழைய சுபாவங்களின் தாக்கங்களினாலுண்டான அநேக போராட்டங்களை மேற்கொள்ள ஆவிக்குரிய வல்லமையும், சக்தியும் அவசியப்பட்டது. (மத்.11:12; லூக்.16:16)

இந்த தேசத்தின் மேற்கத்திய பாகத்தில் பழங்கால சரித்திரம் கூறும் ஒப்பற்ற கதாபாத்திரம் ஜான் கோல்டர் என்பவராவார். கறுப்புநிற பாதங்களையுடைய இந்தியர்கள் எனப்பட்ட கூட்டத்தாரிடம் ஒருவிசை சிக்கிக் கொண்ட அவர் தப்பித்தவிதம், நாமும் தேவனுடைய ராஜ்யத்திற்குள் முன்னேறிச் செல்ல நமக்கு நல்லதொரு உவமையாக அமைந்துள்ளது.

எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்ட கோல்டர் நிர்வாணப் படுத்தப்பட்டு சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார். அவருக்கு எப்படிப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்றுவது என அவரது எதிரிகள் ஆலோசித்தபின், எதிரிகளின் தலைவனால் அவர் மரங்களற்ற ஒரு புல்வெளிக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். அங்கு அவரை கட்டவிழ்த்து விட்டு, விளையாட்டுப் பொருளாக்கி, இளைஞர்கள் அவரை அடித்து உதைத்தே கொல்ல உத்தரவிடப்பட்டது. இதுகண்ட கோல்டர் நிர்வாணமாகவும், வெறுங்காலுடனும், தன் மூக்கிலிருந்து இரத்தம் வருமளவும் தப்பி ஓடியுள்ளார். ஆயினும் போர்த்திறமை மிக்க எதிரிகள் கூட்டம் அவரை சுற்றி வளைத்துள்ளது.

சரித்திரம் கூறுவதென்னவெனில், அவர் அவர்களது சிறந்த ஓட்டக்காரர்களை முறியடித்தார். தம் ஜீவனைத் தப்புவிக்கும்படி கரடு முரடான வழிகளில் அவர் ஓடினபடியால் அவரது கால்கள் இரத்தஞ் சிந்திப் புண்ணாகி விட்டன. அப்படித் தப்பியோடி எதிரிகளின் கைகளில் சிக்காம லிருக்க தமக்கு எதிரே காணப்பட்ட ஆறொன்றில் குதித்து, தண்ணீருக் கடியிலேயே வெகுநேரம் மூழ்கியிருந்து, இரவில் இருட்டு வேளையில் நீந்திச் சென்று தப்பியுள்ளார். அதன் பின்னும் நிர்வாணியாகவும் தகிக்கும் வெயிலிலும் சிவந்து புண்ணான பாதங்களுடன், ஏழு நாட்கள் இரவு பகல் பயணித்து, முன்னூறு மைல்களைத் தாண்டி இறுதியாக கோல்டர் எதிரிகளின் கைக்குத் தப்பியிருக்கிறார். பசி, தொய்வு, கால் புண்ணாகிப் போன நிலை என பல உபத்திரவங்களைத் தாண்டியே அவர் மரணத்திற்குத் தப்ப முடிந்தது.

ஜெயம் பெறும் கிறிஸ்தவனாக மாறிட அவசியமான சில ஆவிக்குரிய நியதிகளை இவரது சவால் நிறைந்த சரித்திரம் நமக்குக் கற்றுத் தருகிறது. நமது அக்கிரமத்தின் பிணையல்களை அவிழ்த்துப் போட்டு, சுய நீதியின் ஆடைகளை களைந்து விட்டவர்களாய், மதசம்பிரதாயக் காலணிகளை கழற்றிப் போட்டால் தான் நாம் தேவனுடைய ராஜ்யத்தை நோக்கி தீவிரமாய்

ஓடமுடியும். பிசாசின் விழுந்துபோன தன்மைகளை விட்டும் அவனது பிடியிலிருந்தும் தப்பி, முரட்டாட்ட பாவங்களிலிருந்து வெளியேறி வருவதற்கு சில பாரங்களை நாம் களைந்து போட வேண்டியது அவசியம். மட்டுமின்றி தேவனுக்கு முன் வெளியரங்கமாயும், கர்த்தருடைய பலத்தினால் இடைக் கட்டப்பட்டவர்களாகவும் ஆத்தும ஈடேற்றத்திற்காக வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டு முன் சென்றால் மட்டுமே எதிரியின் வளைப்புகளுக்கு தப்ப இயலும்.

அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய சிறைப்படுத்துகிறவர்களா யிருக்கிறோம். 2கொரி.10:5

ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த, அவரை நினைத்துக் கொள்ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ் சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே. எபி.12:1-4

அநேகர் என்னைப் போலவே சரியான துவக்கத்தை உடையவர்களாயிருக்கிறார்கள். எனினும் இடையில் சத்தியத்தை விட்டுத் திரும்பி பாதை தவறிப்போகிறார்கள். (1தீமோ.1:6) இது ஆதித் திருச்சபையின் உண்மை நிலவரம் மட்டுமல்ல, இந்த நூற்றாண்டிலும் கிறிஸ்தவ திருச்சபைக்குள் இது மாதிரியான காரியங்கள் காணப்படுகிறது என்பதே உண்மை. கர்த்தருடைய ஊழியத்திற்கென அழைக்கப்பட்ட வேளையில் இந்த மனிதனுக்கு வயது இருபது மட்டுமே. நான் தேவனுக்கு முன்பாக குற்றமற்றவனாகக் காணப்படவில்லை. ஏனெனில் எனது புறம்பான மனுஷனின் கிரியைகள் சரியாயில்லை.

ஜென்ப சுபாவமான மனுஷன் தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவை களானதால் அவைகளை அறியவுமாட்டான். 1கொரி.2:14

அவன் ஆசாரியனிடம் கொண்டு வரப்பட வேண்டும்

''குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின் நாளில் அவனுக்கடுத்த பிரமாணம் என்னவென்றால் அவன் ஆசாரியனிடத்தில் கொண்டு வரப்பட வேண்டும்'' லேவி.14:2

இயேசு அந்த குஷ்டரோகியிடம் லேவியராகமத்தில் மோசேக்கு கொடுக்கப்பட்டிருந்த கட்டளையின்படியே அதை ஒருவருக்கும் சொல்லாதிருக்க வேண்டுமென்றார். நாமோ நடப்பதற்கு பதில் பேசத் தான் விரும்புகிறோம். அவர் அவனை நோக்கி : நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல், போய், உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டபடியே அவர்களுக்குச் சாட்சியாகப் பலிசெலுத்து என்று கட்டளையிட்டார். லூக்கா 5:14

என்னுடைய ஆசாரியன் யார்? இயேசுவே அவர். நான் இயேசு கிறிஸ்துவிடம் வர வேண்டும். எனது மனப்பான்மையிலும், நடவடிக்கைகளிலும் எனக்கு உதவி அவசியப்படுகிற நேரங்களுண்டு. யாரோ ஒருவர் எனக்காக திறப்பின் வாசலிலே நிற்க வேண்டும். என்னால் ஜெபிக்க முடியாது. கடமையாற்றாத மேய்ப்பர்களுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரைக்கும்படியாக தேவன் எசேக்கியேலுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் பலவீனப்பட்டவைகளை பலப்படுத்தாமலும் நசல் கொண்டவைகளை குணமாக்காமலும் எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும் இருந்தார்கள். காணாமற்போன ஆடுகளை அவர்கள் தேடிக் கொண்டு வரவில்லை. துரத்துண்டவைகளை திருப்பிக் கொண்டு வரவில்லை. எனவே கர்த்தர் கடமையாற்றாத அம்மேய்ப்பர்களுக்கு விரோதமாய் தீர்க்கதரிசனம் கூறுவித்தார். துரத்துண்டு சிதறி ஓடிய ஆட்டை தேடிக் கண்டுபிடித்து இரட்சிக்கும்படி கர்த்தர் மேய்ப்பரைக் குறித்துப் பேசினார். ஆனால் எனது கிறிஸ்தவ சபையோ என்னை விடுவிக்கவு மில்லை. ஆவிக்குரிய சுகமாகுதலுக்கும், புதுப்பித்தலுக்குமேதுவாக ஒன்றும் எனக்குச் செய்யவுமில்லை. ஆனாலும் சபைக்கு பதிலாக கர்த்தர் தமது பரிசுத்த ஆவியானவர் மூலம் என்னைப் பொறுப்பெடுத்தார். ஒரு குஷ்டரோகி தன் சுத்திகரிப்பின் நாளிலே நிறைவேற்ற வேண்டியதாக லேவியராகமத்தில் என்னென்ன பிரமாணங்கள் எழுதப்பட்டிருக்கிறதோ, அவைகளெல்லாம் ஆவிக்குரிய பிரகாரம் என்னில் நிகழ்ந்தேறும் வரை அவர் என்னை ஊழியத்திற்குப் போக அனுமதிக்கவேயில்லை. நான் அசுத்தனாக, ஆவிக்குரிய குஷ்டரோகியாக இருந்தேன். அவர் ஆவிக்குரிய அந்தகாரத்தினின்றும், அதன் ஆதிக்கத்தினின்னும் விடுதலை பெற்று உயிர்மீட்சியடையும் யூபிலி ஆண்டைக் குறித்த வாக்குத்தத்தங்களை உள்ளடக்கிய வேத பகுதிகளுக்குள் என்னை எடுத்துச் சென்றார். நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன். எசே.22:30

தங்களையே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ! மேய்ப்பர் அல்லவா மந்தையை மேய்க்க வேண்டும். நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசல்கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக் கொண்டு வராமலும், காணாமற்போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள். கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் : இதோ, நான் மேய்ப்பருக்கு விரோதமாக வந்து, . . . இதோ நானே என் ஆடுகளை விசாரித்து, அவைகளைத் தேடிப்பார்ப்பேன். ஒரு மேய்ப்பன் சிதறுண்ட தன் ஆடுகளின் நடுவே இருக்கிற நாளில் தன் மந்தையைத் தேடிக் கொண்டிருக்கிறது போல, நான் என் ஆடுகளைத் தேடி, மப்பும் மந்தாரமுமான நாளிலே அவைகள் சிதறுண்டுபோன எல்லா இடங்களிலுமிருந்து அவைகளைத் தப்பி வரப்பண்ணி, அவைகளை ஜனங்களிடத்திலிருந்து புறப்படவும் தேசங்களிலிருந்து சேரவும் பண்ணி . . . (எசே.34:2பி, 4, 10மு, 11,12,13மு) அன்றியும், ஏழு ஓய்வு வருஷங்களுள்ள ஏழு ஏழு வருஷங்களை எண்ணுவாயாக; அந்த ஏழு ஓய்வு வருஷங்களும் நாற்பத்தொன்பது வருவுமாகும். அப்பொழுதும் ஏழாம் மாதம் பத்தாந்தேதியில் எக்காளச் சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும்; பாவ நிவாரண நாளில் உங்கள் தேசமெங்கும் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும். ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக்கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள்; அது உங்களுக்கு யூபிலி வருஷம்; அதிலே உங்களில் ஒவ்வொருவனும் தன்தன் காணியாட்சிக்கும் தன்தன் குடும்பத்துக்கும் திரும்பிப் போகக்கடவன். அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்கு யூபிலி வருஷமாயிருப்பதாக. அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருக்க வேண்டும். அந்த யூபிலி வருஷத்தில் உங்களில் அவனவன் தன்தன் காணியாட்சிக்குத் திரும்பிப் போகக்கடவன். உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக் கூடாது; உன் தேவனுக்குப் பயப்பட வேண்டும். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். லேவி.25:8-17

எப்படியாகிலும் என் இருதயம் மீண்டும் தேவனில் பிரியங்கொள்ள வேண்டும் என்பதே என் கர்த்தருடைய உயரிய நோக்கமாயிருந்தது. எனது பிரதான ஆசாரியர் மட்டுமே என்னை சுத்தஞ்செய்ய முடியும். இருளில் இருந்த ஆத்துமாவுக்கு வெளிச்சத்தைக் கொணருவது போல நான் இருந்த இடத்திற்கே ஆண்டவர் வந்து சேர்ந்தார். அவர் எனக்கு ஒரு ஆவிக்குரிய பரிசோதனை வைத்தார். நான் என் தவறுகளை அறிக்கையிட்டபோது அவர் அவைகளை எனக்கு மன்னித்தார். எனது விக்கிரக வழிபாட்டையும், அசுத்தங்களையும் என் மீட்பர் எனக்கு மன்னித்தார். பரிசுத்தாவியானவருக்கு செவி கொடுத்து, தேவனிலும், அவரது ராஜ்யத்திலும் பிரியங்கொள்ளும் புதிய இருதயத்தை ஆண்டவர் எனக்குக் கட்டளையிட்டார்.

சுத்திகரிக்கப்பட வேண்டியவன் தன்னைக் கழுவுதல் வேண்டும்

சுத்திகரிக்கப்படுகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தன் மயிர் முழுவதையும் சிரைத்து, தான் சுத்தமாகும்படி ஜலத்தில் ஸ்நானம் பண்ண வேண்டும். லேவி.14:8

ஆண்டவர் சுத்திகரிப்பின் நிலைகளைத் துவக்கினார். ஏனைய காரியங்களிடையே லேவியராகமத்தில் குறிக்கப்பட்டுள்ள மயிரை சிரைத்தல் பெருமையோடு இடைபடும் ஒரு காரியமாகவே எனக்குப்பட்டது. பெருமை என்ற பாவத்துடன் இடைபடும்படி கர்த்தர் என்னை உந்தித் தள்ளினார். நான் மிகப் பிடிவாதமான பெருமைக்காரன். நான் அக்கிரமத்திலும், தனிமனித வழிபாட்டிலும் நிரம்பியிருந்தேன். எவரையும் மதித்து நடவாமல் அலட்சியப்படுத்தி விடும் ஒரு புதுமைப்பிறவி நான். கர்த்தர் என் பெருமைக்கு முடிவூட்டும்படி 'மயிரை சிரைத்தல்' என்னும் நிலையை என்னில் துவக்கினார்.

ஒருநாள் நானும் எனது மனைவியும் எங்கள் அறைக்குள் நின்று கொண்டிருந்தோம். எங்கள் மகன் காணாமற்போன நிலையில், அவன் மரித்துப் போனானா, உயிரோடிருக்கிறானா? வியாதியாயிருக்கிறானா? அல்லது சுகமாயிருக்கிறானா? என ஒன்றுமே தெரிய வரவில்லை. நாங்கள் துயரத்தில் மூழ்கிப் போயிருந்தோம். ஒருவரையொருவர் தோளில் பற்றியபடி நாங்கள் அறைக்குள் நின்று கொண்டிருந்தோம். நான் அந்நாட்களில் முதன்முறையாக அப்படிப்பட்ட ஒரு பலன் மிகுந்த பிரார்த்தனையை அப்பொழுது ஏறெடுத்தேன், ''ஓ தேவரீர், நாங்கள் எங்கள் மகனை இழந்து நிற்கிறோம். ஆயினும் அவனை உம்முடைய கரங்களில் விட்டுக் கொடுக்கிறோம்''.

ஒரு வாரத்திற்குள் எங்கள் தொலைபேசி மணி ஒலித்தது. அது எங்கள் மகனது தான். போதை மருந்தை உபயோகித்துக் கொண்டிருந்த வேளையில் தான் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டிருப்பதாக அப்பொழுது அவன் தெரிவித்தான். எங்கள் மூத்த மகனை ஆண்டவர் சிறைச்சாலைக்கு அனுப்பி விட்டார். சிறையிலடைபட்டிருந்த என் மகனுடைய மன உடைவும், துயரமும் என்னை நொறுக்கி விட்டன. மேலும் அவனது இருண்ட நிலைமை அவனுக்குள் உருவாக்கியிருக்கும் வெட்க உணர்வு எங்களைப் பார்க்கக் கூடாதபடி அவனைத் தடுத்துவிடும் என்று ராட்னி தெரியப்படுத்தியிருந்தான்.

என் பார்வையில் சரியாயிருப்பதை நான் செய்வது தான் பிடிவாத குணம். அதற்கொரு உதாரணம் (பார்க்க 1சாமு15:23) எப்படியோ, அதே வாரத்தில் சிறைச்சாலைக்குள்ளேயே அவன் மனந்திரும்பி, ஆண்டவராகிய

இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டான். அதைத் தொடர்ந்து தனது அச்சத்தை எங்களோடு பகிர்ந்து கொள்ள அவன் சுயாதீனம் பெற்றிருப்பதாக அறிந்து கொண்டான்.

அவனை சந்திப்பதற்காக நாங்கள் எங்கள் போதகரோடும், எங்கள் ஸ்தல சபை மூப்பரோடும் புறப்பட்டு வடக்கு கரோலினா போனோம். திகைக்கச் செய்யக் கூடிய ஒரு செய்தியை எங்கள் மகன் தான் கைதாகிற வேளையில் நடந்ததாக அப்போது எங்களிடம் தெரியப்படுத்தினான். எங்களிடம் அவன் பகிர்ந்து கொண்ட செய்தியிலிருந்து நாங்கள் அறிந்து கொண்டது என்னவெனில், நானும் என் மனைவியும் பலன் மிகுந்த பிரார்த்தனை ஒன்றை எங்கள் அறைவீட்டிற்குள் ஏறெடுத்த அதேவேளையில் சக்தி வாய்ந்த கைத்துப்பாக்கி ஒன்று அவனது பின்னந்தலையில் அழுத்தி வைக்கப்பட்டிருந்த அபாய கட்டத்தில் அவன் இருந்திருக்கிறான். ஆனாலும் இவனைக் கொல்ல வந்த அந்த நபர் போதை வஸ்துக்கள் நிறைந்த மூட்டையுடன் காவலர்களுக்கு தப்பிச் செல்ல உடனே ஓட்டமெடுத்திட வேண்டியிருந்ததால் அன்று என் மகன் காக்கப்பட்டுள்ளான். எங்கள் மகனை தேவ கரத்தில் விட்டுக் கொடுத்து ஜெபித்ததின் பலனாக அன்று எங்கள் மகன் ராட்னி காக்கப்பட்டான் என்று உணர்ந்து கொண்டோம். இப்படி நிகழ்ந்ததினாலே ராட்னி தேவனை சந்திக்கவும், இயேசு கிறிஸ்துவை தன் இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும், தண்ணீர் ஞானஸ்நானத்திற்காக கேட்கவும் தக்கதாக ஒரு வாசல் திறக்கப்பட்டது.

எங்கள் போதகர் பாப்திஸ்து திருச்சபையில் எங்கள் மகனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தவுடன், ஆண்டவர் என் இருதயத்தில் கிரியை செய்யத்துவங்கினார். என் கடின இருதயத்தை மாற்றி, அவரது அழைப்பையும், சித்தத்தையும் நிறைவேற்றத்தக்க ஒரு புதிய இருதயத்தை தேவன் எனக்குத் தந்ததற்காக என்னால் அப்போதைக்கு அழ முடிந்ததே தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை. தன்னைப்பற்றியும், தன்னை சுற்றிலுமே காரியங்களை நிகழும்படி வாழ்க்கையை அமைத்துக் கொண்டதான சுயநலவாதியும் பெருமைக்காரனுமான என்னை ஆண்டவர் நொறுக்கினார் (மயிரை சிரைத்தார்) எனது திருச்சபையில் ஒரு ஞாயிறு ஆராதனையின்போது தேவன் எனக்கு மனந்திரும்புதலை தந்தருளின படியால், நான் முன்னுள்ள பீடத்திற்குப்போய் பகிரங்கமாக சாட்சி பகர்ந்தேன், அந்த சாட்சியில் என் மகன் கைது, அது தொடர்பான காரியங்கள், நொறுக்கப்படுதல் அதன்பின் உண்டான மனந்திரும்புதல், தேவனது அழைப்பிற்கு கீழ்ப்படியாமல் முரட்டாட்டம் பண்ணிக் கொண்டிருந்த என் பாவ நிலையிலிருந்து உண்டான விடுதலை அனைத்தும் அடங்கியிருந்தன.

ராட்னி தன் மனந்திரும்புதலுக்கு முன் உண்டாயிருந்த போதை வஸ்துக்கள், தீமைகள் பலவற்றின் தாக்கங்களிலிருந்து விடுதலை

பெற்றிருந்தான். கட்டிடக் கலையில் பல திறமைகளை வெளிக்காட்டும் கடின உழைப்பாளியாக அவன் விளங்கினான். ஒரு நாள் கர்த்தர் என் மகனைக் குறித்தும், அவனது மனைவியைக் குறித்தும் ஒரு தரிசனத்தை எனக்குக் கொடுத்தார்.

அந்த தரிசனத்தில், ''அநேக கிறிஸ்தவ தொழிலதிபர்களுடன் நான் விருந்து மேஜைக்கு முன் அமர்ந்திருந்தேன். அப்பொழுது சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த கிறிஸ்துவை நான் அக்காட்சியில் கண்டேன். சிலுவைக்குக் கீழே ஒரு தார்க்குழி காணப்பட்டது. அதில் ராட்னியும் அவனது மனைவியும் நிற்பதும், நடப்பதுமாக இருக்க அவர்களிருவரது திருமண உடைகளும் தார் பட்டு கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தன. எனினும் அவர்களிருவரும் ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டு வெளியே வந்தார்கள். இவை அனைத்திற்கும் மேலாக கிறிஸ்துவின் தலையிலும், காயங்களிலுமிருந்து வெளிவந்த இரத்தம் ராட்னி மேலும் அவனது மனைவி மேலும் ஊற்றப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன். கர்த்தர் சொன்னார், ''பயப்படாதே அவர்கள் என்னுடையவர்கள். நான் அவர்களை மன்னித்து இரட்சிப்பேன். நான் என் ஊழியத்தை செய்யும்படி அவர்களை அழைத்திருக்கிறேன்''

அநேக ஆண்டுகளாக இந்த தரிசனத்தை நான் கருத்தில் கொண்டிருந்தேன். இது தேவன் எனக்குத் தந்த மற்ற தரிசனங்களைப் போல பல வண்ணக் கனவாக அல்ல, மாறாக கறுப்பு வெள்ளை சித்திரமாகவே எனக்குப்பட்டது. நான் படிப்படியாக இந்த தரிசனத்தை மறந்து போக வேண்டுமென தீர்மானித்தேன். ஆனால் திடீரென ஒரு நாள் ஜெப வேளையில் என் மகனுக்காகவும், அவன் மனைவிக்காகவும் ஜெபித்துக் கொண்டிருக்கையில் கர்த்தர் இந்த தரிசனத்தை மீண்டும் எனக்குள் புத்துயிர் பெறச் செய்தார். அவர்கள் கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய விரும்பினார்கள்.

ஒரு குறிப்பிட்ட நாளில் ராடும், லியோனாவும் எங்கள் உள் அறைகளிலும், சமையலறையிலும் முடிக்க வேண்டியிருந்த சில வேலைகளை கவனிக்க வந்திருந்தார்கள். மதிய உணவுக்கு முன் நாங்கள் எங்கள் அறையில் சற்று ஓய்வாக அமர்ந்து, கர்த்தருடைய ஊழியத்திற்கான அவர்களது தரிசனத்தையும் வாஞ்சையையும் குறித்து வினவிக் கொண்டிருந்தோம். ஊழியத்திற்கு தங்களை அர்ப்பணித்து செல்கையில் சாதாரணமாய் அழைப்புக்கு கீழ்ப்படிய விருப்பம் தெரிவித்தால் போதாது, வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் தேவசித்தம் நிறைவேற்ற கீழ்ப்படுத்த வேண்டும் என்ற உயரிய உண்மையை அவர்கள் உணர்ந்தே இருந்தார்கள். வெட்கப்படாத கிறிஸ்துவின் ஊழியர்களாய் தங்களை தேவனுக்குமுன்

திருத்த தாங்கள் கற்றிருக்க வேண்டுமென்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். தனது கடந்த கால காரியங்களை கண்ணுற சற்றே திரும்பிய ராட், தன் பயங்களையும், தோல்விகளையும் மெல்ல அப்புறப்படுத்தி விட்டான்.

''நான் பாலகனாக, இளைஞனாக ஆலயத்துக்கு சென்று வந்தவன் எனினும் இயேசுவை நான் அவர் இருக்கிற வண்ணம் அறிந்து கொள்ள வில்லை. அவரை ஒரு சரித்திர பாத்திரமாகவே நான் எண்ணியிருந்தேன். என்னுடைய இருபதாவது வயதில், தனிமைச் சிறைக் கொட்டடியில் நான் அமர்ந்திருக்கையில் தான் ஆண்டவரை நான் சரியாய் அறியலானேன்.

குறுகிய காலத்தில் நிறைவான பொருளாதார லாபத்தை சம்பாதிப்பதற்கென எனக்குள் எழுந்த பண ஆசையின் விளைவாக எனக்கு பெரும் பணம் சேர்ந்தது. பெரும் இடுக்கணும் வந்தது. டிட்ச் வீட் என்பது இன்டியானாவின் எல்லா பகுதிகளிலும் பெருகி வரும் ஓர் போதை தாவரமாகும். அதைப் பிடுங்கி விற்கலாம் என நான் அறிந்திருந்தேன். மாரிஜுவானா வகையைச் சேர்ந்த இந்த போதை தாவரத்திற்கு நல்ல கிராக்கியும் இருந்தது. எனவே அதற்கென வடக்கு கரோலினாவுக்கு பயணமான நான் அங்கு போதை வஸ்துக்களை விற்கிற நிலையில், மாரிஜுவானாவில் கிடைத்த பெருந்தொகையுடன் பிடிபட்டு சிறையிலடைக்கப்பட்டேன்.

முதல்முறையாக சிறையிலிருக்கும் போதுதான், எனக்குள் இனம் புரியாத தாகத்தை ஏற்படுத்திவிட்ட அந்தப்புத்தகத்தை நான் வாசித்தேன், வெறுக்கப்படுதலையும் அதனாலுண்டான காயங்களையுமேயன்றி வேறொன்றையும் அறிந்திராத குக்கி ரோட்ரிகஸ் எழுதிய ''தயவு செய்து என்னை அழப்பண்ணும்'' என்ற புத்தகமே அது. போதையின் விளைவால் ஏற்பட்ட வெறுப்பின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தவள் அவள். எனினும் அவள் ஜீவனுள்ள தேவனை அறிந்து கொள்ள சற்றே திரும்பினாள் குக்கி தான் கண்டு கொள்ள விரும்பியதை கண்டு கொண்டாள் என நான் அறிந்து கொண்டேன். நானும் ஜீவனுள்ள தேவனை அறிய விரும்பினேன்.

தேவனுடைய வார்த்தையை வாசித்து, அவரை அறிந்து கொள்ளும்படி ஆண்டவர் எனக்குள் ஒரு வாஞ்சையைத் தந்தார். நானும் தேவனும் மாத்திரம் இருக்க சிறைக் கொட்டடியில் என் வேதவாசிப்புப் பழக்கம் துவங்கியது. தேவனுடைய வார்த்தையை வாசித்ததினிமித்தம், ஞானஸ்நானம் பெறவேண்டும் என்ற ஆவல் எனக்குள் பெருகிற்று. எனவே எனது விருப்பத்தை நான் பொறுப்பிலிருந்த கிறிஸ்தவ சிறை அதிகாரி ஒருவரிடம் தெரிவிக்க, ஒரு மாலை வேளையில் கைவிலங்குகளை அகற்றி, சிறைக்கு வெளியேயிருந்த ஒரு பாப்திஸ்து திருச்சபைக்கு அவர் என்னை அழைத்துப் போனார். எனது ஞானஸ்நான ஆராதனையின் போது என் பெற்றோரும், என் சபைப் போதகரும் அங்கே இருந்தது தேவ கிருபையினால் அமைந்த ஓர் அற்புதமேயாகும்.

சிறைவாழ்க்கை முழுவதிலும் அற்புதங்கள் தொடர்ந்தன. தேவனது பாதுகாப்பு என்னோடிருந்தது. நான் பிடிபட்டுக் கைதானபோது அதிகாரிகளெல்லாரும் இதுதான் வரலாற்றிலேயே பெரிய அளவில் பிடிபட்ட மாரிஜுவானா சரக்கு என்றனர். எனவே இதினிமித்தம் எனது வழக்கறிஞரும், குறைந்த பட்சம் பத்து ஆண்டுகளாவது எனக்கு சிறைத்தண்டனை கிடைக்கலாம் எனத் தாம் எதிர்பார்ப்பதற்காக கூறினார். எனவே இரக்கம் கோரி நான் நீதி மன்றத்தில் மனுசெய்ய வேண்டுமென அவர் என்னை அறிவுறுத்தினார். நானும் அப்படியே செய்தேன். எனினும் நான் என்னை தேவகரத்தில் விட்டுவிட்டேன். இந்தக் குறிப்பிட்ட நிலையில்தான் நான் ஆண்டவரை நம்புவதின் அவசியத்தையும், கர்த்தரையே முற்றிலும் சார்ந்து கொள்வதையும் அறிந்து கொண்டேன். முடிவாக அரசாங்க வழக்கறிஞர் தனது தாக்கீதுகளுடன் வாதாடத் துவங்கினார். பக்கத்திலோ ஒரு தொடர்வண்டி ஒன்றின் ஓசைவேறு. எனக்கு எதிராய் வாதிட்டுக் கொண்டிருந்த அந்த மனுஷனுக்கு சில அடி தூரத்தில்தான் நான் இருந்தாலும் இரயில் சத்தத்தினிமித்தம் எனக்கு ஒரு வார்த்தையும் கேட்கவில்லை.

நீதிபதி தீர்ப்பை வழங்க ஆயத்தமானார். என் சார்பாக குடும்பத்தினரும், நண்பர்களும் பேச முன் வந்தனர். பல்வேறு தண்டனை மாற்றங்கள் ஆராயப்பட்டன. தகுதி ஆய்வுக்கால இளைஞர் நலத்திட்ட தொழிற்பயிற்சி ஒன்றுடன் ஒரு வருடத்திற்கு காவலில் வைக்கப்பட ஒரு பரிந்துரை கூறப்பட்டது. நீதிபதி இந்த ஆலோசனையை மறுத்து விட்டார். எப்படியோ, என்னை சிறப்புத்தடுப்புக் காவலில் வைக்கப்போவதாக அவர் சொன்னார். அதினிமித்தம் குறைந்தது ஒரு நாளிலிருந்து அதிகபட்சம் மூன்றாண்டுகள் என்ற கால அளவுக்குள் நான் சிறையில் இருக்க வேண்டியிருக்கலாம் என்றார். எனினும் எனது சிறைவாழ்க்கை என்னைப் பாழடித்து விடாது என தாம் நம்புவதாகவும் அவர் கூறினார். நீதிபதியின் பரிவினிமித்தமாக எனது வழக்கறிஞரின் எதிர்பார்ப்புக்கு மாறாக எனது சிறைக்காலம் மிகக் குறைவாகவே இருக்கும்படி தீர்ப்பு அமையப் பெற்றது.

ஆறுவார கடுங்காவல் தண்டனைக்குப் பிறகு, நல்ல விதத்திலும், நம்பிக்கையூட்டக்கூடிய நிலையிலுமமைந்த சாதாரண பாதுகாப்போடு கூடிய வடக்கு கரோலினா, பட்னா காவல் பிரிவுக்கு அனுப்பப்பட்டேன். காவல் அதிகாரிகள் வேலையினிமித்தம் நகரத்திற்குள் சென்று வர வாகன ஓட்டுனர் பொறுப்பு எனக்கு தரப்பட்டது. வழித்துணைக்கு எவரும் உடன்வராத நிலையில், நானே சிறைவாகனங்களை நகரத்திற்கு ஓட்டிச் சென்று வாகனத்திற்குத் தேவையான வாயுவை நிரப்பித் திரும்பும் உத்தரவாதமும், பொறுப்பும் எனக்குக் கொடுக்கப்பட்டது.

என் ஆவிக்குரிய வளர்ச்சி தொடர்ந்தது. நானே சுயமாக கர்த்தருடைய வசனத்தை கருத்தூன்றிப் படிக்கலானேன். மட்டுமின்றி என்

கூட்டாளிகள் வேறு இருவரையும் வேதம் படிக்க வைத்தேன். எங்களது சிறுகுழு முப்பது பேருக்கும் அதிகம் கொண்ட கூட்டமாக வேதபாட வகுப்பிற்கென பெருகியது. சமூகத் தன்னார்வலர்கள் உடன்வர ஸ்தல சபைக்குச் சென்று வர நான் அனுமதிக்கப்பட்டேன். ஞாயிறு காலை ஆராதனைக்கு கடந்து செல்லும் நான் திருச்சபை அங்கத்தினர்களால் கவரப்பட்டு, அவர்களது வீடுகளுக்கு மதிய உணவிற்கென அழைக்கப்படுவதும், மாலையில் சிறைக்குத் திரும்புவதுமாக இருந்தேன். கைது செய்யப்பட்டு பதினொரு மாதங்கள், பதினைந்து நாட்களில் நான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டேன்.

சிறையிலிருந்த காலகட்டத்தில் தானே, என் வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்திய நிகழ்வுக்கேதுவான ஒரு மனிதரையும், அவரது மகளையும் சந்தித்தேன். என் விடுதலைக்கு சில ஆண்டுகள் கழித்து, அந்த மகளையே நான் திருமணம் செய்து கொண்டேன். அது ஒரு குறுகிய கால ஒழுங்கற்ற திருமணமாகும். அதன் விளைவு முதல் திருமண நாளின் போதே நான் விவாகரத்துத் தாள்களை சமர்ப்பிக்க வேண்டியதாயிற்று. விவாக ரத்து வழங்கப்படும் இறுதி நாளுக்குள்தானே நான் என் வேலையை உதறிவிட்டு, மறுபடி போதைப் பொருளைப் பறிக்கச் சென்று விட்டேன். முதல்முறை கைது செய்யப்பட்டு ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளிலேயே மீண்டும் பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டேன். முதல்முறை நான் கைது செய்யப்பட்ட போது என் கையில் இருந்த அளவுபோல ஏழுமடங்கு பெறுமான மாரிஜுவானா போதைவஸ்து இம்முறை என்னிடம் கண்டுபிடிக்கப்பட்டது. நான் மிகுந்த சிக்கலுக்குள் அகப்பட்டுக் கொண்டது மட்டுமின்றி, ஒரு வழக்கறிஞரை எனக்கென நியமித்துக் கொள்ளக் கூட என்னிடத்தில் பணமில்லாதிருந்தது.

எனக்கு மிகுந்த ஆசீர்வாதமாய் அமையும்படி குற்றத்தை மறுத்து வாதிட ஒரு வழக்கறிஞர் எனக்காக அமர்ந்தார். திரு டிரான்ஸ்கி எனப்பட்ட மேன்மைக்குரிய முதியவரே அவர். அந்த நாளில் நீதிமன்றமே எனக்காக அவரை அமர்த்தும்படி வேறு பணிகளின்றி இருந்தவர் அவர். நான் பணம் கொடுத்து வழக்கறிஞரை நியமித்துக் கொண்டிருந்தால் கூட இவ்வளவு அருமையான ஒருவரை நான் பெற்றிருக்க இயலாது. என்மேலிருந்த குற்றத்தை நிரூபிக்க எனக்கெதிராய் வாதிட்டவரோ, கொஞ்சம்கூட எனக்கு இரங்க மறுத்து, அதிக பட்ச தண்டனையான எட்டு ஆண்டு தண்டனையை எனக்கு பெற்றுத்தர முயற்சித்தார். திரு.டிரான்ஸ்கியோ அவரோடு பேர ஒப்பந்தம் பேசினார்.

நான் மேலும் ஒரு ஆண்டு சிறையிலிருக்க வேண்டியிருந்தது. நான் அதிகம் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. முதல்முறையாக நான் சிறையிலிருந்த கால கட்டத்தில் நான் ஆண்டவரை ஜீவனுள்ளவராகவும், என் சொந்த அனுபவத்தில் இரட்சகராகவும் கண்டு கொண்டேன். இரண்டாம்

முறை சிறைவாசத்தின்போது, இன்னும் அதிகம் நான் தேவனை அறிந்து கொண்டேன். என் வாழ்க்கைக்கான பரிசுத்தாவியானவரின் வல்லமை வெளிப்பட்டது. ஆவிக்குரிய யுத்தத்தையும் விடுதலையையும் பற்றிய முக்கியத்துவத்தையும் உணர்ந்து கொண்டேன். என் சகாக்கள் அநேகர் எண்ணிக்கைக்கு மேம்பட்ட கிறிஸ்தவக்கோட்பாடுகளை கொண்டிருப்பதாகக் கண்டேன். ஆண்டவர் கிரியை செய்யும் விதம் குறித்து அவரவர் தனித்தனிக் கருத்துடையவர்களாய் அவர்கள் இருந்தனர். எனக்குத் தேவையான பதில்களுக்காக நான் வேதத்தைத் திருப்பினேன்.

இரண்டாம் வருடம் சிறையிலிருந்த காலகட்டத்தில் கூட, நான் மனந்திரும்புதலை முழுமையாக கற்றுக் கொள்ளவில்லை. எப்படியோ, எல்லாவற்றிற்கும் மேலாக, கர்த்தர் தம் வார்த்தையில் உண்மையுள்ளவர் என்றும், எனக்குள் தாம் ஆரம்பித்த கிரியையை முடிக்கவும் வல்லவர் என்றும் நம்பினேன். நான் இரண்டாம் முறை திருமணம் செய்து கொண்ட என் மனைவியின் அன்பாலும், அவள் கொடுத்த தைரியத்தினாலும் இரண்டு வருடங்கள் மனந்திரும்புதலின் மாண்பையும் அவரில் நம்பிக்கை வைப்பதையும் ஆண்டவர் எனக்குக் காண்பித்துக் கொடுத்தார்.

பலவித சோதனைகள், பணப்பற்றாக்குறைகள் மத்தியிலும், பெரும் புயலினிடையேயும் அமைதலாயிருப்பது சாத்தியமே என நான் கண்டு கொண்டேன். என்எண்ணங்களுக்கு மாறான வாழ்வின் சூழ்நிலைகளிடையேயும், என்னால் சமாதானத்தைக் கண்டடைய முடிந்தது. ஆவிக்குள் வளர, வளர கர்த்தரை அதிகமதிகமாய் சார்ந்து கொள்ள கற்றுக் கொண்டுள்ளேன். தேவன் இத்தோடு நிறுத்திக் கொள்கிறவரல்ல என நான் அறிவேன்.

என் அனுபவங்களை நான் திரும்பிப் பார்க்கையில், தேவன் என் வாழ்க்கையில் கிரியை செய்ததால், சிறைச் சாலைக்குள்ளும் அன்பு, சந்தோஷம், சமாதானம் எனக்குள் இருந்ததை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. பணம் பண்ணுவதிலும், அது சம்பந்தப்பட்ட வேலை சூழ்நிலைகளிலும் நான் இழந்து போனதான பொறுமை, பெருந்தன்மை ஆகியவற்றை தற்போது நான் ஆதாயப்படுத்திக் கொண்டேன்.

இரண்டு விசை கர்த்தர் என்னை சிறையிலிட்டார். மூன்றாம் முறையும் அவர் அப்படி செய்யக்கூடும். எனினும் அதற்கு பதிலாக அவர் எனக்கு இரக்கங்காட்டி என்னை நேசித்து, எனக்கு உதவி செய்கிற ஒரு மனைவியையும் கொடுத்தார். ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நான் பயன்படுத்திய போதை மருந்துகள் என்னைக் கொன்றிருக்கக் கூடும். ஆனால் இறுதியாக நான் மனந்திரும்பவும், பாவத்தை விட்டுத் திரும்பவும் கற்றுக் கொண்டேன், கீழ்ப்படிதலுள்ளவனாயிருக்கவும், தேவன் விரும்புவதைச் செய்யவும் கற்றுக் கொண்டேன். கர்த்தருக்கு கீழ்ப்படிவதில்

சமாதானமும், பாதுகாப்பும் இருக்கிறது என்று கண்டு கொண்டேன். கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் எல்லா புத்திக்கும் மேலானவை.

என் வாழ்க்கையில் தேவனுடைய அழைப்பை உணர்ந்தேன். பல ஆண்டுகளாக ஜனங்களை தேவனுடைய ஆலயத்திற்கு கொண்டுவருவதைக் குறித்தும் அவர்களுக்கு உதவுவதைக் குறித்ததுமான தரிசனங்களும், கனவுகளும் எனக்கு உண்டாயிருந்தன. நான் சிறைச்சாலையில் இருக்கையில் என் வேலைகளில் ஒன்று பல ஏக்கர் புல்வெளிகளை செம்மைப்படுத்துவது. அவ்வாறு புல் வெளிகளை செம்மைப்படுத்தும் வேளைகளில் நான் வேத வசனங்களை மனனம் செய்து, பிரசங்கங்களை என் தலையில் பதித்துக் கொள்வதும், எனக்கு நானே பிரசங்கித்துக் கொள்வதுமாக இருந்தேன். மனந்திரும்புதலைக் குறித்து எந்த அளவுக்கு இடைபட்டேனோ அந்த அளவுக்கு அழைப்பும் உறுதிப்பட்டது. நான் தொடர்ந்து கர்த்தரை நம்பவும், எனக்குள் அவர் தொடங்கிய கிரியையை முடிக்க வல்லவர் என்பதை விசுவாசிக்கவும் அதனால் அறிந்து கொண்டேன்''

இவ்வாறாக ராட்னி தனது கடந்த காலத்தைக் குறித்தும், அதில் அவன் அனுபவித்த வேதனைகள், பயங்கள், தோல்விகள் அவனது வாழ்வில் உண்டான ஆவிக்குரிய வாஞ்சை, மாற்றம் இவைகளைக் குறித்து பகிர்ந்து கொண்டபின், அவனைப் பெலப்படுத்தும்படியாக கர்த்தருடைய வார்த்தை தீர்க்கதரிசனமாக கடந்து வந்தது.

> ''என் மகனே அடிமைத்தனத்திலிருந்து ஒளிக்குள் உன்னை அழைத்துக் கொண்டு வந்த கர்த்தர் நானே. காணாமற் போனவர்களை என் ராஜ்யத்திற்குள் கொண்டு வரும்படி உன்னை அழைத்த கர்த்தர் நான். என் இரக்கத்தையும் கிருபையையும் நீ பெற்றுக் கொண்டபடியினால், உன்னை பயத்துக்கு நீங்கலாக்கி என் விசுவாசத்திற்குள் உன்னை கொண்டு வருகிறேன். என் ராஜ்யத்தை மற்றவர்களுக்குள் எடுத்து செல்லும்படி நான் மறுபடியும் உன்னை அழைக்கிறேன். கட்டுண்டவர்களை சாட்சிகளாக்கி ஒளிக்குள் கொண்டு வரும்படி சத்துருவுக்கு எதிராக நிற்கும்படி உனக்குள் பிரகாசத்தைக் கட்டளையிடுகிறேன்''.

ராடும் அவனது மனைவியும் பயம், தோல்வி என்பவைகளின் தாக்குழியை விட்டு வெளியே வருவதாக நாங்கள் ஏற்கெனவே கண்ட தரிசனத்தின் நிறைவேறுதலுக்கான கர்த்தருடைய வேளை இதுவே என அறிந்து கொண்டோம். அவர்கள் தங்கள் வாழ்வில் தேவசித்தத்தை நிறைவேற்ற மிகவும் கவனமாயும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய மிகவும் வாஞ்சையுள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள். கிறிஸ்தவ ஜீவியத்தின் கனி நிறைந்த வாழ்வுக்கான அடையாளமும் அவர்களில் தென்பட்டது. கர்த்தருடைய நன்மைக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ராடின் சாட்சிகளில் மிளிர்ந்த பேருண்மைகள், என் சொந்த வாழ்வில் அவனது சிறைநாட்களின் போது, நான் காண்பித்த அதிகப்படியான அக்கறையை எனக்குச் சுட்டிக் காட்டின. எனது முரட்டாட்டத்தினிமித்தம் என் சிருஷ்டிகருக்கு விரோதமாக நான் பாவஞ்செய்து மீறுதலுக்குட் பட்டிருந்தேன். திருச்சபைக்குள் முதிர்ச்சியுராதிருந்த ஜனங்களது காரியங் களினிமித்தம் மிகுந்த கசப்பு கொண்டு நான் தேவனுக்கு விரோதமாய் பாவஞ்செய்திருந்தேன். சந்திப்பின் கூடாரத்தின் வாசலில் கர்த்தருக்கு முன்பாக நிற்கும் படி எனது பிரதான ஆசாரியர் என்னை ஆயத்தப்படுத்தினார்.

கர்த்தாவே, என்மேல் இரக்கமாயிரும்; உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தேன். என் ஆத்துமாவை குணமாக்கும் என்று நான் சொன்னேன். சங்கீதம் 41:4

அற்ப விசுவாசமுள்ளவர்கள் தங்களை அறியாமலே தவறான சிந்தனைகள், பிரதிபலிப்புகள், தீர்மானங்கள் மூலம் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள். கர்த்தருடைய வேளையின் படியும், அவரது ஆவிக்குரிய கட்டளைகளின் படியும் அவர் எவ்வாறு எனக்குள் கிரியை செய்தார் என்பதை நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். குஷ்டரோகியை சுத்திகரித்தல் குறித்த ஆவியானவர் வெளிப்படுத்திய காரியம் இதுவாகும்.

மதக் கோட்பாட்டின்படி கிறிஸ்தவ திருச்சபைக்குள் நிகழும் முரட்டாட்டத்தின் ஒரு அங்கமாய் நான் செயல்பட்டு வந்தேன். ஜென்ம சுபாவமுள்ள மனிதன் எப்பொழுதும் விழுந்து போகிற சுபாவத்துக்குரிய முரட்டாட்டங்கொண்டவனே. நான் தேவனுடைய அழைப்பைப் பெற்றவனாயிருந்தும், முரட்டாட்டமுள்ளவனாயிருந்தேன். ஜென்ம சுபாவத்திற்குரிய எனது பற்றுதல்கள், பிடிவாதத்தையும் அடங்காமையையும் எனக்குள் தோற்றுவித்திருந்தன. ஜென்ம சுபாவமுள்ள இயற்கை மனிதன் பெலவீனனாகவும், உலகத்திற்குரியவனாகவும், மீட்கப்படாதவனாகவும், குணப்படாதவனாகவும், தேவ சித்தம் செய்ய இயலாதவனாகவும் காணப்படுகிறான். முரட்டாட்ட மனிதன் எப்பொழுதும் தன் சுய காரியங்களையே கவனித்துக் கொண்டிருப்பான். என் பார்வைக்கு நலமெனத் தோன்றிய அனைத்தும் செய்யும்படி அக்கிரமத்தின் பிணையல்களில் கட்டுண்டிருந்தேன்.

சுய பரிசோதனையினிமித்தம் நான் அதிகாரங்களுக்கு எதிர்த்து நின்று முரட்டாட்டம் செய்த தவறு தெரியவந்தது. எங்கள் பள்ளிகளில் பிள்ளைகள் சுய பரிசோதனை செய்து கொள்ள வகுப்புகள் இருந்தன. அதினிமித்தம் அநேகர் பிடித்திழுக்கப்பட்டனர். தேவன் என்னை உடைத்துக் கொண்டிருந்தார்.

எனது பெருமை, பிடிவாதம், அடங்காமை, கலகக்குணம் இவைகள் எனது பெருமை, பிடிவாதம் என்னை உடைத்தார். நான் கலகக்காரனாயிருந்தேன். ஒரு நிமித்தம் கர்த்தர் என்னை உடைத்தார். நான் கலகக்காரனாயிருந்தேன். ஒரு கலகக்காரனாக என் இருதயத்தை முரட்டாட்டத்திற்கும் கசப்புக்கும், மன்னிக்காமைக்கும், பழிவாங்குதலுக்கும் திறந்து கொடுத்திருந்தேன். அதன் விளைவு சிறிய அளவில் அல்ல, அதிகமாகவும், ஆழமாகவும் இருளின் ஆளுகைக்குள் என்னை அமிழ்த்தி விடும் என்ற பயங்கரமும், பயப்படத்தக்கதுமான உண்மை பின்னரே எனக்கு தெரிய வந்தது.

எனது முரட்டாட்டம், குற்றங்கள், அக்கிரமங்கள் இவைகளை நான் வெறுக்கத் துவங்கின பட்சத்தில் இம்முறை எனது வடகரோலினா பயணத்தின் போது ஆண்டவர் மீண்டும் என்னோடே பேசத் துவங்கினார். கர்த்தர் மரணப் பள்ளத்தாக்கிலிருந்து என்னை வெளியே கொண்டு வந்தார். அவரோடு கூட சரியான, நேரான, சீரமைக்கப்பட்ட நடை நடக்கும்படி அவர் எனக்குள் தொடர்ந்து கிரியை செய்து கொண்டிருந்தார். நான் இரண்டாம் முறை தேவசித்தம் கேட்கவும் அவருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடத்துவங்கினேன் அவர் தமது அன்பை எனக்கு விளங்கப்பண்ணி எனக்கு அப்படிச் செய்தார். நான் மறக்க முடியாத ஓர் அனுபவம் இது. நான் அதிலிருந்து மீளவும் இல்லை. இனி ஒருக்காலும் அதிலிருந்து மீள விரும்பவும்இல்லை. முதல்முறையாக என்வாழ்வில், அனைவரையும் சமமாய் நேசிக்கிற அன்பை அவர் என்இருதயத்தில் ஊற்றக் கண்டேன்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றுக் கொள்ள விரும்பி நானும், என் மனைவியும் இன்டியானாவிலுள்ள தெற்கு வளைவு எனுமிடத்தில் நடந்த ஒரு ஜெபக்கூட்டத்துக்குள் நடந்து போனோம். ஒகியோவிலுள்ள பவ்லிங் கிரீன் என்ற இடத்தில் பிரதரன் விசுவாசிகளால் நடத்தப்பட்ட ஒரு கருத்தரங்கில் தான் பரிசுத்தாவியின் அபிஷேகம் குறித்த முதல் விளக்கத்தை நாங்கள் பெற்றிருந்தோம். எனினும் அந்த சமயத்தில் நாங்கள் ஆவியின் நிறைவைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் எங்களது ஜீவியத்திலும், ஊழியத்திலும் திரியேக தேவனில் ஒரு நபரான ஆவியானவரை இழந்திருப்பதை தெரிந்து கொண்டோம். ஆண்டவர் வைத்துள்ள அனைத்தையும் பெறவே நான் விரும்பினேன்.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அர்ஜெண்டைனாவில் மிஷனெரியாகப் பணிபுரிந்த வயது முதிர்ந்த மெனோனைட் பேராயர் நெல்சன் லிட்வெய்லர் என்பவர் தெற்கு வளைவில் நடந்த ஒரு மறுமலர்ச்சிக் கூட்டத்தைக் குறித்து எங்களுக்குக் கூறினார். அங்கு நடந்த ஜெபக்கூட்டத்தில் தான் அவர் ஆவியின் அபிஷேகம் பெற்றிருந்தார்.

ஆவியின் அபிஷேகத்தைத் தாம் பெற்ற பின்னுள்ள மூன்று வருடங்களில், ஏற்கெனவே தாம் பெற்றிருந்த நாற்பது வருட அனுபவங்களுக்கும் அதிகமாய் கர்த்தருக்காய் செய்து முடிக்க தேவன் தம்மை பெலப்படுத்தியதாக அவர் தெரிவித்தார்.

நாங்கள் அந்த ஜெபக் கூட்டத்திற்கு கிளம்பிப் போனாம். ஆவியில் வாழ்வு கருத்தரங்கின் பிரதான பகுதியில் பங்குபெற கையெழுத்திட்டோம். ஒரு இரவு பின்னால் உள்ள மூலையில் ஒரு இடத்தில் அமர்ந்திருந்த நான், கருத்தரங்கின் பிரதான பகுதியில் அழத் துவங்கினேன். கண்களிலிருந்தும் மூக்கிலிருந்தும் வழியும் கண்ணீரையும், தண்ணீரையும் துடைக்கும்படி ஒருதுணி எடுக்க நான் காருக்கு விரைய வேண்டியதாயிற்று. எனது கைக்குட்டைகள் தொப்பென்று நனையுமளவிற்கு அவைகள் அவ்வப்போது பயன்படுத்தப்பட்டு மிகுந்த ஈரமாகவே கோட் பைக்குள் செருகப்பட்டன. ஒவ்வொருவரைக் குறித்தும் எனக்குள் மிகுந்த அன்பு உருவாயிற்று. அப்படிக்கொத்த அன்பை அன்று இரவில் பெற்றுக் கொண்டதுபோல அதற்குமுன் நான் பெற்றிருந்ததில்லை. அனுபவிக்கவில்லை. எப்பக்கம் நோக்கினும் எனக்குப் புதிய முகங்களே தென்பட்டன எனினும் எனக்கு அவர்கள் பேரில் அளவு கடந்த அன்பு உண்டாயிருந்தது. என் நினைவில் தோன்றிய மனிதர்கள் மீது கூட எனக்கு மிகுந்த அன்பு உண்டானது. என் இருதயத்தை கர்த்தர் இலகுவாக்கி, அவரது அன்பினால் நிரப்ப, நிரப்ப என் மனைவியோடு உட்கார்ந்திருந்த என் கண்கள் கண்ணீர் ஊற்றாய் பெருகி வழிந்து கொண்டிருந்தன. கர்த்தர் எல்லாரையும் சமமாய் நேசிப்பதை தேவன் எனக்குக் காண்பித்துக் கொடுக்கத் துவங்கினார். எனக்குள் இருந்த கல்லான இருதயத்தை கர்த்தர் எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தை எனக்குத் தந்த அந்த இரவில் பரலோகத்தின் பல பணிகள் எனக்கு திறக்கப்பட்டது. அவ்வாறு பலகணிகள் திறக்கப்பட்டபோது தேவ அன்பு என் இருதயத்தில் ஊற்றப்பட, கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டு அவரிலும், அவரது வார்த்தையிலும் விசுவாசம் வைக்கும்அனைவரிலும் பெருக்கெடுக்கும் இரட்சிப்பும், விடுதலையும் உயிர்மீட்சியும் எனக்குள் ஊற்றெடுத்தது.

ஏழாம் நாளில் அவன் சிரைத்து, தோய்த்து ஸ்நானம் பண்ண வேண்டும்

ஏழாம் நாளிலே தன் தலையையும் தாடியையும் புருவங்களையும் தன்னுடைய மயிர் முழுவதையும் சிரைத்து தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம்பண்ண வேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருப்பான். லேவி.14:9

நான் உங்களைப் புறஜாதிகளிடத்திலிருந்து அழைத்து, உங்களை சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து, உங்கள் சுயதேசத்திற்கு உங்களைக் கொண்டு வருவேன்.

அப்பொழுது நான் உங்கள் மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன். நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன். நீங்கள் சுத்தமாவீர்கள்.

உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.

உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக் கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்.

உங்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள்; நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருந்து,

உங்கள் அசுத்தங்களையெல்லாம் நீக்கி, உங்களை இரட்சித்து . . .

அப்பொழுது நீங்கள் உங்கள் பொல்லாத மார்க்கங்களையும் உங்கள் தகாத கிரியைகளையும் நினைத்து, உங்கள் அக்கிரமங் களினிமித்தமும், உங்கள் அருவருப்புகளினிமித்தமும் உங்களை அரோசிப்பீர்கள். எசேக்கியேல் 36:24-29மு, 31

கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீரே என் அடைக்கலமும், ஜீவனுள்ளோர் தேசத்திலே என் பங்குமாயிருக்கிறீர் என்றேன்.

என் கூக்குரலுக்குச் செவிகொடும், நான் மிகவும் தாழ்த்தப்பட்டேன்; என்னைப் பின்தொடருகிறவர்களுக்கு என்னைத் தப்புவியும், அவர்கள் என்னிலும் பலவான்களா யிருக்கிறார்கள்.

உமது நாமத்தை நான் துதிக்கும்படி, என் ஆத்துமாவைக் காவலுக்கு நீங்கலாக்கிவிடும்; எனக்கு நீர் தயவுசெய்யும் போது நீதிமான்கள் என்னைச் சூழ்ந்து கொள்ளுவார்கள். சங்கீதம் 142:5,6,7

என்னை வழிநடத்தும்படியான நம்பிக்கைக்குரிய ஒருவரையும் என்னைச் சுற்றிக் காணக்கூடாத நிலையில் நான் திகைத்து நின்றேன். எனக்குத் தேவையான ஆவிக்குரிய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள எவர்பக்கம் திரும்புவது என எனக்குத் தெரியவில்லை. எனவே நான் ஆண்டவரை நோக்கிக் கதறினேன். அவர் ஏற்ற வேளையில் எனது விடுதலைக்கும், சுகத்துக்கும், உயிர்மீட்சிக்கும், ஸ்திரப்படுதலுக்கும் ஏதுவான ஆவிக்குரிய கற்பனைகளைச் சார்ந்த சரியான வழியை எனக்குத் திறந்து கொடுத்தார். வேத வாக்கியங்கள் நீ குளித்து, மறுபடியும் சிரைத்துக் கொள்ள வேண்டுமெனக் கூறுகிறது. கசப்பு, கோபம், மன்னியாமை, வெறுப்பு, பழிவாங்குதல், சோர்வு எனும் நிலைகளிலிருந்து விடுவிக்கும் நிலைக்கு கர்த்தர் என்னைத் தூக்கி நிறுத்தினார்.

சிறுவயதில் அடிமனதில் பதிந்து போன இருவேறு எதிர்மறையான காலகட்டங்களைக் குறித்த சிந்தனை மண்டலத்திற்கு கர்த்தர் என்னைத் திருப்பிக் கொண்டு போனார். எனது தகப்பனார் ஒரு கடின உழைப்பாளி, நான் நல்ல பையனாக வரவேண்டுமென விரும்பினார். எனினும் குரோதத்துடனல்ல, தனது ஆவிக்குரிய அறியாமை அல்லது வெறுமையினிமித்தம் என் ஆவியில் ஒரு உடைவை அவர் ஏற்படுத்தி விட்டார். நான் ஐந்து, ஆறு வயது சிறுவனாயிருக்கையில் கிறிஸ்துமஸ் நாளின் போது அவர் ஒரு கடினமான ஒழுங்கு முறைக்குள் என்னை நடத்தினார். எனது தகப்பனார் இரட்சிக்கப்பட்டவரோ, ஆலயம் செல்லும் பழக்கமுடையவரோ அல்ல எனினும் மிக அதிகமான ஒழுங்கைக் கடைபிடிப்பவர், இந்நிலையில் நான் ஒரு கெட்ட வார்த்தை பேசி விட்டேன்.

கிறிஸ்துமஸ்க்காக எனக்கு ஒரு தீயணைப்பு இயந்திரம் விளையாட்டுப் பொருள் பரிசாக கிடைத்தது. நான் அது குறித்து மிக மகிழ்ச்சியாயிருந்தேன். நான் அதனை என் பண்ணைவீட்டுத் தரையில் உருட்டி விளையாடிக் கொண்டிருந்தேன். தரை சமதளமாக இல்லாததால் அது எழுப்பிய சத்தம் ஏற்கெனவே என் பண்ணை வீட்டிற்கு அடுத்துள்ள பண்ணையைச் சேர்ந்த என்னைக் காட்டிலும் வயதான பையன்கள் பேசிய நாலெழுத்து கெட்ட வார்த்தையை எனக்கு நினைவூட்டியது. எனவே நான் ராகம் போட்டு அந்த கெட்ட வார்த்தையை உச்சரித்து விட்டேன்.

அவ்வளவுதான் எனது தகப்பனார் அதுகேட்ட மாத்திரத்தில் என்னை அடித்து நொறுக்கி விட்டார். நானோ காரணமறியாதவனாக அந்த நாள் முழுவதையும் என் அறையில் அழுதழுதே கழித்துக் கொண்டிருந்தேன்.

அடுத்த ஆண்டும் அந்த அனுபவம் திரும்பக்கிடைத்தது. இம்முறை எனது தகப்பனார் உள் அறையில் சமையல் பாத்திரமும் அடுப்புமாக இருந்தார். அவர் என்னைக் கூப்பிட்டு, ''இராபர்ட், இனிப்பு மற்றும் பழங்கள் கொண்டு வா'' என்றார். நாங்கள் எப்பொழுதும் கிறிஸ்மஸ் நாட்களில் நிறைய ஆரஞ்சு மற்றும் இனிப்பு வகைகளை வைத்திருப்பது வழக்கம். நான் கிண்ணத்தை இரண்டு கைகளாலும் தூக்க, அதுவோ தவறி என் கால்களிலேயே விழுந்து உருண்டு உடைய, அக்கண்ணாடி கிண்ணம் முழுமையாக நொறுங்கிப் போனது. இனிப்பு வகைகள் சிதறி விழ, ஆரஞ்சு பழங்கள் மூலைக்கு ஒன்றாக ஓடிவிட்டன. எனது தகப்பனாரோ ஆத்திரமுற்றவராக சமையலறையில் செருகி வைக்கப்பட்டிருந்த ஒரு குச்சியை எடுத்து என்னை விளாசித் தள்ளி விட்டார். ஏற்கெனவே ஒரு தரம் நடந்த சம்பவமே இந்த கிறிஸ்மஸ் நாளிலும் நடந்தேறி விட்டது. இப்போது என் உள்ளத்திற்குள் ஏதோ ஒன்று சம்பவித்தது. எனது தகப்பனாரின் மரணம் குறித்து எனக்குள் கற்பனை கலந்த கசப்பான எண்ணங்கள் தோன்றின. அவர் 1929 மார்க்கெட் வீழ்ச்சியினிமித்தம் எங்கள் பண்ணையிலுண்டான நஷ்டத்தால் மனமுடைந்திருந்தார் என நான் அறிந்திருக்கவில்லை. எனது தகப்பனார் என்னை அதிகமாய் கண்டித்து வெறுப்பேற்றி விட்ட நிலையில், பிசாசு என் உணர்ச்சிகளை தீமைக்கேதுவாய் தூண்டி விடும் தருணமாய் அது அமைந்து விட்டது.

''பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப் படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக'' எபேசியர் 6:4

இவ்வாறான சூழ்நிலை தீமைகளுக்குத் தகப்பனான பிசாசுக்கு என் வாழ்வில் கதவை திறந்து கொடுத்து, அவன் என் ஆத்துமாவிலும், முழு ஜீவியத்திலும் அதைத் தொடர்ந்த ஆண்டுகளில் ஆளுகை செய்து என் சிந்தை, செயல்களை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள அவனுக்கு வழி ஏற்படுத்தித் தந்தது. நான் கிறிஸ்தவனான போது என் தகப்பன் பேரில் எனக்கிருந்த கசப்பை குழி தோண்டி புதைத்துப் போட்டேன். அதுவோ மீண்டும் உயிர் பெற்று எழும்ப சமயம் பார்த்து காத்துக் கிடந்தது.

என் தகப்பனார் எனது வனாந்தர அனுபவங்களின் (பின்மாற்ற) வேளையில் மரணத்தைத் தழுவினார். அவர் மரிக்கும் முன், அவர் என்னிடம் வந்து ''எனக்கெதிராய் நீ ஒன்றும் உனக்குள் இன்னமும் வைத்துக் கொண்டிருக்க மாட்டாய் என நான் நம்புகிறேன் என்றார்''. அவர் என்னிடம் மன்னிப்பைக் கோருகிறாரென்று அறிந்து கொண்ட நானோ நான்

கிறிஸ்தவனானபோதே அவரை மன்னித்து விட்டதாகக் கூறினேன். எனினும் அவர் குறித்த கசப்பும், மன்னிக்க இயலாத நிலைப்பாடும் சிறிதளவு எனக்குள் மனதின் அடித்தளத்தில் மீந்திருந்தன. நான் கசப்பு, வெறுப்பு, மன்னியாமை போன்றவைகளை நீக்கிவிட நினைத்தும் தோல்வியுற்றது போலவே அவ்வப்போது தோன்றியது.

கர்த்தர் எனது யூபிலி ஆண்டின் போது இரக்கமாய் என்னை சந்தித்தார். முதலாவதாக, அவர் எனக்கு ஒரு புதிய இருதயத்தை கொடுத்து, ஒரு புதிய ஆவியை எனக்குள் வைத்தார். அவர் என்னை விடுதலையாக்குமுன் அவரது சுத்திகரிப்பின் ஆவியைப் பெற்றுக் கொள்ள அவர் என்னை ஆயத்தப்படுத்தினார். தேவ அன்பு என் இருதயத்தை நிரப்புவதை நான் அறிந்து கொள்ள வேண்டுமென அவர் விரும்பினார். நான் விடுதலைக்காகக் கதறினேன். எனது திருச்சபைக்குள் எப்பக்கம் திரும்பி, எவரிடம் உதவி கோருவது என எனக்குத் தெரியாததால், நான் சார்ந்திருந்த திருச்சபைக்கு வெளியே கிறிஸ்தவ உதவியை, ஆதரவை நாடினேன்.

தெற்கு வளைவில் நடைபெற்ற ஒரு வேதபாடக் கூட்டத்தில் சந்தித்த ஒரு தம்பதியினரை நானும், எனது மனைவியும் தொடர்பு கொண்டோம். மன்னிக்க இயலாமை பிசாசுக்கு என் ஜீவியத்தில் ஒரு பலமானப் பிடிப்பைத் தந்திருந்தது. என்னை கட்டியிருந்த மன்னிக்க இயலாமை எனும் அடிமைத்தனத்திலிருந்து இந்த நண்பர் மூலம் கர்த்தர் என்னை விடுவித்தார். என்னை நானே மன்னிப்பதிலிருந்து இது துவங்கியது. அவரோடு எனக்குண்டான கலந்துரையாடலில், நான் சொன்னேன், ''நல்லது நான் என்னை மன்னி. . . க்க வேண். . . டு. . . மென உணருகிறேன். ''என்னால் இதனை சரியாய் சொல்ல முடியவில்லை. எனவே அவர் எனக்கு உதவி செய்தார். ''நான் என்னை மன்னிக்கிறேன், நான் என்னை மன்னிக்கிறேன், நான் என்னை மன்னிக்கிறேன்'' அவர் சொல்ல, சொல்ல, நான் திரும்பச் சொன்னேன். 'ஆ. . . ஆ. . . ஆ நான் என்னை மன்னிக்கிறேன்''. இதே நிலை சில நிமிடங்கள் தொடர்ந்தது. (பத்து நிமிடங்கள் அல்லது அதற்கு மேலாய்) கடைசியாக நான் என்னை மன்னித்தேன். கட்டு அகன்றது. என்னை நானே மன்னிக்க இயலா நிலையிலிருந்து நான் மீண்டு வந்தேன். இப்போது எனது எட்டாம் வகுப்புப் படிப்பின்போது என்னை தண்டித்த ஒரு ஆசிரியரை என் நண்பரின் துணை கொண்டு மன்னிக்கலானேன்.

நான் வாழ்ந்த பகுதியில் ஒரு புதிய பெரியதொரு பள்ளி திறக்கப்பட்டது. அதினிமித்தம் அப்பகுதியில் அதற்கு முன்னரே இருந்த சில சிறு கிராமப் பள்ளிகள் மூடப்பட்டன. நான் புதிய பள்ளியில் எட்டாம் வகுப்பில் சேர்க்கப்பட்டேன். அங்கு அப்பள்ளியில் மாணவர்களை கடுமையான தண்டனைக்குட்படுத்தும் திரு.குட்மேன் எனப்படும் ஆசிரியர்

குறித்த மயிர்கூச் செரியச் செய்யும் காரியங்களைக் கேள்வியுற்றேன். ஏழாம் வகுப்பு மாணவனொருவன் இவரது கண்டிதத்தினிமித்தம் மதியம் வீட்டிற்குப் போய் தன்னைத் தானே சுட்டுக் கொண்டதாக எனக்கு சொல்லப்பட்டது. எனக்கு திரு. குட்மேன் ஆசிரியராயிருக்கவில்லை. ஆனால் ஒரு பாடபகுதி மேற்பார்வையாளராக ஒரு நாளின் இறுதி வேளையில் அவர் எங்களுக்கு வந்திருந்தார். அறிவீனமாக, முட்டாள்தனமாக, நான் எனது குறிப்பேட்டில் பெரும்பான்மை மாணவர்களின் அவர் குறித்த கருத்தை எழுதி வைத்திருந்தேன். பேருந்திற்குப் போகிற வழியில் அது எனது வகுப்பு மாணவன் மூலமாக தீய நோக்கத்துடன் திரு.குட்மேன் கையில் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டது. அது அவரால் வாசிக்கப்பட்டது.

மறுநாள் காலையில் திரு.குட்மேன் எனது வகுப்பறைக்கு வந்து நீ இங்கேயே உனக்குரியதை பெற்றுக் கொள்கிறாயா அல்லது ஆசிரியர் அறைக்கு வருகிறாயா எனக்கேட்டார். நானோ பயத்தில் தொண்டை அடைக்க ஆசிரியர் அறையில் பெற்றுக் கொள்வதாகத் தெரிவித்தேன். அவர் என்னை கணித ஆசிரியரிடம் அனுப்பி தோலாலான ஒரு துடுப்பு போன்ற பிரம்பை வாங்கி வரச்சொன்னார். அவர் என்னை மேஜையின் மீது படுக்கச் சொல்லி, எனது பின்பக்கத்தில் சரமாரியாக அடித்தார். ஆரம்பத்தில் நான் அழவோ, இரக்கத்துக்காக கெஞ்சவோ இல்லை. எனினும் துக்கம் என் தொண்டையை மீறி வெளிப்பட நான் கதறி அழத்துவங்கி விட்டேன். நான் அழுதவுடன் அவர் அடிப்பதை நிறுத்தி விட்டார். ஆயினும் என்னால் என் அழுகையை கட்டுப்படுத்த இயலவில்லை. வெட்கம் ஒருபுறம் என்னை மூட, எனக்குள்ளே ஒரு கொலை வெறியும் கசப்புணர்வும் தலைதூக்கின.

நான் ஊழியத்தை விட்டுப்போன எனது வனாந்தர வருடங்களில் ஒரு பள்ளி ஆசிரியராய் மாறியிருந்தேன். இந்நிலையில் என் தகப்பனாரின் மரணம் சம்பவித்தது. அப்போது, என் சகோதரன் டான் வந்து எனக்குப்பின் நின்று கொண்டு சில உறவினர்களுடன் கலந்துரையாடிக் கொண்டே, என்னிடம் ''பாப் உனக்கு திரு.குட்மேன் நினைவிருக்கிறதா?'' என கேட்டார். எனக்குள் கோபம் கொப்பளிக்க ''ஆ. . .மா. . . ம் வகுப்பறையில் எது சரி, எது தவறு என எனக்குத் தெரியும். நான் இப்போது ஒரு ஆசிரியர்! நான் என் தகப்பனாருக்கு கனம் கொடுக்க விரும்பாதிருந்தால் உன்னை வெளியே தூக்கி எறிந்திருப்பேன்'' என்றேன். அவனோ ஆசுவாசத்துடன் "அது தவறில்லையா?'' என கேட்க நான் அது மிக மோசம் தான் என்றேன். அடக்க ஆராதனைக்கு வந்திருந்த கூட்டமெல்லாம் என் பக்கம் திரும்பி எனது மோசமான நிலையை கண்ணுற்றுக் கொண்டிருந்தன. நான் என் முகத்தை திருப்பிக் கொண்டேன்.

இப்போது திரு.குட்மேன் ஏற்கெனவே மரித்துப் போயிருந்தும். நான் எனது நண்பரின் உதவியோடு அவரை மன்னிக்க வேண்டியிருந்தது. ''ஆ. . .ஓ. . .ஓ. . . நான் திரு.குட்மேனை மன். . . னிக். . . கி. . . றேன்'' என்னை நானே மன்னிப்பதற்கு நான் எடுத்துக் கொண்ட நேரத்தை காட்டிலும் இதற்கு குறைவான சமயமே தேவைப்பட்டது. மரித்துப்போன அந்த ஆசிரியரை நான் மன்னித்தவுடன் என் கட்டுகள் கலகலத்து அவிழ்ந்தன. திரு.குட்மேனைக் குறித்த எனது கசப்புணர்வு, பழிவாங்கும் வெறி, அனைத்தும் என்னை விட்டு, அகன்று மறைந்தன. என் ஆவியிலிருந்தும், ஆத்துமாவிலிருந்தும் ஒரு பெரும் பாரம் இறங்கி விட்டது.

இன்னமும் நான் பரிசுத்தாவியானவரின் பூரணமான நிறைவைப் பெற்றிருக்கவில்லை. கழுவுதல் இன்னமும் நிறைவாகவில்லை. நாங்கள் கற்று, அனுபவித்து கொண்டிருந்த காரியங்கள் சம்பவித்த காலகட்டம் 1977ம் வருடத்தின் பிந்திய, மற்றும் 1978ம் வருடத்தின் முந்திய குளிர் நிறைந்த மாதங்களாகும். எனக்குள் இன்னமும் காணப்பட்ட கோபத்தைக் குறித்து யோசிக்கலானேன். யாராகிலும் ஒருவர் என்னை கோபமூட்டி விட்டால் என்ன நடக்குமோ என எனக்குள் பயந்து கொண்டிருந்தேன்.

இதற்கு முந்திய கோடைகாலத்தின் போது நானும், என் மனைவியும் பங்கேற்ற பரிசுத்தாவியானவரின் கருத்தரங்கில், இயேசுவையும், ஆவிக்குரிய யுத்தத்தையும் குறித்த விளக்கங்களை முதல்முறையாக அறிந்து கண்டோம். நான் பிசாசுகளைக் குறித்தோ, ஒரு தனிப் பிசாசினை குறித்தோ நம்பிக்கையுடையவனாயிருக்கவில்லை. இங்கு நான் குறிப்பிடும் சாத்தான் என்பவன் ஒரு எண்ணப் பிரதிபலிப்பே தவிர ஒரு நபரல்ல. இப்பொழுது தேவன் ஒரு வேத பகுதியின் மூலம் காரியங்களை விளக்கினார். நான் வேதத்தை நம்புகிறேனா? அல்லது சந்தேகிக்கிறேனா? நான் கர்த்தருடைய தூதனோடு அந்த குளிர்காலம் முழுவதும் போராடிக் கொண்டிருந்தேன். எனது வேதக்கல்லூரிப் பயிற்சி எனக்கு சற்றே கை கொடுத்தது.

கோடை வந்தது. அத்துடன் என் சகோதரன் டானை அலாஸ்காவுக்கு ஏற்றிச் சொல்ல ஒரு விமானமும் வந்தது. நான் அலாஸ்காவிலிருக்கையில் ஒரு இரவில் கூடாரத்திற்குள் தேவன் என்னை சந்தித்தார். நான் கூடாரத்திற்குள் என் சகோதரனோடு படுத்து ஆழ்ந்த நித்திரையிலிருக்கையில், திடீரென அவரது அன்பையும், எனது அன்பைக் குறித்த அவரது எதிர்ப்பார்ப்பையும் உணர்ந்தேன். வேதம் கூறும் நித்திய சத்தியத்தை சீர்தூக்கிப் பார்க்க நான் முற்பட்டபோது, என் கூடாரத்திற்குள் இறங்கிய தேவ பிரசன்னத்தினால், கர்த்தருடைய வார்த்தையின் பேரில் நம்பிக்கையும், விசுவாசத்தினாலுண்டாகும் ஜெயமும் எனக்கு விளங்க வந்தன.

எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன். மேலும் எதை நான் மன்னித்திருக்கிறேனோ அதை உங்கள் நிமித்தம் கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே மன்னித்திருக்கிறேன்.

சாத்தானாலே நாம் மோசம் போகாதபடிக்கு அப்படிச் செய்தேன். அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. 2 கொரிந்தியர் 2:10,11

நான் கர்த்தருடைய சத்தியத்தை கருத்தூன்றி கவனித்து அதை என் வாழ்வில் அப்பியாசப்படுத்த முற்பட்டபோது, எனக்குள் கிரியை செயது கொண்டிருந்த பிசாசின் வல்லமைகளை அறிந்து கொண்டேன். நான் சத்தியத்திலும், ஆவியிலும் நடக்க முற்பட்டால், என் வாழ்வில் கிரியை செய்யும் பிசாசின் வல்லமைகளோடு நான் இடைபட்டு மேற்கொள்ள வேண்டியது அவசியமென்றும் தெரிய வந்தது. இதனை என் சகோதரனுக்கு நான் தெரியப்படுத்தவில்லை. எப்படியோ எனக்குள் இருந்த பிசாசின வல்லமைகளிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற என் எண்ணத்தில் மட்டும் எந்த மாற்றமும் இல்லை.

பொல்லாத ஆவிகளிலிருந்து விடுதலை

நானும் எனது சகோதரனும் சுகமாய் வீடு வந்து சேர்ந்தவுடன், பொல்லாத ஆவிகள் எனக்குள் கிரியை செய்வதாகவும், அதிலிருந்து விடுபட நாங்கள் கலிபோர்னியாவிலுள்ள பிரெஸ்னோவுக்கு காரில் பயணப் பட்டுப்போக வேண்டுமென்றும் என் மனைவியிடம் தெரிவித்தேன். அங்கு பிரதரன் விசுவாசிகளால் பரிசுத்தாவியானவரைக் குறித்து மற்றுமொரு கருத்தரங்கு நடத்தப்பட இருந்தது. 1977ல் இயேசுவும் ஆவிக்குரிய யுத்தமும் என்ற தலைப்பில் போதித்த ஹாலிடேஸ்பர்க்கினைச் சேர்ந்த பாப், நான்சி மில்ஸ் இருவரும் இக்கருத்தரங்கிலும் போதிக்க வந்திருந்தனர். விடுதலை ஊழியத்தை நிறைவேற்றும் வேறு எவரையும் நாங்கள் அறிந்திராததால் கலிபோர்னியாவுக்கு புறப்பட்டோம். நாங்கள் பிரெஸ்னோவை நெருங்க, நெருங்க பொல்லாத ஆவிகளின் சேட்டையை எனக்குள் அதிகமாக உணர்ந்தேன். சத்துருவின் தாக்கம் என் மனநிலையில் அதிகமாயிருந்த நிலையில் நான் முழங்காலில் நின்று மன்னிப்புக்காக அதிகமாய் ஆண்டவரிடம் கெஞ்சினேன். எனக்கு பதிலாக என் மனைவி கார் ஓட்டிக் கொண்டு வந்தார். நாங்கள் நீண்டதூரம் பயணப்பட்டு, கருத்தரங்கு நடைபெறும் வளாகத்திற்குள் வந்து சேர்ந்து, கையெழுத்திட்டு, தங்குமிடத்தை பெற்றுக் கொண்டோம்.

மறுபடியும் 'இயேசுவும் ஆவிக்குரிய யுத்தமும்' என்ற தலைப்பில் வகுப்பு எடுக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை வகுப்பின் முடிவில் ''இங்கு யாராகிலும் பொல்லாத ஆவியினால் பீடிக்கப்பட்டவர்களாய், இயேசு தங்களை விடுவிக்க வேண்டுமென்று விருப்பத்தோடிருக்கிறீர்களா? என பாப் கேட்டார். எனது உள்ளான அமைதிக் குலைவினிமித்தம் நான் என் கையை உயர்த்தினேன். விடுதலைக் குழுவினர் என்னிடம் வர, அவர்களிடம் என் நிலையை நான் எடுத்துரைத்தேன். பாப் கொலை வெறிக்கு காரணமான பொல்லாத ஆவிகளின் சேட்டைகளைக் கடிந்து கொண்டு அவைகளை வெளியேறும்படி கட்டளை கொடுக்கும்வரை, அனைவரும் அமைதியாக ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

''கொலைவெறிக்குக் காரணமான பொல்லாத ஆவியின் மேல் நான் அதிகாரமெடுக்கிறேன். அந்த ஆவி இந்த மனிதனை விட்டு வெளியேறும்படி இயேசுவின் நாமத்தில் கட்டளையிடுகிறேன்''

ஒரு பெரும் அசைவு அந்த அறையின் ஒரு மூலையிலிருந்து மறுமூலை வரை பரவியது. அறைக்குள் இருந்த அனைவரது கண்களும் பயத்தில் நிலைகுத்தி வட்டமடித்தன. ஐம்பதுக்கும் அதிகமான பக்திமான்கள் என்னைச்சுற்றி இடம் விட்டு அமர்ந்திருந்தனர். ஒரு கொலையாளி நம் நடுவில் இருக்கிறான்! கடும் அச்ச உணர்வு என்னைத் தாக்கியது. நான் கொலையாளி அல்ல. ஏனெனில் நான் ஒருவரையும் ஒருபோதும் கொன்றதில்லை. நான் அறையை விட்டு வெளியேறிவிடும்படியான நேரத்தை கணக்கிட்டுக் கொண்டிருந்தேன், எனக்கு பைத்தியமே பிடித்து விட்டது போலிருந்தது.

நான் கிளம்ப நினைக்குமுன்னே, ஒரு மெல்லிய அமர்ந்த சத்தம் ''அதைவிட்டு வெளியே வா'' எனக் கேட்டது. நான் அச்ச உணர்வில் அல்லாடிக் கொண்டிருப்பதை அங்கு ஒருவரும் அறிந்திலர். எனவே நான் எனக்குள் 'ஆம் ஆண்டவரே' என பதிலுரைத்தேன். அந்த நொடிப்பொழுதே என் வயிற்றுக்குள் ஏதோ உருட்டியது, புரட்டியது, குமட்டியது. என் வாய் வழியே கெட்ட ஆவி பொங்கிப் பொங்கி ஏப்பமாக வெளியேறிக் கொண்டிருக்க, என் தோள்களிலிருந்து ஒரு பெரும் சுமை இறங்கியது போலிருந்தது. அடிமைத்தனத்தின் நுகம் அகன்று, சங்கிலிகள் தெறிப்புண்டு போன நிலையில், கர்த்தர் என்னை விடுதலையாக்கினவிதம் ஆகாயத்தில் மிதப்பது போல என்னை இலகுவாக உணரச் செய்தது. ஒரு பெண் 'நான் என்னை ஒரு சூனியக்காரியாகக் கருதுகிறேன்' என குரலெழுப்ப பாப், நான்ஸி இருவரும் அப்பெண்ணிடம் விரைந்தார்கள், அவள் சூனியம் மற்றும் செய்வினைக் கோளாறுகளிலிருந்து முற்றிலும் விடுவிக்கப்பட்டாள். இதைக் கண்ட மற்றவர்கள் ஒவ்வொருவரும் பிசாசின் ஆவிகளினாலும் அதன் கட்டுகளினாலும் தாங்கள் கொண்டிருந்த பாவங்களை அறிக்கையிட்டார்கள்.

அன்று இரவு நானும், என் மனைவியும் கூட்டமுடிவில் பீடத்திற்கு முன் போய், எங்களை கர்த்தருடைய ஊழியத்திற்கென மறுபடியும் அர்ப்பணித்தோம். பரலோக ராஜ்யத்தின் ஒழுங்குகளை நான் இன்னமும் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. தேவ சித்தத்தோடு இடைபடுவதைக் குறித்து நான் அறிந்திருந்தேன். எனினும் தேவசித்தத்தை அதன் வேளையில் செய்து முடிப்பது குறித்து இன்னமும் நான் புரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

அடுத்த நாள் காலமே, எங்களுடன் உணவறையில் ஒன்றாய் அமர்ந்து பாப், நான்ஸி இருவரும் காலை உணவை அருந்திட, நாங்கள் மிகவும் மகிழ்வுற்றோம். அன்றைய காலை வேளை முடியுமுன்னே, நான் சற்றே குமாரனது மகிமை என் இருதயத்தில் உதித்திருப்பதை உணர்ந்து கொண்டேன். எனக்குள் என்ன நிகழ்ந்திருக்கிறது என நாங்கள் விவாதித்தோம். நானும், மேரி லோவாவும் முந்தைய இரவில் பீடத்தின் முன் சென்று, ஊழியத்திற்கு எங்களை மறுபிரதிஷ்டை செய்ததை எடுத்துரைத்தேன். பாப் ஒரு அலுவலக அறையை எங்களுக்கு சுட்டிக்காட்டி அதில் போய் தாராளமாய் சிலவற்றைப் பேசலாம் என அழைத்தார். அவர் என்ன பேச நினைக்கிறார் என நான் அறிய விரும்பினேன். அவர் சொன்னார், ''இன்னமும் உனக்குள்ளிருந்து கிரியை செய்யக் கூடிய இன்னும் சில இருளின் ஆதிக்க சக்திகளோடு இடைபட வேண்டும்''. நானோ மறுத்து வாதிட்டேன், ''ஹேய், நான் மிகவும் பெரிதான அளவில் பிசாசின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதாக உணர்கிறேன். புதியதொரு ஊழியத்திற்காக எதிர்பார்க்கிறேன்'' என்றேன். பாப் தீவிரமாக கண்டிப்புடனும், அதிகாரத்துடனும் பதிலுரைத்தார். ''இல்லை, இன்னும் சில ஆவிகள் வெளியேற்றப்பட வேண்டும்''

நல்லது இது என் பெருமைக்கும், சுய சார்புக்கும் எதிராக அதனை அணைக்கும்படி ஊற்றப்பட்ட தண்ணீர். என் ஆவிக்குரிய நிலைமையைக் குறித்து எனக்குள் உண்டாயிருந்த வெளிப்பாட்டுக்கும், கணிப்புக்கும் உடைவை ஏற்படுத்திய ஓர் நிகழ்வு. இது என் உபதேசத்துக்கும் அறிவுக்கும் உட்பட்ட ஒன்றல்ல. ஒரு கிறிஸ்தவனுக்குள் ஒரு பொல்லாத ஆவியோ அல்லது பொல்லாத ஆவிகளின் ஒரு கூட்டமோ கிரியை செய்வதற்கு ஏதுவுண்டு என்ற வாதமே இதுவரை நான் அறிந்திராத ஒன்று. புரிந்து கொள்ள, ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றுமாகும். எனது ஆவிக்குரிய அறிவீன நிலையில், ஏதோ ஒரு பொல்லாத ஆவி தான் எனது அனைத்துப் பிரச்சனைகளுக்கும் காரணமென எண்ணியிருந்தேன். இப்போது ஏன் சில பொல்லாத ஆவிகளாய் அவை இருக்கக்கூடாது என்ற எண்ண அலைகள் எனக்குள் ஊடுருவி நின்றன. பாப் மற்றும் நான்சி இருவரும் தெய்வீக அன்பை வெளிப்படுத்திய விதம் எனக்கு அவர்களிடம் அன்பையும், அங்கீகாரத்தையும் ஏற்படுத்தியிருந்தது, அவர்கள் கர்த்தருடைய ஊழியர்கள்

என என் ஆவி அவர்களைக் குறித்து சாட்சி பகர்ந்தது. எனவே என்னைக் குறித்த அவரது கணிப்பையும், அதற்காக அவர் கூறும் பரிகாரத்தையும் நான் முற்றிலும் நம்பினேன்.

காலை உணவை முடித்தவுடன் கூட்டத்தினரைக் கடந்து, காலியாயிருந்த அலுவலகத்தினுள் சென்றோம். ஜெப உதவி தேவைப்பட்ட மற்ற சிலரும் வேதத்தை சுமந்து கொண்டு, எங்களோடு இணைந்து வந்தனர். எனக்கு சேவை செய்ய வந்த விடுதலைக் குழுவினர் பாப் மற்றும் நான்சி இருவரும் தான். நான் அறையினுள் நுழைந்தவுடன் என் கண்களை அங்குமிங்கும் ஓடவிட்டேன். ஒரே ஒரு கதவு மட்டுமே அந்த அறைக்கு இருந்தது. ஜன்னல்கள் இல்லை. நான் தப்பிக்க வேண்டுமெனில் இதை விட்டால் வழியே இல்லையா? நான் இவ்வாறு நினைக்கையில் தானே என் உள்ளுணர்வு ''ஓ தேவனே, எனக்கு உதவி செய்யும்'' எனக் கதறியது. கர்த்தருடைய பிரசன்னம் அறைக்குள் இறங்கவும், சமாதானத்தின் ஆளுகை அங்கே உருவானது.

பாப் ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து மையப்பகுதியில் போட்டு என்னை அதில் உட்காரச் சொன்னார். சுற்றிலுமிருந்த நாற்காலிகள் ஜெப வீரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு கேடகம் போல பாதுகாப்பின் வளையம்போல உதவியாளர்களால் நிரப்பப்பட்டது. பாப் ஜெபிக்கத் துவங்கி, தமக்கு ஒரு வல்லமையும் இல்லையென்றும், வல்லமையும் அதிகாரமும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கே உரியவை என அறிக்கையிட்டார். ஊழியரின் விடுதலை குறித்த பூரண அறிவும், தெளிவும், நிச்சயமும் தமக்குத் தந்தருளப்பட வேண்டுமென மிகுந்த தாழ்மையுடன் அவர் வேண்டுதல் செய்தார். கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப் படவும், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் தமக்குள்ள விருப்பத்தை பின்னும் பாப் அறிக்கையிட்டார். உதவியாளர்களின் பாதுகாப்புக்காகவும்கூட அவர் ஜெபம் பண்ணினார். தொடர்ந்து அவர் கருத்தரங்கின் பாதுகாப்பிற் காகவும் ஜெபித்து, பொல்லாத ஆவிகள் ஒருவருக்கும் தீங்கு செய்யாமல் வனாந்தரத்திற்கு துரத்தப்படும்படி அவைகளுக்கெதிராய் கட்டளையிட்டார்.

பாப் அசுத்த ஆவிகளின் மேல் அதிகாரம் செலுத்தத்துவங்கி, விடுதலையின் ஜெபத்தை செய்ததன் பலன் உடனே விளங்கியது. ''இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், இந்த மனிதனைக் கட்டி வைத்து உபத்திரவப் படுத்துகிற ஒவ்வொரு அசுத்த பொல்லாத ஆவிகளுக்கு விரோதமாய் அதிகாரமெடுக்கிறேன். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த மனிதனை விடுவித்தருளும்படி கெஞ்சுகிறேன். சகோதரன் பாப்க்குள்ளே கிரியை செய்கிற கசப்புக்கு காரணமான பொல்லாத ஆவியே வெளியே வா என அதிகாரத்துடன் கட்டளையிடுகிறேன். வெளியே வா! நான் உன்னை வெளியேற்றுகிறேன். இவரை விட்டு அகலும்படி இயேசுவின் நாமத்தில் கட்டளையிடுகிறேன்.

கர்த்தர் பாப், நான்ஸி இருவருக்கும் ஆவிகளை பகுத்தறியும் வரத்தையும், அறிவை உணர்த்தும் வசனம், அற்புதங்களைச் செய்யும் வரம் ஆகியவற்றையும் கொடுத்திருந்தார். வெள்ளிக்கிழமை விரட்டப்பட்டிருந்த ஒரு பொல்லாத ஆவி போக, இம்முறை இருபத்துமூன்று பொல்லாத ஆவிகள் என்னிலிருந்து விரட்டப்பட்டன. விரட்டப்பட்ட ஆவிகளில் கசப்பான வேர், மன்னியாமை, ஆத்திரம், கோபம், வெறுப்பு, பழிவாங்கும் உணர்வு, சோர்வு, தற்கொலை, மாரடைப்பு இவற்றுக்கான ஆவிகளும் அடங்கியிருந்தன.

அப்பொழுது யோவான் அவரை நோக்கி : போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோம் என்றான்.

அதற்கு இயேசு : அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ் செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்து தீங்கு சொல்லமாட்டான். மாற்கு 9:38,39

ஒரு குறிப்பிட்ட பகுதியில் பாபோடும் நான்ஸியோடும் நான் என் தகப்பனாரோடு என் சிறுவயதில் எனக்கு உண்டாயிருந்த உறவைப் பகிர்ந்து கொண்டேன். நான் கிறிஸ்தவனான போது நான் அவரை மன்னித்து விட்டாலும், அந்த சிறுவயதில் எனக்கு சம்பவித்தவைகளை நான் மறுபடி மறுபடி நினைக்காமலில்லை என்றேன். நான் இதைச் சொன்ன மாத்திரத்தில் பாப் எனக்கான விடுதலையைக் கோரினார்.

''இந்த மனிதனுக்குள் கிரியை செய்யும் வெறுப்புணர்வுக்குக் காரணமான பொல்லாத ஆவியே, இவரை விட்டு இப்பொழுதே வெளியே வரும்படி உனக்கு இயேசுவின் நாமத்தில் கட்டளையிடுகிறேன்''.

பாப் இப்படிக் கட்டளையிடவும், ஒரு தீய ஆவி வெளிப்படுதலை அங்கே உணர முடிந்தது. உள்ளிருந்த தீய வல்லமை புறப்படுகையில் ஒரு இராட்சத பூச்சி ஒன்று நகருவது போல வெளித்தோற்றத்தை அது உண்டாக்கி மிகவும் ஆட்டங்கொடுத்தது. என் தலையின் மூளையிலும், உடம்பின் ஒவ்வொரு அணுக்களிலும் அதன் பிரதிபலிப்பு காணப்பட்டது. பாப் நான்ஸி இருவரும் தொடர்ந்து அந்த அசுத்த ஆவியோடு போராடிக் கொண்டிருந்தனர்.

இயேசு கிறிஸ்தவின் நாமத்திற்கு எதிர்த்து நிற்பதற்கு உன்னை நீ யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோர் யாவருடைய முழங்கால்களும் முடங்கும் என்றும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையுண்டாக நாவுகள் யாவும் இயேசு

கிறிஸ்துவை ஆண்டவர் என்று அறிக்கையிடுமென்றும் எழுதப்பட்டிருக்கிறதே. சாத்தானே, சகோதரன் பாபை உன்னிடமிருந்து விடுவிக்கிறேன். வெறுப்புக்குத் தகப்பனான பிசாசே இவரை விட்டு நீ வெளியேறவும் இனி இவருக்குள் பிரவேசியாதிருக்கவும் கட்டளையிடுகிறேன். கர்த்தர் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்திலேயே.

பாபின் கட்டளையைத் தொடர்ந்து, என் சரீரத்தின் மூளையின் ஒவ்வொரு அணுக்களிலிருந்தும் கட்டுகள் கழன்று விழுவதை என்னால் உணர முடிந்தது. வெறுப்புணர்வின் தகப்பன் என்பது ஒரு தலைமைப் பிசாசு. மற்ற அசுத்த ஆவிகள் உள்ளே நுழைவதற்கு கதவைத் திறந்து வழியேற்படுத்தி கொடுப்பது இப்படிப்பட்ட ஆவிதான். அந்த தலைமை வெறுப்புணர்வின் ஆவியும் அதனோடு அதன் கூட்டமும் முற்றிலும் அப்புறப்பட்டுப்போயின. சாத்தானின் கட்டுகளிலிருந்து இயேசு என்னை விடுவித்தார். எனது விடுதலைக்காரியம் முடிவுக்கு வரவும் பாப், நான்ஸி, ஜெப உதவியாளர்கள் அனைவரும் பொதுக்கூடுகைக்கென பரிசுத்த ஸ்தலத்திற்குப் போக வேண்டியிருந்தது. அப்படிப்போகுமுன் பாப் என்னைப் பார்த்து, என்னிலிருந்து விரட்டப்பட்ட ஆவிகளின் பட்டியலைக் கொடுத்தார். தொடர்ந்து அவைகள் திரும்பவராதபடி அவற்றிற்கு எதிர்த்து நிற்கவே அப்பட்டியல் எனக்கு தரப்பட்டது. விடுதலையின் வேளையில் நான் ஆவிக்குள் இருந்ததாக பாபும் நான்ஸியும் பின்னர் என்னோடும் மேரி லோவாவுடனும் பேசுகையில் பகிர்ந்து கொண்டனர். இப்படி நடப்பது மிகவும் அபூர்வம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். இதுவரை அவர்கள் நிறைவேற்றிய விடுதலை ஊழியத்தில் மிகவும் சுலபமாய் முடிந்தது இது தான் என்றும் அவர்கள் கூறினர். சிரைத்து, சுத்திகரித்துக் கொள்ளுதல் (ஸ்நானம்) முற்றுப் பெற்றது என என் ஆவியில் நான் தெரிந்து கொண்டேன். நான் (சுத்திகரிக்கப்பட்டேன், பிரித்தெடுக்கப்பட்டேன்) சுத்தமானேன். (லேவி.14:9) எனது ஆவிக்குரிய பயணத்தில் நான் மட்டும் ஆண்டவருடனிருக்கவில்லை. என் மனைவியும் விடுதலைக்கான அவ்வழியில் என்னோடு நடந்து வந்தாள் என்பதை பின்னால் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

இந்த குறிப்பிட்ட வசனத்தை விடுதலையின் பொல்லாத ஆவிகளுக்கெதிராக பாப் பயன்படுத்தியதை நானும் என் மனைவியும் மனதில் கொண்டிருந்ததால், எப்பொழுதும் பொல்லாத ஆவிகளுக்கெதிராக நாங்கள் இவ்வசனத்தை வேளாவேளைகளில் பயன்படுத்தி பெரிய வெற்றியைக் கண்டிருக்கிறோம். பிலிப்பியர் 2:10,11

குற்ற நிவாரண பலி

பின்பு ஆசாரியன் ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதையும் அந்த ஆழாக்கு எண்ணெயையும் குற்ற நிவாரண பலியாகக் கொண்டு வந்து, அசைவாட்டும் பலியாக அசைவாட்ட வேண்டும். லேவி.14:12

குஷ்டரோகத்திலிருந்து சுத்திகரிப்பை பெற்றுக்கொள்ளும் மனிதன் சந்திப்பின் கூடாரமாகிய ஆசரிப்புக் கூடார வாசலிலே நான்கு பலிகளை காணிக்கையாகச் செலுத்த வேண்டுமெனக் கட்டளையிட்டார். அதன் வரிசைக்கிரமமாவது

1) குற்ற நிவாரண பலி
2) பாவ நிவாரண பலி
3) சர்வாங்க தகன பலி
4) போஜன பலி

சுத்திகரிப்பைப் பெறும் மனிதன் காணிக்கை பலிகளோடுகூட, தன்னை சுத்திகரித்த ஆசாரியனால் கர்த்தருக்கு முன்பாக நிறுத்தப்பட வேண்டும். (லூக்.5:14; லேவி.14:1013, 19,20) (என்னை சுத்திகரித்த கர்த்தரால், நான் தேவனுக்கு முன்பாக நிறுத்தப்பட வேண்டும்)

சுத்திகரிக்கிற ஆசாரியன் சுத்திகரிக்கப்படும் மனிதனையும் அவ்வஸ்துக்களையும் ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தக்கடவன். லேவியராகமம் 14:11

குஷ்டரோகியின் சுத்திகரிப்பின் நாளிலே கொண்டு வரப்பட்ட முதல் பலியைக் குறித்து கவனமாக காண்போம். இது குற்ற நிவாரண பலியாகும்.

முதலாவதாக, எனது ஆசாரியன் எனது உள்ளான மனிதனை புறம்பான மனிதனிலிருந்து எடுத்து, வேறுபடுத்தி பலியாக அல்ல, காணிக்கையாக கர்த்தருக்கு முன்பாக நிறுத்துகிறார். (தேவனிடம் அன்பு கூறுதல்) பரிசுத்தாவியானவரின் வாசஸ்தலமாக நிலநிறுத்தும்படி அவர் அப்படி செய்கிறார். அசைவாட்டும் பங்குகள் என்பது அன்பளிப்பாக ஆசாரியன் கையில் கொடுக்கப்படுவதாகும். கர்த்தருடைய பங்கு இப்போது பிரித்தெடுக்கப்பட்டுவிட்டது.

பாவநிவாரண பலியும் சர்வாங்க தகனபலியும் இடும் பரிசுத்த ஸ்தலத்திலே அந்த ஆட்டுக்குட்டியைக் கொல்லக் கடவன்; குற்ற நிவாரண பலி பாவநிவாரண பலியைப் போல ஆசாரியனுக்கு உரியது; அது மகா பரிசுத்தமானது. லேவியராகமம் 14:13

இரண்டாவதாக, கர்த்தர் குறிப்பிடுவது, 'சுயத்திற்கு மரிப்பதாகும்' அந்தக் குற்ற நிவாரணபலியின் இரத்தத்தில் ஆசாரியன் எடுத்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலது காதின் மடலிலும், அவன் வலது கையின் பெருவிரலிலும், வலது காலின் பெருவிரலிலும் பூச வேண்டும். இப்படிச் செய்வதில் ஆவிக்குரிய அர்த்தம் அடங்கியிருக்கிறது. என் கேள்வித்திறன் கோணல் தன்மையுடையதாயிருந்தது. அது நேராக்கப்பட வேண்டியது அவசியமாயிருந்தது. தேவனுடைய சித்தம் வேதாகமத் தீர்க்கதரிசனங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என நான் விளங்கிக் கொண்டேன். தீர்க்க தரிசனத்தின் நிறைவேறுதலே அவரது சத்தத்தை நிலைப்படுத்துகிறது. உதாரணமாக, இயேசு எப்படி வந்தார்? தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இயேசு வந்தார். மேசியாவின் வருகையை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தார்கள். அவருடைய வருகை தீர்க்கதரிசன நிறைவேறுதலாய் அமைந்தது. குமாரன் வர வேண்டுமென்பது பிதாவின் சித்தமாயிருந்தது. எனது கேள்வித்திறனை நேராக்க இயேசு விரும்பினார். தேவனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிவதன் மூலம் நான் உண்டாக்கப்பட்ட நோக்கம் நிறைவேறும்படி, நான் தேவ சத்தத்தைக் கேட்க வேண்டுமென இயேசு விரும்பினார். தேவ சத்தத்தைக் கேட்க அவர் என்னை அனுமதித்தார். எண்ணெய் பூசப்படவில்லை. ஆனால் இரத்தம் பூசப்பட்டது. கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். எனது பிரதான ஆசாரியன் கூடார வாசலுக்கு முன் என்னை நிறுத்தும்படி என்னை சுத்திகரித்தார். உம்முடைய ஜனத்துக்காக நீர் செய்யும் கிரியைகளுக்காக ஆண்டவரே உமக்கு நன்றி. தேவனுக்கே மகிமை.

நான் சரியான கிரியைகளை உடையவனாயிருக்க கர்த்தர் விரும்பினார். நான் ஒரு குறிப்பிட்ட பகுதியின் காரியங்களில் வளர்ந்திருந்தேன், செத்த கிரியைகள் அகல வேண்டியிருந்தன. வெளிப்படுத்தப்பட்ட தேவசித்தத்துக்கு கீழ்ப்படிந்து, விசுவாசத்தில் நடக்க வேண்டுமென கிறிஸ்து என்னிடம் விரும்பினார். எனது இருதயமும், நடக்கையும் தேவனால் அங்கீகரிக்கப்பட்டதாயிருக்கும்படி கிறிஸ்து என்னிலே கிரியை செய்தார். நாம் வழுவிப்போகாதபடி நமது பாதங்களுக்கு கிறிஸ்து இயேசு செவ்வையான பாதைகளை ஏற்படுத்தித் தருகிறார். கர்த்தர் ஆபிரகாமுக்கு தரிசனமாகி அவனை நோக்கி, ''நான் சர்வ வல்லமையுள்ள தேவன் (எல்ஷடாய்; உனது முழுமையான ஆதாரம்) எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு'' என்றார் (ஆதி.17:1) கர்த்தர் என் நடந்து கொள்ளுதலை சீர்ப்படுத்தினார். நான் கீழ்ப்படிதலை கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இயேசு தமது பிதாவின் சித்தத்துக்கு கீழ்ப்படிந்ததுபோல, நானும் அவருடைய சித்தத்துக்கு கீழ்ப்படிய வேண்டியிருந்தது.

ஆழாக்கு எண்ணை

பின்பு, ஆசாரியன் அந்த ஆழாக்கு எண்ணெயிலே கொஞ்சம் தன் இடதுகையில் வார்த்து,

தன் இடதுகையிலுள்ள எண்ணெயில் தன் வலது கையின்விரலைத் தோய்த்து, தன் விரலினால் ஏழுதரம் அந்த எண்ணெயில் எடுத்து, கர்த்தருடைய சந்நிதியில் தெளித்து,

தன் உள்ளங்கையில் இருக்கிற மீதியான எண்ணெயிலே கொஞ்சம் எடுத்து சுத்திகரிக்கப்படுகிறவன் வலது காதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலது காலின் பெருவிரலிலும், முந்திப் பூசியிருக்கிற குற்ற நிவாரண பலியினுடைய இரத்தத்தின் மேல் பூசி,

தன் உள்ளங்கையில் இருக்கிற மீதியான எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையிலே வார்த்து, கர்த்தருடைய சந்நிதியில் அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன். லேவியராகமம் 14:15-18

ஆசாரியன் குற்ற நிவாரண பலியின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, சுத்திகரிக்கப்படுகிறவனின் வலது காதின் மடலிலும், அவன் வலதுகையின பெருவிரலிலும், வலது காலின் பெருவிரலிலும் பூசுவான்.

அடுத்து, அவன் அந்த ஆழாக்கு எண்ணெயிலே கொஞ்சம் தன் இடது கையில் ஊற்றி, தனது வலது கை விரலினால் அதை கர்த்தருக்கு முன் ஏழுதரம் தெளிப்பான். பின் மீதியான எண்ணெயில் கொஞ்சம் எடுத்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலது காதின் மடலிலும், அவன் வலது கையின் பெருவிரலிலும், அவனது வலது காலின் பெருவிரலிலும் முந்திப் பூசியிருக்கிற குற்ற நிவாரண பலியின் இரத்தத்தின் மேல் பூசுவான். இரத்தத்தின் மேல் எண்ணெய் இடம் பெற்றிருக்கும்.

இந்தக் கிரியையிலும் ஆவிக்குரிய அர்த்தம் அடங்கியிருக்கிறது. நான் ஒருவருக்கும் சொல்ல வேண்டியிருக்கவில்லை. ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் மீட்பின் வல்லமை என் வாழ்வில் அற்புதமாகக் கிரியை செய்தது. அது தேவனது பார்வையில் மன்னிப்பையும், சுத்திகரிப்பையும், நீதியையும் கொண்டு வந்தது. இரத்தத்தின் வல்லமை தேவனுக்காக என்னை வேறுபிரித்ததை என்னால் அறிய முடிந்தது. ஒரு சரியான சாட்சியை அவர் தமது வழிமுறையின்படி ஆயத்தப்படுத்த நான் அவருக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. கடைசியாக ஆசாரியன் தன் உள்ளங்கையில் இருக்கிற

மீதியான எண்ணெயை சுத்திகரிக்கப்படுகிறவன் தலையில் வார்க்க வேண்டியிருந்தது. அபிஷேகம் நுகங்களை முறிக்கிறது. அபிஷேகம் கர்த்தருடைய ஊழியர்களை அவருக்குரியவர்களாக காப்பதோடன்றி, அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படியவும் பெலப்படுத்துகிறது. நான் பல மாதங்களாய் கருதிக் கொண்டிருந்த படியே, இந்தக்குறிப்பிட்ட கிரியையிலும் ஆவிக்குரிய உள்ளர்த்தம் அடங்கியிருக்கிறது. நான் விடுதலையின் அறையை விட்டு வெளியே வருமுன் அந்த அபிஷேகத்தின் கீழ் வந்தேன். எப்படியோ, இந்த அபிஷேகத்தின் முழுமையான தொடர்புக்குள் வருவதற்குள் பல ஆண்டுகள் போய் விட்டன.

கர்த்தர் என்னை விடுதலையாக்கின பிறகு நாங்கள் மாத்திரம் அந்த அறையில் தனித்திருந்தோம். என் மனைவி வந்து என் மடியின் மீது உட்கார்ந்தாள். அவள் தன் கைகளால் என் கழுத்தைக் கட்டிக் கொண்டு தன் தலையை என் தோளின்மீது சாய்த்துக் கொண்டாள். நாங்கள் அங்கு ஒருமித்து அமர்ந்து, கர்த்தருடைய பிரசன்னத்தின் இனிமையை முழுமையாய் அனுபவித்துக் கொண்டிருந்தோம். என் மனைவியைக் குறித்த உணர்வு எனக்கிருந்தது. எனினும் நான் ஆவியிலிருந்தேன். நான் முற்றிலும் ஆவிக்குள் உணர்ந்தேன். நான் மிகவும் நன்றாய் உணர்ந்தேன். தேவன் என்னை மன்னித்து விட்டார். பொல்லாத ஆவிகளின் அடிமைத்தனக் கட்டிலிருந்து கர்த்தர் என்னை விடுவித்து விட்டார்.

தேவனுடைய சத்தம் கூறியது, ''என் ஆவியினால் உன்னை நிரப்ப என்னைக் கேள்'' உடனடியாக நான் என் கரங்களை வானத்திற்கு நேரே உயர்த்தி பதில் கொடுத்தேன், ''பிதாவே, உம்முடைய ஆவியினால் என்னை நிரப்பும்''. கர்த்தருடைய சத்தம் மறுபடியும் பேசியது, ''அப்பா பிதாவே'' நான் அதனை எதிரொலித்தேன் ''அப்பா பிதாவே'. தெற்கு வளைவு ஜெபக்கூட்டத்தின்போது, பரலோகத்தின் பலகணிகள் திறக்கப்பட்டன. இப்பொழுது ஆழத்தின் ஊற்றுக்கண்கள் பிரெஸ்னோவில் திறவுண்டன. நான் கர்த்தரை ஆராதித்து, ஜெபத்திலும், வேண்டுதலிலும் மூழ்கித் திளைக்க தீவிரித்தவுடன் தானே என் மனைவி என் மடியை விட்டு உடனடியாய் இறங்கி விட்டாள். இந்நிலையில் நான் வருத்தத்தினால் நிறைந்தவனாய் தேவனது பரிசுத்தத்திற்கு முன் நடுங்க ஆரம்பித்தேன். என் முழு சரீரமும் வேதனையினாலும் வருத்தத்தினாலும் நிரம்பியது.

அப்பொழுது நான் : ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன். ஏசாயா 6:5

சேனைகளின் கர்த்தருடைய மகிமையான பிரசன்னத்திற்குள் நான் ஐக்கியப்பட்டவுடன் அந்நிய பாஷைகள் பிரவாகித்து வரத்துவங்கின. நான் ஆவியிலிருக்கையில் நல்லவைகளல்லாத தீய வழிகளையும், செய்கைகளையும் குறித்த நினைவுகள் எனக்குண்டாயின. என் அக்கிரமங்கள் நிமித்தமும் என் அருவருப்புகள் நிமித்தமும் என்னை நானே அருவருக்கவும் இகழவும், வெறுக்கவும் செய்தேன். நான் எனது தூய்மையற்ற நிலையைக் கண்ணுற்ற அவ்வேளையில் தானே தேவன் தமது பரிசுத்த நாமத்தை என் ஆத்துமாவில் உயர்த்திப் பிடித்தார்.

நான் என்னை கர்த்தருக்கு முன் தாழ்த்தி என் பாவங்களை அறிக்கையிட்டு மனஸ்தாபப்பட்ட அவ்வேளையில் தானே தேவன் எனக்கு மனந்திரும்புதலைக் கட்டளையிட்டார். இந்த பயபக்திக்குரிய பரிசுத்த தேவனுக்கு முன் நடுக்கத்தோடு என்னை நான் அர்ப்பணித்த வேளையில் தானே தேவபயம் எனக்குள் உண்டானது.

என் மனைவியோடு நான் அறையை விட்டு வெளியேற தேவனாகிய கர்த்தர் என்னை அனுமதித்த வேளையில் என் தோற்றம் முழுவதும் ஷெகினா மகிமையினால் நிறைந்திருந்தது. என்னால் அதனை உணர முடியவில்லை. ஆனால் என் தோற்றத்தைக் கண்ட மற்றவர்கள் அந்த அறைக்குள் மகத்தான ஏதோ ஒன்று சம்பவித்திருப்பதாக அறிந்து கொள்ள முடிந்தது. பல வாரங்களுக்குப் பின்னர், நாங்கள் வீடு திரும்பியதை தொடர்ந்து, என் முகத்தோற்றத்தையும், முடியையும் கண்ட நண்பர்கள் எனக்கு என்ன சம்பவித்தது எனக் கேட்டனர்.

நாங்கள் தொழுகை ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கையில் பொதுவான ஆராதனை நடந்து கொண்டிருந்தது. சகோதரன் ரஸல் பிக்ஸ்லர் அந்த நேரத்தின் பிரசங்கியாராயிருந்தார். நானும் என் மனைவியும் நாற்காலிகளைக் கண்டு அமர்ந்து ஆராதனையை கவனித்துக் கொண்டிருந்த வேளையில் உண்டான ஆவியின் அசைவாடுதலில் நாங்களும் பங்குபெற்றோம். பரிசுத்த ஆவியானவர் என்னை உந்தித் தள்ளியதின் விளைவாய், ரஸல் என்னைக் கண்டு கொள்ளும்வரை நான் என் நாற்காலியில் நின்று கொண்டிருந்தேன். பின்னர் அலுவலகத்தில் நடந்தேறிய கர்த்தருடைய கிரியைகளின் வெளிப்பாட்டைக் குறித்து சாட்சி பகர தருணம் கேட்டுக் கொண்டேன். எனது வேண்டுகோள் உடனடி கவனத்தைப் பெற்றது.

ரஸல் என்னை மேடைக்கு அழைக்க, நான் முன்னே சென்றேன். நான் மேடையிலேறி, கர்த்தர் எனக்கு செய்த காரியங்களை சாட்சியாக சுருக்கமாய்ப் பகிர்ந்துகொண்டேன். சகோதரன் பிக்ஸ்லர், ''தேவன்

உங்களுக்கு ஒரு மகத்தான அபிஷேகத்தைத் தந்திருக்கிறார்.'' என்று பகுத்தறிந்து சொன்னார். என் நுரையீரல் கோளாறு குறித்த அறிவை உணர்த்தும் வசனமும் அவருக்கு உண்டானது. இன்டியானாவில், தெற்கு வளைவிலுள்ள பிரதரன் சமாதான பிரபு சபையின் போதகராய் நான் இருக்கையில், தொடர்ந்து மூன்று வருடங்கள் வைரஸ் நிமோனியாவினால் பாதிக்கப்பட்டேன். சால்மர் ஃபா ஜெபத்தில் எனக்கு உதவும்படி ரஸல் அவரை வேண்டிக் கொண்டார். சகோதரன் ஃபா பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்ற எனது முன்னாள் கல்லூரி விரிவுரையாளர். சுகத்திற்காகவும், மறுபடி நான் விடுதலை பெறவும் அவர்கள் தங்கள் கைகளை என்மேல் வைத்தனர்.

இங்கு என்ன சம்பவித்தது உங்களுக்குத் தெரியுமா? பதினோராம் வசனத்தை கவனியுங்கள்.

சுத்திகரிக்கிற ஆசாரியன் சுத்திகரிக்கப்படும் மனிதனையும் அவ்வஸ்துக்களையும் ஆசரிப்புக்கூடார வாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தக்கடவன். லேவி.14:11

கர்த்தர் என்னை தேவனுக்கு முன் நிறுத்த, நான் தற்போதிருக்கும் ஊழிய நிலைக்குத் தேவையான அபிஷேகத்தை அந்த நாளில் பெற்றுக் கொண்டேன். சபையார் சாட்சியாக, தேவ மனிதர்கள் உறுதிப்படுத்தும் படியாக கர்த்தர் இதனை எனக்குச் செய்து தந்தார். நான் எனது வெறுப்பு, கோபம், கசப்பு, மன்னியாமை, பழிவாங்குந்தன்மை இவைகளால் அவரது நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கியிருந்தும் அவர் என்னிமித்தமல்ல, அவருடைய பரிசுத்த நாமத்தினிமித்தம் அப்படி எனக்குச் செய்தருளினார்.

பிரெஸ்னோ பரிசுத்த ஆவியானவர் குறித்த கருத்தரங்குக்குப்பின், நானும் என் மனைவியும் வடகிழக்காக கலிபோர்னியாவின் காடுகள், மலைகள், வனாந்தரத்தின் வழியாய் டாகோ ஏரிக்குப் போனோம். இந்த டோகோ ஏறிப் பகுதியில் தான் எங்கள் மகன் குர்திஸ் தனது புதிய மனைவி கிம்முடன் காம்பஸ் குருசேட் ஊழியத்தில் இருந்தான். அவர்கள் எங்களை தங்களுடன் முகாமில் தங்கி சிலகாலம் அங்கு செலவிட அழைப்புக் கொடுத்தார்கள். அம்முகாமில் எங்களுக்கு ஒரு அழகான அறை குளியல் வசதியுடன் ஏற்பாடு செய்து தரப்பட்டது.

நடு இரவில், அனைவரும் தூங்கிக் கொண்டிருக்கையில் பயம் எனக்குள் உண்டானது. என் படுக்கையின் கால்மாட்டில் ஒரு கரிய உருவம் நிற்பதாக எனக்குத் தோன்ற என் உடம்பு முழுவதுமுள்ள ரோமங்கள் நட்டுக்குத்திட்டு நின்றன. அந்த உருவம் அப்படியே நின்று கொண்டிருக்க, அதன் உருவத்தை என்னால் பார்த்தறிய முடிந்தது. என் கண்களுக்கு

முன்பாக காணப்பட்ட அந்த உருவம் காளையின் முகம் போன்ற பெரிய தோற்றமுடையதாகவும் அதன் பக்கவாட்டுப் பகுதிகள் வீக்கமும், குமிழ்களுமுடையதாகவும் காணப்பட்டது. அவ்வேளையில் அமைதல் நிலவ, நீண்ட காலம் மூடிக்கிடந்த கல்லறையை திறந்து விட்டால் எப்படி துர்நாற்றம் வீசுமோ, அப்படியொரு நாற்றம் வீசியது. நான் என் படுக்கையிலிருந்து எழ, எனக்குள் ஒரு குளிர்நடுக்கமுண்டாகி, என் முதுகெலும்புவரை பரவி, என்னை பயத்தில் உரைந்துபோகச் செய்தது. உடனடியாக நான் வசனத்தை ஞாபகத்துக்குக் கொண்டு வந்தேன்.

தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். 2தீமோ.1:7

நான் எனது ஒரு கையில் வேதபுத்தகத்தையும் மறுகையில் அபிஷேக எண்ணையையும் இறுகப்பிடித்துக் கொண்டு படுக்கையிலிருந்து கீழே குதித்தவனாக ''மேரி லோவா, பிசாசு இந்த அறைக்குள் தான் இருக்கிறான்! நான் அவனைப் பார்த்தேன்'' எனக் கூச்சலிட்டேன். என் மனைவியின் மனநிலை என்னவாய் அந்நேரத்தில் இருந்திருக்கும் என சற்று கற்பனை செய்து பாருங்கள். அவளது முகத்தில் பயரேகைகள் பரவ, அவள் குதிகால்களில் நின்று கொண்டிருந்தாள். தூக்கம் அவள் முகத்தை விட்டு எங்கு போனதென்றே தெரியவில்லை. நீங்கள் மற்றொன்றையும், அறிந்து கொள்ள வேண்டும். ஆவிக்குரிய வீட்டு சுத்திகரிப்பைக் குறித்து ஆண்டவர் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தவைகளை தாமதமாகவே நாங்கள் விளங்கிக் கொண்டோம். இது போன்று மற்றவர்களுக்கும் ஒருவேளை சம்பவித்திருக்கலாம்.

குர்ட், கிம் மற்றும் அவர்களது நண்பர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பும் நோக்குடன் கிழக்கு வளைவின் வழியே இன்டியானா நோக்கி காரை கிளப்பினோம். வழியிலோ கள்ளிச் செடிகளும், படிகப்பாறைகளும் நிறைந்த நெவாடா பாலைவனம். நான்கு மணி நேரப் பயணத்தின் இடையே என் மனைவி தன் சோர்வை எனக்குத் தெரியப்படுத்தினார். அவளது சுகவீனத்தினிமித்தம் எங்காகிலும் இடையில் ஒரு விடுதி தேடி நிறுத்தும்படி என் மனைவி என்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். நான் ஆவியில் பிரகாசித்துக் கொண்டிருந்தேன். அவளோ ஆவிக்குரிய சூழ்நிலையை மிகவும் கஷ்டத்துடன் கையாண்டாள். மேற்கொள்ளத் தேவையான ஆவிக்குரிய ஆயத்தத்தை பெற்றுக் கொள்ளும்படியாக, நாங்கள் விடுதியைக் காணுமிடத்தில் தானே பயணத்தை நிறுத்திக் கொள்ளும்படி ஆலோசித்துக் கொண்டோம். அப்படி நாங்கள்

பேசிக்கொண்டே பயணப் படுகையில் தானே தவறுதலாக ஒரு குறுக்குச் சாலையில் நான் வண்டியை விட, பாதை தவறு என்பதை நாங்கள் உணர்வதற்குள் வண்டி கள்ளிச் செடிகள் நிறைந்த பகுதியில் ஐம்பது மைல்கள் தாண்டிப் போய் விட்டது. மட்டுமின்றி வழியைக் கண்டுபிடித்து வருவதற்குள் வாகனத்தின் வெப்பமானி அதிகம் சூடாகி புகை கக்க என் மனைவி அழுதே விட்டாள்.

நாங்கள் ஆஸ்டின் நகரில் ஒரு விடுதியை கண்டு அறையை எடுத்துத் தங்கினோம். மேரி லோவா மிக சோர்வுற்றிருந்தபடியால் உடனே ஜெபிக்க அமர்ந்தோம். நடந்ததென்னவெனில் கர்த்தர் மற்றுமொரு பாடத்தை எங்களுக்கு கற்றுத் தந்தார். இது பொல்லாத ஆவிகளின் இடமாற்றம் குறித்தது. ஆவிக்குரிய மண்டலத்தில் பொல்லாத ஆவிகள் ஒரு ஆளை விட்டு விலகி இன்னொரு ஆளுக்குள் புகுந்து கொள்வது சாத்தியமே என்ற பாடம் இதன் மூலம் எங்களுக்குத் தெரிய வந்தது. என் மனைவியின் விடுதலைக்கான உதாரணத்தின் மூலமே இதனை நான் தெளிவாக விளங்கிக் கொண்டேன்.

எனக்குள் கிரியை செய்த ஒவ்வொரு ஆவியிலிருந்தும் அவளும் விடுதலை பெற்றாள். சில ஆவிகள் அவளை மிகவும் இறுக்கமாக பற்றியிருக்கவில்லை. காரணம் அவை இடமாற்றம் காரணமாக அவளை ஆக்கிரமித்திருந்தன. அவ்வளவே. கணவன் மனைவிக்கிடையே உள்ள நெருக்கமான ஐக்கியத்தின் விளைவாகவே அந்த ஆவிகள் அப்படி இடமாற்றத்தை பற்றிக் கொள்கின்றன. அவள் மிக கவர்ச்சிகரமான, அருமையான பெண்மணியாவாள். கர்த்தருக்கு சாட்சிகளாய் விளங்க அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்குள்ளான இந்த அனுபவங்களே எங்களை ஏவி எழுப்பின. என்னைப் போலவே என் மனைவிக்குள்ளும் தேவன் செய்த கிரியைகளை அடுத்து வரும் சாட்சிப்பகுதி மூலம் அறிந்து கொள்ளுங்கள்.

திருமதி மேரி லோவா ஸ்வாங்க் அவர்களின் சாட்சி

அமெரிக்க ஐக்கிய நாடுகள் முழுவதும் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் கீழிருந்த நிலையில், 1930ம் ஆண்டு ஜூன் மாதத்தின் ஒரு வெப்ப நாளில் இம்மானுவேல் ஜி.கார்டன்-ரோஸ் டெலிவா தம்பதியினருக்கு மகவாய்ப் பிறந்தார் மேரி லோவா. குடும்ப நிலைமை மிகவும் கஷ்டத்தில் இருந்தபடியால் பெற்றோரான ரோஸ், இம்மானுவேல் இருவரும் வேலைக்குச் செல்ல, பாட்டி மெக்கார்மிக் மேற்பார்வையில் சிறுமிகளான ஜூனே, மேரி லோவா இருவரும் வளர்க்கப்பட்டனர்.

''என் குழந்தைப்பருவத்தை நான் நினைவு கூருகையில், என் பெற்றோர் எங்களில் அக்கறை பாராட்டி, அன்பு செலுத்தியதை நான் அறிந்திருக்கிறேன். எப்பொழுதும் அவர்கள் ஞாயிறு ஆராதனைக்காகவும், மறைக்கூட்டங்களுக்காகவும் ஆலயத்திற்கு அழைத்துச் செல்வார்கள். எனது பதினோராவது வயதின்போது, தண்ணீர் ஞானஸ்நானத்திற்காக நான் ஒரு ஆயத்தக் கூட்டத்தில் பங்கு பெற்றேன். அவ்வேளையில் கொஞ்சம் சபை சரித்திரத்தை குறித்தும், தேவத்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்தாவியானவர் ஆகியோர் திரவம், பனிக்கட்டி, நீராவி ஆகியவை இணைந்த தண்ணீர் போன்று திரித்துவ அமைப்புடையோரென்றும் கற்றுக் கொண்டேன். ஆவிக்குரியபடி நான் அவ்வளவு சரியாயில்லை. எனினும் வேதம் சத்தியமென்றும் இயேசு தேவனுடைய குமாரனென்றும் அறிந்திருந்தேன். நான் இளைஞர் கூட்டத்தில் மிகத் தீவிரமாக செயல்படக் கூடியவளாகவும் இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்பவளாகவும் இருந்தேன். எனது பதினான்காவது வயதின்போது இந்தியாவிலிருந்து அன்னா வெர்ஸ்ட்லர் என்ற மிஷெனரி எங்கள் ஆலயத்திற்கு வந்திருந்தார். அப்போது ஊழியத்திற்கான அழைப்பு என்னைத் தேடி வருவதை நான் உணர்ந்து கொண்டேன். எனினும் என்ன செய்வது என நான் அறியாததால், அந்த அழைப்பை என் இருதயத்தில் பதித்துக் கொண்டேன்.

எனக்கு பதினைந்து வயதானபோது, என் தாயாருக்கு மூன்றாவது மகளாக கேரன் பிறந்தாள். நாங்கள் மிகவும் அவளை நேசித்தோம். குறிப்பாக நான் அவளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தேன். அந்த நாட்களில் நான் உயர்நிலைப்பள்ளியில் பயின்று கொண்டிருந்தேன். அங்கு நான் பாப் -ஐ சந்தித்தேன். குறிப்பாக என்னை கவர்ந்திழுத்த அவரது நீலநிறக் கண்களையே கவனித்துக் கொண்டிருந்தேன். எங்களது உறவு வளர்ந்து, நான் மான்செஸ்டர் கல்லூரியில் முதலாண்டு காலெடுத்து வைத்த பின்னும் தொடர்ந்தது. கல்லூரியில் என் முதலாண்டு படிப்பு முடியவும் நாங்கள் திருமணம் செய்து கொண்டபடியால் அத்துடன் எனது மான்செஸ்டர் கல்லூரி வாழ்க்கை முடிவுக்கு வந்தது. பின் பெத்தானி வேதக் கலாசாலை தான்.

மூன்றாண்டுகள் படிப்புமுடிந்து, வெளிவர, பாப் இறையியல் படிப்பை முடிக்க, நாங்கள் ஆப்பிரிக்காக் கிளம்ப தயாரானோம். திருமணமாகி ஏழு வருடமானபோது, நான் எனது முதல் குழந்தையைக் கர்ப்பந்தரித்தேன். என் குடும்பத்தை விட்டுப் பிரிந்து போவது எனக்கு மிகக்கஷ்டமான ஒன்றாயிருந்தது. வீட்டைக்குறித்த கவலையினாலும், அது என் கர்ப்ப காலமாயிருந்தபடியினாலும் லண்டன் படகுப்பயணத்தின் விளைவா லுண்டான கடல்காய்ச்சலினாலும், வெளி தேசப்பட்டணங்களிலுண்டான வாடைகளாலும் என மன உளைச்சல் அதிகமாயிற்று. நான் ஆப்பிரிக்கா வந்து சேர்கையில் சோர்வும், களைப்புமே மிஞ்சியிருந்தன. ராட்னி பிறந்த பிறகும் கூட நான் ஊழியப் பணிகளுக்கு ஆயத்தமாகி விடவில்லை. மாறாக என் அழைப்புக்கும் ஐக்கியத்திற்கும் பங்கம் வரும்படி நடந்து கொண்டேன். எல்லா நிலைகளிலும் என் பாவ சுபாவங்கள் வெளிப்பட்டன. எனினும் பாவ சுபாவங்களைக் குறித்தும், கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்படுதலைக் குறித்தும் நான் அதிகம் அறிந்திருக்கவில்லை. எங்கள் பெற்றோர் எங்களை நேசித்து, ஆலயத்துக்கு அழைத்துச் சென்றிருந்த போதிலும், அவர்களிருவரும் அதிகம் பொருளீட்டி எங்கள் சரீர நல்வாழ்வைப் பேணுவதிலேயே கருத்துள்ளவர்களாயிருந்தார்கள். நாங்கள் ஆப்பிரிக்காவுக்கு மிஷனெரிகளாய்ப் போகிறோம் என நான் என் பெற்றோரிடம் கூறியவுடன் என் தாயார், ''நான் உன்னை அதற்குப் பயிற்றுவிக்கவில்லையே'' என்றார்கள்.

ஆப்பிரிக்காவுக்கான எங்களது ஊழிய காலம் முடிந்து விட்டதென நாங்கள் உணர்ந்தவுடனே தானே சபை விரிவாக்கப்பணிகளில் ஈடுபடலானோம். இன்டியானாவிலுள்ள தெற்கு வளைவில் நாங்கள் ஒரு சபை ஊழியத்தைத் தொடங்கினோம். அவ்வேளையில் எங்கள் மூன்றாவது மகன் டேவிட் எங்களுக்குப் பிறந்தான். ராட்னிக்கு பதினைந்து மாதங்கள் இளையவனாக ஆப்பிரிக்காவில் எங்கள் இரண்டாவது மகன் குர்ட் ஏற்கெனவே பிறந்திருந்தான்.

சபை வளர்ச்சி பணிகளைக் குறித்து நானும் போதிக்கப்பட வேண்டியிருந்தமையால், நான் மாநில சட்டப்படி முதுகலைப்பட்டம் பெற வேண்டியிருந்தது. எங்களது திருமணத்தையொட்டி எனக்கு உண்டாயிருந்த முதுகுவலி ஏற்படுத்திய பிரச்சனைகள் காரணமாக நான் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டியதாயிற்று. சுகமாகுதலோ வேகமில்லாதிருந்தது.

நாங்கள் தெற்கு வளைவிலிருந்து லாபோர்ட்டிற்குப் போனபோது எங்கள் வாழ்வில் உண்டான வீழ்ச்சியை உணர்ந்து கொண்டோம். எதனை செய்ய வேண்டுமோ, அதனை அவசியம் செய்தே ஆக வேண்டியவர் களாயிருந்தோம். எனது முதுகலைப்படிப்புடன், பள்ளியில் போதனை, வீடு பராமரிப்பு, மூன்று மகன்களையும் வளர்ப்பது இவைகளிலேயே என் நேரம்

தொடர்ச்சியாய் கழிந்து கொண்டிருந்தது. இந்த வனாந்திர நாட்களில் ஆலயம் செல்லாதிருப்பதைக் குறித்து நாங்கள் சற்றேனும் யோசிக்கவில்லை. எனினும் அக்காரியத்தில் நாங்கள் சீராகவும் இல்லை. நாங்கள் சபைப்பொறுப்பிலோ, பகுதிநேர ஊழியத்திலோ கூட இல்லை.

நாங்கள் கிராமப்புறத்திற்கு வந்து சேர்ந்தபோது, பள்ளிக்கும் வீட்டுக்குமிடையே வாகனத்தை ஓட்டிச் செல்கையில் ஜெபிப்பதற்கும், தியானிப்பதற்கும் எனக்கு அதிக நேரமிருப்பதைக் கண்டு கொண்டேன். எனினும், என் ஜெபங்கள் வெகுதூரம் போகவில்லை என்பதும் தெரிந்தது. இதனாலுண்டான சோர்வினிடையே, கண்டிப்பாக கிறிஸ்தவம் என்பது எனது அனுபவத்திலும் கூடுதலானது என எண்ணி கர்த்தரை நோக்கிக் கதறினேன். ஒவ்வொரு நாளும் மற்ற எவரும் எழுந்திருக்குமுன்னே எழுந்து, அறைக்குள் சென்று ஜெபிக்கத் தீர்மானித்தேன்.

என் கஷ்ட காலங்களிலெல்லாம் நான் சங்கீத புத்தகத்தை என் துணைக்கு நாடுவது வழக்கம். நான் எப்படி ஜெபிக்க வேண்டுமென அறியாமல் காணப்பட்டிருந்ததையும் உணர்ந்தேன். ஆனால் நான் அதிகாலை ஜெபங்களில் ஆண்டவருடைய முகத்தைத் தேடுகையில், அவர் எனக்கு ஜெபத்தைக் கற்றுக் கொடுத்தார்.

ஒருநாள் நான் பள்ளியிலிருந்து வீட்டுக்கு வாகனத்தை ஓட்டிச் செல்கையில் ஆண்டவரை நோக்கி, (வாத்துப் பண்ணைக்கு முன்பாக) எனக்காக ஒருவர் மரித்துத்தான் ஆக வேண்டுமா? எனக் கேட்டேன். அவர் 'ஆம்' என பதிலளித்தார். அப்பொழுது நானும், ''அப்படியானால் சரி, நான் கிறிஸ்து என் பாவங்களுக்காக மரித்தார்'' என ஏற்றுக் கொள்கிறேன் என்றேன். அப்பொழுது நான் பிரமாணத்தின் பிடியிலிருந்து கிருபைக்குள் வந்தேன். பெரும்பாரம் என்னை விட்டு அகன்றது. இரட்சிப்பின் பூரண நிச்சயம் எனக்குள்ளே உருவாயிற்று.

இதன் முடிவில்தானே, பிரதரன் சபையாரின் வருடாந்தரக் கூட்டமொன்றுக்கு நாங்கள் போயிருந்தோம். அங்கு தலைவர்களாயிருந்த ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையே காணப்பட்ட சில செயல்பாடுகள் என்னை மிகவும் வேதனைப்படுத்தின. ஒருபிரிவினர் ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்யக் கண்டால் இன்னொரு பிரிவினரும் அதே காரியத்தை அதே வேளையில் செய்ய முனைந்தனர். நானும் பாப் -ம் அதிகாலை ஜெபத்தில் கலந்து கொண்டபோது, நான் என்னை அழுது கொண்டிருக் கிறவளாகக் கண்டேன். இது என்னைப் பாதித்தபடியால் நான் ஆண்டவரிடம் சென்று, ஏன் ஆண்டவரே நான் ஏன் அதிகமாய் அழுகிறேன்? எனக் கேட்டேன். அவர், ''நீ அந்த மேடையிலுள்ள பெண்களைப்போல காணப்படுகிறாய்'' என்றார். அது என் இருதயத்தை வெட்டியது. பின் கர்த்தர் எனக்கு சில வழிமுறைகளைக் கொடுத்தார். 1) ''உன் கணவரின்

அதிகாரங்களை நீ எடுத்துக் கொண்டிருந்ததைக் குறித்து உன் மகன்களிடம் மன்னிப்புக் கேள்''. 2) உன் கணவரின் உரிமைகளையும், அதிகாரங்களையும் உன் கணவரிடமிருந்து நீ தட்டிப் பறித்திருந்தது தவறு என உன் கணவரிடம் மன்னிப்புக் கேள். 3) உன் ஜெப கவசத்தை அணிந்து கொள்''.

பரிசுத்த ஆவியானவர் இவைகளை எனக்குச் சொன்னபோது, உடனே அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியத் தீர்மானித்தேன். நான் ஜெப கவசமணிவதை வெறுத்தேன். அதனை அணியாதிருப்பதனை நியாயப்படுத்தக்கூடிய காரணங்களையும் கண்டு பிடித்தேன். இப்பொழுது நான் அதனை அணிந்து கொள்ள யாராலும் கட்டாயப்படுத்தப்படவில்லை. பரிசுத்தாவியானவருக்குச் செவி கொடுத்தேன். நான் இன்னமும் அதனை அணிந்திருப்பினும், எனது சபையார் கட்டாயப்படுத்துகிறபடி அல்ல, கீழ்ப்படிதலென்பது சட்டத்தின் விளைவினாலுண்டாவதல்ல, இருதயத்தில் உருவாகும் கிரியையின் அடிப்படையிலானது என நாங்கள் நம்பினோம்.

பாப்-ன் சமுதாயத்தைச் சேர்ந்தவரும் மென்னோனைட் மனிதருமான டீன் ஹாக்ஸ்டெட்லர் பேசுவதை கேட்க நாங்கள் அழைக்கப்பட்டோம். முந்தின தலைமுறையினரின் பாவங்கள் என்ற தலைப்பில் அவர் எங்களுக்கருகிலுள்ள மென்னோனைட் சபையில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். நம்முடைய பெற்றோர், அவர்களுக்கு முந்திய தலைமுறையோரின் பாவங்களை நாம் அறிக்கை பண்ண வேண்டியதன் அவசியத்தையும், அதனிமித்தம் நமது குடும்பங்களை பற்றியிருக்கும் பொல்லாத ஆவிகளின் பிடியிலிருந்து நமக்கு உண்டாகும் விடுதலையைக் குறித்தும் அவர் பேசினார். எனது தகப்பன் வழிப் பாட்டி இரத்தத்தை உறையச் செய்யும் ஒரு இயற்கைக்கு மாறான செயல்பாட்டில் தொடர்புடைய வராயிருந்ததை நான் அறிவேன். எனினும் நான் அர்ப்பணிப்பு அழைப்பை ஏற்று முன் செல்லவில்லை. என் இருக்கையிலேயே அமர்ந்திருந்தேன். வீட்டுக்குப்போகிற வழியில் பரிசுத்தாவியானவர் மெய்யாகவே என் மூதாதையர்களின் பாவங்களைக் குறித்த மனஸ்தாபத்தை எனக்குக் கட்டளையிட்டார். எனவே என் பாட்டியின் பாவத்திற்காக என்னை மன்னிக்கும்படி இயேசுவின் நாமத்தில் பிதாவிடம் வேண்டுதல் செய்தேன். உடன் தானே ஒரு பெரும் பாரம் என் தோள்களிலிருந்து இறங்கியது. ஆண்டவர் நல்லவர்.

என் மகன் சிறையிலிருந்த நாட்களில், என் முதுகெலும்பிலுண்டான வேதனையுடன் கூடிய வீக்கத்தைக் கண்ட மருத்துவர், இன்னமும் இரண்டு ஆண்டுகள் தான் பின்னர் நான் சக்கர நாற்காலியில் தான் நகரமுடியும் எனத் தெரிவித்துவிட்டார். அவரது மருத்துவ ஆலோசனைகளுக்கு நான் கீழ்ப்படிந்தேன். ஆனால் அவரது தீர்ப்பை என் ஆவியில் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. ராட் சிறையை விட்டு வெளியே வந்தபோது, பாப், ராட்,

நான் மூவரும் எங்களது முதல் பரிசுத்த ஆவி கருத்தரங்குக்குப் போனோம். ஒரு மாலைக்கூட்டத்தில் ரஸ்ஸல் பிக்ஸ்லர் பிரசங்கித்து முடிக்க, இறுதியில் சுகமாகுதலுக்காக ஒரு வரிசை முன் நிற்பதை பாப் கண்டார். நான் முன்னே போகும்படி அவர் எனக்கு ஆலோசனை சொன்னார். நான் மறுத்து விட்டேன். பரிசுத்தாவியானவர் உடனே பொறுப்பெடுத்தார். நான் கற்றுக் கொண்ட அந்த நாள் போதனை பிரதரன் உபதேசமாயிராததால் நான் மிகவும் சங்கடப்பட்டேன். பரிசுத்த ஆவியானவர் அந்த இரவு முழுவதும் என்னோடு கிரியை செய்து கொண்டிருந்தார். நான் அழுது கொண்டே எழுந்தேன்.

நானும் பாப்-ம் பல்வேறு வகுப்புகளில் பங்கெடுக்க, அடுத்தநாள் மறுபடியும் பரிசுத்த ஆவியானவர் பொறுப்பெடுத்தார். (எசே.34:11-16) போதனைகளின்போது உடைந்துபோன என் இருதயம் சீர்பெற்றதுடன், ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்தும் நான் கற்றுக் கொண்டேன். ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்த வகுப்பின் முடிவில், என் விசுவாசமும் அதிகரித்திருந்தது. குறைமட்டமாயிருந்த என் கால் நீளமாகும்படி பாப், நான்ஸி மில்ஸ் இருவரும் ஜெபித்தனர், மூட்டு வீக்கங்களுக்குக் காரணமான ஆவியை விரட்டினர். ஆயினும் மாலை உணவு முடிந்து ஆராதனைக்குப் போகும் வரை கூட எனக்கு எந்த மாற்றமும் புலப்படவில்லை. நாங்கள் நின்று கொண்டே நாற்பத்தைந்து நிமிடம் கர்த்தரைத் துதித்தோம். எனது இடுப்புக்குக் கீழாக குதிகால் வரை வலியினால், நான் அவதிப்பட்டவனாயிருந்தேன். தொடர்ந்து நின்று துதித்துக் கொண்டேயிருந்தேன். நாங்கள் துதித்து முடிக்கையில், முதலாவது எனது வலது குதிகாலிலிருந்து இடுப்பு வரையிலுமுள்ள வலி நீங்கியது. பின் எனது இடது காலிலிருந்து இடது பாதம் வரை உள்ள வலி நீங்கிப்போனது. நான் சுகம் பெற்றுக் கொண்டதை அப்போது அறிந்து கொண்டேன். நான் அந்த வலியின் போது அதற்கு விட்டுக் கொடுத்திருந்தால், நான் இப்போது சுகமுள்ளவளாயிருக்க மாட்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நம்முடைய உணர்ச்சிகளின்படியல்ல, கர்த்தர் நமக்குச் சொல்லியபடியும், நம்முடைய விசுவாசத்தின்படியேயுமே நாம் காரியங்களை வாய்க்கப் பெறுகிறோம். என்னிலிருந்த வலிகள் அனைத்தும் நீங்கி விட்டன. இன்றைக்கு நான் சுகமுள்ளவளாயிருக்கிறேன்.

ஒரு கிறிஸ்தவராயிருப்பதற்கு எனது அனுபவங்களிலும் மேலாய் நான் கடந்து போக வேண்டுமென நான் புரிந்து கொண்டேன். இது எனது பிரகாசமாகுதலின் துவக்கம் மாத்திரமே. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளும்படி எங்களுக்கு வகுப்புகள் எடுக்கப்பட்டன. பாப்-ஐ பரிசுத்த ஆவியினால் நிரப்பு முன்னரே, ஒரு காலை வேளையில் நான் பள்ளிக்கு வாகனம் ஓட்டிச் செல்கையில் என்னைத் தமது ஆவியினால் அபிஷேகிக்க தேவன் சித்தங் கொண்டார். அவர் எனக்கு ஒரே ஒரு உச்சரிப்பு வார்த்தையைத் தான் கொடுத்தார். நானோ முடிந்த அளவு அதையே பயன்படுத்திக் கொண்டிருந்தேன். தொடர்ந்து வந்த சனிக்கிழமை காலையில்

நான் முழங்காலில் நின்று சமையலறைத் தரையை சுத்தம் செய்து கொண்டிருந்தேன். பரிசுத்த ஆவியானவர் என்னைப் படுக்கையறைக்குப் போகும்படி கூறினார். நான் ஒன்றை ஆரம்பித்தால் அதை முடித்து விட வேண்டுமென விரும்புபவள். ஆனால் ஆவியானவரின் கட்டளையைக் கேட்டவுடன், நான் உடனடியாக படுக்கையறைக்குப் போய் முழங்காலில் நின்றேன். இயேசுவானவர் சரளமான வார்த்தைகளைத் தந்து தமது ஆவியினால் என்னை அபிஷேகித்ததுமன்றி, நான் எவர் எவருக்காக ஜெபிக்க வேண்டுமென்றும் எனக்குக் காட்டினார். நான் நேசித்த பலருக்காகவும் பரிந்து பேசும் ஜெபம் செய்த அந்நேரம் அற்புதமான வேளையாகும். இயேசுவானவர் என்னை பரிந்து பேசுவதற்கேதுவான பாஷைகளால் நிரப்பினார்.

பாப்-ன் விடுதலையையும், அதைத் தொடர்ந்து எனக்குத் தேவைப்பட்ட விடுதலைக்குள் நானும் அவர்போல் கடந்து போக வேண்டியிருந்ததையும் நீங்கள் ஏற்கெனவே வாசித்திருக்கிறீர்கள். அவருக்குள்ளிருந்த அனைத்திலுமிருந்து நானும் விடுவிக்கப்பட்டதுடன் எனக்கென்றே சிலவும் உண்டாயிருந்தன. பாப் மூலம் விடுதலை பெற்ற முதல் நபர் நான் தான். இயேசுவின் நாமத்தில் நமக்கிருக்கும் அதிகாரத்திற்காகவும், அவர் தம்மை நம்புகிறவர்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்திற்காகவும் நான் ஆண்டவருக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன். என் அனுபவத்தைக் காட்டிலும் கிறிஸ்தவம் என்பது மிக அதிகமானது என்பதனை நான் அறிவேன். நாம் அவரை எந்த அளவுக்கு அறிந்து கொள்ள விரும்புகிறோமோ, அந்த அளவு தான் அவரை அறிந்து கொள்ளுகிறோம். எந்த அளவுக்கு அவரிடம் கெஞ்சுகிறோமோ அந்த அளவுக்குத் தான் பெற்றுக் கொள்ளுகிறோம்.

கர்த்தர் தொடர்ந்து என் வாழ்க்கையில் கிரியை செய்து கொண்டிருந்தார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் பயன்படுத்தும்படி அவர் எனக்கு வரங்களைக் கொடுத்தார். ஒரு ஸ்தல சபையில் ஆவிக்குரிய யுத்தத்தை குறித்து வகுப்புகளை நடத்திக் கொண்டிருக்கும்போது பாஷைகளை வியாக்கியானம் பண்ணும் வரத்தை அவர் எனக்குக் கொடுத்தார். கர்த்தருடைய அற்புதங்கள் நடந்தேறியதையும், ஜனங்கள், தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் பூரண சுகம் பெற்றுச் சென்றதையும் எங்கள் கண்களால் கண்டோம். பிலிப்பியர் நிருபத்தின் நான்காம் அதிகாரத்திலுள்ள நான்காம் வசனத்திலிருந்து எட்டாம் வசனம் வரையுள்ள வேதபகுதி எனக்கு மிகவும் பிடித்தமானது. இந்த வேத வாக்கியங்களுக்குக் கீழ்ப்படிந்து, அதை பின்பற்றியபோது, பெருங் கொந்தளிப்புகள் நடுவில் அவர் என்னை பாதுகாப்பாய் தூக்கிச் சென்றதை நான் அறிந்துள்ளேன். எட்டாம் வசனத்தை நான் காண்கையில், ஒரே நபருக்குள் காணப்படக்கூடிய தெய்வீக தன்மைகளைக் குறித்து யோசிக்கலானேன். இது எனது

எதிர்மறையான எண்ணங்களையும், அறிக்கைகளையும் விட்டு, தேவனுடைய சித்தத்துக்கேதுவான சரியான நிலைக்குள் என்னை நடத்திச் சென்றதுடன், தேவனது பிரசன்னம் என் மேலும், என் வீட்டிற்குள்ளும் இறங்க ஏதுவுண்டாக்கிற்று. இதுவே எல்லா புத்திக்கும் மேலான உண்மையான சமாதானமாகும்''

என் மனைவி கட்டுகளிலிருந்து விடுதலை பெற்றதைத் தொடர்ந்து, நாங்கள் நிம்மதியான ஒரு இரவை அங்கு கழித்ததுடன், எங்களது யாத்திரையைத் தொடர விரும்பினோம். இந்த நாளில் கர்த்தர் எதை எங்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்? நிவேடாக்கும், உட்டாக்கும் அருகிலுள்ள பாலைவன நகரத்தில் நடைபெற்ற ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் அந்த நாளையே குறிப்பிடத்தக்க நாளாக்கிற்று. உட்டாவுக்குள் நுழையுமுன் எனக்கு ஒரு முழு டாங்க் நிறைய எரிபொருள் தேவைப்பட்டது. நாங்கள் நெடுஞ்சாலையில் ஒரு எரிபொருள் நிலையத்திற்குப் போய் எரிபொருள் நிரப்பி, அதற்கான தொகையை உதவியாளரிடம் செலுத்தி, திரும்ப வந்து என் ஜன்னல்களை துடைத்துக் கொண்டிருந்தேன்.

நான் அவ்வாறு என் கண்ணாடிக் கதவுகளை துடைத்துக் கொண்டிருக்கும்போது தானே ஒரு வாகனம் வந்து எனக்கு முன் வழியடைத்துக் கொண்டு நின்றது. அதில் ஓட்டுனர் ஆசனத்தில் அமர்ந்திருந்தவன் மிகுந்த கோபத்துடன் என்னை நோக்கிக் கொண்டிருந்தான். நான் எனது சுத்தப்படுத்தும் பணியை முடித்து சுற்றி பார்த்தேன். பெரும் போக்குவரத்து நெரிசல் உண்டாயிருந்தது. நான் எனக்கு முன் நின்று கொண்டிருந்த வாகனத்தை அணுகி, அதன் திறந்திருந்த கதவில் சாய்ந்து கொண்டு அவ்வாகனத்தை நான்கடி தள்ளி நிறுத்தினால் நான் என் வாகனத்தை எடுக்க வசதியாயிருக்கும் எனக்கூறினேன்.

நான் என் வாயைத்திறந்து ஒரு சின்ன பிரச்சனை என்று கூறுமுன், அவன் பயங்கர வேகத்துடன் 'உன்னிடத்தில் தான் பிரச்சனை இருக்கிறது' என்று கத்தினான். நான் சாதாரணமாக, நீங்கள் பின்னால் எ. .டு. . க். . க என மீண்டும் கூறுமுன், 'நீ அப்படித்தான் நினைக்கிறாயெனில் எனச் சீறிய அவன் தனது கைக்கடிகாரத்தை கழற்றி என்னைத்தாக்கும் நோக்குடன் எறிந்தான். இந்த பிசாசின் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த என் மனைவியால் தன் கண்களை நம்பவே முடியவில்லை. அவள் எனக்காக , ஆண்டவரே, என் கணவருக்கு உதவி செய்யும் என ஜெபிக்கத் துவங்கி விட்டாள்.

இன்னமும் நான் முன் போலவே தான் நின்று கொண்டிருந்தேன். என் எண்ணங்கள் சிந்தையில் சுழலத் துவங்க, ''நான் ஒரு யுத்த களத்தில் இருக்கிறேன். ஓதேவனே நான் என்ன செய்ய வேண்டும்? எனக் கேட்டேன்.

ஒரு அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாகி, ''அதைக்கட்டு''என்றது. நான் வலதுபுறம் திரும்பிப் பார்த்தபோது அந்த பைத்தியக்காரன் என்னைத் தாக்கும் நோக்குடன் என் பின் புறத்தில் நெருங்கியதும் அவன் என் முகத்தில் குத்தும் நிலைக்கு ஆயத்தமாகி அருகில் வந்து விட்டதும் தெரிந்தது. உடனே நான் என் வலது கையை நீட்டி, இப்படிக் கட்டளையிட்டேன்.

'சாத்தானே, இந்த மனிதனுக்குள்ளிருக்கும் உன்னை இயேசுவின் நாமத்தில் கட்டுகிறேன்'

ஒரு அற்புதம் நடந்தேற கர்த்தர் அந்த நாளில் எங்களைப் பாதுகாத்துக் கொண்டதை நானும், என் மனைவியும் அறிந்து கொண்டோம். அந்த பைத்தியக்காரன் காற்றுப் போன பலூன் போலாகி, மிருதுவான பூனைக்குட்டி போலாகி விட்டான். நான் அவனை எச்சரித்து அவனது வாழ்க்கையை விட்டு பிசாசு விலக வேண்டுமானால் அவனுக்கு ஆண்டவர் தேவை என அறிவித்தேன். அந்த இடத்தை விட்டு மிகுந்த நம்பிக்கையுடன் நான் அகன்றேன். அவன் விடுவிக்கப்பட்டு விட்டான் என்பதே எனது நம்பகமான கருத்தாகும்.

கர்த்தர் மிகப்பெரிய விரிவுரையாளர். அவரது விரிவுரைகள் ரத்தின சுருக்கமானவை. அவரது படிப்பினைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வார்த்தையில் அடங்குபவை. ஆனால் அவை ஒவ்வொன்றும் மறக்க இயலாதவையாகவே இருக்கும். இதன் முலம் இயேசுவின் நாமத்தில் பிசாசின் மேல் நமக்கிருக்கும் அதிகாரங்களை நான் கற்றுக் கொண்டேன். இது என் ஆத்துமாவில் பதிந்து போனது. இது என் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணக் கூடியது. நன்றி ஆண்டவரே! லூக்.14:25-33 என் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும் என நாம் ஜெபிக்குமுன் இதற்கான கிரயத்தை கணக்கில் கொள்ளுதல் அவசியம்.

நானும் என் மனைவியும் இந்த புழுதிக்காடுகளை கடந்து, மலைகள் பள்ளத்தாக்குகளைத் தாண்டி ஒருவருக்காக ஒருவர் கை வைத்து ஜெபித்து கொண்டே எங்கள் சொந்த மாநிலமான இன்டியானாவுக்கு வந்து சேர்ந்தோம்.

இது கிரியை செய்யுமா? கர்த்தரையும், அவருடைய வசனத்தையும் சந்தேகமின்றி நம்புமளவுக்கு எங்கள் விசுவாசம் வலுவானது தானா? எங்கெங்கெல்லாம் எங்கள் சரீரங்களில் பெலவீனமாக தோன்றியதோ, அங்கெல்லாம் எங்கள் கைகளை பயத்தோடு வைத்து ஜெபித்துக் கொண்டே வந்தோம். நாங்கள் ஆவிக்குரிய அனுபவங்களுக்கும், நடைமுறைகளுக்கும் மிகவும் புதியவர்கள். அது கிரியை செய்தது. கிறிஸ்து இயேசுவின் சபையைப் பற்றிய இரகசியத்திற்குள் நாங்கள் ஆழமாய் கடந்து செல்ல முற்பட்டபோது ஆண்டவர் தமது உண்மையின் படியே எங்கள் விசுவாசத்தை

வர்த்திக்கப்பண்ணினார். நாங்கள் மறுபடியும் ஊழியத்திற்கு எங்களை அர்ப்பணித்தோம். நாங்கள் திருச்சபை மேய்ப்பர் பணிக்குத் திரும்பும்படியாக, ஆசிரியர் பணியை விட்டு விட முடிவு செய்தோம்.

நாங்கள் வீடு திரும்புகையிலோ, ஆண்டவர் எங்களுக்கு சில கட்டளைகளைக் கொடுத்தார்.

நீ குருத்துவ பணிக்கு திரும்பக் கூடாது. உன் வீட்டை ஒழுங்குபடுத்துவதற்கு உனக்கு நான் இரண்டு ஆண்டுகள் அவகாசம் தருகிறேன். எனது பரிசுத்த ஆவியானவர் என் வார்த்தைகளை மறுபடி உனக்குப் போதிக்கும் வரை நீ சாட்சி சொல்லவோ, பிரசங்கிக்கவோ கூடாது.

இரண்டு ஆண்டுகள் உன் வீட்டை ஒழுங்குபடுத்து என்ற ஆண்டவரது கூற்றை, அதன் உள்ளர்த்தத்தை என்னாலோ, என் மனைவியாலோ திட்டமாய் விளங்கிக் கொள்ள முடியவில்லை. நான் கேட்க பயந்தேன். காரணம், நான் தான் அதனைக் கண்டு பிடிக்க வேண்டியிருந்தது. அவரது முதல்கட்டளை, நான் வேத புத்தகத்தைத் திறந்து கொண்டு, பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலோடு அதனை படித்து கிரகிக்க வேண்டுமென்பது. நான் ஆறே மாதங்களில் ஒரு புது தோல் உறையிட்ட வேத புத்தகத்தை படித்து பழமையானதாக்கி விட்டேன். (2தீமோ.2:15 அம்பிளிஃபைட் ஆங்கில வேதாகமம் பார்க்க)

கர்த்தர் அனேக வேலைகளோடு கூடிய வாக்கையும் கொடுத்தார். அவரது முதல் வேலையும் வாக்கும் நான் வேத புத்தகத்தை படித்து முடிப்பதைப் பொறுத்து நான் பெற்றுக் கொள்ளவிருப்பதாகும்.

''நீ என் வார்த்தைகளைப் படித்து முடிக்கையில், உன் தாய் சபையில் என்னைக் குறித்து சாட்சி பகர்வதற்கான வாய்ப்பை நான் உனக்கு உண்டாக்கித் தருவேன்''.

அவரது அடுத்த கட்டளை புதுமையானது. ஆனால் நாங்கள் அதனை கீழ்ப்படிதலுடன் செய்து முடித்தே ஆக வேண்டும்

''முகாம் மைதானத்தை அபிஷேகத்தால் நிரப்பு''

வடக்கு இன்டியானாவில் மில்ஃபோர்ட் நகருக்கு அருகிலுள்ள பிரதரன் திருச்சபையாரின் முகாம் அது.

நானும் என் மனைவியும் பலமுறை முகாம் மைதானத்தை அபிஷேகம் பண்ண முயற்சித்தோம். ஆனால் அதற்கான சரியான நேரத்தை எங்களால் கணிக்க முடியவில்லை. ஒரு நாள் நாங்கள் அந்த மாவட்டத்தில் நடந்த ஒரு ஊழியர் கூடுகைக்கென பயணப்பட்டுப் போகையில், அந்த முகாமுக்கு இரண்டு மைல் தொலைவு மட்டும் வந்திருந்தோம். ஆவியானவர். ''இப்பொழுதே அதை செய்'' என்றார்.

கர்த்தருடைய வேளை வந்து விட்டதென நாங்கள் அறிந்து கொண்டோம். எனவே நாங்கள் முகாம் மைதானத்துக்கு வண்டியைத் திருப்பினோம். நாங்கள் அங்கு வந்து சேர்ந்தபோது, அங்கு ஒருவரும் இல்லை. எனவே உடனே அந்த பரந்து விரிந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவுள்ள மைதானத்தில் புல் பூண்டுகள் துவக்கி, மரங்கள், பாறைகள், கட்டிடங்கள் என அனைத்தையும் அபிஷேகித்துக் கொண்டே வந்தோம். நாங்கள் கடைசி கட்டிட நிர்வாக அலுவலகம் வரை போனபோது, ஒரு புறா எங்கள் காருக்குமுன் தரையிறங்கியிருப்பதைக் கண்டோம். எங்கள் கீழ்ப்படிதல் மெச்சும் வண்ணமாகவே புறாவை தரையிறக்கி, ஆண்டவர் காரியத்தை உறுதிப்படுத்துகிறாரென நம்பி, நானும் என் மனைவியும் ஒருவரையொருவர் பார்த்து பரவசப்பட்டுக் கொண்டோம். ஆவியானவர் அந்த மைதானத்துக்குள் கடந்து வந்தார்.

நாங்கள் நிர்வாக அலுவலக கட்டிடத்தை அபிஷேகித்து முடிக்கையில், ஏரிக்குள்ளிருந்து மூன்று பெண்கள் வரக்கண்டோம். அவர்கள் எங்களிடம் வந்து, தாங்கள் ஏதாகிலும் உதவி செய்ய வேண்டுமா? எனக் கேட்டனர். நாங்கள், ''வேண்டாம் நாங்கள் மைதானத்தை சுற்றி நடந்து வருகிறோம். அவ்வளவே'' எனக் கூறிவிட்டோம். பின்னும் அவர்கள் எங்களுக்கு உதவுவதாக கூறினார்கள். அடுத்து வந்த வாரத்தில் அந்த மைதானத்தில் குடும்பமுகாம் ஒன்று நடைபெற்றதாக அறிந்து கொண்டோம். அப்போது அங்கு வந்தோரில் அநேகர் குடும்பமாய் அம் மைதானத்திற்குள் நடந்து வரும்போது தானே சுகமாகுதலை உணர்ந்து கொண்டதாக எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதற்குப்பின் எனக்கு மிகுந்த செயல்பாட்டோடு கூடிய ஊழியங்கள் காத்திருப்பதாக ஆண்டவர் எனக்கு வெளிப்படுத்தினார். அதுபோலவே, அவ்வூழியம் வேத ஆலோசனைகள், ஆவிக்குரிய யுத்தம், விடுதலை, சுகமாக்கும் ஊழியம் என பல்வேறு நிலைகளை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது.

''நான் உனக்குச் சொல்லும் வேலைகளை நீ செய்து முடிக்கும்போது, நான் உன்னைத் தேடி ஜனங்களை வரப்பண்ணுவேன். அப்பொழுது நீ செய்ய வேண்டியதை நீ அறிந்து கொள்வாய்''

என் வீட்டை ஒழுங்குபடுத்த வழிமுறைகளை ஆண்டவர் எனக்கு சொல்லித் தந்தார்.

4. தவறுகளை சரிசெய்தல்

ஒருவன் கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றஞ் செய்து, அறியாமையினால் பாவத்துக்குட்பட்டால் . . . பரிசுத்தமானதைக் குறித்துத் தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தை செலுத்தி . . . ஒருவன் செய்யத்தகாததென்று கர்த்தருடைய கட்டளைகளினால் விலக்கப்பட்ட யாதொன்றைச் செய்து பாவத்துக்குட்பட்டால் . . . ஆசாரியன் அவனுக்காக நிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும். இது குற்றநிவாரணபலி; அவன் கர்த்தருக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தான் என்பது நிச்சயம் என்றார். லேவி. 5:15-19

பரிசுத்தத்துக்கு எதிரான தீமைகள்

தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்த, நான்கு ஆவிக்குரிய சட்டதிட்டங்களை கர்த்தர் எனக்கு முன் நிறுத்தினார். என் வாழ்வோடு ஒப்பிட்டுக் காட்டினார்.

முதலாவதாக, என் பாவத்தின் விளைவினாலுண்டான சேதங்கள், காயங்கள் முதலியன. நான் தேவனுக்கு விரோதமாக மீறுதலுக்குட் பட்டிருந்தேன்.

இரண்டாவதாக, என்னுடைய சிந்தை, நோக்கங்கள், முன்னிலை ஏகுதல், வாய்ப்புகள் அனைத்தும் தேவ கிருபையினால் சுத்திகரிப்புக்கு உட்படுத்தப்பட்டு அதன் பூரண அழுத்தத்துக்குள் கொண்டு வரப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

மூன்றாவதாக, வேதம் சுட்டிக்காட்டும் தேவ ஊழியர்களிலிருந்த விசுவாசத்துக்கு ஒப்பான விலையேறப்பெற்ற அதே விதமான விசுவாசம் எனக்குள்ளும் காணப்பட வேண்டுமென்று ஆண்டவர் விரும்பியதை நான் புரிந்து கொள்ள வேண்டுமென அவர் எதிர்பார்த்தார். தேவனுடைய நீதியினிமித்தமும், இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவினாலும் அவர்கள் தங்கள் விசுவாசத்தைப் பெற்றிருந்தார்களேயன்றி தங்கள் சொந்த பிரயாசத்தினால் அல்ல.

இறுதியாக ஆண்டவர் எனது நிலையை, ஒரு ஆசாரியனுக்கும், தேவனுக்குமுரிய உறவுப் பிணைப்பாக எனது ஆசைகளை அவரது சித்தத்துக்கு கீழ்ப்படியக் கட்டுப்படுத்தக் கூடிய நிலைக்கு கொண்டு வந்து விட்டார்.

நானும் என் மனைவியும் பிரெஸ்னோவிலுள்ள பீடத்திற்குச் சென்று எங்களை மறுபடியும் ஊழியத்திற்குத் தத்தம் செய்தோம். நாங்கள் மேய்ப்பர் பணிக்கு திரும்ப ஆயத்தமாகி விட்டதாக நினைத்தோம். ஆனால் வீட்டிற்கு வரும் வழியில் கர்த்தர் சில கட்டளைகளைக் கொடுத்தார்.

''இன்னமும் உன் வீட்டை ஒழுங்குபடுத்த இரண்டு ஆண்டுகள் தருகிறேன்'' என்ற அவர் மேலும் போட்ட கட்டளை என்னவென்றால், சாட்சி சொல்லவோ, பிரசங்கிக்கவோ கூடாது. பரிசுத்தாவியானவர் என் வார்த்தைகளை உனக்கு மறுபடியும் போதிக்கும்படி நீ அவருக்கு இடங்கொடுக்க வேண்டும்.

கடந்த கால ஆவிக்குரிய தெளிவின்மையும், அந்தகாரமும் என்னை குழப்பத்தில் ஆழ்த்தியிருந்தன. கிறிஸ்துவானவர் மனதை சுத்தம் செய்யும்படி முறையாக கிரியை செய்து கொண்டிருந்தார். வேதபுத்தகத்தை வாசித்து, தியானிப்பதன் மூலம் உள்ளம் தூய்மையாகத் தொடங்கியது.

தேவனையும், தங்களது நிலையையும் சரியாய் கண்டு கொள்ள விரும்புவோருக்கு வேதம் என்றும் ஜீவனுள்ளதாயும், சத்துவம் மிகுந்ததாகவுமே தன்னை விளங்கப்பண்ணுகிறது. அது இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனை களையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபி.4:12 பார்க்க) யாக்கோபு நிருபத்தில் காணப்படும் எச்சரிப்பின் வார்த்தைகளும் இவ்விடத்தே நாம் கவனிக்க வேண்டியவைகளாகும்.

மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே. ஆகையால் நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். யாத்.1:20,21,22.

என் இருதயம் தேவனுடைய வார்த்தையில் அடங்கியுள்ள சத்தியத்துக்கு ஏற்ப சீரடைய வேண்டியிருந்தது. விசுவாசிகளின் வாழ்வில் காணப்படும் தவறுகள், தோல்விகள், குறைவுகளை சரிவர அளந்து காட்டுபவை தேவனுடைய வார்த்தைகளேயாம். என் பின்மாற்ற நிலைமைகள் வேத வெளிச்சத்தில் அலசப்பட்டு சீர் செய்யப்பட, அதன் பின் விளைவாக தேவசித்தத்துக்கு கீழ்ப்படியும் தன்மை என்னுள் உருவானது.

ஆறே மாதங்களில் ஒரு புதிய வேதாகமத்தை நான் பழசாக்கி விட்டேன். மூன்று வெவ்வேறு நிலைகளில் நான் வேதத்தைப் பகுத்துப் படித்தேன். (2தீமோ.2:15 ஆங்கில அம்பிளிஃபைட் திருப்புதலை பார்க்க) பரிசுத்த ஆவியானவர் வேத வாக்கியங்களின் கருகலான பாகங்களை வெளிப்படுத்தத் துவங்கினார். வெளிப்படுத்தப்பட்ட வேத சத்தியத்தைப் புரிந்து கொண்டவனாய் வெகுநேரம் அழுது கொண்டிருந்த என் சிந்தையை அவர் சுத்திகரிக்கத் தொடங்கினார்.

இந்த இடத்தில் நான் என் தனிப்பட்ட சாட்சிக்கும் அப்பால் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ளுகிறேன். கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக, நானும் என் மனைவியும் பெந்தெகொஸ்தே மற்றும் மறுமலர்ச்சி வட்டாரங்களை சுற்றியும், உள்ளும் எங்கள் ஜீவியத்தைக் கழித்து வந்திருக்கிறோம். குறிப்பாக கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நாங்கள் சுயாதீன மறுமலர்ச்சி வட்டாரங்களில் எங்கள் ஊழியத்தை நிறைவேற்றி வந்தோம். அந்த நாட்களில் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ராஜ்யத்தின் மேலான நிலைகளையும் (ஏசா.35:8) அதுகுறித்த அவரது உயர்ந்த வழிகளையும், அதைப்பற்றி புதைந்து கிடக்கும் சத்தியங்களையும் தெளிவுபடுத்தினார். எனது முப்பத்தேழாவது வயதில் நான் ஊழியத்தை உதறிப் பின் வாங்கிப்போகையில், தேவனால் எனக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்த அனைத்தும் என்னை விட்டு எடுபட்டுப் போயிற்று. இப்பொழுதோ முன்னானவைகள் சம்பவிப்பதையும், அதிலும் பெரிதானவைகளை நான் விளங்கிக் கொள்ளத்தக்க காரியங்கள் நிகழ்ந்ததையும் நான் கண்டு கொண்டேன். (மத்.13:12)

அதிகமதிகமான பிரதரன் போதகர்கள் ஆவிக்குரிய புத்துயிர் பெற்றுக் கொண்டிருந்தனர். ஸ்தாபனத்தை வேதாகமத்துக்கு நேரே திருப்பக் கூடியவர்களில் ஒருவனாக நானும் காணப்பட வேண்டுமென அப்போது நான் நினைத்தேன். வால் நாயை ஆட்டுவிக்க நினைக்க, நாய் ஆடிக்கொண்டிருந்த வாலை துண்டித்துத் துப்பி விட்டுப் போனதுபோல காரியம் ஆயிற்று.

ஆண்டவர் நமக்காக பிரத்தியேகமான திட்டங்களையும், வழிகளையும் கொண்டிருக்கிறார் என வேதம் வெளிப்படுத்துகிறது. (சங்.139:1316; மத்.10:1,7,8; 25:34; 28:19,20; லூக்.9:1,2; மாற்.6:1,12,13; யோவா.3:1621; 8:34,35; 14:15,16,17; 17:2026; எபே.2:410; 2பேது.1:14; வெளி.22:17) அவரது ஆசீர்வாதத்தின் கீழ் வர நாம் பிரியங்கொள்வோமானால் அவர் நமக்காக தமது வழிகளை வைத்திருக்கிறார். மற்றொரு விதத்தில் கூற வேண்டுமானால் நாம் அவரது இரத்தத்தின் மீட்கும் வல்லமையின் கீழும் (பாவபாரத்திலிருந்தும் அகந்தை, பெருமை,கொடுமை, தீமைகளை மேற்கொண்டு விடுதலைபெற) பரிசுத்த ஆவியானவரின்

நடத்திப்புக்குக் கீழும் வர விரும்புவோமானால் அவரது வழிகளை நாம் விளங்கிக் கொள்ளத்தக்கதாக அவைகள் நமக்குத் தெளிவாய் புலப்படும்.

நாம் அவரது சத்தத்தை கவனமாய் கேட்டு, வேதத்தைப் புரிந்து கொண்டு, அவரது சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து, அவரது சமூகத்தில் நடந்து கொள்ள எப்பொழுது ஜாக்கிரத்தைப்படுகிறோமோ, அப்பொழுது நாம் நீதிமான்களாய் கணிக்கப்படுகிறோம். அது நமது ஆவிக்குரிய பயணத்தின் எந்தப்பகுதியிலும் நமக்குக் கிடைக்கும்பாக்கியமாயிருக்கலாம். இதற்கான காரியங்களாக கிறிஸ்துவின் ஆவிக்கு இசைந்து வாழுதலும், ஆவிக்குரியபடி நடந்து கொள்ளுதலும், ஆவியின் சிந்தையும்,, ஆவியின் நடத்துதலுக்கான அர்ப்பணிப்புமே நம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்றன. (ரோமர் 8:1-5, 9:11) நமது வாழ்க்கையை தேற்றரவாளனின் கட்டுப்பாட்டுக்கு எந்த அளவுக்கு நாம் விட்டுக் கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு அவர் நம் வாழ்வைப் பொறுப்பெடுப்பார்.

நஷ்ட ஈடு

பரிசுத்தமானதைக் குறித்துத் தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தை (நஷ்ட ஈடு) செலுத்த வேண்டும். லேவி.5:16

என் வாழ்க்கையில் காணப்பட்ட தவறுகளும், தோல்விகளும், குற்றங்களும், மற்றவர்கள் வாழ்வில் காணப்படுவதுபோலவே எனக்குள்ளும் பலத்த சேதங்களையும், காயங்களையும் ஏற்படுத்தி விட்டன. தேவனுக்கும் சக மனிதருக்கும் இடையேயுள்ள ஐக்கியத்தைப் பொறுத்தவரை என்னில் காணப்பட்ட அனைத்து தவறுகளும் தகர்க்கப்பட வேண்டியிருந்தன. தேவன் எனக்கு மனந்திரும்புதலைத் தந்த போதோவெனில், நான் எந்தெந்த மனிதருக்கெதிராய் தவறிழைத்திருந்தேனோ, அவர்களை நான் மறுபடியும் கண்டு கொள்ளும்படி, ஆண்டவர் என்னை சரி செய்யவும், என்னை மன்னிக்கவும் நான் அவரை வேண்டிக்கொண்டேன்.

இறுதியாக, தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்ட மற்றொரு மனிதனுக்கு நான் செய்த தீமைகளுக்கு நான் நஷ்ட ஈடு செலுத்தியே ஆக வேண்டுமென அவர் எனக்குப் போதிக்கும் நேரம் வந்தது. நான் கிறிஸ்துவின் ஆவியை மறுபடியும் எனக்குள் திரும்பிவர அழைத்தபொழுது, கிறிஸ்துவின் மரணத்தினாலுண்டான மீட்பும், மன்னிப்பும் எனக்கு கிட்டினபடியால் நான் இன்னமும் தீயவனாயிருக்கவில்லை. இதற்கு முரணாக, மற்ற மனிதர்களுக்கு நான் இழைத்திருந்த தீங்குகள் என்னை குற்ற உணர்வுள்ளவனாக நிறுத்தியிருந்தன. குற்ற நிவாரண பலியைக் குறித்து தாம் எழுதியுள்ள அத்தியாயத்தில் ஜூக்ஸ் தீமை செய்தலை குறித்து நல்லதொரு தெளிவை ஏற்படுத்தியுள்ளார்.

ஆண்ட்ரு ஜூபெக்ஸ், பலியின் பிரமாணம் (கிராண்ட் ராபிட்ஸ், மிச்சிகன்)

ஒரு குறிப்பிட்ட இரவு வேளையில், நூற்றுக்கணக்கான ஜனங்கள் கூடியிருக்க பூரண சுவிசேஷ மாலைக் கூட்டமொன்றுக்கு நான் ஆயத்தமாகி, கூட்டத்தைத் துவக்க இருந்த வேளையில், ஒரு மனிதர் தன் மனைவியோடு அக்கூட்ட வளாகத்திற்குள் கடந்து வந்தார். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பதாக அவர் என்னை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வேதனைக்குள்ளாக்கியவர். நாங்கள் ஒரே பள்ளியில் ஆசிரியர்களாக பணிபுரிந்து வந்தோம். அந்நாட்களில் அவர் எனக்கு எதிராய் செயல்பட்டிருந்தார். நான் அது குறித்த விஷயத்தில் அவர் மீது மிகுந்த கசப்புணர்வு கொண்டிருந்தேன்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அதே ஆள் பூரண சுவிசேஷ கூட்டத்திற்குள் நடந்து வந்து கொண்டிருந்தார். உடனே பரிசுத்த ஆவியானவர் என்னுடன் இடைபட்டு ''காரியத்தை சரிசெய்யச்'' சொன்னார். வாவ்! அவர் என்னை என்ன செய்யச் சொல்கிறார் என நான் அறிந்து கொண்டேன்.

நான் தேவனோடு தர்க்கம் பண்ணினேன். என்னுடைய கடந்த கால நடவடிக்கைகளை திரும்பிப்பார்க்க இது சரியான இடமல்ல என்றேன்! ஜனங்கள் என்னைக் குறித்து என்ன நினைப்பார்கள்? என தொடர்ந்து நான் ஆண்டவரோடு தர்க்கித்துக் கொண்டிருந்தேன். என்னை நானே மெச்சிக் கொண்டிருந்தேன். மறுபடியும் ஆண்டவர் குறுக்கிட்டு, ''சரி'' என்று சொல்லி விட்டார். தர்க்கத்தில் நான் வென்று விட்டேன். நான் மகிழ்ச்சியுறத் துவங்குகையில் அவர் மீண்டும் என்னிடம், ''இனி தொடர்ந்து என்னோடு நீ நடக்க முடியாது'' என்று கூறினார். ஆண்டவர் உன் தர்க்கத்துக்கே காரியங்களை விட்டு விடுகையில் அது ஆபத்தாக முடியும் என்பதை மறந்துவிடாதே. பரிசுத்தாவியானவர் தம் வழியில் என்னோடு இடைபட்ட போது நான் மௌனமாய் எனக்குள் அழத் தொடங்கினேன்.

என் வேளை வந்தபோது நான் எழுந்து ''இன்னமும் தேவன் என்னிடம் எதிர்பார்க்கும், முடிக்கப்படாத ஒரு காரியம் என்னிடத்திலிருக்கிறது'' என ஜனத்திற்கு அறிவித்தேன். கண்ணீர் என் கன்னங்களில் உருண்டோட பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் என் சக ஆசிரியரிடம் நான் கடூரமாய் நடந்து கொண்டேன் என ஜனத்தின்முன் பாவ அறிக்கை செய்தேன். அவர் எனக்கெதிராய் நடந்து கொண்டதை முன்னிறுத்திப் பார்க்க பரிசுத்தாவியானவர் என்னை அனுமதிக்க மறுக்கிறார். என் செயல்களையும் நடக்கைகளையும் நான் நியாயப்படுத்த முடியாது. நான் அவருக்கெதிராய் செய்தவைகளை நான் முன்னிறுத்திப் பார்க்க வேண்டும். எனது புறம்பான மனுஷனுக்கு இது கடினமானதுதான் எனக் கூறிவிட்டு ''இப்பொழுது

இக்கூட்டத்தில் அந்த நபர் தன் மனைவியோடு வந்திருக்கிறார்'' என அறிவித்தேன். கர்த்தர் என்னை சுத்திகரிக்க என்னை நான் விட்டுக் கொடுத்தவனாக, ''ஜான், என்னை மன்னிப்பீர்களா? என சத்தமிட்டேன்.

நான் அவரை நோக்கி அடியெடுத்து வைத்த மாத்திரத்திலேயே ஜானும் என்னை நோக்கி ஓடி வந்தார். நாங்கள் ஒருவரையொருவர் கட்டிக் கொண்டோம். ஜான் தன் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட, ''என்னை மன்னித்து விடுவீர்களா? பாப் எனக் கேட்டார். அன்று இரவு நாங்கள் சகோதரர்களானோம். கர்த்தர் எங்கள் ஆத்துமாக்களை குணப்படுத்தி விட்டார். கர்த்தர் ஜானை ஆசீர்வதிக்க விரும்பினார். நான் அதற்கு சம்மதித்திராவிட்டால், அவர் வேறு வழியை பயன்படுத்தியிருப்பார். நான் தேவனுடைய ஆசீர்வாதங்களையும் நீதியையும் தவறவிடாதது குறித்து சந்தோஷப்படுகிறேன். கர்த்தர் கிரியை செய்கிற இடத்தில் என்னை விட்டுக் கொடுப்பது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

அந்த இரவில் தனி நபர் முக்கியத்துவத்தைக் குறித்த அரியதொரு பாடத்தை நான் கற்றுக் கொண்டேன். ஆசீர்வாதம் என்னை மாத்திரம் வந்தடைய நான் எதிர்பார்ப்பது சரியல்ல. அவர் மற்றவர்களையும் ஆசீர்வதிக்க விரும்புகிறார். அன்றைய கூட்ட முடிவில் தங்களுக்குள் கசப்புணர்வு கொண்டிருந்த ஐந்து குடும்பங்கள் தங்களை சீர்படுத்திக் கொள்ள பீடத்தின் முன் ஒப்புக் கொடுத்து வந்தனர். குடும்பத்தின் தகப்பன், தாய், பிள்ளைகளென அனைவரும் கர்த்தருடைய கிரியைக்கு தங்களை விட்டுக் கொடுத்து வந்தனர். இது தேவனுடைய கிரியை. வீட்டை சுத்தம் பண்ணும் காரியத்தில் தேவனது இடைபாட்டை இது விளங்கப்பண்ணுகிறது. தமக்கு முன் தங்களை தாழ்த்துகிற இருதயமுள்ளவர்களை அவர் அறிந்திருக்கிறார். அவர் இருதயத்தின் சிந்தனைகளையும், எண்ணங்களையும் வரையறுக்கிறவர். ஜனங்கள் தங்கள் குற்றங்கள் நிமித்தம் அழுது கொண்டிருந்தனர். அவர்கள் மன்னிக்கவும், மன்னிக்கப்படவும் அவர்களுக்கு தருணம் தேவைப்பட்டது. தேவனது நிலைப்பாட்டின்படி அவர்கள் தேவனோடும், மனிதரோடும் தங்கள் ஐக்கியத்தை புதுப்பித்துக் கொள்ள வாய்ப்பையும் நான் நழுவ விட்டிருப்பின், வேறு ஏதோ ஒரு விதத்தில் ஆண்டவர் அவர்களை மற்றொரு சமயத்தில் சீர்படுத்தியிருப்பார். நானோ ஆசீர்வாதத்தையும், தேவனையும் இழந்திருப்பேன்.

ஆசாரியனுடைய வேலைகளுக்கடுத்த ஆவிக்குரிய வெளிப் பாட்டைப் பரிசுத்தாவியானவர் எனக்கு உண்டு பண்ணிக் கொடுத்தார். முதலாவதாக ஆசாரியன் குற்ற நிவாரண பலியின் இரத்தத்தில் கொஞ்சத்தை எடுத்து, சுத்திகரிப்புக்காக அதனை குஷ்டரோகியின் வலது காது மடலில் பூச வேண்டும். பின்னர் கொஞ்சம் இரத்தத்தை எடுத்து வலதுகை பெருவிரலிலும், வலது கால் பெருவிரலிலும் பூச வேண்டும். குஷ்டரோகியின்

சுத்திகரிப்பு காரியத்தில் குற்ற நிவாரண பலியின் இரத்தம் பூசப்படுதலை, தேவனுக்கு விரோதமான குற்றங்கள் என்ற நிலைப்பாட்டோடு தேவனுடைய ஆவியானவர் ஒப்பிட்டுப் படிப்பித்தார். குற்றம் என்பது தேவனுக்கோ, மனிதருக்கோ எதிராக செய்யப்பட்ட ஒரு பாவச் செயல். இது குஷ்டரோகி தேவனுக்கு விரோதமாய் குற்றம் புரிந்துள்ளதை முதலாவது தெளிவுபடுத்துகிறது. குஷ்டரோகம் தேவனுக்கு விரோதமான பாவத்துக்கு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது. பரிசுத்தத்துக்கு எதிரான அனைத்துமே ஆவிக்குரிய குஷ்டரோகம் தான்.

கர்த்தர் என் காதை சரிப்படுத்தினார். வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவசித்தம் குறித்த தீர்க்கதரிசன வார்த்தைகளை நான் விளங்கிக் கொள்ளத் துவங்கினேன். நான் அதனை உணரத்தலைப்பட்ட போது, அவரது சித்தங்குறித்த தீர்க்கதரிசன நிறைவேறுதல் உறுதிப்பட்டது. வேத வார்த்தைகளின் நிறைவேறுதலாகவே இயேசு வந்ததாக நாம் காண்கிறோம் (லூக்.24:44,45) மேசியாவின் வருகையை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தார்கள். பூமிக்கு குமாரன் இறங்கிவருவது பிதாவின் சித்தமென்பதை தீர்க்கதரிசன நிறைவேறுதல்கள் உறுதிப்படுத்தின. நான் இந்த நாளைக் காண்பதில் மிக்க மகிழ்ச்சியுறுகிறேன்.

இயேசுவே அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறார் என்று வேதம் (வெளி.1:8) வெளிப்படுத்துகிறது. அவராலே தேவனுடைய கிருபை என் வாழ்வில் கிரியை நடப்பிக்கிறது. அவரது பிரசன்னத்தில் நான் நீதியைக் குறித்த உணர்வை பெறுகிறேன். அவர் மூலமாய் நான் இயற்கைக்கு மேலான தேவ பிரசன்னத்தை அனுபவிக்கிறேன். தேவத்துவத்தின் தன்மைகளாகிய அன்பு, ஒளி, ஜீவன், வல்லமை, மகிமை, தீமைகளை நியாயந்தீர்க்கும் நிலைப்பாடு அனைத்தும் அவருக்குள்ளிருந்து வெளிப்படுகின்றன. அவருடைய ஆவியினால், எனக்கும், மற்ற விசுவாசிகளுக்குமான தேவனுடைய திட்டத்தை நான் தரிசனமாய், தீர்க்கமாய் கண்டடைகிறேன். அவர் நிமித்தம் நாம் விசுவாசத்தில் நடக்கிறோம். அவரது பலத்தால் நாம் தேவனது பணிகளை ஆரம்பத்திலிருந்து முடிவு வரை நிறைவேற்றி வருகிறோம். அவராலேயே நாம் தேவனோடு நடக்கிறோம்.

இப்பொழுது அவர் என் விரல்குறித்த காரியங்களை சரி செய்யத் தொடர்ந்தார். அவரது பார்வையில் என் விரல்களின் கிரியைகள் சரியாய் காணப்பட வேண்டியிருந்தன. செத்த கிரியைகள் அகல வேண்டியிருந்தன. தவறான நோக்கங்களும், தன்மைகளும் களையப்பட வேண்டியிருந்தன. (அப்.3:19) மனந்திரும்புதலுக்கேற்ற கனியை என்னில் உருவாக்க கிறிஸ்துவின் ஆவியானவர் எனக்குள் கிரியை செய்து கொண்டிருந்தார். வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்துக்கு கீழ்ப்படிந்து விசுவாசத்தில் நான் நடக்க வேண்டுமென அவர் விருப்பமுள்ளவராயிருந்தார். பிதாவுக்கு ஏற்றதாக

என் இருதயமும், நடக்கைகளும் மாறும்படி அவர் எனக்குள் கிரியை செய்து கொண்டிருந்தார். இது எப்படி ஆகும்? எனில் அதற்கான பதில் புதிய ஏற்பாட்டில் எபிரேயர் நிருபத்தில் காணப்படுகிறது.

''நீங்கள் சிட்சையைக் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; எபி.12:7

சிட்சைகள் தேவனுடைய பரிசுத்தத்துக்கு பங்குள்ளவர்களாய் நம்மை மாற்றக்கூடிய ஏதுக்களை உள்ளடக்கிய சோதனைகளேயாம். (எபி.12:10) ஒருவன் தெய்வீக சுபாவங்களுக்கு பங்காளியாகாவிட்டால் கிறிஸ்துவோடு உடன் சுதந்தரராகவோ, தேவனுடைய பிள்ளையாகவோ மாறுவது இயலாததாகிவிடும். (2பேதுரு 1:14)

நஷ்ட ஈடு என்பது ஒரு விசுவாசிக்கு நடுக்கத்தையும் திகைப்பையும் உண்டாக்கக் கூடிய சோதனைகளில் ஒன்றாகும். அது விசுவாசத்துக்கு வரும் சோதனையாகும். கடப்பாரையை விழுங்குவது இயற்கை மனிதனால் ஆகிற காரியமல்ல; குணப்படாத உலகப்பிரகாரமான மனிதனை தவறுகளை ஒத்துக் கொள்ள செய்தாலும், மன்னிப்புக்காக மன்றாட எதிர்பார்ப்பதும் கடூரமானதாகும். எனது ஆவிக்குரிய மனிதனில் உண்டாயிருந்த வழக்கத்திற்கு மாறான விடுதலை சரீரப்பிரகாரமாக வர்ணிக்க இயலாததும் இயற்கைக்கு அப்பாற்பட்டதுமாகும். பரிசுத்த ஆவியானவர் இது குறித்து எனக்கு இவ்விதமாய் கட்டளையிட்டிராவிட்டால், நான் நஷ்ட ஈடு செலுத்துதல் சம்பந்தமான காரியங்களை கற்றுக் கொள்ள முயற்சித்திருக்கவே மாட்டேன். நான் அவருடைய வேளைக்கும், நடத்துதலுக்கும் கீழ்ப்படிந்து நடக்க முற்பட்டிராத பட்சத்தில், அடுத்த நபரை ஆயத்தம் செய்யாமலே ஆண்டவர் தமது எதிர்பார்ப்பை எனக்குப் புரிய வைத்திருப்பார் என்ற கருகலான பாடத்தையும் நான் கற்றுக் கொண்டேன். குற்ற நிவாரண பலியினைக் குறித்துக் காணப்படும் வேதபகுதியை மீண்டும் காண்போம்.

ஒருவன் கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றஞ் செய்து, அறியாமையினால் பாவத்துக்குட்பட்டால் . . . பரிசுத்தமானதைக் குறித்துத் தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தைச் செலுத்தி . . .ஒருவன் செய்யத்தகாதென்று கர்த்தருடைய கட்டளைகளினால் விலக்கப்பட்ட யாதொன்றைச் செய்து பாவத்துக்குட்பட்டால் . . .ஆசாரியன் அவனுக்காக நிவிர்த்தி செய்யக்கடவன் : அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும். இது குற்றவநிவாரணபலி; அவன் கர்த்தருக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தான் என்பது நிச்சயம் என்றார். (லேவி.5:15-19)

பரிசுத்த காரியங்களில் ஒருவன் குற்றஞ்செய்தால், அதனிமித்தம் அவன் அபராதம் (நஷ்ட ஈடு) செலுத்த வேண்டுமென இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது குற்ற நிவாரண பலி. ஜூக்ஸ் இது குறித்துக்

கூறியிருப்பதை மீண்டும் உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். பலி என்பது தேவனிடம் காட்டும் அன்பைக் குறிப்பதாகவே நான் இதைப் புரிந்து கொண்டுள்ளேன். உண்மையான பலி தேவனிடம் காட்டும் அன்பை அடிப்படையாகக் கொண்டே செலுத்தப்படுகிறது.

என்னை சுத்தமாக்கின என் பிரதான ஆசாரியன், எங்களிருவருடைய பலிகளையும் (நஷ்ட ஈடு செலுத்துதல்) கூடார வாசலில் கர்த்தருக்கு முன்பாக செலுத்தினார். ஜானுடைய மன்னிப்புக் கோரலை இருநூறு, முந்நூறு ஜனத்திற்கு முன்பாக நஷ்ட ஈடாக அல்லது அபராதமாகச் செலுத்தினார்.

அவர் என்னை வெறுப்பேற்றியதினிமித்தம் நானும் மற்றவர்கள் முன்னிலையில் என் ஆத்திரத்தை வெளிப்படுத்தியிருந்தேன். கடந்த அத்தனை ஆண்டுகளும் ஆண்டவர் என் ஆத்திரத்தை நினைவில் கொண்டிருந்தார். எனவே இப்பொழுது அதற்கான நஷ்ட ஈடு மற்றவர்களின் முன்னிலையில் செலுத்தப்பட அவர் எதிர்பார்த்தார். அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிவதே நான் தேவனில் அன்பு கூறுவதாகும். சபையாரின் கூடார வாசலுக்கு முன்பாக எனது பிரதான ஆசாரியன் என் நஷ்டஈட்டை கர்த்தர் முன்பாகப் படைத்தார். இப்படியாக, நான் அவருக்கு செவி கொடுப்பவனாக மாறினேன். நான் எவருக்கு விரோதமாக தவறிழைத்திருந்தேனோ, அவருக்கு என் அன்பையும், பெருந்தன்மையையும் நான விளங்கப் பண்ணுகிறேன். இது தான் தேவனுடைய கிரியை. அவரது ஜனததைக் குறித்த அவருடைய வழி முறையும் இதுவே.

பேசப்பட்டிராத அல்லது செய்யப்பட்டிராத எந்த ஒரு தவறுக்கும் ஆண்டவர் என்னிடத்தில் நஷ்ட ஈடை எதிர்பார்க்கிறதில்லை. என் எண்ணங்கள் மற்றும் இருதயத்தின் பாவங்களுக்காக நான்மனந்திரும்பி, ஆண்டவரிடம் மன்னிப்புக் கோருவதே போதுமானது. பேசப்பட்டிராத, தவறான, அசுத்த சிந்தனைகளைக் குறித்து, அதனை வெளியில் அறிக்கையிட வேண்டுமென ஜனத்தை பாரப்படுத்த தேவன் என்னை ஒருபோதும் ஏவுகிறதில்லை. என் சிந்தனைகளை நான் வெளிச்சம் போட்டு மற்றவருக்குக் காட்டுவேனாகில், நான் அதினிமித்தம் தேவனுக்கு முன்பாக குற்றவாளியாகக் காணப்படுவேன். முடிவாக தவறான, மோசமான எண்ணங்களைக் குறித்த காரியத்தில் எனது நடைமுறை ஜெபத்தில் என் தவறுகளை ஆண்டவரிடம் அறிக்கையிட்டு என்னை தாழ்த்துவதாகும். ஒருபோதும் அவைகளை மற்ற மனுஷருக்கு வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆவிக்குரிய விதியின்படி இதுகுறித்து அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா, (எனக்கு) வெளியரங்கமாய் பதிலளிப்பார் என இவ்விஷயத்தில் பரிசுத்தாவியானவர் எனக்குப் போதித்தார். (மத்.6:1-6)

என்னிடம் ஆண்டவர் எதிர்பார்த்த மற்றொரு நஷ்ட ஈடு சம்பந்தப்பட்ட நிகழ்வையும் இங்கு குறிப்பிடுகிறேன். அந்நாட்களில் உள்ளூர் விமான நிலையத்தில் நிர்வாகியாயிருந்த ஒருவரோடு தொடர்புடைய நஷ்ட ஈடு நிகழ்வாகும் இது. எனது விமானத்தின் இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் பணியை மேற்பார்வையிடவும் என்னுடன் இணைந்து கையெழுத்திடவும் எனக்கு ஒரு விமான ஆய்வாளர் அவசியப்பட்டார். விமானப் போக்குவரத்து நிர்வாகப் பிரிவு விமான ஆய்வாளரைத் தேர்வு செய்கையில், குறைந்தது மூன்றாண்டுகள் அனுபவமுள்ள ஒருவரையே தேர்ந்தெடுக்க அந்தஸ்து நியமித்தது. தரம்பிரிக்கும் நிலையில் எனக்கு உதவிட நான் நிர்வாகியிடம் கோர. அவர் என்னிடம், நிச்சயமாக பாப், நூறுமணி நேர ஆய்வை எனதுஆய்வு சாலையில் நிகழ்த்தி விமான தரத்தை நான் கண்டறிகிறேன் எனக்கூறினார்.

பதினைந்து ஆண்டுகளுக்குப்பின், நான் இன்னமும் அதே எல்லைக் குள்ளும், அதைச் சுற்றிலுமே காணப்பட்டேன். அதிகமான விமானங்களின் தரங்களைப் பார்க்க வேண்டியிருந்ததால் நானும் விமானப் போக்கு ஆய்வாளர் அந்தஸ்தில் செயல்பட வேண்டியிருந்தது. கேள்விக்காக என் முன் அமர்ந்திருந்த நபர் தமது நிலையத்தில் முழுவதும் மீண்டும் கட்டிய மைக்கப்பட்ட ஒரு விமானத்தைக் கொண்டிருந்தார். அலாஸ்காவிலுள்ள யாரோ ஒருவர் அதனை விலைக்கு வாங்கியிருந்தார். அதை அவர் ஐம்பது மாநிலங்கள் தாண்டி கொண்டு போக வேண்டியிருந்தது. நான் அலாஸ் காவுக்கு அதிகம் விமானப்பயணம் மேற்கொள்வதை அவர் அறிந்திருந்தார்.

ஒரு நாள் நான் உள்ளூர் விமான நிலையத்தில் தரையிறங்கியிருந்தேன். அப்பொழுது அந்த விமானத்தின் உரிமையாளர் அங்கு நின்று கொண்டிருந்தார். அவர் என்னிடம், பாப், அலாஸ்காவுக்கு நீங்கள் எத்தனையோ விமானப் பயணங்களை மேற்கொள்கிறீர்கள். அலாஸ்காவிலுள்ள ஒருவர் என்னிடம் விலை பேசிய விமானம் ஒன்று இங்கு உள்ளது. அதனை நீங்கள் அங்கு கொண்டு சென்று விட முடியுமா? எனக் கேட்டார். நான் வேடிக்கையாக, ''நிச்சயமாக ஹால்லி, எனது நிலையத்தில் நூறுமணி நேரம் அதனை ஆய்வு செய்தபின் அதனை ஓட்டிச் செல்கிறேன் என்றேன். அவ்வளவுதான். அவரது முகம் கன்னங்களெல்லாம் சிவக்க, அவர் தன் குதிகாலில் நின்று கொண்டு, தோள்களை உயர்த்திக் கொண்டு மோத ஆயத்தமாகி விட்டார். எனக்கும் வெறி உண்டாகி விட்டது.

எனது சுத்திகரிப்பைத் தொடர்ந்து, தேவன் சிட்சையின் மூலம் என்னை விடுதலைக்குள்ளாக்கினார். விடுதலையின் பலனாக, பரிசுத்தத்திற்கான அபிஷேகத்தையும் பரிசுத்த ஆவியானவர் மூலம் நான் பெற்றுக்கொண்டேன். இப்பொழுது நஷ்ட ஈடு கொடுக்கும்படி அவர் என்னை உந்தித்தள்ளினார்.

உன்னைப் போல் உன் பிறனையும் நேசி. மத்.22:39

இந்தக் கட்டளை தேவனுடைய பார்வையில் பரிசுத்தமானது. நான் என் தேவனுக்கு விரோதமாய் பாவஞ் செய்திருந்தேன். ''ஹால்லியிடம் போ!'' என்று அவர் விளம்பினார். ''நல்லது, எனக்குத் தெரியாது. அவர் ஒரு வேளை துப்பாக்கியைத் தூக்கலாம்''. ''ஹால்லியிடம் போ!'' நான் இப்பொழுது அபராதம் செலுத்தியாக வேண்டும். ஹால்லிக்கு எதிராக நான் இழைத்த தீங்குக்கு அபராதமும், நஷ்ட ஈடும் செலுத்தும்படியான தேவனுடைய வேளை இதுவாய் இருந்தது. நான் என் வாகனத்தை எடுத்துக் கொண்டு அவர் வீட்டிற்குக் கிளம்பினேன். கடப்பாறை விழுங்குவதை போல கடினமான இக்காரியத்தை நிறைவேற்ற ஆயத்தத்துடன் நான் அவரது வீட்டுக் கதவைத் தட்டினேன். மிக மெலிதும், சன்னமுமான ஒரு குரல் உள்ளே வரும்படி என்னை உள்ளிருந்து அழைக்க, நான் கதவை சிறிதே திறந்து கொண்டு, உள்ளே சுற்றிலும் கண்களை வலம் வரவிட்டேன்.

அங்கே தளர்ந்து, தாடைகள் மெலிந்து போய், பரிதாபகரமான நிலையில் அமர்ந்திருந்த ஒரு மனிதர் எல்லாராலும் கைவிடப்பட்டது போன்ற நிலையில் அமர்ந்திருந்ததைக் கண்டேன். மரண நிழல் அவர்மேல் படிந்திருந்தது. தண்டனை அனுபவித்த ஒரு மனிதரைப் போல் அவர் தோற்றம் காணப்பட்டது. ''உள்ளே வாருங்கள், பாப்!'' என அவர் அழைக்கவும், நான் சமையலறைக்குள் சென்று, கதவு சாத்தப்பட்ட மறுவிநாடியே, ஆண்டவர் எனக்குக் கட்டளையிட்டிருந்தபடியே, ''ஹால்லி! உங்களிடம் மன்னிப்புக் கேட்க நான் இங்கு வந்திருக்கிறேன்''. என்றேன். வாடிக்கையாளர் ஒருவருக்கு, அலாஸ்காவுக்கு விமானத்தை ஓட்டிச் சொல்ல அவர் கேட்டுக் கொண்ட விஷயமாக, அப்பொழுதெழுந்த பதினைந்தாண்டுகளுக்கு முந்திய எதிர்மாறான சூழ்நிலையை தெளிவுபடுத்தினேன். அவர் கையை அசைத்து தடுத்து, மன்னிப்புக் கேட்க அவசியமில்லை எனத் தம் விளைவைத் தெரியப்படுத்தினார். நானோ, ''எனக்கு உங்கள் மன்னிப்பு கண்டிப்பாக அவசியப்படுகிறது என்று மன்றாடினேன்''

என் கெஞ்சுதலைக் கண்டு ஹால்லியின் இருதயம் திறந்தது. அவர் என்னை மன்னித்து விட்டார். இந்த தாழ்மையின் செயல்பாட்டைத் தொடர்ந்து தான் என் குடும்பத்தில் என்ன நடந்தது என்பதை நான் அவருக்குச் சொல்ல முடிந்தது. என் தனிப்பட்ட வாழ்வில் உண்டான சுகமாகுதல், விடுதலை ஆகியவற்றை நான் அவரோடு பகிர்ந்து கொண்டபோது, அவருக்கு தேவன் மேல் அன்பும் பற்றுதலும் உண்டாயிற்று. அவர் தன்னுடைய நிலையை எனக்கு விளக்கிச் சொன்னார். அவரது இரண்டு சிறு நீரகங்களும் செயலிழந்து போய் விட்டதாகவும், முதுகெலும்பில் உண்டாயிருந்த கட்டியைக் குறித்தும் அவர் எனக்குச் சொன்னார். நான்

அவருக்காக ஜெபிக்கும்படி அவர் என்னைக் கேட்டுக் கொண்டார். இயேசுவின் சுவிசேஷ சத்தியத்தோடு கூடிய விடுதலையையும், சுகமாகுதலையும் நான் அவருக்கு அறிவித்த உடன் தானே அவர் மன்னிப்பைக் கேட்டுப் பெற்றுக் கொண்டார். அவரது நிலைக்காக நான் ஜெபித்த மாத்திரத்திலேயே அவர் தேவனுக்கு முன் மனந்திரும்பி இயேசுவைத் தன்னுடைய மீட்பராகவும், வைத்தியராகவும் ஏற்றுக் கொண்டார். ஆண்டவர் அவருக்கு வாழ்நாட்களை நீட்டித்துக் கொடுத்தார். தேவன் ஒருவரையும் கவனிக்கத் தவறுவதில்லை. ஒவ்வொருவரும் கர்த்தருடைய பார்வையில் விலையேறப் பெற்றவர்கள்.

கர்த்தர் இது போன்று பல சூழ்நிலைகளில் என்னில் கிரியை செய்ததுண்டு. தேவனுக்கும், மனிதருக்கும் விசனமுண்டாகும்படி பரிசுத்தருடைய பார்வையில் பலமுறை நான் தவறியுள்ளேன். அதற்கென பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதல்படி, மனஸ்தாபப்பட்டு நான் நஷ்ட ஈட்டை செலுத்தியுள்ளேன். நான் அப்படிக் கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்தபோது முரட்டாட்ட பாவத்தினாலுண்டான காயங்களையும், தீமையினாலுண்டான பாரத்தையும் தேவன் என்னை விட்டு எடுத்துப் போட்டார். பாவத்தைக் குறித்த மனஸ்தாப உணர்வு மனிதனுக்குள் எழுவது அவ்வளவு சுலபமானதல்ல என்பதையும் நான் கண்டு கொண்டேன். ஏனெனில் அந்திகிறிஸ்துவின் ஆவி கிறிஸ்துவானவர் மனிதனுக்குள் நிகழ்த்தும் கிரியையை தடை செய்வதுடன், கூடுமானால் ஆவிக்குரிய பிறப்பு நிகழா வண்ணம் அதனை கருவிலேயே கலைத்துப் போடுகிறான். பரிசுத்தாவியானவரின் ஊழியத்தின் விளைவாக மனிதனுடைய மனசாட்சி, அவனுக்குள் ''நான் உமக்கு விரோதமாய் பாவஞ் செய்துவிட்டேன்'' சங்.41:4 (சங்.51:4ம் பார்க்கவும்) என்று கதறும்படியான ஏதுவுண்டாகிறது. தேவனைப் பற்றிய உணர்வு மன்னிப்பினால் உயிர்பெறுகிறது. மன்னிப்பு என்பது பரிசுத்தத்திற்கான நுழைவாயிலாகவும், தேவனுடைய ராஜ்யத்துக்குள் நாம் பிரவேசிக்க, நமக்கு முன் காணப்படும் முன் வாசலாகவும் காணப்படுகிறது.

சந்திப்பின் கூடார வாசலில், எனது பிரதான ஆசாரியர் என்னையும், என் பலியையும் கர்த்தருக்கு முன் படைத்தவுடன் தானே என் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலுமுண்டாயிருந்த காயங்களும், தீய பாரங்களும் என்னை விட்டு அகன்று போயின 1தெச.5:23. நாம் பாளயத்துக்கு புறம்பேயிராதபடி இயேசுவானவர் நமக்கு நேர்வழியை உண்டாக்கினது மட்டுமின்றி, நம்மை மன்னித்து குணமாக்குகிறார். கர்த்தர் ஆபிரகாமுக்கு தரிசனமாகி, அவனை நோக்கி, ''நான் சர்வ வல்லமையுள்ள தேவன் (எல் ஷடாய், உன் முழுமையான ஆதரவு); எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு'' என்றார். (ஆதி.17:1)

இயேசுவானவர் என் நடையை அவருக்குமுன் நேராக்கினார். நான் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டேன். இயேசு பிதாவின் சித்தத்துக்குக் கீழ்ப்படிந்ததுபோல, நானும் அவர் சித்தத்துக்குக் கீழ்ப்படிந்தேன். என் ஜென்ம சுபாவத்திற்கு ஏற்றபடி நடவாமல், ஆவிக்கேற்றபடி நடக்க நான் கற்றுக் கொண்டேன். என் பராமரிப்பாளரை நம்ப நான் கற்றுக் கொண்டேன்.

பாவநிவாரண பலி

பாவநிவாரண பலி லேவியராகமம் நான்காம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை நாம் அணுகும்பொழுது பழங்கால இஸ்ரவேலர்கள் தேவனுக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்த மாடு, ஆடு இவற்றின் இரத்தங்கலந்த பலி போன்று அல்ல. நாம் இந்த பலியை தேவாட்டுக்குட்டியின் இரத்தத்தோடு அணுகுகிறோம். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

ஆண்ட்ரூ ஜூக்ஸ் குறிப்பிடுவது போல,

இங்கு பாவம் அறிக்கையிடப்பட்டுள்ளது, பாவம் நியாயந்தீர்க்கப்பட்டுள்ளது, பாவத்தினிமித்தம் உண்டான பலி காணப்படுகிறது, இரத்தம் சிந்தப்படுகிறது; பாவம் பரிகரிக்கப்படுகிறது, அகற்றப்படுகிறது, மற்றும் மன்னிக்கப்படுகிறது. ஜூக்ஸ், இபிட், ப 137

ஒருவன் பாவமற்றவனாக, விழுகைக்கேதுவான சுபாவங்களற்றவனாக, பாவத்தைக் குறித்து அறியாதவனாக, அனுபவமற்றவனாக காணப்படுவானாகில், அவனுக்கு பாவ நிவாரண பலியே அவசியப்படாது. எப்படியோ, நான் இயற்கையாகவே பெலவீனத்தினால் உடுத்தப்பட்டவனாக, பாவத்தின் வல்லமையினால் ஆட்கொள்ளப் பட்டவனாக காணப்படுகையில் இந்த பலி எனக்கு இரக்கத்தையும், தைரியப்படுதலையும், வாக்குத்தத்தங்களின் நிறைவையும் காண்பித்துக் கொடுக்கிறது.

பாவம் தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டாயிற்று என்பதை பாவ நிவாரண பலி வெளிப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசியை அவரது வாழ்வில் காணப்படுவதாக வெளிப்படுத்தப்பட்ட பாவத்தைக் குறித்த உணர்வுக்குள் கொண்டு வருகிறார். இந்த வெளிப்பாடு எனக்கு குழப்பத்தை உண்டாக்கக் கூடியதாகவோ, திகைத்து நிற்கச் செய்வதாகவோ, நித்திய நரகத்துக்கே வழியை திருப்பி விடுவதாகவோ காணப்படவில்லை. (எபி.10:3539) பாவம் பொல்லாதது, அது தேவனால் வெறுக்கப்படுவது, தேவனுக்கு அருவருப்பானது என்பதை எனக்குக் காண்பித்துக் கொடுக்கக் கூடிய பாவ நிவாரண பலி குறித்த வெளிப்பாடு என்னை நஷ்டப்படச் செய்யவில்லை. மாறாக என் நிலையினிமித்தம் என்னை நானே வெறுத்து,

அருவருத்து தேவனை நோக்கிக் கதறவும், என் முழு இருதயத்தோடும் மன்னிப்புக்காகவும், புதுப்பிக்கப்படவும் அவரை நோக்கிக் கெஞ்சவும் என்னை தட்டி எழுப்பிற்று. அவரே சர்வலோக நியாயாதிபதி. பாவ நிலைகளை வரையறுத்து, திட்டமிட்டுப் பாவஞ் செய்தோர் எவரென்றும், தவறுதலாக பாவஞ்செய்தோர் யாரென்றும் அவர்களுக்கிடையே இடைவெளி காட்டுபவர். மரணத்துக்கேதுவான பாவத்தை நன்கு அறிந்திருப்பவர். தாங்கள் அறிந்துள்ள கட்டளைகளையும், பிரமாணங்களையும் காலின் கீழ் மிதித்து, அதனை அசட்டை பண்ணுவோருக்கு பரிசுத்த ஆவியானவரின் உணர்வூட்டும் ஊழியம் வெறுப்பாகக் காணப்படுமென்றே எனக்குத் தோன்றியது. அதே வேளையில் தன் பாவங்களுக்காக வருந்துவோருக்கு இரக்கம் உண்டு என்ற பூரண நிச்சயம் எனக்கு உண்டாயிற்று. (எபி.12:511). ஆனால் மனந்திரும்பாதோருக்கோ சவஅடக்கம் தான் முடிவு. (அப்.5:111

லேவியராகமம் நான்காம் அதிகாரம் பதினொன்று, பன்னிரண்டு வசனங்களை கவனித்துப் பாருங்கள். இங்கு ஆவிக்குரிய தலைவர்களில் காணப்படும் பாவத்தின் கொடூர நிலை சுட்டிக்காட்டப்படுகிறது.

தேவன் பாவத்தைக் காண்பிக்கக்கூடிய மாம்சத்தையும், தலையையும், தொடைகளையும், குடல்களையும் பாளையத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கக் கூறுகிறார். தலைவர்கள் பாவஞ்செய்யும்பொழுது அதனை தேவன் சகித்துக் கொள்ளுகிறதேயில்லை என்பதை நான் விளங்கிக் கொண்டேன். அது முற்றிலும் தேவனுடைய பார்வையிலிருந்தும், தேவ ஜனத்தின் கண்களுக்கு முன்பிருந்தும் (பாளயத்துக்குப் புறம்பே) அகற்றப்பட வேண்டும். தலைவர்களின் பாவங்களை தேவன் பொறுத்துக் கொள்வதேயில்லை. (1சாமு.2:12, 22, 25; 4:17) அது இக்கபோத் ஆகும்! (1சாமு.4:21 கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நமக்காக பாவமாக்கப்பட்டும், பாவமில்லாத பிரதான ஆசாரியராக கிறிஸ்து இயேசு நமக்கு இருக்கிறார்.

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். 2கொரி.5:21

புதிதாக விடுவிக்கப்பட்ட, ஆவியில் நிறைந்த விசுவாசியான நிலையில் பரிசுத்தாவியானவர் உணர்த்திக் காட்டுகிற பாவங்களை உடனே அகற்றிவிட வேண்டுமென எனக்குள் தீர்மானமெடுத்தேன். ஒரு தனி நபரின் ஜீவியத்தில் வெளியாக்கப்பட்ட அல்லது சுட்டிக்காட்ட பாவத்தை அகற்றிவிட மறுப்பது பரிசுத்தாவியானவருக்கு விரோதமான பாவம் என்ற தெளிவு எனக்குள் உருவானது. (ஏசா.59:2; 1யோவா.1:8,9,10) ஒருவருக்கு ஆவியில் தேவன் பேரில் பற்றுதலும், அன்பும் உண்டாயிருக்குமானால், அவர் தனக்கு பரிசுத்தாவியானவரால் சுட்டிக் காட்ட பாவத்தை ஒத்துக் கொண்டு, அதனை அறிக்கை செய்வார் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அவர் வரும்பொழுது, உட்கார்ந்து வெள்ளியைப்புடமிட்டுச்

சுத்திகரிப்பவராக காணப்படுவார் என வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (மல்கியா 3:1,2,3) தண்ணீர் ஞானஸ்நானத்துக்குள் ஒருவர் உட்படுத்தப்படுகையில் அவர் பாவத்திற்கும், பாவ சுபாவத்திற்கும் மரித்து விடுவதாக நாம் கணக்கிடுகிறோம். நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய மற்றொரு காரியம், முந்தின ஆதாமின் பாவ சுபாவத்தினால் நிறைந்த நம்மோடு அவர் எந்நாளும் போர் செய்வதில்லை. நமது பலவீனமான மனுஷீக சுபாவமே தேவனுடைய கட்டுப்பாட்டுக்கும், அவரது சித்தத்துக்கும் அப்பால் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் கிறிஸ்துவின் ஒளியில் என்னை நிதானித்தறியவும், பரிசுத்தாவியானவரின் வழிகாட்டுதலை ஏற்றுக் கொள்ளவும் மறுக்கும் பட்சத்தில் தேவன் என்னை நியாயந்தீர்க்க ஏதுவுண்டாகிறது என்பதையும் அறிந்து கொள்கிறேன்.

ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்காதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனே தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான் என்றார். யோவா.3:19-21

ஆவிக்குரிய கிறிஸ்தவர்களுக்கு இந்த நியதி எப்படிப் பொருந்தும்? அக்கிரமத்தை குறித்து தாங்கள் எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? மொழி பெயர்ப்பாளர்கள் அக்கிரமம் என்ற வார்த்தைக்கு அநீதி, தீமை, இருள், கொடுமை அல்லது துன்மார்க்கம் போன்ற வெவ்வேறு பதங்களை பயன்படுத்துகின்றனர். கிறிஸ்து தமது மணவாட்டி அப்படிப்பட்டவளல்ல என தெளிவுறப் பகிர்ந்துள்ளார்.

நான் உங்களை அறியேன்; அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள். மத்.7:23

இந்த வாக்கியத்திற்கு முந்தின வசனம் இவ்வாறு கூறுகிறது. உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால் அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! மத்.7:22

அப்போஸ்தல நடபடிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அப்போஸ்தலரைப் போல, பெந்தெகொஸ்தே அனுபவத்தோடு, வல்லமையின் ஊழியத்தை நடப்பிக்கும் மறுமலர்ச்சியாளன் நான். என்னைப் பார்த்தும் இயேசுவானவர் ''நான் உன்னை ஒருபோதும் அறியேன்'' என்று சொல்லி விடுவாரா? அக்கிரமம் என்றால் என்ன? அநீதி என்பது யாது? யோவான் எழுதிய முதல் நிருபத்தின் மூன்றாம் அதிகாரம் நான்காம் வசனத்தில் அதற்கான விளக்கத்தை நாம் காண்கிறோம்.

கற்பனையை மீறுவதே பாவம் : பாவம் என்பது அநீதி, தீமை, இருள், கொடுமை. கர்த்தருடைய வார்த்தைக்கு சவுல் மன்னன் கீழ்ப்படியாத நிலையில் சாமுவேல் அவனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்து தள்ளினார் என்றான். 1சாமு.15:23

இறுதியாக சவுல் தான் பாவம் செய்ததாக ஒத்துக் கொள்ளுகிறான். ஆயினும் 'நான் தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்தேன்' என பகிரங்கமாக அதனை அறிக்கையிடவில்லை. நான் தேவனுக்கு விரோதமாய் பாவஞ் செய்தேன் எனில் அதனை நான் உணர வேண்டியதும் அதற்காக மனஸ்தாபப்பட வேண்டியதும் அவசியம். எனது விழுகைக்கேதுவான சுபாவங்களிலிருந்து நான் மனந்திரும்பி, தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு என்னை அர்ப்பணிக்கையில் கிறிஸ்துவோடு மரணத்திற்குள்ளாக்கும் நிலையில் இணைக்கப்படுகிறேன். பாவமில்லாதவர் என் வாழ்வில் இடம் பெறுகையில் பரிசுத்தாவியானவரது ஊழியத்தால் என் பாவங்களிலிருந்து நான் விடுவிக்கப்படுகிறேன்.

கிறிஸ்துவின் ஆவியானவர் என் இருதயத்திற்குள் வருகையில், அவர் என் வாழ்வில் வெளிச்சத்தைத் தருவார். அவரது தெய்வீக சுபாவங்கள் என்னுடையவையாகின்றன. அவரது எண்ணங்களையும், செயல்பாட்டினையும் ஆவியானவர் மூலம் அவர் எனக்குள் அருளிச் செய்கிறார். தேவனுடைய ஜீவனையும், நித்திய ஜீவனுக்குரிய சத்துவங்களையும் அவர் எனக்கு கூட்டித்தருகிறார். மெய்யான ஒரே தேவனையும், அவரது கிறிஸ்துவையும் அறிகிற அறிவு எனக்குள் நித்திய ஜீவனைக் கொண்டு வருகிறது. அவருக்குள் எனக்கு குழப்பம் இல்லை. சமாதானமே உண்டாயிருக்கிறது. தேவனுடைய சித்தத்தை என்னால் நிறைவேற்ற இயலும் என்ற பரிபூரண நிச்சயத்தை நான் அவரால் உடையவனாயிருக்கிறேன். அவருடைய பெலத்தால் பயங்களையும், தோல்விகளையும், தளர்ச்சிகளையும் மேற்கொள்ளும் வல்லமையை நான் பெற்றிருக்கிறேன். அவருடைய ஆவிக்குள் நடப்பதால் அனைத்து அசுத்தங்களையும் ஜெயிக்கும் இருதயத்தின் தூய்மையையும், பரிசுத்தத்தையும் நான் பெற்றிருப்பதுடன், இன்றைய உலக அருவருப்புகள் அனைத்தின் மேலும் ஜெயம் பெற்றவனாயிருக்கிறேன். தேவனுடைய அன்பை அவர் என் இருதயத்தில் ஊற்றியிருப்பதால், கசப்புணர்வின்றி என் சக மனிதரை என்னால் எதிர்கொள்ள முடிகிறது. இவ்வுலக வாழ்வின் முடிவில் நித்திய மரணத்திற்குள் சென்று தேவனை விட்டுப் பிரிக்கப்பட்டு விடாதபடி, அவருடன் இணைந்து

கொள்ள நித்திய ஜீவனை அவர் எனக்கு தந்திருக்கிறார். இந்த விதமான வாழ்வு இயேசுவாலேயன்றி வேறு வழியில நமக்குக் கிட்டுவதில்லை என்று வேதம் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. (யோவா.14:6) வெறுப்புணர்வின் கசப்பான பாத்திரத்தை நான் ருசி பார்த்திருக்கிறேன். அதனை மீண்டும் அனுபவிக்க ஒரு போதும் நான் விரும்ப மாட்டேன். நான் மனந்திரும்பியிருக்கிறேன். எனக்குத் தந்தருளப்பட்ட வெளிச்சத்திற்கு கீழ்ப்படிதலுள்ளவனாயிருக்க நான் விரும்புகிறேன்.

தொடர்ந்தேச்சையான வெளிச்சத்தை நான் பெற்றனுபவிப்பது எப்படி? எனது குணாதிசயங்களில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து அந்த வெளிச்சத்தை அதிகமாய் பெற்றனுபவிக்க ஒரு சிறு காரியத்தின் மூலம் தேவன் எனக்கு ஒரு படிப்பினை கொடுத்தார். நான் சிறு பையனாயிருக்கையில் அதிகமாய் இனிப்புகளை விரும்பி சாப்பிடுபவனாயிருந்தேன். அந்நாட்களில் ஒவ்வொரு பலசரக்குக் கடையிலும் இலவசமாக இனிப்புகளை ருசிபார்த்து பின் வாங்குவதற்கேதுவான பீப்பாய்கள் வைக்கப்பட்டிருக்கும். நாம் விரும்பும் சாக்லேட்களையோ, பிஸ்கட்களையோ, இதர இனிப்பு வகைகளையோ அந்த பீப்பாயிலிருந்து இலவசமாக நாம் எடுத்து ருசியை பரிசோதிக்கலாம்.

பல ஆண்டுகளுக்குப்பின் நான் இஸ்ரவேலுக்குச் சென்றிருந்த போது அதே விதமான காரியங்கள் அங்குள்ள கடைகளிலும் காணப்பட்டதைக் கண்டேன். அங்கும் ஜனங்கள் பல பண்டங்களை ருசிபார்த்ததைக் கண்டது என் இளம்பிராயத்தை எனக்கு நினைவூட்டியது. நான் அதுபோல சிலவற்றை ருசித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

நம் பாவங்கள் நிவிர்த்தியாகும்படி நம் சுபாவங்களில் மாற்றம் உண்டாக வேண்டியது அவசியமென ஆண்டவர் விரும்புகிறார். (அப்.3:19) ''நீ நான்கு மடங்கு திரும்ப செலுத்த வேண்டுமென நான் விருமபுகிறேன்'' என்று ஆண்டவர் என்னிடம் சொன்னார். நான் அதை எப்படிச் செய்ய வேண்டுமென அறியாதிருந்ததால் பரிசுத்தாவியானவர் நான் செய்ய வேண்டியதை எனக்குக் காண்பித்துக் கொடுத்தார். நான் இலவசமாக எதையெதை எங்கெங்கு எடுத்துள்ளேன் என கணக்கிடத் துவங்கினேன். பின்னர் அதற்கு நான்கு மடங்கு அதிகமான தொகையைப் பையிலெடுத்துக் கொண்டு அதனைச் சரிக்கட்டப்புறப்பட்டேன். கடைக் காசாளரிடம் போய் அப்பணத்தைக் கட்டி பொருட்களை வாங்கி, அதே கடையிலுள்ள இலவசப் பொருட்களுடையதான பீப்பாய்களை நிரப்பினேன். இப்படியாக ஆண்டவர் என்னை உடைத்து சிறுசிறு காரியங்களிலும் சீர்ப்படுத்தினார். உலகப்பிரகாரமாக ஒருவேளை இது ஒரு சிறு காரியமாக காணப்படலாம். ஆனால் தேவனுடைய பார்வையில் அப்படியல்ல. ஒழுங்கின்படி, நமக்குரியதல்லாத எத்தனை பொருட்கள் நம்வசம் உள்ளன? மேய்ப்பர்களே,

நமக்குரியதல்லாத எத்தனை ஆடுகள் நம் மந்தையில் உள்ளன? நம்மை நாமே முன்னிறுத்தி நமது சுய மேன்மைகளையே பெரிதாய்க் காட்டும்படி அசுத்த ஆவிகள் நம்மை கட்டிப்போட நாம் இடங்கொடுக்க வில்லையா? நமது சொந்த ஆதாயத்துக்காக பிறர் ஆடுகளை நாம் கொள்ளையிட்டிருக்கிறோமல்லவா?

பெரிய பாவங்களாக காணப்படுபவற்றுள் ஆவிக்குரிய குஷ்டரோகமாகிய முரட்டாட்டமும் ஒன்று. பரிசுத்தாவியானவருக்கு விரோதமாய் செயலாற்றி நாம் தவறிழைக்கும் காரியங்கள் எவையெவை? நாம் அறிந்து மனதார ஆவியானவரை ஒருபோதும் தூஷித்து விடுவதில்லை என்பது என் எண்ணம். எனினும் ஆவியை அவித்துப் போடுவது குறித்து நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? விசுவாசிகள் பரிசுத்தாவியானவருக்கு விரோதமாகச் செய்யும் பாவம் இதுவாகும். வெளிப்படுத்தப்பட்ட, அறியப்படுத்தப்பட்ட, உணர்த்தப்பட்ட ஒரு பாவத்தை நான் ஒத்துக்கொள்ள மறுப்பேனாகில் நான் ஆவியை அவித்துப் போடுகிறேன். அவரது ஞானத்தை நான் புறந்தள்ளுகையில் நான் ஆண்டவருக்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறேன்.

பரிசுத்தாவியானவரைத் துக்கப்படுத்துவது நாம் செய்யும் மற்றொரு வகைப் பாவமாகும். பரிசுத்தாவியானவரை துக்கப்படுத்துதல் என்றால் என்ன? என் வாழ்க்கை ஆவியானவருடைய கட்டுப்பாட்டுக்குள் இல்லாத பட்சத்தில், என்னிமித்தம் ஆவியானவர் துக்கப்படுகிறார். என் வாழ்க்கையில் ஓட்டுனர் ஆசனத்தில் நானே அமர்ந்து கொண்டு அவரை என் சக ஓட்டுனராக அருகில் அமர்த்தியிருப்பதாக உணர்ந்தேன். ஆண்டவர் எனக்கு ஒரு செய்தி வைத்திருந்தார், ''பரிசுத்தாவியானவர் ஒருபோதும் சக ஓட்டுனராக இருக்க ஒத்துக் கொள்வதில்லை''

வேதாகமத்தைப் படித்து அறிந்து கொண்டபடி ஆவியை அவித்துப் போடுதலும் ஆவியானவரை துக்கப்படுத்துதலும் பரிசுத்தாவியானவரை அவமதிக்கும் பாவங்களென நான் கண்டு கொண்டேன். எனது நேர்மையை விளங்கப்பண்ணும்படி நான் செயல்படும்படியான இடத்திற்கு வந்தேன். பாவங்களின் சில வகைகளை யோவான் எழுதிய முதல் நிருபத்தின் முதல் அதிகாரம் நமக்குக் காட்டிக் கொடுக்கிறது. நமக்குப் பாவமில்லையென் போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நாம் பாவஞ் செய்யவில்லையென்போமானால் தேவனைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம். அவருடைய வார்த்தை நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் நம்முடைய அநியாயங்களை நீக்கி, நம்மை மன்னித்து சுத்திகரிப்பதற்கு ஆண்டவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார். பாவ நிவாரண பலி சுட்டிக்காட்டும் உண்மையிதுவே என்ற முடிவுக்கு வந்தேன். அதன்படி நாம் பாவஞ் செய்ததிற்கதிகமாய் தேவனில் அன்பு கூறக்கடமைப்பட்டிருக்கிறோமல்லவா?

ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தைப் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார். மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். ரோ.8:1-4,6

விழுகையின் சுபாவத்தினால் நிறைந்த பாவத்தின் ஆளுகையை தெய்வீக சுத்திகரிப்புக்கும், கிருபைக்கும் கீழ்ப்படுத்த நான் விருப்பமுடையவனாயிருக்கிறேனா? நான் நேர்மையானவனாய் காணப்பட ஏதுவுண்டா? ஜெஸி பென்லீவிஸ் கூறுகிறார்.

சத்தியத்திற்கு அதிகமாய் உண்மையைக் காண்பிக்க இது எதிர்பார்க்கிறது. ஆண்டவர் தமது பிள்ளைகளின் அந்தரங்க பகுதிகளில் ஆளுகை செய்ய விரும்புகிறார். தங்களை சிறுமைப்படுத்தி, சீர்செய்கிற சத்தியத்தை ஒரு விசுவாசி ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். உண்மை நிலையாகிய ''வஞ்சியாமை'' என்பது சில நேரங்களில் உணர்ச்சிகளுக்கு வேதனையூட்டுவதாகவும், தன்னைக் குறித்து அதிகமாய் நினைத்துக் கொண்டிருந்த ஒருவனுக்கு அவனது சரியான நிலையை எடுத்துக் காட்டி தேவனுக்குக் கீழ்ப்படியப் பண்ணுவதாகவும் காணப்படும். (அவன் ஒருக்காலும் வஞ்சிக்கப்படாதபடி)

பல ஆண்டுகளாக மேய்ப்பராகப் பணியாற்றி நான் கண்டு கொண்ட உண்மை யாதெனில் கிறிஸ்தவர்கள் பலரும் தங்களுக்கு உரியதல்லாத அதிகாரங்களிலும், அறிவிலும் ஆசை கொண்டே தாங்கள் வஞ்சிக்கப்படும் நிலைக்கு ஆளாகின்றனர் என்பதே. பல நேரங்களிலும் வஞ்சிக்கப்பட்ட நிலையிலுள்ள நபரை சந்திக்க முற்படுகையில் நானும் என் மனைவியும் மிகவும் கவனமுள்ளவர்களாயிருக்கிறோம். ஜெஸி பெனில்விஸ் மிகத் தெளிவாய் கூறுவது போல் வஞ்சிக்கப்படும் கிறிஸ்தவர்கள் பலரும் தங்களைக் குறித்து எண்ண வேண்டியதற்கு அதிகம் எண்ணியே அவ்வாறு வஞ்சிக்கப்பட்டுள்ளனர்.

தேவனுடைய சத்தியத்திற்குள் நான் தொடர்ந்து புகும்பொழுது, தேவனுக்கு முன் நான் என்னை மிகவும் தாழ்த்த வேண்டியதன் அவசியத்தை

அதிகமதிகமாய் உணருகிறேன். விசுவாசியை வஞ்சித்து பலட்சயப்படுத்தும் எதிரியை நான் இனங்கண்டு கொள்ள வேண்டும். நான் சத்தியத்தை அறிந்து கொள்ள வாஞ்சிக்கும் ஒரு விசுவாசியாயிருக்கிறேன். வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசின் உபதேசங்களுக்கும் அடுத்த காரியங்களை தெளிவுற சத்தியத்தின் மூலம் அறிந்து கொள்ள விழைகிறேன். (1தீமோ.4:1)

ஜெஸி பென் லீவிஸ் எழுத்துக்களைப் படிக்கையில் பல கேள்விகள் எழுகின்றன. அதன் சாராம்சமாவது

ஒரு கிறிஸ்தவன் வஞ்சிக்கப்படுவது சாத்தியம் தானா?

ஒரு கிறிஸ்தவன் பொல்லாத ஆவிகளின் பிடிகளுக்குள் சிக்கியிருக்க வாய்ப்புண்டா?

நான் வஞ்சிக்கப்பட ஏதுவுண்டா?

நான் இப்பொழுது ஒரு பொல்லாத ஆவியினால் வஞ்சிக்கப் பட்டிருக்கிறேனா?

உதாரணத்திற்கு நான் வஞ்சிக்கப்பட்ட நிலையில் காணப் படுவேனாகில், விடுதலையைப் பெற்றுக் கொள்ளும்படி நான் கடைபிடிக்க வேண்டிய சில விதிமுறைகள் உண்டு. ஆம்

முதலாவதாக நீ உன்னைத் தாழ்த்தி உன்வாழ்வின் எந்தப்பகுதியில் வஞ்சிக்கப்பட்டிருக்கிறாய் என்பதனை அடையாளங் காண வேண்டும். (இது குறித்து பாப், நான்ஸி மில்ஸ் எனது சக சபை அங்கங்களுடன் ஆலோசனை கலத்தல் எனக்கு நலமாகப்பட்டது)

பிசாசு உரிமை பாராட்டும் அடித்தளம் ஒன்று அங்கு காணப்பட்டிருக்கும். பிசாசு அதிகம் சட்டம் பேசுவான். நமக்காக சாபமான இயேசுவின் நாமத்தில் அந்த அடித்தளத்தின் சாபத்தை முறித்து அவனிடமுள்ள உரிமையை நாம் திரும்பப் பெறுதல் வேண்டும்.

பொல்லாத ஆவிகளுக்கெதிராக நாம் தீர்மானமாகப் போர் செய்தல் வேண்டும். அவை விரட்டப்பட்டே ஆக வேண்டும். எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறீர்களோ அதற்கதிகமாய் போர் செய்தல் வேண்டும்.

அடுத்தது மாற்றம் உச்சநிலையில் உருவாதல் வேண்டும். மனந்திரும்பி, ஆவியானவர் நம்மை மாற்ற இடங்கொடுக்க வேண்டும். சில வேளைகளில் கீழ்ப்படிய மறுக்கும் நமது சுய சிந்தனைகளை பிடுங்கி களைந்து போட்டு சரியான மனநிலையுடன் மாற்றத்தை ஏற்றுக் கொள்ள முன் வர வேண்டும். நான் கண்டு கொண்டதெல்லாம் அப்படி நாம் நம்மை ஆவியானவருக்கு விட்டுத் தருகையில் தான் அவர் முழு பெலத்துடன் நமக்கு உதவ வருகிறார்.

சுயத்தை நியாயப்படுத்த முற்படும் சாக்குப்போக்குகளை குறித்து கவனமாயிரு. சாக்குபோக்குகளுக்கெதிராக ஆயுதமணிந்து நில். சாக்குப்போக்குகளை நிறுத்திவிடு.

குற்றவாளிகளை கண்டுபிடிப்பவராய் மாறு : உன்னை நீயே கேள், "பொல்லாத ஆவிகளினாலுண்டாகும் பாதிப்பு எப்படிப்பட்டது? ஒரு முறை விரட்டப்பட்ட ஆவி திரும்ப வர முற்பட்டால் நான் அதனை எப்படி எதிர்கொள்ள வேண்டும்?

வசனத்தை பயன்படுத்திய இயேசுவானவர் பிசாசு அவரை சோதித்த வேளையில் எழுதியிருக்கிறதே என்றே சொன்னார். கீழ்க்கண்ட வசனங்கள் பிசாசுகளை எதிர்த்து ஜெயமெடுக்கத்தக்கதாக எழுதியிருக்கிறதே என பயன்படுத்தப்பட ஏதுவானவை.

1 மனந்திரும்புதல் (மாற்றத்திற்கான கதவு) (அப்.3:19)
பிசாசுக்கு இடங்கொடாமை (எபே.4:27)

2 பாதுகாப்பை பலப்படுத்துதல் (மத்.26:41; வெளி.3:2)

3 தீமையை வெல்வதால் வெட்கமடையாதிருத்தல் (ரோம.12:21)
ஆராதனையும் நன்றி நவில்தலும் (கொலோ.9:12,13,14)
குமாரனுக்கு நன்றி சொல் (கொலோ.2:915)
எதிர்கால தொடர்புகள் / ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக
காவலை பலப்படுத்து (கொலோ.2:8,9,10)
மன்னிக்கும் வாழ்க்கை வாழு (2கொரி.2:10,11)
நாம் மன்னிக்காவிட்டால் தண்டிக்கப்படுவோம் (மத்.6:12)
மன்னிப்பு விடுதலையாக்குகிறது (யோவா.20:23)

4 தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொள்.
(எபே.6:10-18)
தேவனுடைய சத்தியமே நமது பெலன்
அவருடைய நீதி நமது ஆவியைப் பாதுகாக்கிறது
சத்திய சுவிசேஷம் சமாதானத்தை நமக்குள் கொண்டு வருகிறது
வேத விசுவாசம் நமது முழு ஜீவியத்தையும் பாதுகாக்கிறது
நோவாவின் பேழையிலுண்டான இரட்சிப்பைப் போன்றது
செயலாற்றும் தேவனுடைய வார்த்தை எதிரிகளை தோற்கடிக்கிறது
ஜெபம் (ஆவிக்குரியவன் கேட்கப்படுகிறான்)
ஆவிக்குரிய ஜாக்கிரதையை காத்துக் கொள்ளுதல்

5 சீரான ஜெபவாழ்வை வளர்த்து விடு (எபே.6:18)

6 உலகத்திலிருப்பவனிலும் உன்னிலிருப்பவர் பெரியவர் (யோவா.4:4)

7 சாத்தானின் ஏனைய சதிசெயல்களுக்கு எதிர்த்து நில் (1தீமோ.4:1; எபே.4:27; யாக்.4:7; 1பேதுரு 5:8,9)

8 பிசாசுக்கு பயப்படாதே (2தீமோ.1:7)

9 சத்துருவின் சகல வல்லமைகளின் மேலும் அதிகாரம். (லூக்.10:19)
இயேசு நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்
பெரிய கட்டளையையும் கவனியுங்கள் (மத்.28:18,19,20)

10 மாயவித்தைக்கேதுவான அனைத்தையும் அழித்துவிடுங்கள் (அப்.19:18,19)

11 உங்கள் தெரிந்தெடுப்பை சீர்படுத்துங்கள் (யாக்.4:7-10)

தேவனுக்கு ஒப்புக் கொடுத்தல்
பிசாசுக்கு எதிர்த்து நின்றல்
சுத்திகரிப்பு செய்து கொள்ளுதல்
தாழ்மைப்படுதல்

12 ஆவிக்குரிய வேசியின் பிள்ளைகள் குறித்து எச்சரிக்கையாயிருத்தல் (எபி.12:5-11)

13 வேத வாக்கியங்களைப் படித்தல் (ரோ.10:17)
தேவனால் அங்கீகரிக்கப்படுதல் (2தீமோ.2:15)

14 இயேசுவின் ஊழியத்தோடு இசைவு உடையவராயிருத்தல் (லூக்.4:18,19)

15 கிறிஸ்துவின் சரீரமாகிய சபையோடு ஆவிக்குரிய ஐக்கியமுடையவராயிருங்கள். (அப்.2:41-47; 1யோவா.1:3-7)

மேற்காணும் கிரியைகளின் பலன்களை குறித்து நன்கு பகுத்தறிந்து கொள்ளுங்கள்.

வஞ்சிக்கும் எதிரிக்கு முன்பாக உங்களால் உத்தமத்தை நிரூபித்துக் காட்ட முடியுமா? 'நான் வஞ்சிக்கப்பட்டேன்' என்று சரியான விதத்தில் உங்கள் காரியங்களை நீங்கள் ஒத்துக் கொள்ளக் கூடுமா? அது என்னால் கூடுமானால், பின்னர் என்னை மன்னிக்கவும், கழுவவும், புதுப்பிக்கவும், மேற்கொள்ளுகிறவனாக என்னை பலப்படுத்தி நிலைநிறுத்தவும் கர்த்தர் சித்தங்கொள்வார். ஆழமான குழிகளில் கிட்டிய எனது சொந்த அனுபவங்களிலிருந்து நான் இதனைச் சொல்கிறேன். நான்

குற்றமற்றவனாயிருக்கவில்லை. சோதனைகளை சகித்து அதனை ஜெயமெடுக்கிற அநேக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். மேற்கொள்ளுகிற பாடத்தை நான் கடைசியாகவே கற்றுக் கொண்டேன்.

வேதம் சொல்லுகிறது.

மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். (கலாத்தியர் 6:7)

தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவருக்கு என்னை அறிமுகப்படுத்துவதற்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, 1946ல் தேவனுடைய அழைப்பு என் வாழ்வில் ஆரம்பமாயிற்று. இறையியல் கலாசாலைக்கு செல்வதன் மூலம் அவரது அழைப்புக்கு நான் செவிமடுத்தேன். நானும் என் மனைவியும் வார இறுதி நாட்களில் குருத்துவப் பணிகளிலும் பங்கு பெற்றோம். நைஜீரியாவில் மிஷனெரியாய் பணியாற்றி ஆலயங்களையும், வேதக் கலாசாலையையும் ஸ்தாபிக்க உதவி புரிந்தேன். எனது ஸ்தாபனத்துக்காக இந்த தேசத்தில் சபைகள் ஸ்தாபிக்கபபட உழைத்தேன். பல ஆண்டு சேவைகளுக்குப் பிறகு, தேவனது அழைப்பை உதறித் தள்ளி ஊழியத்தை விட்டு வெளியேறினேன். எனது யூபிலி ஆண்டிலோ அவர் என்னை மன்னித்து, விடுவித்து ஆவியானவருக்கு அறிமுகப்படுத்தினார். பின்னர் நான் எனது எண்ணங்களோடும், செயல்பாடுகளோடும் போராடி, பூரணமாக ஆண்டவருக்கு என் அர்ப்பணிப்பை விளங்கப் பண்ண வேண்டியிருந்தது.

எழுதியிருக்கிறபடி, தேவாட்டுக் குட்டியாகிய நமது இரட்சகரும் மீட்பருமானவர் ஆவியினால் நிரப்பப்பட்டபோது ஆவியானவரால் வனாந்தரத்திற்கு நடத்தப்பட்டு சாத்தானால் சோதிக்கப்பட்டு பின்னர் ஊழியத்தில் கால் பதித்தார்.

பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார். லூக். 3:22

உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார். அவர் வனாந்தரத்திலே நாற்பதுநாள் இருந்து, சாத்தானால் சோதிக்கப்பட்டு, அங்கே காட்டுமிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். மாற்கு 1:12,13

இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டு, நாற்பது நாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார். லூக்கா4:1,2

பிசாசானவன் சோதனையெல்லாம் முடித்தபின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப் போனான். லூக்கா 4:13

இக்காரியம் என் சிந்தையில் பொறிதட்டி எழுப்பியது. மனுக்குலம் சந்திக்கக்கூடிய உச்ச கட்ட சோதனைகளின் வழியே இயேசுவையும் பிசாசு கடத்திப் போனான். அவரது ஆவி, ஆத்மா, சரீரம் முழுவதும் தனித்தனியே சாத்தானின் சோதனைக்குள்ளாயின. எந்த அளவிற்கு அதிகமாய் அவரை சோதிக்கமுடியுமோ அந்த அளவிற்கு அதிகமாய் அவன் அவரை சோதித்தான். உச்சகட்ட நிலையில் அவனால் சோதிக்கப்படுதலை நினைக்கையில் எனக்குள் நடுக்கமுண்டானது.

நாம் சாத்தானுக்குத் தருணம் கொடுக்கும் வரை இயற்கைக்கு மேலான நிலையில் பிசாசிடமிருந்தும், அவிசுவாசிகளிடமிருந்தும் பாதுகாக்கப்படுகிறோம். அவனுக்கு ஒதுங்க சிறிய இடங்கிடைக்கும் பட்சத்தில், அதிகமாய் அவனது பொல்லாத ஆவிகளை நமக்குள் அனுப்பி, நம்மை ஆக்கிரமித்து, தனது முகாமாக நம்மை மாற்றி விடுகிறான். கிறிஸ்துவின் ஆவியினால் பிசாசின் கிரியைகளை நம் வாழ்விலிருந்து அழிக்க நாம் முற்படாதவரை அவன் ஒதுங்கவே மாட்டான். (1யோவா.3:8)

இது தான் எனக்கு நிகழ்ந்தது. நான், பிசாசுக்கு இடங்கொடுத்திருந்தேன். பின் இயேசுவின் நாமத்தினால் என்னில் காணப்பட்ட பிசாசின் கிரியைகளை அழிக்க வேண்டியிருந்தது. இயேசுவின் நாமத்தினால் துரத்தப்படும் வரை அவன் ஒதுங்கவேயில்லை. பின் அவன் திரும்பி வராதபடி அவனுக்கு எதிர்த்து நின்றேன். (யாக்.4:710) எங்கள் விடுதலைக்குப் பின்னர் சாபத்தை முறிப்பது குறித்து நானும் என் மனைவியும் கற்றுக் கொண்டோம்.

எனது விடுதலையைத் தொடர்ந்து இரவும் பகலும் நான் வேதாகமத்தை தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தேன். நான் எந்த சாக்குப் போக்கும் கூறவில்லை. இதற்குமேல் மன்னியாமலோ, கடின இருதயத்தோடோ என்னால் காணப்பட முடியாது. கசப்பையோ, மன்னியாமையையோ எனக்குள் விதைக்கும் எவரையும் இனி என் வாழ்வில் நான் அனுமதிப்பதாய் இல்லை. இரவும், பகலும் என் ஜாக்கிரதையை நான் காத்துக் கொண்டேன். நான் கற்றுக் கொண்டதில் நான் தேறலானேன். சரியான சாட்சியின் மூலமே நாம் ஆவியில் வளரமுடியும். நான் பகுத்தறிந்ததை அப்பியாசப்படுத்த முற்பட்ட போது, எனது பகுத்தறிவு விருத்தியடைந்தது. படிப்படியாக நான் கர்த்தருடைய பலத்தில் நிலைபெற்றேன்.

''ஆவியானவருடைய பலத்தினாலே''

இயேசு திரும்பிப் போய் (லூக்.4:14) தமது பட்டணத்திலுள்ள ஜெபாலயத்தில் நின்று கொண்டு, தமது ஊழியத்தை குறித்து ஏசாயா தீர்க்கனால் முன்னுரைக்கப்பட்ட வேத பகுதியை வாசித்தார்.

கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசிதப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார் லூக். 4:18,19

ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்திலுள்ள அறுபத்தோராம் அதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ள வாக்கியங்களின் நிறைவேறுதலாகவே தமது ஊழியத்தை அவர் பிரகடனப்படுத்தினார்.

'உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிறது என்றார். லூக்.4:21

அவருடைய ஊழியத்தைப் பற்றிய வெளிப்பாட்டினைப் பாருங்கள். அவரது ஊழியம் முழுமையுமே நற்செய்தியைப் பிரசங்கிப்பதையே மையமாய்க் கொண்டிருந்தது (சுவிசேஷமயமாக்குதல்) தரித்திரருக்கு நற்செய்தியைப் பிரசங்கிப்பதே அவரது ஊழியத்தின் பிரதான பகுதியாய் அமைந்திருநதது. நாம் சுவிசேஷத்தை பிரபல்யப்படுத்தாவிட்டால் இயேசுவின் ஊழியத்திலும், புதிய ஏற்பாட்டு ஆதிச்சபை ஊழியத்திலும் காணப்பட்ட அற்புதங்களும் அடையாளங்களும் நம்மைப் பின் தொடராது.

பாவநிலையைத் தாண்டி முன்னேறுவோமாக. பாவ நிலைக்கும் அப்பால் விசுவாசிகளாகிய நமக்கு ஒரு நெடும் பயணம் உண்டாயிருக்கிறது.

5. கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற மனிதனின் நிபந்தனையற்ற அர்ப்பணம்

அவன் செலுத்துவது மாட்டுமந்தையிலிருந்து எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலியானால், அவன் பழுதற்ற ஒரு காளையைச், செலுத்துவானாக; கர்த்தருடைய சந்நிதியில் தான் அங்கீகரிக் கப்படும்படி, அவன் அதை ஆசரிப்புக் கூடார வாசலில் கொண்டு வந்து, அது தன் பாவ நிவிர்த்திக்கென்று அங்கீகரிக்கப்படும்படி தன் கையை அதின் தலையின்மேல் வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் அந்தக் காளையைக் கொல்லக்கடவன். லேவி.1:3,4

பாவ நிலைக்கு அப்பால் செல்வோம். நம் பாவத்தோடுகூட இடைபட்டுக் கொண்டே இருக்கிற நிலையில் தேவன் நம்மை விட்டு விடுகிறதில்லை. பாவ நிலைக்கு அப்பால் நமது முழு மனிதனையும் பூரணமாக தேவனுடைய சித்தத்துக்கு சமர்ப்பித்து விடுகிற மேலான நிலைக்கு ஏகிப்போகும் பயணமொன்று நமக்கு உண்டு. இது தேவனைப் பிரியப்படுத்தக் கூடியதாக நமது ஆவி, ஆத்மா, சரீரத்தை புதுப்பித்தலுக்கும் பரிசுத்தமாகுதலுக்கும் உட்படுத்துவதாகும். பிரச்சனை என்னவெனில், நீங்கள் என்னைப் போலொத்த நிலையில் காணப்படுவீர்களானால் உங்கள் பாவங்களாலுண்டான சேதாரங்களுக்காக சீரமைப்பைப் பெறு முன்னரே, உங்கள் வாழ்வின் முழுமையையும் தேவனுக்கு அர்ப்பணித்திடவே தீவிரப்படுவீர்கள். அவருடைய ஞானமோ நமக்கென ஒரு திட்டத்தைக் கொண்டிருக்கிறது. நாம் அதனை கவனித்து கீழ்ப்படிவோமாகில் அவரது திட்டத்தை சுதந்தரிக்கும் பாக்கியம் பெறுவோம்.

நான் நேர்மையாய் காணப்பட எத்தனிப்பேனாகில், எனக்கு நானே சில கேள்விகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும். என் மீறுதல்களினிமித்தம் தேவன் என்னோடு இடைபட நான் நிபந்தனையின்றி தேவ பாதத்தில் சரணடைந்திருக்கிறேனா? ஆண்டவர் தமது வழிமுறையின்படி செயல்பட நான் என்னை அவருக்கு விட்டுக் கொடுத்திருக்கிறேனா? பாவ நிலைக்கு அப்பால் உத்தமமாய் வாழ பரிசுத்த ஆவியானவர் எனக்குள் கிரியை செய்து பழைய மனிதனை களைந்து போட்டு புதிய மனிதனை தரிப்பிக்க இடங்கொடுத்திருக்கிறேனா?

மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள். எபே.4:24

கர்த்தருடைய நாமத்திற்கென்று சுவிசேஷத்திற்காக எனது உலக மேன்மையை வெறுத்துவிட நிபந்தனையின்றி என்னைத் தத்தம் செய்துள்ளேனா? (மாற்.8:34-38) கோதுமை மணியாக நிலத்தில் விழுந்து

என்னால் சாக இயலுமா? (யோவா.12:24) கர்த்தருடைய வருகைக்கு முன்பதாக எலியாவின் ஆவி வருமென வேதம் தீர்க்கதரிசனமாய் கூறுகிறது (மல்.4:5) நான் தேவனுக்கு என்னை முற்றிலும் விற்றுப் போட்டவன் தானா? சகரியாவுக்கு அவனது குமாரனாகிய யோவான்ஸ்நானகனைக் குறித்து கர்த்தருடைய தூதன் கூறிய செய்தி லூக்கா சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும், பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான். லூக்.1:17

யோவான்ஸ்நானகன் தனது ஊழியத்தை நிறைவேற்றின அதே ஆவியோடு என்னாலும் ஆண்டவருக்கென கிரியை செய்ய முடியுமா? அவனுக்குள் வைராக்கியம், சுயவெறுப்பு, பரிசுத்தம், கர்த்தருக்குக் கீழ்ப்படியும் சிந்தை அனைத்தும் இருந்தது. உலக ஆசாபாசங்களுக்கோ, இன்பங்களுக்கோ அவனில் இடமில்லை. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிக்கே உரிய அதிகாரத்தோடு அவன் இருதயங்களை ஆண்டவர் பக்கம் திருப்பினான். மிகுந்த தைரியத்தோடும், வைராக்கியத்தோடும் அவன் தன் நாட்களில் வாழ்ந்த மதவாதிகளின் மாய்மால நிலைகளை கண்டித்து எச்சரித்தான். மனந்திரும்புதலின் செய்திக்கு அவன் உண்மையும் கீழ்ப்படிதலுமுள்ளவனாயிருந்தான்.

கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வை பண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே. மத்.3:3

மல்கியா, ஆண்டவருடைய வருகையின் நாட்களை முன்னறிவிக்கையில் எலியாவுக்குள்ளிருந்த அதே ஆவி இயேசு திரும்ப வருமுன் கிரியை செய்யுமென்றும் பாவத்தினாலும் உலகத்தினாலும் ஆதிக்கம் செலுத்தப்படுவோரை அந்த ஆவி கிறிஸ்துவுக்கும், பரிசுத்தத்துக்கும் நேரே வழிநடத்து என்றும் கூறியுள்ளார். கர்த்தருக்காய் அக்கினியின் மேல் நிற்கிற கடைசி கால கிறிஸ்துவின் சரீரமாகிய சபை இதுதானா? அக்கினிப் பிழம்புகளான சுவிசேஷகர்கள் ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்களா? நான் அப்படிப்பட்ட ஒரு ஊழியத்தில் பங்கு பெற்றிருக்கிறேனா? எனது வெளிப்புற மனிதனின் திறமைகளால் இந்த விதமான ஒரு நல்ல கிரியையையும் என்னால் நடப்பிக்க முடியாதென பகிரங்கமாய் நான் அறிக்கையிடுகிறேன். அவ்வாறு என்னால் தேவனுடைய வேலையை செய்ய முடியாது. கர்த்தர், எனக்குள் கிரியை செய்கிற

அவருடைய பரிசுத்த ஆவியானவரைக் கொண்டே தேவனுடைய கிரியைகளை நடப்பிக்க முடியும். கிறிஸ்துவை பிரஸ்தாபப்படுத்தும் நோக்குடன் நான் என்னை நானே வெறுத்து அவரது மகிமைக்காக என்னை இழக்கச் சம்மதிக்கும் போதும் பூமிக்குள் இன்பங்களிலும் அவரது பரிசுத்தத்தையே பிரதானமாய்க் கருதும் போதும் தான் இந்த களிமண் பாண்டத்தைக் கொண்டு ஆண்டவர் அற்புதங்களை விளங்கப்பண்ணுகிறார்.

அக்கினியினாலான பேரழிவு

குஷ்டரோகியின் சுத்திகரிப்புக்கான நாளிலே இடப்படும் சர்வாங்க தகனபலியைக் குறித்த தேவ கட்டளையில் சில நிபந்தனைகளுண்டு. பாவ நிவாரணபலி, குற்ற நிவாரணபலி, போஜன பலி இவைகளுக்கு மாறாக, சர்வாங்க தகன பலி விஷயத்தில் தொக்கி நிற்கும் நான்கு காரியங்களை நான் இது குறித்து ஆராய்கையில் கண்டு கொண்டேன்.

முதலாவதாக சர்வாங்க தகனபலி, பலியிடுகிற நபரை அங்கீகரிப்புக்கு பாத்திரவானாய் நிலைநிறுத்துகிறது. பலியிடுகிறவன் ''தன் திராணிக்குத் தக்கபடி'' இதனை பலியிடுகிறான். ''திராணி'' என்பது அவனது சுயாதீனம், வரையரைக்குட்படாமை, கட்டாயப்படுத்தப்படாமை என்றே இங்கு பொருள்படுகிறது. இந்த பலிக்கான நிலையில் தகுதிகள், கண்டிப்புக்கள், நிபந்தனைகள் எதுவும் விதிக்கப்படவில்லை. அதாவது இது நிபந்தனையற்றது. எனவே பலிசெலுத்துபவனின் விருப்பத்தையும் கடந்து எளிதாக நிறைவேற்றப்படக் கூடியது. முதல் ஆதாமுக்குப்பின் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்து போன பின்னரும் ஆதாமின் சந்ததியான எவனும் தேவனை அவரது பூரண சாயலில் சந்திக்க இயலவில்லை. பிரமாணமானது மனிதனை தேவனது நிலையை எட்டிப்பிடிப்பதற்கேதுவானவனாக ஏற்றி நிறுத்தவில்லை. மாறாக பிரமாணம் மனிதனது விழுகையை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

''அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானார்கள்''. ரோமர் 3:10,23

எனவே எனது சுதந்தரவாளியும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்து விலையேறப்பெற்ற பலியுடன் வந்தார். அவர் தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்து, அங்கீகரிக்கப்பட்ட பலியினை ஏறெடுத்தார்.

''அது அவனது பாவ நிவிர்த்திக்கென்று அங்கீகரிக்கப்படும். லேவி. 1:4

இது குற்ற நிவாரண பலியாகவோ, பாவ நிவாரண பலியாகவோ இல்லாத போதிலும் சர்வாங்க தகனபலியாக அரவணைப்புக்கும், அங்கீகரிப்புக்குமுரிய முழுக்காரியத்தை முன்னிட்டு செலுத்தப்படுகிறது.

ஜூலிக்ஸ் என்ற வேத பண்டிதரும் தகனபலி குறித்து இது ''அங்கீகரிப்புக்கு ஏதுவாக செலுத்தப்படுகிறது'' எனக் குறிப்பிடுகிறார். சர்வாங்க தகன பலியைப் பொறுத்தவரை பாவ நிவாரணப் பணியில் ஈடுபடுகிற ஆசாரியன் பாவமற்ற நிலையில் தேவனை ஆராதிக்கிறவனாக தேவ சந்நிதியில் வருகிறவனாயிருத்தல் வேண்டும். இயேசு கிறிஸ்து ஒருவரே பாவமற்ற ஆசாரியராக, என்னை கூடார வாசலுக்கு முன்பு நிறுத்த வல்லவராயிருக்கிறார். தேவனது பரிசுத்தத்துக்கு முன்பாக எனது பிரதிநிதியாக நின்று, சர்வ வல்ல தேவனுக்கு சுகந்த வாசனையாக அங்கீகாரத்துக்குரிய பலியை செலுத்தியிருக்கிறார்.

இரண்டாவதாக, இங்கு ஒரு ஜீவன் பலியிடப்பட்டிருக்கிறது என்பதனை நான் புரிந்து கொண்டேன். குறிப்பாக இவ்விடத்தில், என் ஜீவன். . . ஆசாரியன் . . . அவைகளையெல்லாம் பலி பீடத்தின் மேல். . . தகனிக்கக்கடவன். லேவியராகமம் 1:9

இவ்வாறான வாழ்க்கையின் அர்ப்பணிப்பு என்பது தேவனுக்கு முன் செய்யப்படவேண்டிய மனித வாழ்வின் கடமையாகும். சர்வாங்க தகனபலியில் கிறிஸ்துவுக்குள்ளான மனிதன் தன் வாழ்வை முழுமையாய் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கிறான். அவ்வாழ்வு ஆவியானவரின் அபிஷேகத்திற்கும், வழிநடத்துதலுக்கும் கீழ்ப்பட்டதாக வடிவமைக்கப்படுகிறது. அவ்வாறு என் வாழ்வை தீர்மானித்தபோது, தேவனது நீதி, சத்தியம், தீமைக்கெதிரான அவரது நியாயத்தீர்ப்பு, வைராக்கியம் இது போன்றவற்றைத் தெளிவுற கண்டு கொள்ளக்கூடிய ஒரு புதிய பிரகாசத்தைப் பெற்றுக் கொண்டேன். குறிப்பாக நான் எனது பூமிக்குரிய ஜென்ம சுபாவங்களோடு கூடிய தேவ சித்தம் நிறைவேற்றுகிறவனாக விளங்கப்பண்ண முடியாது. சில நேரங்களில் சத்துருவானவன் அறியாமையுள்ள தேவ பிள்ளைகளை சத்துருவுக்கு எதிராக செயல்படுவது போலவே எண்ண வைத்து, அதே வேளையில் மாம்சீகமான வர்களாகவே காலந்தள்ளப்பண்ணி விடுகிறான். சத்துருவின் வஞ்சகத் தினிமித்தம் சில வேளைகளில் சத்தியம் மாறுபாடான உபதேசம் போலவும், உபதேச மாறுபாடுகளும், பொய்களும் சத்தியம்போலவும் நம்மில் பலருக்கு காட்சி தருகின்றன.

''அதற்கு அவர் (இயேசு) நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். லூக்.21:8

நானும், எனது மனைவியும் சபைகளுக்குள் பரவும் காட்டுத்தீ போன்ற அழிவுக்கேதுவான சில தீய சக்திகளைக் கண்டோம். குறிப்பாக முதிர்ச்சியுராத கிறிஸ்தவர்கள் அநேகர் இவ்விதமான தாக்கத்தை உடையவர்களாயிருக்கிறார்கள். தேவ சித்தத்தின் மையத்தில் நின்று பிடிக்கக்கூடாத இயற்கையான ஜென்ம சுபாவங்களைக்குறித்து அவர்களில் பலருக்குத் தெளிவில்லை. எனினும் தாங்களே பெலனற்றவர்களாயிருந்தும்

ஆவியானவரின் நடத்துதலுக்குக் காத்திராமல் அல்லது அது குறித்த போதிய அறிவு இல்லாமல் தீய வல்லமைகளால் ஆட்கொள்ளப்பட்டோர் மேல் கைகளை வைத்து பாதிப்புக்குள்ளாகிறார்கள். அடுத்து சபைக்குள் நிகழும் கேடுகளிலொன்று, இரட்சிப்பைக் குறித்த நிச்சயமற்றவர்களையும், பாவங்கள் குறித்த மனஸ்தாப உணர்வு பெறாதவர்களையும் ஒரு சிறிய ஜெபத்திற்குள் வழிநடத்தி, முற்போக்கான அறிக்கையைப் பேசும்படி உற்சாகப்படுத்தி மாயையான ஒரு கட்டுக்குள் அவர்களை அமிழ்த்தி விடும் கேடுகள் இன்றைய சபைகளுக்குள் ஏராளம் கிரியை செய்கின்றன.

இதினிமித்தம் அனேகர் வஞ்சிக்கப்படுகிறார்கள். தங்களையே அர்ப்பணிக்க அறியாத பலர் மற்றவர்களை அர்ப்பணிப்புக்குள் வழிநடத்த முயலும் மோசடித்தனம் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதுபோன்ற கிரியைகள் மனுஷரைக் கேட்டில் அமிழ்த்தும் அகந்தைக்கும், பெருமைக்குமே மனிதரை வழிநடத்தும். அது மட்டுமின்றி முதிர்ச்சியுறாத நபர்கள் "எது நலம் என எனக்குத் தெரியும்" எனக்கூறும் அவலமும் இன்று நம்மிடையே பிரபலம். ஆயினும் வேதமோ ஆலோசனைக்காரரின் அவசியத்தை அறிவுறுத்திக் காட்டுகிறது.

"ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள். அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்". நீதி.11:14

தேவ ஆளுகைக்கு அப்பாற்பட்ட நிலையிலுள்ள எனது பூமிக்குரிய மனிதனை என்னால் அர்ப்பணிக்க இயலாது. மாறாக மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்தாவியின் புதிதாக்குதலினாலும் உருவான, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய மனிதனையே என்னால் அர்ப்பணிக்க இயலும். (தீத்து 3:5) கிறிஸ்துவுக்குள்ளான இந்தப் புதிய மனிதன் தேவனுடைய ராஜ்யத்தைக் காணக் கூடியவன் மட்டுமல்ல, தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கக் கூடியவனாகவுமிருக்கிறான். இந்தப் புதிய மனிதனே தேவ திட்டத்தின்படி உருவாக்கப்பட்டு, கிருபையினாலுண்டான சத்தியத்துக்குரிய பரிசுத்தத்திலும், நன்மையிலும் நிறைந்து நிற்கும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளானவன். அதாவது அவரது ஆளுகை எனது உள்ளான மனிதனிலும், இருதயத்திலும் துவங்கி புறம்பான மனிதனில் வெளிப்படும்படியாக, திருவசனத்தைக் கேட்கிறவனாய் மட்டுமல்ல, அதன்படி செய்கிறவனாய் என்னை நான் விளங்கப்பண்ணும் அனுபவமாக்கும் அது. (யாக்.1:20,21)

என் வாழ்வில் விளங்கும் தேவ வல்லமை இத்துடன் நன்றியுணர்வோடு அவரைத்தொழுது கொள்ளும் மனிதனாகவும் என்னை தூக்கி நிறுத்துகிறது. அதினிமித்தம் உண்மையாகவே பயத்தோடும், நடுக்கத்தோடும் அவரை சேவிக்க அவர்முன் நிற்கும் நிலைக்கு அது என்னை ஆளாக்குகிறது. இப்பொழுது நான் அவரது ஆவிக்கு அடிபணிந்து முகங்குப்புற அவருக்குமுன் விழ வேண்டியதன் அவசியத்தை புரிந்து கொள்கிறேன்.

தொழுகை என்பது என்னைப் பொறுத்தவரை அவ்வேளையில் நடுக்கத்துக்குரிய ஒன்றாகவே அமைந்து விடுகிறது.

மூன்றாவதாக சர்வாங்க தகனபலி என்பது ''கர்த்தருக்கு சுகந்த வாசனையானது'' இந்த பலியில் கிறிஸ்து இயேசு என் பிரதிநிதியாக அங்கே நிற்கிறார். பாவத்தை சுமந்து நிற்கும் ஒருவராயல்ல. தேவனை பூரண பரிசுத்தத்தோடு எதிர்கொள்ளத்தக்க எனது கிறிஸ்து எனது நிமித்தம் முன்னிற்கும் என் சுதந்தரவாளியும் மீட்பருமாய் காட்சி தருகிறார். தேவனை திருப்திப்படுத்தக் கூடிய நறுமணங் கமழும் நற்கந்த பலியை அவர் அங்கே பிதாவிற்கு அளிக்கக் கூடியவராய் நின்று கொண்டிருக்கிறார். பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து எனக்காகப் பரிந்து பேசும் எனது நலம் நாடும் பிரதிநிதியாக அவர் அங்கே வீற்றிருக்கிறார். பரலோக பொக்கிஷத்தை சவதரிக்க காலமெல்லாம் நான் அண்டசராசரம் முழுதும் ஓடி அலைந்தாலும் பெறுக் கொள்ளக்கூடாத விலையேறப் பெற்ற மீட்கும் பொருளை தேவனது கரத்தில் கொடுக்கும் திறனோடு அவர் அங்கே காணப்படுகிறார்.

அன்றியும், பரலோக ராஜ்யம் நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்'' மத்தேயு 13:44

நான்காவதாக, இங்கு ஒரு வாழ்வு அர்ப்பணிக்கப்படுகிறது (ஜீவன் பலியிடப்படுகிறது) அது எனது வாழ்வு. எனது ஆசாரியர் பலியாக செலுத்திய இந்த ஜீவன பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலுமுண்டான கர்த்தருடைய ஊழியர்களின் வாழ்வுக்கு ஒப்பானதாகும். அவர்கள் தேவனுக்கு அடிமைகளாகும்படி தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள்.

''. . . அவைகளையெல்லாம் ஆசாரியன் பலிபீடத்தின் மேல் சர்வாங்கதகன பலியாகத் தகனிக்கக்கடவன்''. லேவி.1:9

இது பேதுரு போன்ற அப்போஸ்தலர்கள் பேசிய அருமையான விசுவாசத்தைப் போன்றது.

நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து வினுடைய நீதியால் எங்களைப் போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ் தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது. 2பேதுரு 1:1

இந்தபலி பலிபீடத்தின்மேல் உள்ள அக்கினியால் முழுவதும் தகனிக்கப்படுகிறது. எனது வாழ்வும் மற்றொரு நபருக்கு சொந்தமாக்கப்படக் கூடாதபடி பூரணமாய் ஆட்கொள்ளப்பட்டு பலியாக்கப்பட வேண்டும். அதாவது எல்லா நேரங்களிலும் அவருக்கே உரியதாக அது அடையாளங் காணப்பட வேண்டும். இது பூரண கீழ்ப்படிதலுக்கும் அர்ப்பணிப்புக்கும் சாட்சியாக இவ்விதம் விளங்குதல் அவசியம்.

யோர்தான் நதியில் தம்மிடத்தில் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெற வந்த பரிசேயர், சதுசேயரிடம் யோவான்ஸ்நானகன் கடுமொழி பகர்ந்தான். வரப்போகிற கோபத்தைக் குறித்து எச்சரித்து நச்சுப்பாம்புகளே என்றும் அவர்களை விளித்தான். கிறிஸ்துவின் வருகையையும், அவரது ஊழியத்தையும் குறித்து முன்னறிவித்த தீர்க்கன் அவன்.

''அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்'' மத்தேயு 3:11,12

இதிலுள்ள முக்கியத்துவம் எனக்கு தெளிவுற புரிய வந்தது. கிறிஸ்துவுக்குள், நான் எனக்கென ஒரு தாலந்தையோ, நாளையோ, உணவையோ, பொருளையோ எனக்கென ஒதுக்கிக் கொள்ளக்கூடாது. மாறாக சர்வாங்க தகனபலி முழுவதும் தகனிக்கப்படுதல் என்று சொல்லும்போது பலிப்பொருளின் அனைத்து அங்கங்களும் அக்கினியில் அழிக்கப்படுகிறது. இது ஆண்டவர் அருளும் அக்கினி ஸ்நானத்திற்கு ஒத்த ஒன்றாகும். அதன் விளைவினால் உருவாகும் கனிநிறை வாழ்வு கர்த்தரின் பங்காகும். (யோவா.15:7,8) பதர் மீந்திருப்பதில்லை. எபிரேய பதத்தில் சர்வாங்க தகனபலி குறித்து மேலேறிப்போகும் நறுமணமே பூரணமானது என்பது போல பகரப்படுகிறது. மற்றைய பலிகளில் மாம்சமானது ஆசாரியருக்கும், லேவியருக்கும் போய்ச் சேருகிறது. சர்வாங்க தகனபலியிலோ அப்படியில்லை. இது தேவனுடைய சித்தத்துக்கு என் ஆவி, ஆத்துமா, சரீரத்தை பூரணமாய் ஒப்புக் கொடுத்தலைக் காட்டுகிறது. எனது புறம்பான மனிதனில் இதை நிறைவேற்றுவது கூடாததே எனினும் கிறிஸ்துவுக்குள்ளான நிலை பூரணத்துக்கேதுவானதே (1யோவா.3:9). இவ்வாறாக அக்கினிக்குண்டம் பூரண தேவ பக்தியை பொருள்படுத்துகிறது. அதன் அர்த்தம் என்னவெனில், நான் என்னை முழுமையாய் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து அவரைப்பிரியப்படுத்த வேண்டுமென்பதே.

இது எனது புறம்பான மனிதனுக்கும் உள்ளான மனிதனுக்கும் உள்ள பெருத்த இடைவெளியை எனக்கு நினைவுபடுத்திக் காட்டுகிறது. எனது பழைய சுபாவம் மோசம்போக்கும் இச்சைகளோடு கூடிய கெட்டுப்போன ஒன்று (எபே.4:22) எனது புதிய சுபாவமோ, மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட நலமான ஒன்று (எபே.4:24,25) மட்டுமன்றி எனது புதிய சுபாவம் கெட்டதையும் நல்லதையும் பகுத்தறிந்து நல்லதையே தக்க வைத்துக் கொண்ட ஒன்றுமாகும். எனது புதிய சுபாவத்தின்படி நான் பரிசுத்த ஆவியானவருக்கு ஊழியஞ்செய்யும்படி நிபந்தனையின்றி என்னை கிறிஸ்தவ நடைமுறைக்கு

அர்ப்பணித்திருக்கிறேன். கிறிஸ்துவுக்குள்ளான எனது புதிய மனிதனை ஆவியானவரே அவர் சித்தம் போல் ஆண்டு நடத்துகிறார்.

தேவனுடைய பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிவதே புதிய சுபாவத்திற்கான கதவைத் திறந்து கொடுக்கும் திறவுகோலாகும். மாறாக என் பார்வைக்கு நலமாய்த் தோன்றும் காரியங்களுக்குக் கீழ்ப்படிவது, மேற்கூறிய கதவை அடைத்து விடக்கூடியதும், எனக்குள் கிரியை செய்யும் பழைய மோசம்போக்கும் இச்சைகளை எனக்குள்ளேயே அடைத்து விடக் கூடியதுமாய் அமைந்து விடும். எனவே இந்த விதமான பலி ஆசரிப்புக் கூடார வாசலில் செலுத்தப்பட வேண்டும் என தேவன் தெளிவுறக் கூறியுள்ளதை இங்கு கவனித்தல் அவசியம். இக்காரியம் மனிதக் கண்ணோட்டத்தில் உண்டான கண்டுபிடிப்பாயிராமல், அருமையான விசுவாசத்தின் ஆதாரமாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டு நடைமுறையில், தேவனுக்குப் படைக்கும் ஏறெடுப்பாக இரத்தம் பலிபீடத்தைச் சுற்றி தெளிக்கப்படுகிறது. இரத்தம் சிந்தப்படுதல் பரிகாரத்துக்கு அல்லது மூடப்படுதலுக்கு ஒப்பானது. அவ்வாறே கிறிஸ்துவும் ''என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை'' என்று தமது சொந்த இரத்தத்தைக் குறித்துப் பகர்ந்தார். (1கொரி.11:25) கிறிஸ்து சிலுவையில் மரித்த விதத்தை தனக்கென அங்கீகரிப்பதற்கு ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஒரு பூரண ஒப்புக்கொடுத்தலோடு கூடிய விசுவாசம் அவசியம். இந்நிலையில் ஒருகாரியம் கூற விழைகிறேன். எந்த ஒரு தனி மனிதனும் இயேசுவின் இரத்தத்தால் மூடப்படாதவனாக நியாயத் தீர்ப்பின் ஆசனத்திற்கு முன்பாக நிற்கக் கடாது என்பதே என் அங்கலாய்ப்பின் ஜெபம். என் பாவங்களுக்காக ஏற்கெனவே இயேசு நியாயத்தீர்ப்புக்கு தம்மை ஒப்புக் கொடுத்து விட்டார். இதன் பின்னும் நான் நியாயத்தீர்ப்புக்கு உட்பட வேண்டியதில்லை.

பவுலின் எழுத்துக்கள் இந்தக் கூற்றோடு ஒத்துப் போகின்றன. தெசலோனிக்கேயர் சபைக்கு பவுல் எழுதிய நிருபத்தில் கர்த்தருடைய வருகைக்காக காத்து நிற்கும் விசுவாசிக்குண்டாயிருக்க வேண்டிய சிலாக்கியம் குறித்த தனது அதீத நம்பிக்கையை அவர் இவ்வாறு வெளிப்படுத்துகிறார். கீழ்க்காணும் வசனத்தை வாசியுங்கள்.

''சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக''. 1தெசலோ.5:23

நான் இதனை மேலும் பரிசோதித்துப் பார்க்க விரும்புகிறேன். குஷ்டரோகியின் சுத்திகரிப்பின்போது இயேசுவானவர் அவனை நோக்கி, மோசே கட்டளையிட்டபடி அவர்களுக்கு முன் சாட்சியாகும்படி பலிசெலுத்தும்படி கூறினார். குஷ்டரோகியின் சுத்திகரிப்பின் நாளிலே அவன்

செலுத்த வேண்டிய நான்கு வித பலிகளை லேவியராகமம் நமக்கு பட்டியலிட்டுக் காட்டுகிறது.

குற்ற நிவாரண பலி (சீரான நிலைக்கு புதுப்பிக்கப்படுதல்)
பாவநிவாரண பலி (பாவம் மற்றும் பாவநிவாரணம்)
சர்வாங்க தகனபலி (அக்கினியாலான அழிவை (சுத்திகரிப்பை) அனுப்புதல்
போஜன பலி (எண்ணெயோடு சேர்ந்து, தொழுகையில் சங்கமித்தல்)

இவற்றில் இரண்டு பலிகளினூடே கர்த்தரே என்னோடு கடந்து வந்தார். இப்போதோ மூன்றாவது பலிக்கு முன் என்னைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார். சர்வாங்க தகனபலி மனிதனின் பூரண அர்ப்பணிப்பைத் தெரியப்படுத்துவதுடன் முழு மனிதனுக்குண்டான சுத்திகரிப்பையும், புதிதாக்கப்படும் நிலையையும் சுட்டிக்காட்டி, தேவனைப் பிரியப்படுத்தும் ஒரு சீரான நிலைக்கு மனிதரை வழிநடத்துகிறது. கலிபோர்னியாவிலுள்ள பிரெஸ்னோவில் நடந்த பரிசுத்தாவி முகாமில் நான் என்னை பலிபீடத்தில் மீண்டும் படைத்து, அர்ப்பணிப்புள்ளவனாய் நின்று கொண்டிருப்பதாக நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆண்டவரோ, ''உன் வீடு ஒழுங்குக்குள் இல்லை'' என்றார்.

அதனிமித்தம் பூரண ஒப்புக்கொடுத்தல் என்பதன் அர்த்தத்தை நான் விளங்கிக் கொள்ளத்துவங்கியதுடன் நான் முற்றிலும் அவருடையவனாய் என்னை விட்டுக் கொடுக்கும்போது தான் அவர் அருளும் ஆசீர்வாத உடன்படிக்கைக்கு பங்காளியாகிறேன் என்பதையும் தெரிந்து கொண்டேன். நான் என் சரீரத்தை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டியதாயிருந்தது.

உலகம் தனக்கேற்றபடி என்னை வனைந்து கொள்ள நான் உலகத்திற்கு என்னை விட்டுக் கொடுத்தலாகாது. மாறாக, கர்த்தர் என்னை மறுபடியும் வனைய நான் என்னை கர்த்தருக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் (எரே.18:4,6) நான் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக மனம்புதிதாகிறதினாலே மறுரூபமடைதல் வேண்டும். (ரோ.12:1,2) நான் கிறிஸ்துவுக்குள்ளான மனிதனாய் இருக்கும்படி, அவருடைய பங்காக தேவனுக்கு என்னை ஒப்புக்கொடுத்து, பரிசுத்தாவியானவரின் அபிஷேகத்திற்கும் வழிநடத்துதலுக்கும் கீழாய் இருந்து செயல்பட வேண்டுமே தவிர எனக்கென ஒன்றையும் சார்ந்து கொள்ளக்கூடாது.

பேதுரு தம்மை இயேசுகிறிஸ்துவின் அடிமையாக அடையாளங் காண்பிக்கிறார். அவர் தேவனுக்கு சொந்தமாக கொள்ளப்பட்டவர். அதாவது பேதுரு இனி என்றென்றும் தன் எஜமானுக்கே முற்றிலும் சொந்தமானவர். வாழ்வின் மேன்மையான பங்கு கிறிஸ்துவுக்கே. அவரது நேரம், காலம் முழுமையும் தேவ விருப்பத்திற்குட்பட்டதே. கூடுதலாக கேள்விகள், நிபந்தனைகளற்ற முழுக்கீழ்ப்படிதலுக்கு தேவனுக்கு விளங்கச் செய்வதே அடிமையின் நிலையாகும். அவரது எஜமானின் சித்தம்தான் அவரது சித்தம். அடிமை என்பவனுக்கு சொந்தக் கருத்துக்களோ, அதிகாரங்களோ, உரிமைகளோ, தனக்கென செலவழிக்க நேரம், காலமோ கூட கிடையாது. ஆண்டவர் சொன்னார், ''ஆம் அதுதான் சரி''. இந்த விதமான ஒப்புக் கொடுத்தல் எனக்கு முதலில் ஒரு இறக்கத்தை உண்டு பண்ணியது. எனது புறம்பான மனிதன் நிபந்தனையின்றி ஒருக்காலும், ஒருவருக்கும் உடன்பட்டதில்லை. என் ஆவியின் மனிதனோ தேவதிட்டப்படி உருவாக்கப்பட்டவன். அவன் சத்தியத்தினாலுண்டான பரிசுத்தத்திலும், நல்நிலையிலும் திளைத்து நிற்பவன். குமாரனுக்கு உகந்த மணவாட்டியாக தகுதிபெற ஆவியானவருக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து செயல்படுபவன் (ஆதி.24:38) அவரை நேசிப்போருக்குத் தந்தருளப்படும் தேவ வாக்கு இதுவே. நான் அவரை நம்புகிறேன். பேதுரு தாம் தமது அர்ப்பணிப்பில் தனியேயில்லை என்பதை தமது நிருபத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

''நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது.

நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப் போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது : தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும், காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. 2பேதுரு 1:1-4

முழுமையாய் தேவனுக்கு தன்னை அர்ப்பணிப்பது என்பது யாது? என பேதுரு தெளிவுற விளங்கிக் கொண்டார். கேள்விகள், நிபந்தனைகளின்றி தேவன் எதிர்பார்க்கும் நிலைக்கு தன்னை அர்ப்பணிப்பதே பூரண ஒப்புக்கொடுத்தல் என்பது பேதுருவுக்கு புரிந்து விட்டது. இதுவே சர்வாங்க தகனபலி. இந்த பலி முழுமையாய் தகனிக்கப்படுகிறது. உலக ஆசாபாசங்களை முற்றிலும் வெறுத்து தன்னை ஒப்புக்கொடுத்தலே அந்நிலைக்கு ஒப்பானதாகும். நான் இரட்சிக்கப் பட்டிருக்கிறேன். நல்லது எனது இரட்சிப்பின் அனுபவத்தைத் தொடர்ந்து எனக்குள் வியத்தகு மாற்றம் உண்டானது உண்மை. அதன் பின்னும் கலிபோர்னியா, பிரெஸ்னோவில் நடந்த மாநாட்டில் நான் என்னை ஆண்டவருக்கு மறுபிரதிஷ்டையும் செய்திருக்கிறேன். எனினும் அர்ப்பணிப்பின் ஆழத்தை நான் அறிந்திருக்கவில்லை. இறுதியாக என் இருதயம் சரியான நிலைக்கு வந்தது. நான் என்னை அர்ப்பணிக்க விரும்பினேன். ஆவியானவரைக் கொண்டு, அவருடைய வேளையில் நான், தேவனோடு கூட பல காரியங்களில் சீர்பொருந்த வேண்டியிருந்தது.

''சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து நியாயத்தீர்ப்புக்கு முந்திக் கொள்ளும். சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின் தொடரும். 1தீமோ.5:24

மேறகாணும் வசனத்தை வாசிக்கையில் அதை சற்றே தெளிவுற கண்ணுறத் தோன்றுகிறது. வேதத்தில் சில காரியங்கள் எளிமையாய் விளங்கிக் கொள்ளக் கூடியவை. சிலவோ விளங்கிக் கொள்ளக் கூடாதவை அல்லது அரிதானவை. புரிந்து கொள்ள அரிதானவற்றை ஆவியானவர் விளக்கிக்காட்ட நான் அவரை அனுமதிக்க வேண்டும். அதற்கென நான் அவரோடு தேவ சமூகத்தில் உட்பிரவேசிக்க வேண்டும். ஆவிக்குரிய முதிர்ச்சிக்குள் கடந்து வர தேவன் என்னை பெலப்படுத்த இப்போது ஜெபிக்க வேண்டும். (எபி.6:1,2)

''நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். உங்கள் கீழ்ப்படிதல் நிறைவேறும்போது, எல்லாக் கீழ்ப்படியாமைக்குந்தக்க நீதியுள்ள தண்டனையைச் செலுத்த ஆயத்தமாயுமிருக்கிறோம். 2கொரி.10:3-6

6. பிதாவின் முத்திரையை உறுதிப்படுத்துதல்

ஒருவன் போஜன பலியாகிய காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்த வேண்டுமானால், அவன் காணிக்கை மெல்லிய மாவாயிருப்பதாக .... கர்த்தருக்கு இடும் தகனபலிகளில் இது மகா பரிசுத்தமானது. லேவி 2:1-3

போஜன பலி

சரணடைந்த நபர் இறுதியாக போஜன பலிக்குக் கடந்து வருகிறான். இதில் பல விஷயங்கள் உள்ளடங்கியுள்ளன. இந்த பலி மெல்லிய மாவு, எண்ணெய், தூபவர்க்கம் ஆகியவற்றாலானது. மட்டுமின்றி இது புளிப்பில்லாததாகவும், உப்பு சேர்க்கப்பட்டதாகவும் இருக்கிறது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியர்கள் தேவனுக்கு முன்பாக போஜன பலியிடம் வருகையில் அதை ஆவிக்குரிய பராமரிப்பின் ஜீவாதாரமாகக் கருதுகிறார்கள். தங்களது ஜீவியத்தில் காணப்படும் குறைகள், குற்றங்களுடன் இடைபட அவர்கள் தேவனை அனுமதிக்கின்றனர். தேவனிடம் நல்மனம் பொருந்தியவர்களாய் அப்பாவ நிலையைக் கடந்து தங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் முன் செல்கின்றனர். இவ்விடத்தே இவர்கள் யாக்கோபு தேவனோடு போராடியது போல போராடி, மேற்கொள்ளும் அனுபவமாகிய வாக்குத்தத்தத்தை சுதந்தரிக்கும் நிலைக்குக் கடந்தேறுகிறார்கள் (எபி. 10:35,36) அவர்கள் இவ்வனுபவத்தின் விலைமதிப்பை அறிந்தவர்களாய், அதன் உரிமையாளருக்குத் தங்களை ஒப்புவிக்கிறார்கள். ஆண்டவரும் தமது பரிசுத்த ஆவியானவர் மூலம் அவர்களுக்குள் கிரியை நடப்பித்து, அவர்கள் போராடி மேற்கொள்கையில், அவர்களை ஆசீர்வதிக்கிறார். எண்ணைக்காக மாத்திரம் (பரிசுத்தாவியின் வல்லமை) அவரண்டை வருகிறவர்கள், பாடுகளின் வழியாகவும், அர்ப்பணிப்பினூடாகவும் கடந்து வருபவர்களல்ல என இயேசு ஆண்டவர் பகர்ந்துள்ளார். (யோவான் 10:1)

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக் காரனுமாயிருக்கிறான்.

பாடுகள்

மெல்லிய மாவு என்பது அரவை இயந்திரத்தில் தானியம் அரைக்கப்பட்டபின் எஞ்சும் பொருளாகும். மறுபடியும் மறுபடியும் தானியம் அரைக்கப்படும் இயந்திரத்திற்குள் கொட்டப்படுவதன் முடிவாக மெல்லிய மாவு கிறிஸ்துவின் பாடு உபத்திரவங்களுக்கு நிழலாட்டமா யிருக்கிறது.

அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப் போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு. மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார். (மத்தேயு 16:21)

அவர் பிரதியுத்தரமாக : எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்; அல்லாமலும் மனுஷகுமாரன் பல பாடுகள்பட்டு, அவமதிக்கப்படுவாரென்று, அவரைக் குறித்து எழுதியிருக்கிறதே அது எப்படி என்றார். (மாற்கு 9:12)

அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான். ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார். இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது. நான் என்ன சொல்லுவேன். பிதாவே இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். யோவான் 12:23-27

ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்ட துண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள். அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள். யோவான் 15:20,21.

என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே . . . நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள். அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும், மழையைப் பெய்யப்பண்ணுகிறார். (மத். 5:11,12, 44,45)

தேவனுக்கு முன்பாக பாடுகளின் ஸ்தானத்திற்கு நாம் வருகையில்தான் நமது மீறுதல்கள் அகற்றப்படும் நிலைக்கு நாம் வந்து சேருகிறோம். நம்மை நாமே அரோசித்து அருவருக்கத்தக்கதாக நமது அந்தரங்க காரியங்களை அலசி வெளிக்கொணரும்படி நாம் ஆவியானவருக்கு இடம்கொடுக்கும் பட்சத்தில் ஆண்டவர் நம்மை மன்னித்து, புதுப்பிக்கும் வரை அவரை நோக்கி கதறுகிறவர்களாக அந்நேரத்தில்தான் நம்மை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்க அது வகை செய்கிறது. அப்பொழுது நாம் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு நமது உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் நமது ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லதாயுமிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுகிறோம் (யாக்கோபு 1:21) இந்தவிதமான பணிவு நாம் பாவ நிலையைக் கடந்து தேவனுக்கு முன்பாய் நிற்பதற்கு நமக்கு வழி உண்டுபண்ணித் தருகிறது. நாம் சேவைக்குரிய விலைமதிப்பைப் புரிந்து கொண்டவுடன் ஆண்டவரும் நமது உத்தமத்தை கணக்கிட்டு, பூரண அர்ப்பணிப்பை நாம் விளங்கப்பண்ணும்படியான கிருபை நமக்குக் கிட்டும்படி நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார்.

இவ்விடத்தில் ஒரு பெரும் கேள்வி நம்மை எதிர்கொள்ளுகிறது! நான் மெல்லிய நிலைக்குக் கடந்து வர முடியுமா? எனக்குத் தெரியும் - என்னில் நானே அந்த நிலைக்குக் கடந்து வர முடியாதென்று - எனினும் கர்த்தரே தமது பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு கிரியை செய்து என்னை அந்நிலைக்குக் கொண்டு வருகிறார். எனினும் ஒரு விசுவாசியாக நான் கிறிஸ்துவோடு பாடு சகிப்பதற்கேதுவாக அந்த மெல்லிய நிலைக்கு கடந்தேகுவது சாத்தியம்தானா? அக்கினிச் சோதனைகளினூடே நான் நின்று பிடிப்பேனோ? எனக்கு மிக நெருக்கமானவர்களும் எனக்கெதிராய்

போர்க்கொடி உயர்த்தும்போது தேவன் எனக்குத் தந்த தரிசனத்திலும், அவரது மகத்தான அழைப்பின்பேரிலுமுள்ள எனது நம்பிக்கையை விட்டுவிடாதிருப்பேனா? நிந்தைகளும், உபத்திரவங்களும் என் விசுவாசத்தை சோதிக்கையிலும் வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலை கண்கூடாகக் கண்டு உணரக்கூடாத நிலைகளிலும் அச்சோதனைகளில் தாங்கிப் பிடிப்பேனோ? அநுகூலத்திற்கேதுவான அடையாளங்களைக் காணக்கூடாத நிலைகளில் விசுவாச கேடகத்தைத் தாழவிட்டு விடுவேனோ? என் வீட்டிற்கெதிராக நியாயத்தீர்ப்பின் ஆயுதங்கள் அணிவகுத்து நிற்கும்போது எனது ஆவிக்குரிய பலத்திலும், வல்லமையிலும் குன்றிப்போய் விடுவேனோ? சோதனைகளும், நெருக்கங்களும் என்னை சந்தேகத்தினாலும், பயத்தினாலும் நிரப்பி என்னைப் பழைய பலவீன நிலைக்குத் திரும்பச் செய்துவிட நான் என்னை விட்டுக்கொடுத்து விடுவேனோ?

சூழ்நிலைகளும், சுற்றுப்புற நெருக்கடிகளும், விசுவாசிகளை சோதனைக்குட்படுத்தும்படியாகவே எதிர்நிற்கின்றன. பேதுரு இந்த விதமான சோதனைகளைக் குறித்துக் கூறுகையில் இதைக் குறித்துப் புதுமையென திகைக்கவேண்டியதில்லை என்றும், இவைகள் நமது விசுவாசத்திற்கேதுவான சோதனையே என்றும், அவரது பாடுகளைப் பகிர்ந்து கொள்ளவும், அவரையே நம்பவும், அவரால் அழைக்கப்பட்ட நமக்கு ஆண்டவரால் அருளப்படும் வாய்ப்பே இது என்றும் கூறி உற்சாகமூட்டுகிறார்.

பிரியமானவர்களே, *உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். 1பேதுரு 4:12,13.*

கிறிஸ்துவின் பாடுகள் என இதனை வேதம் விளம்புகிறது. கிறிஸ்துவின் பாடுகளுக்கு நான் பங்காளியாக இயலுமோ? நான் நின்று பிடிக்கக்கூடுமோ? கிறிஸ்துவின் ஜீவியத்தில் விளங்கின அதே நற்கந்தம் எனக்குள்ளும் இருக்கிறதா? தேவனுடைய வித்து (1யோவான் 3:9) என்று யோவான் விளக்கும் தெய்வீக சாத்தியக்கூறு என் ஆத்துமாவிலும் ஏற்புடையதாய் பரிணமித்து நிற்கிறதா? அந்த சாத்தியக்கூறு பாவத்திற்கு உடன்படாதது. அது பூரணமானது.

தேவனால் எனக்குள் தந்தருளப்பட்டிருக்கிற அந்த உட்கரு தேவனிடமிருந்து வந்த புதிய ஆவியாகும். (எசே. 36:26). தேவனால் எனக்குள் அருளப்பட்ட அந்தப் புதிய ஆவியில் வாசம்பண்ணும் பரிசுத்த

ஆவியானவர் பழைய மனிதனைக் களைந்து போட்டு, புதிய மனிதனை உடுத்துவித்து கிறிஸ்துவுக்குள் உண்மைக் கிறிஸ்தவனாக வாழ அர்ப்பணித்துள்ள எனக்குள் புதிய சிருஷ்டிப்பைத் துவங்குகிறார். (எபே. 4:22-24) எனது பெலத்தில் நான் முன்செல்வேனானால், சோதனை வேளையில் என்னால் நின்று பிடிக்க முடியாது. சோதனைகளில் ஆவியானவர் வழிகாட்ட நான் என்னை விட்டுக்கொடுக்கையில், ஆவிக்குரிய பெலத்தில் நான் வளருகிறேன். எனக்கு நலமானபடியும், என் சொந்த பெலத்திலும் நான் சோதனைகளை சமாளிக்க முற்பட்டால், கெட்டுப்போகத்தக்கதாக பின்வாங்க வேண்டியிருக்கும் (எபி. 10:39) இங்கு தான் என் விசுவாசத்தின் சோதனையை கண்ணுறுதல் வேண்டும். பரிசுத்தாவியானவர் என்னை நடத்திச்செல்ல நான் அவருக்கு என்னை அர்ப்பணித்திருக்கிறேனா? உண்மையாகவே அவரை நான் நம்புகிறேனா?

எங்கள் ஸ்தாபனத்தை விட்டுப் பிரிவதற்கும் சுயாதீன ஊழியத்தைத் தொடங்குவதற்கும் இடையிலாக நானும் எனது மனைவி மேரி லாவோவும், வேதனையின் விளிம்பிற்குக் கடந்து போனோம். ஆண்டவருக்கு முன்பாக நான் எனது மனச்சாட்சியை, நேர்மையை சீர்தூக்கிப் பார்க்க வேண்டியிருந்தது. ஆதி பிரதரன் நம்பிக்கையும், நடப்பும் தேவனுக்கு முன் சுத்த மனசாட்சியைக் காத்துக்கொள்வதையே அடிப்படையாய்க் கொண்டதாயிருந்தது. அந்தவிதமான போதனைகள் நடைமுறைகளையுடைய திருச்சபையில்தான் நான் வளர்க்கப்பட்டேன். மனச்சாட்சியில் குத்தப்படுவதற்கேதுவான நிலையில் நிற்பது, ஆவியானவருக்குக் கீழ்ப்படியும் விஷயத்தில் நம்மில் ஏற்பட்டுவிட்ட ஏதோவொரு கோளாறுக்கே அடையாளம் என்றே எனக்குள் எண்ணமுடையவனாயிருந்தேன்.

இந்நிலையில் ஸ்தாபன ஒழுங்குமுறையிலான எங்களது ஊழியத்தின் முடிவுக்கான ஆரம்பம் ஒரு பெரும் ஆவியின் அருள்மாரியோடு துவங்கியது. 1981, ஈஸ்டர் ஞாயிறு அன்று ஆலயம் நிரம்பி வழிய, ஆதித் திருச்சபையின் மீது ஊற்றப்பட்டது போன்ற தேவ ஆவியின் வல்ல பிரவாகம் எங்கள்மேல் இறங்கி வந்தது. உடன்தானே அங்கிருந்த ஷெர்ரி ஸ்மித் கொடிய புற்று நோயிலிருந்து பூரண சுகம் பெற்றார். மற்ற பலர் பாவ உணர்வடைந்தனர். சில அங்கத்தினர்களும், பார்வையாளர்களும் இரட்சிப்பை சுதந்தரித்தார்கள். அநேகர் பெலவீனங்களிலிருந்து விடுதலையைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்களில் ஷெர்ரியின் தாயாரும் ஒருவர். அங்கு கூடியிருந்த அநேக விசுவாசிகள் அசுத்த ஆவிகளிலிருந்தும் விடுதலை பெற்றார்கள்.

இவ்விதமான தேவ அன்பின் பிரவாகத்தை அனுபவித்த சில வாரங்களுக்குப்பின் நான் ஒரு தரிசனம் கண்டேன். ஒரு குறிப்பிட்ட சனிக்கிழமை இரவின் பிந்திய அமைதியான வேளையில் அடுத்த நாள் காலைக்கான செய்தி குறித்து கருத்துள்ளவனாய் நான் படுத்துக்கொண்டே யோசனையாயிருந்த அவ்வேளையில்தானே, ஆழ்ந்த நித்திரைக்குள் நான் கடந்து போகுமுன் திரையில் தோன்றுவது போல இடையறாத பல சம்பவங்களின் காட்சித் தொகுப்பு என் கண்முன்னே அணி வகுத்துப் போய்க்கொண்டிருந்ததை தரிசனமாய்க் கண்டேன்.

என் கண்களுக்கு முன்பாக அறைக்குள் ஒரு காட்சியைக் கண்டேன். அதில் மிக்சிகன் மாநிலத்திலுள்ள டிரெய்டன் பிளெய்ன் என்னுமிடத்திலுள்ள ஆதி பிரதரன் திருச்சபையைப் போன்ற கட்டிடத்தின் தோற்றம் தெரிந்தது. ஆலய வளாகத்தில் மரங்கள் மற்றும் புல்வெளிகள் விரிந்து பரவிக் கிடந்தன. ஆலயக் கட்டிடத்தைச் சுற்றி அழகிய பூத்தாவரங்கள் நடப்பட்டிருந்தன. ஆலய வளாகத்தின் மொத்தப் பரப்பையும் அப்போது நான் காண முடிந்தது. ஒரு வரைகலை நிபுணர் தனது நிழற்படத்தில் முழுமையாக அனைத்தையும் சுட்டிக் காட்டியிருப்பதுபோல் அவ்வளாகம் முழுமையும் படம்பிடித்துக் காட்டப்பட்டிருந்தது. என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை என் மனைவி கவனிக்கிறாளா? என அவர் பக்கம் திரும்பிப் பார்த்தேன். அவர் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது திடீரென கர்த்தருடைய தூதன் ஒருவன் தோன்றி ஆலயக் கட்டிடத்தின் மேற்கூரையின் மையத்தில் நின்றார். அந்த தூதன் வெண்மையான வஸ்திரம் அணிந்திருந்ததுமன்றி, தனது தோள்பட்டையின் குறுக்காக தங்கக்கச்சையும் அணிந்திருந்தார். அவர் தமது இடதுகரத்தில் ஒரு பட்டயத்தை ஏந்தியவராய் அதைத் தமது தலைக்கு மேல் முதலாவது ஒரு பக்கம் திருப்பி, பின்னர் மறுபக்கம் திருப்பினார். அவர் அந்த வளாகத்தின் அனைத்துப் பகுதிகளையும் தொடர்ந்து உற்று நோக்கியவராய் தமது தலைக்கு மேல் தாம் தமது இடது கரத்தில் உயர்த்தியிருந்த பட்டயத்தையும் அவற்றுக்கெதிரே பிடித்து நின்றார். நான் முழுமையாய் இந்தக் காட்சிகளை உற்று கவனித்துக் கொண்டிருந்தேன்.திடீரென காட்சி மாறத் தொடங்கியது. ஆலயத்தின் கீழ்புறத்திலுள்ள பார்வைக்குட்பட்ட எல்லையிலிருந்து ஒரு பலத்த மேகம் எழும்பக் கண்டேன். அந்த மேகமானது மேலிருந்து கீழாக அலைபாயும் பெரும் சமுத்திரத்திற்கொப்பாய் உருண்டு புரண்டு வந்தது. அது கறுப்பும் மஞ்சள் நிறமும் கலந்த கொடூரத் தோற்றமுடையதாய் காணப்பட்டது. அது கொந்தளித்துப் பொங்கி ஆலயத்தை நோக்கிப் புரண்டு வந்தது. அவ்வாறு நான் கண்ட மேகம், புரண்டு வந்து திருச்சபையையும், பூக்கள், தாவரங்கள், மரங்களடங்கிய அவ்வளாகம் முழுவதையும் தூதன் நின்று

கொண்டிருந்த ஆலயக் கட்டிடத்தையும் கூட விழுங்கத்தக்கதாக அதனை மூடிப்போட்டது.

மேகம் கடந்து போனதாக மீண்டும் காட்சி மாறியது. மேகம் கடந்து போன பின்னரும், ஆலயமும் அதன் மரம், செடி, கொடிகளும் ஆலயத்தின் மேல் நின்ற தூதனும் அப்படியே அவரவர் இடத்தில் காணப்பட்டனர். இப்போது நான் கண்ட காட்சி மிகத் தெளிவாயிருந்தது. அனைத்தும் தெளிவாயிருந்தன. எந்த நிறமும், எந்த அசைவும் காணப்படவில்லை. மிகத் தெளிவாயிருந்தது. இப்பொழுது மேல் நிற்கும் தூதன் எல்லாப் பக்கங்களிலும் திரும்புகிறவனாயிராமல், தன் இடதுகைப் பட்டயத்தை தலைக்கு மேல் தூக்கிய அதே நிலையில் அசையாமல் நிற்கக் கண்டேன்.

இந்தத் தரிசனத்தினால் நான் தூக்கத்தை இழந்து நடுங்கித் திகைத்து உதறிக்கொண்டு படுத்திருந்த அந்நிலையில், கர்த்தாவே, இதன் பொருள் என்ன? என ஜெபித்தேன்.

உடனடியாக முழுக்காட்சியும் மாறியது. எனக்கு முன் ஒரு பெரிய சிங்காசனம் காணப்பட்டது. நான் அந்த சிங்காசனத்தை இடது புறமாகவும், பின்னாகவும் இருந்து பார்த்தேன். நான் பார்க்கக்கூடாத பிரகாசத்துடன் ஒரு பெரும் ஒளிவீசிட அதில் அமர்ந்திருந்தவரின் பிரசன்னத்தை அப்போது உணர்ந்தேன். தோற்றத்தில் அந்தப் பெரிய ஒளி பிம்பம் கண்ணாடிக் கடலுக்கொப்பாயிருந்தது. தூரத்திலேயே மறைந்து போகிறவர்களாக பெரும் ஜனத்திரள் நீண்ட வரிசைகளாய் நின்று அந்த கடலைக் கடந்து போவதையும் கண்டேன். அந்த ஜனங்கள் அகதிகளைப் போலிருந்தார்கள். அவர்கள் தங்களது பயணத்தின் இலக்கை அல்லது மறுமுனையை அடையும்படி அந்த பெரிய சிங்காசனத்தை நோக்கி அணியணியாய்ப் புறப்பட்டு வந்தார்கள்.

நான் இந்த தரிசனத்தின் விளைவாய் திகைத்துப்போனவனாய் அதன் அர்த்தத்தை விளங்கப்பண்ணும்படி கேட்டபோது, அது மறைந்தது. நான் படுக்கையறையின் இருட்டில் தனித்துப் படுத்துக் கிடந்தேன். இறுதியாக இந்த தரிசனத்தைக் குறித்து இருதயத்தில் யோசித்துக் கொண்டே தூங்கிப் போனேன்.

அடுத்த நாள் காலமே நான் குளித்து முடித்து வந்து என் மனைவியுடன் காலை உணவு அருந்தினேன். ஆயினும் அந்த தரிசனத்தைக் குறித்து ஒன்றும் நான் அவரிடம் சொல்லவில்லை. பின் நான் ஆலயத்திற்குச் செல்ல ஆயத்தப்பட்டபோது, தானே, திடீரென அந்த தரிசனத்தைக் குறித்த காரியங்களை என் பிரசங்கத்தினிடையே

நான் திருச்சபையில் அன்று காலை ஆராதனையில் பகிர்ந்து கொடுக்க வேண்டியிருக்கும் என்று நான் அறிந்திருந்தேன். எனது மனைவியும் அன்று திருச்சபையாருடன் இணைந்து தான் தரிசனம் பற்றிய அந்த செய்தியை கேள்வியுற்றார்.

பிரசங்க பீடத்திலிருந்து, நான் முந்திய இரவில் அந்த தரிசனத்தை கண்டிருந்தபடியே காரியங்களை தொடர்ச்சியாய்க் கூறினேன். பின்னர் அதன் செய்தியின் சாராம்சமாக நான் நம்பின சிலவற்றைப் பின்வருமாறு பகிர்ந்து கொண்டேன்.

ஆதி திருச்சபை தேவனிடமிருந்து ஒரு சந்திப்பைப் பெற்றிருந்தது. ஒரு புதிய ஆவிக்குரிய எழுப்புதல் முழு சபையையும் பற்றிப் பரவியது. ஒரு பெரும் ஆவியின் அருள்மாரி இந்தத் திருச்சபையின்மேல் ஊற்றப்பட்டது. வேதாகம சத்தியம் நம் மத்தியில் இன்று உயிர்பெற்றுள்ளது. ஆலய அங்கத்தினர்களில் அநேகர் தங்களது இரட்சிப்பின் உச்சநிலையைக் கண்டு களிகூர்ந்தார்கள். வரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற வாஞ்சையிலிருந்த அநேகர் பரிசுத்த ஆவியானவரின் கிருபாவரங்களை கிடைக்கப் பெற்றார்கள். திருச்சபை இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்று, ஆலய அங்கங்களாய் மாறின புதிய ஆத்துமாக்களுடன் வளர்ந்து பெருகத் துவங்கினது. பரிசுத்த ஆவியானவரால் வேதவாக்கியங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடியே தேவனுடைய ஆலோசனையைக் குறித்த பெருத்த வெளிப்பாடுகள் சபையில் உண்டாயின. சுவிசேஷம் அறிவிப்பதிலும், சாட்சி பகருவதிலும் திருச்சபை சாதனை படைக்கத் துவங்கியது. வாலிபர்கள் ஏராளம், ஏராளமாய் ஆண்டவருடைய அழைப்புக்குத் தங்களை அர்ப்பணித்து முன்வரலாயினர். முதியவர்களோ, விழித்துக் கொண்டவர்களாய், அழைப்பு வாலிபர்களுக்கு மட்டும் உரியதல்ல. ஆண்டவர் எங்களுக்கும் அதில் ஒரு பங்கு வைத்திருக்கிறார் எனக்கூறி தங்களையும் ஒப்புக்கொடுக்கலாயினர். அநேகர் தங்கள் ஜீவியத்தில் காணப்பட்ட பல கட்டுக்களும் தடைகளும் உடைக்கப்பட்டு விடுதலை பெறும்படி தங்களை தேவகரத்தில் விட்டுக்கொடுத்து விடுதலையை அனுபவித்தவர்களாய் ஆண்டவரை மகிமைப்படுத்தினர். அற்புதமான குணமாக்கும் வல்லமை அதிகமாய் ஊழியத்தில் விளங்கினது. முன்போலிருக்கக்கூடாதபடி அநேகருடைய ஜீவியங்கள் தேவனாலுண்டான விசேஷித்தத் தொடுதலைப் பெற்றன.

தேவனுடைய சந்திப்பினிமித்தம் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்ட அசைக்கப்பட்ட அதே வேளையில் இது போன்ற காரியங்களாலுண்டான சந்தேகங்களும், குழப்பங்களும்கூட சிலரிடையே உண்டாயின. சிலர்

பின் திரும்பிப் பார்த்து நமது சபைக்கு என்ன ஆயிற்று? என மற்றவர்களிடம் வினவத் தொடங்கினர். பலவித மாறுதல்களிடையே ஆவியானவரால் உண்டுபண்ணப்பட்ட பெரும் மாற்றத்தை திருச்சபையில் நிலைநிறுத்தும் பெரும் பொறுப்பு அங்கே உண்டாயிருந்தது. பலர் முதல் முறையாய் அசுத்த ஆவிகளின் பிடியை உணர்ந்து சாத்தானால் உண்டான இதுபோன்ற தாக்குதல்களைக் குறித்து தவறாய் புரிந்துகொள்ளக்கூடிய அபாயங்களும் அங்கே காணப்பட்டன.

மூன்று ஆண்டுகளாக நீங்கள் ஒரு ஆவியின் நிறைவை உடைய மேய்ப்பருக்காக ஜெபித்து வந்தீர்கள். இறுதியாக ஆண்டவர் உங்கள் ஜெபத்திற்குப் பதிலாக கர்த்தரை நேசித்து அவருடைய ஆவியான வருக்கும் அவரது வார்த்தைக்கும் உண்மையாயிருக்கும் ஒரு போதகரை உங்களுக்கு அனுப்பித் தந்திருக்கிறார். நீங்கள் இது குறித்து மிகவும் மகிழ்ச்சியுற்று, அந்நிய பாஷை, விடுதலை மற்றும் அனைத்துக் காரியங்களையும் அனுபவித்து ஆசீர்வதிக்கப்படுகிறீர்கள். சிலர் நான் காரியங்களை வெளிப்படுத்தும் முன்னேயே வரங்களைப் பிரயோகிக்கத் துவங்கி விட்டீர்கள். எனக்குத் தெரியும் - அருள்மாரியின் வேளைகளில் சகோதரரெல்லாம் ஒருமித்து தொடர்ந்து ஒரே நிலைக்குள் இருந்து விடுவதில்லை. நான் ஆவியானவரால் உண்டான இந்த தாக்கத்தை வலுக்கட்டாயமாய் சபையாரிடையே உந்தித் தள்ள விரும்பவில்லை. எனினும், எப்படியும் உங்களில் மூன்றில் ஒரு பகுதியினராயினும் தாங்கள் பேசுவதன் அர்த்தத்தையும் விளங்கிக் கொண்டிருப்பீர்களென நம்புகிறேன். அவர்கள் சரியானவைகளைப் பேசுகிறார்கள். எனவே சரியானபடி நடக்க ஆயத்தப்படுவார்கள் என நான் கருதுகிறேன். இதன் விளைவாக ஆவிக்குரிய யுத்தம் - விடுதலை குறித்த காரியங்களில் உங்களில் சிலருக்கு ஆலோசனைகளைக் கொடுத்து உற்சாகப்படுத்த நான் விரும்பு கிறேன். நான் ஏற்கெனவே உங்களிடம் பேசுகையில் நீங்கள் உட்பிர வேசித்த அதே ஆவிக்குரிய கதவின் வழியாக பின் திரும்பிப் போய்விட நினைத்தால் அது முடியாத காரியம் என்பதை விளங்க வைத்தேன். ஒரு முறை உட்பிரவேசித்து விட்டால் முன் செல்லவே நாம் விருப்பங்கொள்ள வேண்டும். ஆவிக்குரிய யுத்த காண்டத்தில் ஆவியானவர் என்னைப் பழக்குவித்த விதத்தை நான் ஏற்கனவே உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். உங்களில் எவரும் இந்நிலையிலிருந்து பின் திரும்பவில்லை. மாறாக முன் சென்று வெற்றி வாகை சூடவே உறுதி பூண்டீர்கள்.

அதன்பின் உங்களில் பலர் என்னிடம் தனித்து வந்து எனது ஊழியத்தின் விடுதலைப் பகுதியை தவிர்த்து விடும்படிக் கேட்டுக் கொண்டீர்கள். அப்பொழுது நான் உங்களிடம் எனக்கு கர்த்தர் கொடுத்த

அந்த விடுதலை ஊழியத்தைக் குறித்து மறு பரிசீலனை செய்யவோ, அதனைவிட்டு விடவோ முடியாது என்றும் அதினிமித்தம் கர்த்தர் என்னை மிகவும் நொறுக்கித்தான் இவ்வித ஊழியத்தை என்னிடம் தந்துள்ளதாகவும் கூறினேன். இதை விடுவதா? தொடர்வதா? என தெரிந்து கொள்ளும் உரிமை எனக்கில்லை. நீங்கள் நினைவுபடுத்திப் பார்க்கக் கூடுமானால், நான் விடுதலைக்கான ஆலோசனைகளை உங்களுடன், உங்கள் நண்பர்களுடன் என் மனைவியின் முன்னிலையில் எச்சரிப்புடன் பகிர்ந்து கொண்டது உங்களுக்கு நினைவில் வரும்.

நான் ஏற்கெனவே இதிலுள்ள எதிர்வினை அம்சங்களைக் குறித்து உங்களுக்குக் கூறியிருக்கிறேன். தேவனுடைய சந்திப்பு என்பது பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி, வரங்கள் அனைத்தையும் உள்ளடக்கி வரும் அதே வேளையில், சில எதிர்மாறான விளைவுகளையும் அப்பொழுது நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அந்த எதிர்வினை அம்சங்கள் ஆவியானவரின் நிகழ்வை விரும்பாத அசுத்த ஆவிகளாலுண்டான செயல்பாடுகளாகும். நாம் எந்த அளவிற்கு உண்மையுள்ளவர்களா யிருக்கிறோம் என்பதை சோதித்துப் பார்க்கவே, இவைகளையும் தேவன் நம்மிடையே அனுமதிக்கிறார். சோதனைகளில்லாமல் நிலையான ஆவிக்குரிய வளர்ச்சியையோ, மாற்றத்தையோ நாம் பெற்றுக்கொள்ள முடியாது. இயேசு வனாந்தரத்தில் சோதனைகளினூடே கடந்து போனார். அவர் அங்கே ஆவியானவரால் நடத்திச் செல்லப்பட்டார். அவர் சோதனைக்காரனுக்கு எதிர்த்து நின்று, பரிசுத்தாவியானவரின் வல்லமை யால் நிறைந்தவராய் தமது ஊழியத்தைத் துவக்க (லூக். 4:14) கடந்து வந்தார்.

திருச்சபை இந்நாட்களில் சோதனைக்காரனின் சோதனைகளி னூடே கடந்து போய்க் கொண்டிருக்கிறது. சோதனைக்காரன் தோற்கடிக்கப் பட்டாலொழிய தொடர்ந்தேர்ச்சையான வல்லமை ஊழியம் நிறைவேற்றப் படுவது இயலாத ஒன்றாகிவிடும். தேவன் எதிர்பார்க்கிற அந்த உண்மை நிலைக்கு திருச்சபை முன்னேகி வந்தால் மட்டுமே, அது ஜெயங் கொள்ளுகிற சபையாக தன்னை தேவனுக்கு முன் விளங்கப்பண்ண முடியும். எனது தரிசனத்தில் ஒரு மாபெரும் ஆவிக்குரிய சூறாவளி எமது வழியே கடந்து போவதையும் கண்டேன். அது முழு சபையையும் துடைத்துப் போட்டதாகவே தெரிந்தது. அது கிழக்கே ஒரு புறத்தில் தோன்றி, சபையை நோக்கி பெரும் அமளியோடும், அச்சுறுத்தலோடும் நகர்ந்து வந்தது. இது சபைக்கு எந்த வேளையிலும் நிகழக்கூடியதாயிருந்த ஆவிக்குரிய ஆபத்தை சுட்டிக்காட்டும் எச்சரிப்பாயிருந்தது. திருச்சபை யானது தேவனது சந்திப்பைக் குறித்த தனது விசுவாசத்திலும் நிச்சயத்திலும்

நிலைத்திராமல், முன் காலங்களை திரும்பிப் பார்க்கும் பட்சத்தில் திருச்சபையே அச்சூறாவளிப் புயலினால் விழுங்கப்படும் அபாயமும் அதில் காணப்பட்டது. சூறாவளி கடந்து போகையில். தேவனது அசைவாடுதலையே திருச்சபை நழுவ விட்டுவிடக்கூடிய நிலைக்குள்ளாகக் கூடியதிருக்கலாம். அப்படியெனில் அது ஜெயங்கொள்ளுகிற சபையாயிராது. அது பின் திரும்பிப் பார்த்த லோத்தின் மனைவிக்கு ஒத்ததாகிவிடும். (ஆதி. 19:26). நான் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்காக பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் பின் திரும்பிப் பார்க்காதவர்கள். பெரிய பலனுக்குரியவர்கள். எனது தரிசனம் ஜெயங்கொள்ளுகிறவர்களால் வரும் கர்த்தருக்கடுத்த ஆவிக்குரிய அறுவடையையும் உள்ளடக்கியதாகும்.

திருச்சபையை விழுங்கும்படி அச்சுறுத்தலோடு புறப்பட்டு வரும் சூறாவளிக்கு எதிர்த்து நிற்க நான் திருச்சபையை உற்சாகப்படுத்துகிறேன். திருச்சபை தனது நம்பிக்கையை கர்த்தர் பேரிலும் அவரது வார்த்தையின் பேரிலும் வைக்கட்டும். திருச்சபை தான் அடையத்துடிக்கிற பலனை தவறவிடாமலும் உறுதியில் தளர்ந்து விடாமலும் இருக்கட்டும். அவ்வாறு இத்திருச்சபையை கிறிஸ்து இயேசுவின் பேரிலுள்ள தனது நம்பிக்கையிலும், தன்னடுவில் ஏற்பட்டுள்ள ஆவியானவருடைய அசைவாடுதலைக் குறித்த நம்பிக்கையிலும் உறுதியாயிருக்குமானால் இத்திருச்சபையின் விளக்குத் தண்டு அதனிடத்தினின்று அகற்றப்படுவதில்லை. இத்திருச்சபை ஜெயங்கொள்ளுகிற சபையாகவுமிருக்கும்.

ஒரு ஆண்டுக்கு மேலாகியு!ம் முதல் சபையில் நடந்த ஊழியத்தில் எங்களுக்கு விடுதலை கிட்டவில்லை. ஊழியத்தின்மேல் வந்த தாக்குதல் நிமித்தம் எனக்கு ஓய்வு தேவைப்பட்டதாக நான் உணர்ந்தேன். எனவே நான் அதற்கென புறப்படுமுன் ஊழியஞ்செய்வதற்கு அதிகாரம் பெற்றிருந்த அர்ப்பணிப்புள்ள ஒரு வாலிபனை முன்னிறுத்தி, அவர்மேல் என் கைகளை வைத்து எனக்குள்ளிருக்கிற அதே ஆவிக்குரிய அபிஷேகம் அவரது ஊழியத்திலும் விளங்க ஆண்டவரிடம் வேண்டிக் கொண்டேன். இறுதியாக நாங்கள் எங்கள் மகன் கர்திஸ் மற்றும் அவரது குடும்பத்தினருடன் விடுமுறையைக் கழிக்கும்படி அவரது இருப்பிடமான இடகோவுக்கு புறப்பட்டுப் போனோம்.

நாங்கள் விடுமுறை முடிந்து திரும்பி வருகையில் ஆவியின் நிரப்புதல் பெற்ற அங்கத்தினர் குழுவொன்றினை சந்திக்கும்படி நாங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டோம். அக்குழு திருச்சபையின் சட்டதிட்டக் குழுவல்ல எனினும் சில விதிமுறைகளைப் பெற்றிருந்தது. அக்குழுவுடனான கூட்டத்தின்போது எங்களது ஊழியம் விமர்சனத்துக்குள்ளானது. குறிப்பாக விடுதலை ஊழியப்பகுதி அலசப்பட்டது. எனக்குள்ளிருந்த

அதே அபிஷேகம் எந்த நபருக்குள் இறங்க வேண்டும் என நான் கருதினேனோ அதே குறிப்பிட்ட நபரால் நான் நிந்திக்கப்பட்டேன். காரணம் ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்த புத்தகங்களை நான் அவருக்குப் படிக்கக் கொடுத்திருந்தேன். அப்புத்தகங்களின் ஆக்கியோனை அந்நபர் அங்கீ கரிக்காதிருந்தார். எனவே, அவரும் விடுதலை ஊழியத்தைக் குற்றப் படுத்தும் நிலையில் அங்கே நின்றிருந்தார்.

அதற்கு முன் முதல் சபையின் ஊழியத்தின் துவக்கத்தில் தனது நண்பர்கள் சிலரது விடுதலை வேண்டி நிம்மதியில்லாமல் நின்று கொண்டிருந்த நபர்தான் அவ்வாலிபர். சரியாக சொல்லப்போனால் நான் போதகராக அங்கு பொறுப்பேற்குமுன் மிச்சிகன் பிரதரன் கேம்ப்பில் இது நிகழ்ந்தது. நானும் எனது மனைவியும் மனமொத்து மேய்ப்பர் பணியை ஒப்புக்கொள்ள முன் வந்த அவ்வேளையில் உண்மையாகவே எங்கள் பொருட்களை ஒழுங்குபடுத்தக்கூட நேரமில்லாத அளவுக்கு எங்கள் அறையின் வாசற்படியில் எப்போதும் மக்கள் கூட்டம் காத்துக்கிடந்த நாட்கள் அவை.

ஆனால் இக்கூட்டத்தின் போது மேற்கூறிய அவ்வாலிபன் சிலரது துணையுடன் சில போதகங்களை (விழுகை, மீட்கப்படாமை, புதுப்பிக்கப்படாமை, தெய்வீக நிலையை அடைய முடியாத ஜென்ம சுபாவங்கள்) குறித்து மோசமாக விமர்சித்தான். இவையனைத்தும் என்னை ஒரு இக்கட்டான நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தின.

இறுதியாக நான் மிகவும் கோபப்படவேண்டியதாயிற்று. நான் தேவன் அருளிய வரங்கள் கிருபைகளுக்காக அவருக்கு உத்தரவாத முள்ளவனாயிருந்தேன். எனினும் இத்தாக்குதல் என் விசுவாசக்கப்பலை நிலைகுலையச் செய்து என்னை கூலிக்கு மாரடிக்கிறவனாக மாற்றிப் போட்டது. என் நல்மனசாட்சியே அவ்விடத்தில் சேதப்பட்டுப் போயிற்று (1பேதுரு 3:21) பணத்துக்கு ஊழியஞ்செய்கிற நோக்கம் எனக்கு இருந்ததில்லை.

முதல் சபையில் நடந்த நிகழ்வுகள் விவாதப் பொருளாகி, அதன் விளைவாகவே நான் பணத்துக்காக ஊழியஞ் செய்யவேண்டிய நிலைக்கு என்னைத் தள்ளிவிட்டது. அது என் மனச்சாட்சிக்கு மாறானதாகவும், என் விசுவாசக் கப்பலை சேதமுறச் செய்வதுமாகவே இருந்தது. சபையார் பார்வைக்கு நலமாயிருந்ததை நான் செய்யும்படி அவர்கள் என்னை எதிர்பார்த்தார்கள். திருச்சபை தேவசித்தத்தின் மையத்தில் இல்லை. மனுஷீகமே மேலோங்கி நின்றது.

எனது அடுத்த அசைவு தேவனுக்கு முன் என்னை பாவியாக்கிவிட்டது. கோபத்தோடு கூட நான் எழுந்து திருச்சபையின்

பொறுப்புக்குழு தலைவரை நோக்கி, இத்திருச்சபையின் மேய்ப்பர் பொறுப்பிலிருந்து வேண்டுமானால் நான் விலகிவிடுகிறேன். ஆனால் என் ஊழிய நிலையை என்னால் மாற்றிக்கொள்ள இயலாது. என்னிடத்தில் இக்கூட்டத்தாரின் வித்தையெல்லாம் பலிக்காது. அவ்வளவுதான்! எனக்கூறிவிட்டு என் மனைவியுடன் எழுந்து கூட்டத்தை விட்டு வெளியேறி விட்டேன்.

அன்று இரவில் நாங்கள் படுக்கையில் படுத்திருந்த வேளையில் ஒரு பெரும் அச்சம் எங்களுக்குள் எழுந்தது. அக்கூட்டத்தார் நிமித்தமல்ல, ஆனால் தேவ கரம் எங்களுக்கு மேலே அசைவாடிக் கொண்டிருந்தது. எங்களது முடிவைக் குறித்து தேவனுக்கு ஒரு எதிர்பார்ப்பு இருந்தது.

நானோ எனது போதகர் பணியைத் தொடரலாயினேன். எனது பிரசங்க பாணியே மாறிவிட்டது. ஸ்தாபன உபதேசங்களை அதிகம் பேசத் துவங்கினேன். ஆவிக்குரிய வேதாகம விதிமுறைகளைக் குறித்து பிரசங்கிப்பதைக் குறைத்துக் கொண்டேன். ஆனால் முடிவாக சூறாவளிக்கெதிராய் நின்று பிடிக்க முடியாமற்போனதைக் கண்டு கொண்டேன். அதிக ஜெபத்திற்குப் பின் கண்ணீரோடும், முழங்காலை முடக்கியும் தேவனைத் தேடியதன் பலனாய் மூன்று மாதங்களுக்கு மேற்பட்டு பிரதரன் சபையோடு கூடிய எங்கள் ஐக்கியத்தைத் துண்டித்துக் கொண்டோம். இயேசுவின் ஊழியத்திற்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டுமென எங்கள் உள்ளம் ஏங்கியதன் விளைவே அது. அந்த மூன்று மாதங்களில் பலமுறை யோபுவின் வார்த்தைகள் என் சிந்தையில் வந்து வந்து போனது.

அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம்பண்ணுவேன். அவரே என் இரட்சிப்பு; மாயக்காரன் அவர் சந்நிதியில் சேரான். யோபு 13:15-16.

ஆண்டவர் முடிவாக எங்களை சுயாதீன ஊழியத்திற்கென வழிநடத்தினார். நான் எப்படி வித்தியாசமாக இதில் ஈடுபட்டேன்? என அடிக்கடி எனக்குள் நான் எண்ணுவதுண்டு. ஸ்தாபனத்தில் ஊழியஞ்செய்வது இவைகளைக் குறித்து நாம் பல காரியங்களை கேட்கலாம் - கவனிக்கலாம். ஆனால் நாம் அக்காரியத்தில் முடிவெடுக்கும் வரை அதன் முழுப்பரிமாணத்தை நம்மால் விளங்கிக்கொள்ள முடியாது. ஒரு திருச்சபையின் போதகர் பொறுப்பினை ஏற்குமுன் அனைத்துக் கிறிஸ்தவக் கோட்பாடுகளும் நான் பெற்றுள்ள ஆவிக்குரிய வெளிப்பாட்டினை ஒத்ததாகவோ, ஒட்டியதாகவோ இராது என்பதனையும் நான் அறிந்து கொண்டவனாயிருத்தல் வேண்டும். ஆனால்

ஒரு ஸ்தாபன சபையில் போதகர் அழைப்பை ஒப்புக்கொள்ளு முன் நான் என் வீட்டு வேலையை முடிக்காதிருந்து விட்டேன். இயேசு ஆண்டவரின் அறிவுரைக்கு மாறாக நான் புதிய திராட்சை ரசத்தை பழைய துருத்தியில் ஊற்றி விட்டேன் (மத். 9:17). எனது புதிய ஆவிக்குரிய ஊழியத்தின் குறைவான அனுபவத்தினிமித்தம் இக்காரியம் நடந்து விட்டது. இதனிமித்தம் தேவன் என்னை மன்னிக்கும்படி நான் அவரிடம் கெஞ்சினேன்.

ஊழியத்தில் நான் கடைபிடித்த பழைய பாணி ஏற்புடையதல்ல என்பதை நான் கண்டுகொண்டபோது, ஒத்தாசைக்காக நான் ஆண்டவரிடம் திரும்பினேன். வல்லமை ஊழியத்தை தவிர்த்து விடுவது உள்ளூர் பிரதரன் சபையை திருப்திப்படுத்துவதாய் அமையலாம். அத்திருச்சபையின் மாவட்ட நிர்வாகிகளையும் அக்காரியம் திருப்திப் படுத்தி விடலாம். ஆனால் நடந்துவிட்ட தவறென்னவெனில், தேவன் தமது ஜனத்தை சந்திக்கும்படி தமது திருவுளத்தில் கொண்டிருந்த புதிய வழிமுறையில் எனது பணி நிறைவேற்றப்படாததே. தேவன் பூமியில் புதிய காரியங்களை நடப்பித்தாலும் அதுகுறித்த அவரது அநாதி சித்தம் பூமியை அவர் அஸ்திபாரமிட்ட காலத்திற்கும் முந்தியதே. அவர் எப்பொழுதும் தமது ஜனத்தை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து பரிபூரண ஜீவனுக்குள் வழிநடத்துகிறார். ஆண்டவரும் தமது ஜனத்தோடு இடைபடும் வேளைகளில் தமது அநாதி நோக்கத்தையும் தொடர்ந் தேர்ச்சையான புதிய கிரியைகளையும் உள்ளடக்கியே செயல்படுகிறார். அதே வேளையில் உலகத்தில் புதிய செயலாக்கங்கள் உருப்பெறும் போதெல்லாம் சூரியனுக்கு கீழான அனைத்து மட்டங்களிலும் அச்செயலாக்கம் எதிர்ப்புக்கும் உள்ளாகாமற் போகிறதில்லை.

நாங்கள் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலுக்குக் கீழ்ப்படிந்து சுயாதீன ஊழியத்தை நிர்மாணித்த அந்த வேளையில், தெய்வீக நிலைக்கு அப்பால் எனது சரீரத்திற்கடுத்த புறம்பான நிலைகளிலும் ஆழமாக சில படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டேன். குறிப்பாக சுயாதீன ஊழிய ஸ்தாபிப்பு தலைமைத்துவம் என்றால் என்ன என்பதை சரியாய் விளங்கிக் கொள்ளத்தக்க அனுபவத்தை எனக்குக் கொடுத்தது. தேவனிடமிருந்து அதிகாரங்களைப் பெற்றுக் கொள்கிற மனிதர்களின் ஜீவிய பாதையில் பெரும் ஆபத்துக்களுக்கும் இடமுண்டு என்பதனை நாம் அறிதல் வேண்டும். ஆவிக்குரிய தலைமைத்துவம் மிகுந்த நம்பிக்கைக்கும் உண்மைக்குமுரியது. எனவே தலைவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலோடு தங்கள் ஊழியங்களை நிறைவேற்றாத பட்சத்தில் அவர்களது பதவிப் பொறுப்பே அவர்களை மோசமான பின்னடைவுக் குள்ளாக்கிவிடும். மட்டுமின்றி மந்தையிலும் பெருத்த சேதத்தை

விளைவித்து விடும். மந்தையின் ஆடுகள் மேய்ச்சல் நிலத்தை மிதித்து குடிக்கும் தண்ணீரையும் குழப்பிப்போடும்.

என் மந்தையே *கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால் : இதோ ஆட்டுக்கும் ஆட்டுக்கடாக்களுக்கும், வெள்ளாட்டுக் கடாக்களுக்கும் நான் நியாயந்தீர்ப்பேன். நீங்கள் நல்ல மேய்ச்சலை மேய்ந்து உங்கள் மேய்ச்சல்களில் மீதியானதை உங்கள் கால்களால் மிதிக்கலாமா? தெளிந்த தண்ணீரைக் குடித்து மீதியாயிருக்கிறதை உங்கள் கால்களால் குழப்பிப் போடலாமா? என் ஆடுகள் உங்கள் கால்களால் மிதிக்கப்பட்டதை மேயவும், உங்கள் கால்களால் குழப்பப்பட்டதைக் குடிக்கவும் வேண்டுமோ? (எசே. 34:17-19).*

சுயாதீன ஊழியங்களிலும் கூட பரிசுத்த ஆவியானவரின் புதிய செயல்பாடுகளின்போது மக்கள் எதிர்விளைவுகளைத்தான் விளங்கப் பண்ணுகிறார்கள். நான் இப்பொழுது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் கீழாக ஊழியஞ் செய்வதில் நல்ல அனுபவத்தையும், அறிவையும் உடையவனாகி விட்டேன். சுத்திகரிப்பின் அக்கினியினூடே கடந்து போயிராத நபர்கள் நாம் தேவனுடைய ஆலோசனையோடும் தரிசனத்தோடும் முன்செல்கிற நேரங்களில் நம்மைப் புடமிடும் அல்லது நம்மில் தேவையற்ற பகுதிகளை அகற்றிடத்தக்க சோதனைகளை வருவிக்கிறவர்களாய் காணப்படுகிறார்கள். நான் எப்பொழுதெல்லாம் பின்னால் தட்டப்படுகிறேனோ, அப்பொழுதெல்லாம் தேவனையோ, தேவ சமூகத்தையோ நழுவ விட்டுவிடாதபடி என் கவனத்தை அதிகமாய் நான் ஆண்டவர் பேரில் பதித்திருக்கிறேன். பெலவீன நேரங்களையே தேவன் என்னை சந்திக்கும் நேரமாய் அவர் பயன்படுத்திக் கொள்கிறார். ஆசாரியர்களாய் தேவனுக்கு ஊழியஞ் செய்யும்படி அழைக்கப் பட்டவர்கள்,

"மண்டபத்துக்கும், பலிபீடத்துக்கும் நடுவே அழுது, கர்த்தாவே, நீர் உமது ஜனத்தைத் தப்பவிட்டுப் புறஜாதிகள் அவர்களைப் பழிக்கும் நிந்தைக்கு உமது சுதந்தரத்தை ஒப்புக்கொடாதிரும். உங்கள் தேவன் எங்கே என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்க ளாக." யோவேல் 2:17.

உபத்திரவத்தின் உச்சகட்டமே கர்த்தர் களையெடுக்கத்துவங்கும் நேரம் தான் எனலாம். பொல்லாங்கின் கிரியைகளையும், மாம்சீகக் காரியங்களையும் அகற்றும் ஆண்டவரின் பணிகளை நான் இங்கே குறிப்பிடவில்லை. மாறாக நமது ஜீவியங்களிலும், ஊழியங்களிலும் ஒரு காலத்தில் மகிமையாகவும் அலங்காரமாகவும் இருந்தவைகளெவைகளோ-

அவைகளை அவர் எடுத்துப் போடுகிறதைக் குறித்தே நான் இவ்வாறு கூறுகிறேன். ஆடுகள் நம்மைப் பின்பற்றக் கற்றுக்கொள்ளும்போது, ஊழியத்தில் நாம் நிகழ்த்தியுள்ள சாதனைகளும், பெற்றுள்ள வெற்றிகளும் ஒருசேர, நம் ஊழியத்தைக் குறித்த பெருமைக்குள் நம்மை இட்டுச் சென்றுவிடுகின்றன. அந்நிலையில் ஆவிக்குரிய வளர்ச்சியின் முன்னேற்றத்தின் பொருட்டு ஆண்டவர் நம்முடைய பழமைகளிலிருந்தும், நமது சாதனைகள் குறித்த பெருமைகளிலிருந்தும் நம்மை வெளியே கொண்டுவர தொடர்ந்தேர்ச்சையான இடைவெளிகள் மூலம் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குள் நடத்துகிறார். அதற்காக சில சமயங்களில் அவர் சில அழுத்தங்களையும், பலாத்காரங்களையும் கூட பயன்படுத்துகிறார். (மத். 11:12, லூக். 16:16) அவர் தமது ஜனத்தை கட்டுகளிலிருந்து விடுவித்து, தமது ராஜ்யத்தின் புதிய பரிமாணத்திற்குள் வழிநடத்துகிறார் அதன்மூலம் நமது என்ற நிலையிலிருந்து நாம் விடுபட்டு அவருக்குள் என்ற நிலைக்குள் நாம் கடந்து போகிறோம்..

ஆலையின் அழுத்தத்தை அறுவடைக் காலத்தில்தான் திராட்சைக்கனிகள் உணர வேண்டும். அது நெறிக்கப்பட்டது. (ஏசாயா 42:3). சகோதரரே கிறிஸ்தவ ஊழியர்களும், பிரசங்கிமார்களும் மற்றவர்களால் அறியப்படாதவர்களாக, ஆதரவு காட்டப்படாதவர்களாக கடும் உழைப்பில் உழல நேரிடும் போதிலும் பசித்திருப்போர் பலரையும் போஷிக்கத்தக்கதாக தங்களையே அப்பங்களாக பிட்கக் கொடுத்திருக்கிறார்கள். கிறிஸ்துவுக்கே சகல மகிமையும் சேரும்படி மிகுந்த பக்தியுடனும் பாங்குடனும் அவர்கள் சிறப்புற சேவை செய்துள்ளார்கள்.

தேவனுக்காக பலிபீடத்தின்மேல் தங்களை அவர்கள் பானபலியாய் வார்த்திருக்கிறார்கள். நமது சுதந்தரத்தின் மேலான அளவைக் கருத்திற்கொண்டு தமது ஜனத்தை உயர்வாய் நடத்திச்செல்ல தேவன் ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார். தமது மேன்மையான தெய்வீக நிலைக்கடுத்த உச்சகட்ட ஈடுபாட்டை நமக்குள் உண்டாக்கும் விதத்தில்தான் அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இதற்கெனவே, அவர் முந்திய ஆசீர்வாத ஊற்றுக்கண்களை மூடி விடுகிறார். அப்படி அவர் செய்வது நம்மை சோர்ந்து போகச் செய்ய அல்ல, மாறாக அவரோடு இணைந்து முன்செல்லும்படி உற்சாகப்படுத்தவே அவர் அப்படிச் செய்கிறார். நாம் நமது பாதங்களில் ஒட்டிக்கொண்டுள்ள தூசியை உதறிப்போட வேண்டும் (மத். 10:14). மட்டுமின்றி ஆவியானவரின் ஆழமான புதிய அசைவுக்குள் கடந்து போக நம்மை விட்டுக்கொடுக்க வேண்டும். ஒருவேளை இந்நிலை குறித்த எதிர்மாறான சந்தேகக் கோடுகள் நமக்கு அப்போது எழலாம். எனினும் ஆண்டவரின் ஆழங்களுக்குள் மேன்மையான அனுபவங்களைப் பெறவே ஆண்டவர்

அவ்வாறு நம்மை அழுத்தங் கொடுத்து அழைத்து வந்துள்ளார் என்ற தெளிவை கண்டிப்பாக பின்னொரு நாள் நாம் பெறுவோம் என்பதில் ஐயமில்லை.

அன்றியும் *அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 8:28)*

கர்த்தர் எங்களை வைத்துள்ள நிலை குறித்து ஒரு முகாமின்போது உண்டான தீர்க்கதரிசன வார்த்தைகளின் மூலம் நானும் மேரி லோவாவும் மிகவும் உற்சாகப்படுத்தப்பட்டோம். தேவனுடைய சந்திப்பின்போது உண்டான வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலின் ஆரம்பத்தைக் காணும் இடமாக அது அமைந்தது. நான் ஊழியத்தைத் துவங்கினதிலிருந்து என் ஊழியத்தில் நான் கண்ட சிலிர்ப்பூட்டும் ஆவிக்குரிய நிலைப்பாடுகளில் முதன்மையானது இது என்பேன். அதுமுதல் சகோதர அன்பு உணர்ந்து கொள்ளக்கூடிய நிலைக்கு உயர்ந்தது. ஊழியனின் இருதயம் புதிய பிறப்பெடுத்ததுபோல் இளகிய இருதயமாயிற்று. ஜனங்களின் இருதயங்கள் மேலும் மேலும் தேவனுடைய வசனத்திற்கு திறந்து கொடுத்துக் கொண்டேயிருந்தன. ஆவியானவருடைய அசைவாடுதலுக்கு ஜனங்கள் தங்களை விட்டுக் கொடுத்தார்கள். தேவனைப்பற்றும் பசி எங்களுக்குள் எழலாயிற்று.

நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருங்கள், ஆனால் தேவனுக்கு காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். தமது ஜனத்தின் தீபங்களை ஏற்றிவிடவும் ஆங்காங்கே அநேகரை மறுபடியும் உயிர்ப்பிக்கவும் ஆவியானவர் கிரியை செய்யத் துவங்கிவிட்டார். என் ஆவியின் அக்கினியினைக் கொளுத்திவிட இந்த வேளையை நான் நோக்கத்தில் கொண்டிருக்கிறேன் என்று ஆண்டவர் உரைக்கிறார். இந்த சபையின் மீது ஒரு தேவனுடைய சந்திப்பு உண்டாகும். முரண்பாடுகளாய் பேசப்படும் காரியங்களும், சூழ்நிலைகளும் உன்னை மேற்கொள்ள நான் அனுமதிக்க மாட்டேன். உன் மாம்சக் கண்களால் வரப்போகும் காரியங்களை நீ கண்ணுறும்படியும் நான் உன்னை அனுமதிப்பதில்லை. என்னைப் பற்றிக்கொள் என்று உனக்குக் கர்த்தர் சொல்லுகிறார். ஆபத்தின் நடுவில் நீ இருக்கையில் என்னை நான் உனக்கு வெளிப்படுத்துவேன். பிரச்சனைக்கு நானே பரிகாரம் தருவேன். நானே பதில் தருவேன் என்று ஆண்டவர் உரைக்கிறார்.

என்னை நோக்கிப்பார். உன் ஊழியத்தில் ஒரு புதிய சகாப்தம் உண்டாகப் போகிறது. நீ ஏற்கனவே அறுத்தது கொஞ்சம். ஆனால் நிச்சயமாகவே விதை நிலத்தில் விழுந்து மரித்திருக்கிறது. கண்டிப்பாக

அறுவடை உண்டு என்று கர்த்தர் சொல்லுகிறார். களஞ்சியத்தில் சேர்க்கும் பணி கண்டிப்பாக உண்டு. ஆவியால் நடத்தப்படவும் ஆவிக்குள் நடக்கவும் வாஞ்சிக்கும் ஒரு கூட்டம் நிச்சயம் சபைக்குள் வரும். இதற்காகவே உன்னை ஆயத்தப்படுத்தினேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் இழந்து போனதை தேட வேண்டும். என் வீட்டை விட்டு ஓடிப்போனவர்களை நான் மீண்டும் தேடிப்பிடிக்க வேண்டும். தேவனுடைய இரட்சிப்பின் கிரியை மறுபடியும் தேசத்தில் விளங்க வேண்டும். நான் இந்த தேசத்தின் மறுமலர்ச்சிக்காக எழுந்து நிற்கிறேன். நான் பின்மாற்றக்காரர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். அவர்களை தேவனுடைய வீட்டுக்கு நான் அழைத்து வருவேன். அவர்கள் விடுதலையை அனுபவிப்பார்கள். அவர்கள் தேவ ஆவியின் வல்லமை யாலும் சுவிசேஷத்தின் வல்லமையாலும் விடுதலையாக்கப்படுவார்கள். மனந்தளராதிருங்கள். நான் அவர்கள் பின்மாற்றத்தை குணமாக்கும்போது என் கோபம் அவர்களிடமிருந்து திரும்பும். நான் என் அன்பை அவர்களுக்குள் ஊற்றுவேன். அவர்கள் என்னுடையவர்களாய் இருப்பார்கள். கர்த்தருக்குள் திடன்கொண்டு உன் கண்களை ஏறெடுத்துப் பார். நான் உன்னை சந்தித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சித்தம் என்பது தீர்மானத்தின் பிறப்பிடமாகும். எனது விருப்பமும், இருதயமும் செம்மையாய் அமையுமானால் எனக்குள் வாசம்பண்ணும் ஆவியானவர் எனது ஆவியில் புதிதாக்குதலின் கிரியையினை நடப்பிப்பார். (தீத்து 3:5) நான் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிக்கப்பட்டு, தேவனுக்கென்று வேறுபிரிக்கப் பட்டிருக்கிறேன் (எபே. 5:26). எனது சிந்தையும் செயல்பாடுகளும் எனக்குள் நிகழும் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளாலும் தேவ வசனத்தாலும் மெருகூட்டப்பட்டு மாற்றியமைக்கப்படுகின்றன. நமது உணர்ச்சிகளின் அடித்தளத்தில் உருவாகும் ஆரோக்கியம் என்பது தேவ வார்த்தைக்கும் நமக்குமான இடைபாட்டைப் பொறுத்தே சாத்தியமாகிறது. இப்பொழுது நான் அதிகமாய் ஆண்டவரைப் பிரியப்படுத்த தீர்மானங்களை எடுக்கிறேன். இது பிதாவாகிய தேவனின் வாக்குத்தத்தத்தை அடிப்படையாகக் கொண்டே நிகழ்ந்தேறுகிறது என்பதை நான் தெளிவாய் கண்டு கொண்டேன். பாதாளத்தின் வல்லடிக்கு நம்மை நீங்கலாக்கி விடுவிக்கத்தக்க மீட்கும் பொருளை அவர் தமது குமாரனுக்குள் நமக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். தேவ குமாரனாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது மரணத்தினாலே சரீர மரணத்திலிருந்தும் ஆவிக்குரிய மரணத்திலிருந்தும் என்னை விடுதலையாக்கினார்.

மனந்திரும்புதலின் மூலமாக மீட்பின் பரிணாமத்திட்டத்தில் நான் பங்கு பெறுகிறேன். என்னுடைய பாவங்களை நான் அறிக்கையிட்டால்

என் பாவங்களை எனக்கு மன்னித்து அநீதிகளை நீக்கி என்னை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார் (1யோவான் 1:9).

சபையைக் குறித்தும், ஊழியத்தைக் குறித்துமாக, மேற்கண்டவாறு 1992 மே மாதம் நடந்த முகாமின்போது டேவ் ஹாமர் மூலம் தீர்க்கதரிசன வார்த்தை வெளிப்பட்டது.

சில வருடங்களாகவே நான் ஜென்ம சுபாவங்களுக்கடுத்த பெலவீனங்களைக் குறித்து யோசித்து வந்தேன். இந்தத் தீர்க்கதரிசனத்திற்குப் பின்னரோ திருச்சபைக்குள் காணப்படும் இத்தகு நிலை குறித்த காரியங்களை சுத்திகரிப்பின் வெளிச்சத்தில் இன்னுமதிகமாய் சீர்தூக்கிப் பார்க்கலானேன். ஜென்ம சுபாவம் என்பது தேவ சித்தத்தினை நிறைவேற்றக்கூடாமல் மனிதரை பெலவீனப்படுத்திவிடக் கூடியது என்பதனை அதிகமாய் உணர்ந்தேன். மனுக்குலத்திற்கு பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை தேவை. நாம் ஆவிக்குள் நடக்கவும், ஆவியானவரால் நடத்தப்படவும், தேவ ஆவியானவரின் ஆளுகைக்கு நம்மை விட்டுக் கொடுக்கவும் முன்வரும்போது மாத்திரமே அவ்வாறான விடுதலை சாத்தியம் என்பது தெளிவுற அப்பொழுது எனக்கு விளங்கியது. மட்டுமின்றி பெலவீனமானதும் தேவ சித்தம் செய்யக்கூடாததுமான ஜென்ம சுபாவத்தை சிலுவையிலறைய ஒப்புக்கொடுப்பதன் மூலமும் ஜெயமுண்டாகும் என்பதனை கிறிஸ்து இயேசுவின் சிலுவை மரணம் எனக்கு உணர்த்தினது அவரது உயிர்த்தெழுதல் ஆவியினாலான மேற்கொள்ளும் ஜீவியத்திற்குரிய நிச்சயத்தை என்னில் உண்டாக்கிற்று. நான் தேவனோடு உண்மையாக நடப்பேனானால் ஒன்றும் என்னைப் பாதிக்காது. மாறாக எல்லாம் நன்மையாய் அமையும். தேவன் ஏற்ற வேளையில் என்னை உயர்த்தும்படி நான் தாழ்ந்த நிலைக்குள்ளாகிறேன்.

மாறாக அவர் அப்படிச் செய்யாதபட்சத்தில் அவர் பொய்யராகக் காணப்படவும், அவரது வார்த்தை சார்ந்துகொள்ளக் கூடாததாகவுமல்லவோ ஏதுவாகிவிடும். வேதம் கூறுகிறபடி அவர் பொய் சொல்லுகிறவரல்ல (தீத்து 1:2) பொய்யுரைப்பது அவருக்கு கூடாத காரியம். எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் என்றும் அவரை வேதம் (எபி. 6:18) நமக்கு சுட்டிக் காட்டுகிறது. நாம் தேவனால் மன்னிக்கப்படும்போது நமது பின்மாற்றங்களை அவர் குணமாக்கத் துவங்குகிறார். வறண்டுபோன நிலையில் தாகமுள்ளவர்களாகவும், பெலவீனப்பட்டு உதவியற்ற நிலையிலும் பரிதவிப்போருக்கு விசேஷித்த வாக்குத் தத்தங்களும் உண்டு (ஏசாயா 44:3) தேவனே நமது தேவைகளை சந்திக்கிறவர் அவர் எல் ஷடாய் ஆக இருக்கிறார். அவர் பூரண சற்குணராயிருக்கிறதுபோல நாமும் பூரண சற்குணராக அவருக்கு முன் நடந்துகொள்ள வேண்டும்.

கர்த்தரால் மீட்கப்பட்டவர்களில் பூரண அன்பு செலுத்தவே அவர் விரும்புகிறார். மனந்திரும்புகிறவர்களை விட்டு தமது கோபம் திரும்பும் என அவர் வாக்குப் பண்ணியுள்ளார். (ஓசியா 14:4) மனந்திரும்புதலை அல்லது மாற்றத்தை நமக்குள் அவரே துவக்கி வைக்கிறார். சத்தியம் உயிர் பெறுகையில் நான் அதற்குக் கீழாய் செயல்பட முடிகிறதில்லை. ஏன்? எனது மனந்திரும்புதலும், மறுபிறப்பும் பரிசுத்தாவியானவரால் உண்டானதும், வேதவசனத்தோடுகூட தொடர்புடையதுமாயிருப்பதே அதன் காரணமாம். நான் எனக்குள் வாசம்பண்ணும் பரிசுத்தாவியானவரால் தேவ வசனத்தைக் கொண்டு மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டபடியினாலே விசுவாசியாயிருக்கிறேன். அவர் விசுவாசியை மறைவான மன்னாவினால் போஷிக்கிறார். இந்த ஆவிக்குரிய ஆகாரத்தைக் குறித்து ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் ஒன்றும் அறியான். தேவ வசனத்தை கவனமாய் கருத்தூன்றி படிப்பதன் மூலமே ஆவியில் நாம் வளர முடியும்.

ஆவிக்குரிய வளர்ச்சி என்பது பெரும்பாலும் மனிதனுடைய உள்ளத்தில் உருவெடுத்து புறத்தோற்றத்தின் படியேயன்றி ஆன்மாவின் அடித்தளத்தில் வல்லமையாய் பெலப்படுவதாகும். நற்கிரியைகளில் விளங்கும் ஆவிக்குரிய அழகையும் வாசனையையும் தேவனே நமக்குள் தந்து அவ்வளர்ச்சியை ஒழுங்குபடுத்துகிறார். எனவே எனது நற்கிரியைகள் என்பவை தேவனது கிரியைகளாய் காணப்பட வேண்டுமே தவிர ஜென்ம சுபாவத்துக்கடுத்தவைகளாயிருத்தல் கூடாது. மேலும், ஒரு ஒழுங்கு நிறைந்த தேவ மனிதனால் மேய்க்கப்படுகிற மந்தை அவனிலும் நற்குணங்களில் சிறந்ததாய் காணப்படும். அதே வேளையில் மனந்திரும்புதல், தெய்வீக சுபாவங்கள், கிரியைகள் ஆகியவற்றில் நான் ஆழமாய் வேரூன்றி தேவ சித்தத்தில் வளர முற்படுகையில் சோதனை களும் நம்மைச் சந்திக்கும். எனவே பெரிய மேய்ப்பருடைய அழைப்பு என்பது இன்றளவும் அவரோடுகூடிய நெருங்கிய உறவுக்கு நம்மை அறைகூவி அழைக்கிறது.

வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்து போகிறான். ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல் அவனை விட்டோடிப்போம் என்றார். (யோவான் 10:3-5).

இவைகளனைத்தும் பல வருடங்களாய் நான் ஆவிக்குரிய பிரகாரமாய் நிதானித்து அறிந்ததும் எனது நடையையும், ஊழியத்தையும் ஸ்திரப்படுத்தியவைகளுமாகிய காரியங்களுமாகும். இந்தவிதமான வேதசத்தியங்களையே பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்குள்ளாக நான் நம்பி, அனுபவித்து, போதித்தும் வருகிறேன்.

பலத்தினால் இடைக்கட்டப்படுதல்

நமது ஆதாரம் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையே மையமாய்க் கொண்டிருக்கிறது. லூக்கா நற்செய்தி நூல் கூறுகிறபடி இயேசு பிசாசினால் சோதிக்கப்பட்டு முடிந்தபோது அவர் கலிலேயாவுக்கு திரும்பினார்.

ஆவியின் வல்லமையில் (லூக். 4:14)

ஜெயங்கொள்ளுகிறவர்கள் பரிசுத்த ஆவியானவரின் துணையைக் கொண்டு உன்னதத்திலிருந்து வரும் பெலத்தினால் தரிப்பிக்கப்பட்டவர்களாக சோதனைகளை எதிர்கொள்ளுகிறார்கள். இது மெல்லிய மாவின் மீது தூபவர்க்கத்தோடு கூடிய எண்ணெயை வார்ப்பதற்கு சமமானதாகும். தூபவர்க்கம் என்பது பிதாவுக்குப் பிரியமான சுகந்த வாசனையாக கிறிஸ்துவின் வாழ்வில் பிரதிபலித்த அல்லது வீசிய நற்கந்தமாகும். (மத். 3:17; மாற்கு 1:11; லூக் 3:22) ஜெயங்கொள்ளுகிற வர்கள் ஆபிரகாம், மோசே, யோசுவா, தாவீது, ஆமோஸ், எரேமியா மற்றும் பழைய ஏற்பாட்டு பல தீர்க்கதரிசிகளுடன் சரித்திரம் படைக்கி றார்கள். மட்டுமின்றி புதிய ஏற்பாட்டு தேவதாசர்களான பேதுரு, பவுல், யாக்கோபு, யூதா ஆகியோரை போல நேர்மையான விசுவாசத்தைப் பெற்றிருக்கிறார்கள். அனைத்திற்கும் மேலாக இவர்கள் மணவாட்டிகளாக தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. (வெளி. 19:7,8).

இவர்கள் சோதனைகளினூடே கடந்து வந்தும், தேவ பெலத்தில் நிலைநிற்கிறவர்களுமாய் இருக்கிறார்கள். இவர்கள் மறுஜென்மமடையாத மாம்சீக மனிதனின் பாவ சுபாவங்களைக் கடந்து மேலோங்கி நிற்கிறார்கள். இவர்கள் தேவ நோக்கத்தை நிறைவேற்றக் கூடியவர்க ளாகவும், ஜெயங்கொள்ளுகிறவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

இவர்கள் உடைக்கப்பட்டவர்களும் சுயநீதியைச் சார்ந்து கொள்ளாதவர்களுமாய் இருக்கிறார்கள். ஆவிக்குரிய ஆபத்துகளினூடே அசைக்கப்படுவதுபோல் காணப்படும்போது இவர்கள், கர்த்தாவே எங்களை மெதுவாய் நடத்தும், உமது சுதந்தரத்தை நிந்தைக்கு ஒப்புக்கொடாதிரும் என்று வேண்டுதல் செய்வார்கள்.

பிதாவே, ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் இப்பொழுது எனக்கு உதவி செய்து தேவசித்தத்தின் மையத்தில் தேவபெலத்தினால் நின்று தேவ நோக்கங்களை நிறைவேற்ற, என்னை ஜெயங்கொள்ளுகிறவனாக்கிவிடும்.

நாம் ஆண்டவரிடமிருந்து நமக்கென ஒரு வார்த்தையைப் பெற்று அது தேவனிடமிருந்துதான் வந்தது என்பதனையும் நிச்சயப்படுத்திக் கொண்டிருக்கிறோமா? கர்த்தர் இப்படிச் சொல்கிறார் என்று நாம் உரைக்கும் தீர்க்கதரிசன வார்த்தைகள், மாம்சம் கலந்ததா, வெறும் அலப்பலா? அல்லது பொய்யான தீர்க்கதரிசன வார்த்தைகளால் நிறைந்த மோசடிப்பேச்சா?

நான் ஒரு முறை பிரசங்க சாஸ்திரம் குறித்து வகுப்பு நடத்திக் கொண்டிருந்தேன் அப்பொழுது நான், இவ்வாறு வேதம் சொல்கிறது என எப்பொழுதெல்லாம் பிரசங்கத்தில் நீ சொல்லுகிறாயோ? அப்பொழுதெல்லாம் தேவன் இவ்வாறு சொல்லுகிறார் என்பதாகவே அது அர்த்தப்படுகிறது என்று போதித்தேன். உடனே ஒரு மாணவன் எழுந்து இது அதிகப்பிரசங்கம் எனக் கூறிவிட்டு வெளியே போய் விட்டான். இன்றைய நாட்களில் பெந்தெகொஸ்தே சபைகளில் பல ஆவிக்குரிய வித்தைகள், சூனியங்கள் இடம் பெற்றுள்ளன. அதை நான் புரிந்திருக்குமளவுக்கு நீங்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

தேவன் நம் ஒவ்வொருவரையும் குறித்து திட்டம் வைத்திருக்கிறார். அது வேத்தைப் போன்றே பழமையானதே. தேவ திட்டம் ஆதி முதலே நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நாம் ஜெயங் கொள்ளுகிறவர்களாய் ஆக வேண்டுமானால் நாம் எதிலே தேவனுக்கு விரோதமாய் பாவஞ் செய்தோம் என ஜாக்கிரதையாய பரிசீலிக்க வேண்டும். நமது சுத்திகரிப்புக்கான பலிகளை குறித்து இயேசுவும் கட்டளை கொடுத்திருக்கிறார். (லூக்.5:14) பரிசுத்தமானவைகளுக்கு எதிராக நாம் தவறிழைத்திருக்கிறோம்.

தேவனுடைய நோக்கத்தை செயல்படுத்தும்படி பலிகளில் தேவனுக்குக் கீழ்ப்படியவும், நீதி, பரிசுத்தமடையுதல், அதிகாரம், வல்லமை இவைகளில் வளர்ந்தேறவும் நான் எனக்குள் பெற்றுள்ள வெளிப் பாடுகளை உங்களோடு பகிர்ந்து கொண்டுள்ளேன். மேலும் என்னிலும்

என் மனைவியிலும் விளங்கிய தேவ ஆவியானவரின் கிரியைகளை உதாரணப்படுத்தி அது சம்பந்தப்பட்ட ஆவிக்குரிய காரியங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

சுருங்கிப்போன கை

முதல் உதாரணமாக நான் கூறப்போவது எனது ஆப்பிரிக்க உடன் ஊழியர், நிவா பாலமியின் சுருங்கிப்போன கை குறித்த காரியமாகும். அவர் சிறு பையனாயிருந்த போது வீட்டில் இருந்த தின்பண்டமொன்றை பெரியவர்களுக்குத் தெரியாமல் திருடிச் சாப்பிட்டார் என்பதற்காக அவரது பாட்டியம்மையார் ஒரு முரட்டுக் கயிறெடுத்து, அவரது இடது கை மணிக்கட்டில் இறுக்கக் கட்டியிருக்கிறார். அதிலிருந்து அந்தக் கை தளர்வடைந்து, சுருங்கி, செயலற்று, பயனின்றிப் போனதாம். அது முதல் சீராயிருந்த கை போய் அதே கை உருமாறி சிறுத்து, சின்னதாய் தொங்கிக் கொண்டிருந்தது.

எனது இந்த ஆப்பிரிக்க சகோதரர் நான் ஸ்தாபனத்தில் போதகராய் ஊழியஞ் செய்து கொண்டிருந்த நாட்களில் எங்கள் தேசத்திற்கு வந்திருந்தார். நாங்கள் எங்கள் ஆவிக்குரிய எழுப்புதலுக்குப் பின் ஒரு ஸ்தல சபையில் அழைப்பை நிறைவேற்றிக் கொண்டிருந்தோம். இந்த சகோதரன் ஒரு இறையியல் கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டு, ஒரு கிறிஸ்மஸ் விடுமுறையில் எங்களோடு ஒரு வாரம் தங்கியிருந்து களிப்புற்றுப் போனார். பின்னர் அவர் நைஜீரியா திரும்புமுன் நாங்கள் அவரை இறையியல் கல்லூரியில் போய் சந்தித்தோம். கடைசி முறையாய் நாங்கள் அவரைப் பார்த்த போது மற்றொரு ஆப்பிரிக்க சகோதரனும் அங்கே இருந்தார். நாங்கள் ஒருவரையொருவர் கட்டி அணைத்து கர்த்தருக்குள்ளான எங்கள் அன்பைப் பகிர்ந்து கொண்டோம். கொஞ்சம் நேரம் கழித்து நான் அவரிடத்தில், சகோதரனே, நீங்கள் ஆண்டவரை நேசிக்கிறீர்களென்றும், நம்புகிறீர்களென்றும் நானறிவேன். நாங்கள் உங்கள் சுருங்கிப்போன கரம் சுகம் பெற ஜெபிக்கலாமா? என்று கேட்டேன். அவர் தமது பெலவீனப்பட்ட கரம் சுகமடையும்படி ஜெபிக்க என்னையும் என் மனைவியையும் ஒப்புக் கொண்டார். நான் ஒரு ஆவிக்குரிய யுத்த ஜெபத்தை ஏறெடுக்கத் துவங்கினேன். உங்கள் பாட்டி உங்களில் இறக்கிய சாபத்தை இயேசுவின் நாமத்தில் கடிந்து கொள்கிறேன். இயேசுவின் நாமத்தில் அந்தக் கை ஆரோக்கியமடைந்து விடுதலை உண்டாக நான் கட்டளை கொடுக்கிறேன்.

தேவனுடைய வல்லமை நிவாவின் மேல் இறங்கினபடியால் அவர் முகமெல்லாம் வியர்க்க, தரையில் சாய்ந்தார். அவரது நண்பர் தரையில் முகங்குப்புற விழுந்து ஜெபித்துக் கொண்டிருந்தார். திடீரென

சுருங்கிப்போன நிவாவின் கரம் நீளத்துவங்கியது. சுருக்கங்கள் நீங்கிட, நேரான நீண்ட கரமாக அது உருப்பெற்றது. நாங்கள் தொடர்ந்து அவரது விசுவாசத்தின்படியேயான பூரண ஆரோக்கியத்திற்காக ஆண்டவரை வேண்டிக் கொண்டோம். தேவ வல்லமை என்பது அச்சகோதரனுடைய விசுவாச அளவின்படியே அவர் தேவனது கிருபையையும், வல்லமையையும் நம்புவதற்கேற்றப்படியே கிரியை செய்யக்கூடியதா யிருந்தது.

மரணத்தருவாயில் உண்டான சுகம்

ஒரு தாயாரும், அவரது மகளும் அம் மகளது நண்பனுமாக 1981 ஈஸ்டருக்கு பல வாரங்களுக்கு முன்பாக என்னைக் காணும்படி ஒரு குறிப்பிட்ட நாளில் என் வீட்டிற்கு வந்தார்கள். ஷெரியின் தாய் சூ, மிகவும் வேதனையோடு, பாஸ்டர், ஷெரியின் மருத்துவர் அவளுக்கு நாள் குறித்து விட்டார். அவளுக்குள்ளே புற்றுநோய், நுரையீரல் வரைக்கும் பரவி விட்டதாகவும், எலும்புப் புற்றுநோயின் கடைசி கட்டத்திற்கு அவள் வந்து சேர்ந்து விட்டதாகவும், இன்னமும் இரண்டு மாதங்கள் தான் அவள் உயிர் வாழ முடியும் என்றும் தெரிவித்து விட்டார் எனக் கூறி அதற்கு மேல் பேச முடியாமல் கேவத் துவங்கினார். நானும் எனது மனைவியும் அவர்களை ஆறுதல்படுத்தினோம். பின்னர் அவளுக்கு அந்தப் புற்றுநோய் ஏற்படுவதற்கு காரணமான அவளது விளையாட்டின் போதான முழங்கால் காயத்தைக் குறித்துக் கூறினார்கள். வேறொரு முறை அதற்குப் பிற்பாடு ஒரு ஆட்டோ விபத்தின் போதும் அதே முழங்கால் மீண்டும் அடிபட்டிருக்கிறது. அப்பொழுது ஷெரி இளம் பெண்ணாக (சிறுமி) இருந்திருக்கிறாள். அப்போது மருத்துவர்கள் அறுவை சிகிச்சையின் மூலம் இடது எலும்பை அகற்றி விட்டு, அதற்கு பதிலாக ஒரு உலோகத் துண்டை பொருத்தியிருக்கிறார்கள். மருத்துவர்கள் தாங்கள் சரிசெய்து விட்டோம் என்று நினைத்திருக்கிறார்கள். பின்னர் மிக்சிகன் மாநிலத்திலுள்ள ஆன் ஆர்பரைச் சேர்ந்த மோட் சிறுவர் மருத்துவமனைக்கு மருத்துவ ஆய்வுக்காக போன போதுதான் மருத்துவர்கள் புற்றுநோயின் இறுதி கட்டத்திற்கு இப்பெண் வந்து விட்டதைக் கண்டு பிடித்துள்ளனர்.

இந்நிலையில் கர்த்தரோடு நடந்ததால் எங்களது விசுவாசம் கர்த்தர் சுகம் கொடுப்பதைக் குறித்த நிச்சயத்தை எங்களுக்கு அருளியிருந்தது. நானும் எனது மனைவியும் இது காரியமாக அவர்களோடு பேசிக் கொண்டிருந்த போது, ஆண்டவருடைய ஆவியானவர் என்மேல் இறங்கினபடியினால், நான் தேவன் உங்களை வருகிற ஈஸ்டர் ஞாயிறு ஆராதனையில் சுகமாக்குவார் என்று உறுதிபடக் கூறினேன். ஈஸ்டருக்கு இன்னமும் இரண்டு வாரங்கள் இருந்தன. கலந்து பேச வேண்டிய காரியங்கள் அநேகம் இருந்தன. நான் வரம்பு கடந்து

செயல்படுகிறேன் என சிலர் சொல்லலாம். இல்லை நான் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து செயலாற்றினேன். ஆண்டவர் ஷெரியை சுகமாக்கப்போகிறார் என முழு நிச்சயமாய் நான் நம்பினேன். கர்த்தர் எவ்வாறு நம்மை சுகமாக்குகிறார்? விசுவாசத்தினால் சம்பவிப்பவை குறித்த பகுதிகளை பாடங்களாக அவர்களுக்குக் கொடுத்தோம். அவர்கள் அதைப் படிக்க வேண்டும் என்றும் ஆண்டவர் இன்றைக்கும் சுகமாக்குகிறார் என்பதை அவர்கள் தங்கள் ஆவியில் கண்டு கொள்ள வேண்டும் என்றும் நாங்கள் விரும்பினோம்.

ஈஸ்டர் ஞாயிறு காலையில் கர்த்தர் அவளை சுகமாக்கப்போவதாக ஏற்கெனவே ஆண்டவர் சொல்லியிருந்தார். அதே வேளையில் ஷெரி, நீ என்னிடத்திலும், என் மனைவியிடத்திலும் ஆவிக்குரிய வேத ஆலோசனை நாளையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அவளது தாயாரின் புறமாய் திரும்பி, சூ நீங்களும் ஷெரியுடன் சேர்ந்து வேதத்தை ஆராய்ந்து தேவ வசனத்தினால் கிட்டுகிற ஆவியின் கிரியைக்கு தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

ஷெரி மறுநாளே ஆவிக்குரிய வேத ஆலோசனைக்கென புறப்பட்டு வந்தாள். அவள் தன்னை தாழ்த்தி, தன் பாவங்களை ஒத்துக் கொண்டு, என் மனைவியிடமும் என்னிடமும் அவைகளை அறிக்கை செய்தாள். நாங்கள் அவளை ஒரு ஜெபத்துக்குள் நடத்தினோம். முதலாவது பாவங்களை அறிக்கையிட்டு பின் மனந்திரும்புதலோடு கூடிய பாவ மன்னிப்புக்காக தேவனிடம் கேட்டாள். பின்னர் இயேசு கிறிஸ்துவை தெய்வமாகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ளும் விசுவாச அறிக்கையை மறுபடியும் கூறினாள். ஆண்டவராகிய இயேசு தன் மீறுதல்களுக்காக காயப்பட்டு, தன் அக்கிரமங்களுக்காக நொறுக்கப் பட்டாரென்றும் தனக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவரது தழும்புகளால் குணமானேன் என்றும் அவள் அறிக்கையிட்டாள் (ஏசா.53:5) தனது எல்லா பாவங்களுக்காகவும் சிலுவையில் இயேசு நியாயத்தீர்ப்பை ஏற்றார் என்றும் அவள் அறிக்கையிட்டாள் (2கொரி.5:21) பின்னர் வேத வசனத்தின்படி தான் மீட்கப்பட்டவளென்றும், மன்னிக்கப்பட்டவளென்றும், கழுவப்பட்டவ ளென்றும், சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டவளென்றும் அவருடைய இரத்தத்தினால் பிரித்தெடுக்கப்பட்டவளென்றும் அறிக்கை யிட்டாள்.

ஷெரி தன்னை பூரணமாய் அறிக்கையிட்டு மனந்திரும்பி விசுவாசித்தபோது அவளது குடும்பத்தின் மேலிருந்த சாபத்தை கர்த்தர் எங்களுக்கு வெளிப்படுத்தினார். அந்த சாபமே பெலவீனத்துக்கு காரணமான பிசாசுக்கு அங்கே வழி திறந்து கொடுத்திருந்தது. அடுத்ததாக

முழங்காலில் பலமுறை பட்ட அடியினாலும் புற்று நோயாய் அது பரிணமித்து நின்றது. நாங்கள் அந்த சாபத்தை உடைக்கத் துவங்கினோம்.

கலாத்தியர் 2:13 வசனத்தின்படி, சிலுவையில் சாபமான இயேசுவின் நாமத்தில், நான் இந்த புற்றுநோய் சாபத்தை உடைக்கிறேன். கொலோசேயர் 2:14ஆம் வசனத்தின்படி இவளுக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் இவளுக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்த இயேசுவின் நாமத்தில் புற்றுநோய் சாபத்தை முறிக்கிறேன்.

நாங்கள் பின்னர் ஷெரியை விடுதலையின் ஊழியத்திற்குள் நடத்தி பெலவீனத்தின் வல்லமையை அவளிலிருந்து துரத்தி விட்டோம்.

ஈஸ்டர் ஞாயிறு காலை தான் பொதுவாக ஸ்தாபன சபைகள் நிரம்பி வழியும். ஜனங்கள் நெருக்கி நின்று ஆராதிக்கும்படி அன்றைய ஆராதனை வேளையில் ஆலயம் அப்படித்தான் நிரம்பியிருந்தது. எனது பிரசங்கம் முடிந்ததும் ஜனத்திரளினிடையே ஷெர்ரியும் முதல் ஆளாக பீடத்திற்கு முன்னே வந்தாள். பாஸ்டர் பாப் சொல்லியிருப்பதால் ஆண்டவர் தன்னை இன்று சுகமாக்கப் போகிறார் என்று அவள் நம்பினாள். அவளது தாயாரும் அவளுக்கு அருகில் ஒத்தாசையாய் நிற்கும்படி முன்னாலே வந்தார்கள். விடுதலையின் அறை கூவலின் போது, கர்த்தர் சுகத்திற்காகவும், விடுதலைக்காகவும் ஜனங்களை தொட்டபோது, அவர்கள் தேவ வல்லமையின் கீழாக சரிந்து விழுந்தார்கள். பல புதிய முகங்கள் ஆலயத்திற்குள் தென்பட்ட படியினால் இது குறித்து பழமைவாதிகள் சிலர் முறுமுறுத்தார்கள். திருச்சபைக்குள் நடந்தேறும் மாற்றங்களின் போது சாதாரணமானவைகளாய் பார்க்கப்பட்டவை முக்கியத்துவத்திற்குரியவைகளாய் மாறி நிலைமையையே தலைகீழாக்கிக் கொண்டிருந்தது. சில அவிசுவாசிகளால் இதனை ஜீரணிக்க இயலாததால், அவர்கள் ஆலயத்தின் பின் பகுதிக்கு நழுவிப் போய்க் கொண்டிருந்தார்கள் மட்டுமின்றி நுழைவு வாசலையே அடைத்துக் கொண்டும் சில நேரம் நின்றிருந்து பின் அவரவர் ஆசனங்களில் அமைதியாய் வந்து அமர்ந்தனர்.

மேடையில் இடமில்லாத அளவுக்கு மக்கள் ஆங்காங்கே விழுந்து கொண்டிருந்தபடியால் எங்களது ஊழியர்களில் சிலர் அது குறித்து மிகவும் உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டிருந்தனர். சிலர் தேவ வல்லமையின் கீழாய் கடந்து போனார்கள். சிலர் அவர்களுக்குள் அசுத்த ஆவிகளின் கிரியை காணப்பட்டபடியினால் கீழே விழுந்தார்கள். தேவ ஆவியான வரின் பலத்த அசைவாடுதல் அங்கே காணப்பட்டது. ஷெர்ரியின் தாயாருக்கு அங்கே சுகமுண்டானது. ஏற்கெனவே அவர்களது முழங்கை

விகாரமாய் உருவற்றிருந்தது. ஆனால் அன்று கர்த்தர் அவர்களை தொட்டு அங்கேயே சுகப்படுத்தினார். இறுதியாக அவர்கள் எங்களிடம், தங்களது முழங்கையில் சுகமுண்டானபோது ஒரு விதமான சூட்டை அப்பகுதியில் உணர்ந்ததாகக் கூறினார்கள். நாங்கள் ஜெபித்தபோது அவரது முழங்கை எலும்புகள் சரியாக அதனதன் இடத்தில் இடம்பெயர்ந்து அமர்ந்ததாக நான் உணர்ந்தேன். அன்றைய மேடை ஜெப ஊழியம் எனது ஊழிய வாழ்க்கையில் நான் கண்டிருந்த சில நீண்ட நெடிய ஊழியங்களில் ஒன்றாகும்.

பாஸ்டர் பாப் அல்ல, கர்த்தருடைய வல்லமையினாலேயே ஜனங்கள் சுகமடைகிறார்கள் என்பதற்கான சாட்சியாக அங்கு நடந்த யாவற்றையும் ஷெர்ரி அங்கே நின்று பார்த்துக் கொண்டேயிருந்தாள். நாற்பத்தைந்து நிமிடங்கள் விடுதலை ஊழியம் தொடர்ந்து நடைபெற்று, மக்கள் இன்னமும் அங்கே அதன் பலனை அனுபவித்துக் கொண்டிருந்த அவ்வேளையில்தானே ஆண்டவர் என்னிடம், நான் இப்பொழுது ஷெர்ரியை சுகமாக்க விரும்புகிறேன் என்றார். நான் ஷெர்ரியிடம் நடந்து போய் அவளிடம், ஷெர்ரி, ஆண்டவர் இப்பொழுது உன்னை சுகமாக்க விரும்புகிறார் என்றேன். அப்போதே நான் எனது வலது கையை அவளது நெற்றியில் வைத்து ஒரு எளிய ஜெபத்தையும் ஏறெடுத்தேன். இயேசுவின் நாமத்தில் சுகமடைவாயாக. கூட்டம் முடிவடைந்தபோது, ஷெர்ரி ஜெபத்தின்போது ஒரு உஷ்ணம் தன் உடலெங்கும் ஊடுருவிப் பாய்ந்ததை தான் உணர்ந்ததாகவும் அவ்வேளையில் தானே சுகமுண்டானதாக நிச்சயித்து கொண்டதையும் சொன்னாள். மட்டுமின்றி, தான் அறுவை சிகிச்சைக்கு உடன்படப்போவதில்லை என்றும், அவளுக்கு அதற்கு இப்போது அவசியமில்லை என்றும் ஷெர்ரி கூறினாள். நான் அவளுக்கு என்ன சொன்னேன் என்று உங்களுக்குத் தெரியுமா? அவள் போய் ஆசாரியனுக்கு தன்னைக் காண்பித்து சுத்திகரிப்பின் நாளுக்கான காணிக்கையை செலுத்தும்படி அவளுக்கு நான் கட்டளையிட்டேன். நீ மருத்துவமனைக்குப்போ என்ற அர்த்தத்தில் தான் நான் அவளுக்கு அதைச் சொன்னேன். அடுத்த நாள் அவள் அறுவை சிகிச்சையினூடே கடந்து போக வேண்டியிருந்தது. நீ மருத்துவமனைக்குப் போ, நீ சுகம் பெற்றிருக்கிறாய் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தட்டும்.

அன்று இரவு ஷெர்ரியும் அவளது தாயாரும் அனைத்தையும் ஆண்டவர் கரத்தில் ஒப்புக்கொடுத்து, ஜெபத்தில் நேரத்தை செலவிட்டனர். அவர்கள் மருத்துவமனைக்குள் நுழையும்போது, ஷெர்ரியை மரணத்திற்குள் அமிழ்த்தி விழுங்கிப்போட அவளுக்கெதிராய் ஒரு இராட்சத வல்லமை முயற்சித்ததாக அப்போது அவர்கள் கண்டார்கள். ஏற்கெனவே சூவின் பெற்றோர் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு இறந்து

போயிருந்தார்கள். அங்கிருந்த மருத்துவர்களில் ஒருவர் இவர்களிடம் இந்நோய் குறித்து நுரையீரல் கெடுமளவுக்கு புற்று நோயின் கடைசி கட்டத்திற்கு வந்தவர்கள். பிழைப்பது கூடிய காரியமல்ல என்று வேறு சொல்லிவிட்டார். நோயின் உச்சகட்ட பாதிப்பின் வேளையது. ஆனால் கர்த்தருக்கு முன்பாய் அவர்கள் வந்திருந்தபோது இந்தவிதமான மலையைத் தான் அவர்கள் பெயர்த்து அகற்ற வேண்டியிருந்தது.

1981, ஏப்ரல் 24 அன்று ஷெர்ரியை அறுவை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்துக் கொண்டார்கள். அவளது குடும்ப அங்கத்தினர்களெல்லாம் அவளது படுக்கையைச் சுற்றி நின்று, அவளது வாழ்வின் குறைகாலத்தினை எண்ணி அழுது புலம்பிக் கொண்டிருந்தார்கள். நானும் எனது மனைவி மேரி லோவாவும் அவளது தாயாரை எங்களோடு தனியே அழைத்துச் சென்று உறவினர்களின் எதிர்மறையான புலம்பல்களின்படி ஒன்றும் ஆகிவிடாதபடி அவைகளை கட்டி ஜெபித்தோம்.

ஷெர்ரி அறுவை சிகிச்சைக்காக தியேட்டருக்குள் கடந்து செல்லுமுன் அவளோடு அவளது தாயாரும், பாஸ்டர் தம்பதியினரும் தனிமையில் ஜெபிக்கும்படி அவளது உறவினர்கள் அனைவரும் அறையை விட்டு வெளியே போகும்படி அவர்களை வேண்டிக் கேட்டுக் கொண்டேன். வேதத்தில் உள்ள 1யோவா.4:4ஆம் வசனம். அப்பொழுது அவளுக்குப் பெரிய ஆறுதலைக் கொடுத்தது.

பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள். ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். நாங்கள் மறுபடியும் புற்றுநோயின் வல்லமைக்கு விரோதமாக ஜெபித்தோம். அப்பொழுது ஷெர்ரி அறுவை சிகிச்சைக்கான கூடத்திற்குள் எடுத்துச் செல்லப்படும் முன்பாக அவளது வாயிலிருந்து பச்சை நிறத் திரவத்துடன் கூடிய இரத்தத் திரட்டுக்கள் வாந்தியாய் வெளி வந்து அவளுக்காக தெய்வீக சுகத்தை உறுதிப்படுத்தின. நெஞ்சக அறுவை சிகிச்சையினுடே கடந்து போன ஒவ்வொரு நோயாளியும் குறைந்த பட்சம் 24 மணி நேரம் தனியாக இன்டென்ஸிவ் கேர் பிரிவில் வைத்து பராமரிக்கப்படுதல் வேண்டும். ஆனால் ஷெர்ரிக்கு அது அவசியப் படவில்லை. அறுவை சிகிச்சையைத் தொடர்ந்து ஷெர்ரி பேசிய முதல் வார்த்தையே கர்த்தருக்கு தோத்திரம்! என்பது தான். ஏப்ரல் 28 அன்று மருத்துவர்கள் மூன்றரை நாட்களிலேயே அவளை மருத்துவமனையி லிருந்து விடுவித்து அனுப்பி விட்டார்கள். குறைந்தது பத்து நாட்களாவது பொதுவாக இப்படிப்பட்டோர் தனி கவனப்பிரிவில் வைத்து பராமரிக்கப் படுதல் வேண்டும். இதுவோ மிகுந்த அற்புதமாய் காணப்பட்டது.

அவள் வீட்டிற்கு வந்த மறு தினம் தலைமை மருத்துவர் டாக்டர் வெஸ்லி தொலைபேசியில் அவளது தாயாரை தொடர்பு கொண்டு தெய்வீக சுகத்தை உறுதிப்படுத்தி அறிவித்தார். அவர் சொன்னார், "திருமதி ஸ்மித், நீங்கள் தான் முதலாவது தெரிந்து கொள்ள வேண்டிய நபர் என்பதால் உங்களுக்கு இதனை அறிவிக்கிறேன். ஷெர்ரியின் நுரையீரல் பகுதியில் காணப்பட்ட நான்கு காயப்பட்ட பகுதிகளை நாங்கள் அறுத்து அகற்றிப் பார்த்த வேளையில் நாங்கள் அவளில் கண்டது அவளது உறுப்புகளில் குறிப்பாக நுரையீரலில் புற்றுநோயே இல்லை என்பது தான். ஒரு தெய்வீக சுகத்தை நான் அங்கே அடையாளங் கண்டு கொண்டேன்." ஷெர்ரியின் குடும்பத்தாருக்கு இந்நற்செய்தியை அறிவிக்குமுன் இது குறித்து அவர் வேறு எந்த மருத்துவருக்கும், பணியாட்களுக்கும் கூட இதைச் சொல்லவில்லை. ஷெர்ரியின் தாயாரது வார்த்தைகளில் சொல்லப் போனால், பூரண விடுதலையை அவர்களோடு சேர்ந்து விரும்பி, விசுவாசித்து, அவர்களது மகிழ்வில் பங்கு பெற்ற ஒரு அருமையான கிறிஸ்தவ மருத்துவர் அவர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அதற்கடுத்த ஞாயிரே ஷெர்ரி ஆலயத்திற்கு வந்தாள்.

அறுவை சிகிச்சை முடிந்து மூன்று வாரம் கூட ஆகியிராத நிலையில் மே 12 அன்று டாக்டர் வெஸ்லி அவர்கள் ஷெர்ரியை அதற்கு மேல் தன்னை வந்து பார்க்கக்கூட அவசியமில்லை என்று அறிவித்து அனுப்பி விட்டார். அவள் ஆரோக்கியப்படலானாள். ஷெர்ரியையும், அவளது தாயாரையும் ஒருமுறை வினவிய போது, ஷெர்ரி சொன்னாள்,

இரண்டு வார காலம் வேதத்தைப் படித்துப் படித்து என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். ஜனங்களும், எதிர்மறையான காரியங்களும் என்னை எதிர் கொண்டபோது நான் புன்சிரிப்பை மட்டுமே வெளிப்படுத்தினேன். வெளிச்சம் என்னை சூழ்ந்திருந்ததால் இருள் என்னை மூட முடியவில்லை. வேத வாக்கியங்களின் அடிப்படையிலான விசுவாசத்தை தேவன் என்னிலே கட்டியெழுப்ப நான் ஆண்டவருக்கு என்னை விட்டுக் கொடுக்க அந்நாட்கள் எனக்கு அவசியப்பட்டன. நான் இருளை அனுபவிக்க விரும்பாததால் நான் அனைத்து எதிர்மாறான வாசல்களையும் மூடி வைத்திருந்தேன்.

கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்படி ஷெர்ரி தன் சிந்தையை சிறைப்படுத்தி வைத்திருந்தாள் (2கொரி.10:5) சுகம்பெற்ற பின் ஒரு சிறு கவிதையையும் தான் எழுதியதாக அவள் எனக்கு அறிவித்தாள். அது ஆண்டவரிலும், அவரது வசனத்தின் பேரிலும் அவளுக்கிருந்த அழுத்தமான நம்பிக்கையையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்தியது. கீழ்க்காணும் கவிதையே அது.

தேவன் நமக்கு ஒரு புத்தகம் தந்தார்
சிலர் அதனை ஏறிட்டுப் பார்க்கவும் விளைவதில்லை
அவர் தமது ஒரே பேரான குமாரனை அனுப்பினார்
நாம் செய்த பாவங்களுக்காய் மரிப்பதற்காக
அவரைப்போல் நாம்
நல்லவர்களாய் இருத்தல் இயலாது
நமக்கு நித்திய ஜீவனை அளிக்க
தேவன் அவரை எல்லாப்பாடுகளுக்குமுட்படுத்தினார்
தேவன் மட்டுமே இந்த அளவுக்கு
அன்பு கூர இயலும்

நாம் அவரது வழி நடத்துதலுக்கு நம்மை விட்டுக் கொடுக்கையில்
அவரே நமது தேவைகளை நிறைவு செய்கிறார்
அவரது அன்பு அளவு கடந்திருப்பினும்
சிலர் அவரை பின்பற்ற மறுக்கின்றனர்
அவரது புத்தகத்தை அப்படிப்பட்டோர்
சற்றே புரட்டிப் பார்ப்பார்களாயின்
ஆண்டவருக்கு சற்றே அவர்கள் வாய்ப்பளிப்பார்களாயின்
அவரை தங்கள் வாழ்வின் பெரும் பங்காய் ஏற்பார்களாகின்
தேவனது அன்பு பெரிதாய் என்றும் விளங்கக் காண்பர்

ஷெர்ரி எல். ஸ்மித்

கர்த்தர் கிரியை செய்யும் விதம் இதுதான். தேவனுக்கு ஒப்புக்கொடு. பாவத்தை அறிக்கை செய்து மனந்திரும்பு. கர்த்தரை நெருங்கிச் சேர்ந்து, அவர் உன்னை நெருங்கி வரும்படி வேதம் வாசித்து ஜெபி. பிசாசையும், அந்தகாரத்தையும் எதிர்த்துநில். உலகத்தில் இருப்பவனிலும் உன்னில் இருப்பவர் பெரியவர். மருத்துவமனைக்குப் போ. உனக்கு ஆரோக்கியமுண்டானது அவர்களுக்கு சாட்சியாய் அமையும்படி மருத்துவர்களே உனது சரீர சுகத்தை தெளிவுபடுத்தட்டும், விசேஷமாய் தேவ வல்லமையின் வெளிப்பாட்டில் நான் விளங்கிக் கொண்டது இதுதான். விசுவாசிகள் தங்களை தாழ்த்தி, அவர் சித்தம் செய்தால் இக்காரியம் அனைவருக்கும் சாத்தியமே.

அழிவின் விளிம்பில் விடுதலை

நாங்கள் உள்ளே நுழைந்து நீண்ட கண்ணாடி ஜன்னல்களுக்கு முன்னிருந்த ஆசனங்களில் அமர்ந்து நோக்கியபோது லயர் - கோவின் அலுவலகம் பொது நிதிமேலாளரை அமைதிமிக்க, ஒளிமயமான

வாழ்வுக்குரியவராகவே அடையாளங்காட்டியது. அங்கு நிலவிய சூழல் வியாபார நோக்கின் வெற்றிக்கு கட்டியங்கூறியது.

ஜிம் எங்களை பெரிய சிரிப்புடன் கட்டித் தழுவி வரவேற்றார். நாங்கள் சில ஆரம்ப சுக விசாரிப்புகளுக்குப் பின் முக்கிய கட்டத்திற்குள் வந்தோம்.

ஜிம் லயர் என்பவர் தேவனுடைய பெரிய ஒரு அற்புத பாண்டம். ஒரு வேளை அவர் இதனை ஒத்துக் கொள்ளாமற்போகலாம். ஆயினும் எங்களுக்கு அவரோடுள்ள பல ஆண்டுகள் பழக்கத்தில் தேவனது கிரியைகளான மீட்பு, மன்னிப்பு, சுத்திகரிப்பு, புதுப்பிப்பு மற்றும் ஆவிக்குரிய எழுச்சி அனைத்தையும் இவரில் நாங்கள் கண்டுள்ளோம். ஜிம் துவங்கினார், சில ஜனங்களின் சாட்சிகளை நான் கேட்கும்போது, தேவன் அவர்களை சந்தித்து, ஆவிக்குரிய நிலையின் உச்சகட்டத்தில் ஏற்றி வைத்திருப்பதை உணர முடிகிறது. நான் இது குறித்து ஆராய, ஆராய உன்னதங்களுக்கு ஏறுகிறேன்.

ஜிம்மின் கடந்த காலம் தனிமையானதும், கத்தோலிக்க வளர்ப்பிற்குரியதுமாகும். அது சட்டங்கள், விதிமுறைகள், மதக் கோட்பாடுகளை உள்ளடக்கியதாயிருந்தது. கத்தோலிக்க போதனைகள் அவரது தனிப்பட்ட எண்ணங்களுக்குமுரிய ஏராளம் பயிற்சிகளை அளித்திருந்தன. அவர் சிறியவனாயிருந்த வரை தமது அந்தரங்கப் பிரச்சனைகள் ஒன்றினைக்கூட தமது பெற்றோருடன் பகிர்ந்து கொண்டிருக்கவில்லை.

ஜிம் தாம் கத்தோலிக்கக் கல்வியினை முடித்து, அதைத் தொடர்ந்து குருவாக பணிப் பொறுப்பேற்கவிருந்த காலகட்டத்தைக் குறித்த சில காரியங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டார். தேவ பயத்துக்கும், தெய்வீக கனத்துக்குமடுத்த போதனைகளை அவர் வெகுவாய் பாராட்டினார். அவர் தமது நடவடிக்கைளிலும் குற்றமற்றவராய் காணப்படக் போதிக்கப்பட்டிருந்தார். ஆனால் அதே உபதேசம் அவரை மோசமான குற்றவுணர்விலும், தோல்வி பயத்திலும் கொண்டு வந்து நிறுத்தியிருந்தது. ஜிம் என்னால் போதுமான அளவுக்கு சீராயிருக்க முடியவில்லை என்று தமது இயலாமையை வெளிப்படுத்தினார். எனவே ஜிம் தாம் குருப்பணியினை ஏற்பதற்கு பதிலாக, தமது இயலாமையினிமித்தம் திருமணம் செய்ய விழைந்திருக்கிறார். அவரது திருமணம் விவாகரத்தில் முடிந்திருக்கிறது. இதுவும் அவரது கத்தோலிக்க வளர்ப்பில் அவரை பெரிதும் பாதித்துள்ளது. இது அவருக்குள் பெரும் மன உளைச்சலையும், தோல்வி உணர்வையும் ஏற்படுத்தி விட்டது. மதக் கோட்பாடுகளும் விதிமுறைகளும் மனித வாழ்வைப் பெரிதும் அழுத்தி, மனிதனின் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையையே அழித்துப் போடுகின்றன.

ஒரு நாள் அவர், அவரது தற்போதைய மனைவியான ஜேனை சந்தித்திருக்கிறார். அன்றைக்கு அவர்கள் 700 கிளப்பைச் சேர்ந்த பெண் கின்ச்லோவின் கூட்டத்திற்கு செய்தி கேட்கப் போயிருக்கிறார்கள். நம்பிக்கைக்கான ஒளிக்கற்றையை மீண்டும் காணப்பெற்ற ஜிம், அது மிகச்சிறந்த மூலப்பொருள் என நினைவுகூருகிறார். பிற்பாடு 1979-இல் அவர்களது விவாகத்தை நடத்தி வைத்த போதகர், விவாகரத்தான மனிதன் என்று இவருக்குள் தன்னைக் குறித்திருந்த குற்றவுணர்விலிருந்து வெளிவர இவருக்கு உதவி செய்துள்ளார். அப்போது சற்றே இவர் அந்த பாரம் நீங்கி விடுதலையை அனுபவித்துள்ளார்.

ஒரு குறிப்பிட்ட கர்த்தருடைய நாளில் இவர்கள் ஜேனுடைய பெற்றோருடன் நான் போதகராயிருந்த மிக்சிகன் டிரேய்டன் பிளையின்ஸில் உள்ள பிரதரன் சபைக்கு வந்திருந்தார்கள். ஜேனின் தாயார் ஜூன் மேரி லோவாவிடத்திலும், என்னிடத்திலும் தாங்கள் அந்த ஞாயிறு ஆராதனைகளில் பங்கேற்க விரும்புவதை தெரிவித்திருந்தார்கள்.

ஜிம் நினைவுகூர்ந்து சொன்னார், அந்தப் பிரசங்கத்தின்போது நீங்கள் பிரசங்கபீடத்திலிருந்து கீழே இறங்கி என் ஆசனத்துக்கு அருகில் வந்து நின்று, உங்கள் விரலை எனக்கு நேரே நீட்டி, நீ போதுமான அளவுக்கு உண்மையாயிருக்க எப்போதாகிலும் முயற்சித்ததுண்டா? எனக் கேட்டீர்கள். இக்கேள்வி தமக்குண்டான பிரச்னையை உள்ளடக்கி யிருந்ததால் அது அவரோடு பேசியதாகவும் ஜிம் சொன்னார். அவர் இன்னமும் செத்த கிரியைகளால் கட்டப்பட்டிருந்தபடியால், அவை அவரை அழித்துக் கொண்டிருந்தன. அவர் எந்த அளவுக்கு நன்மையானவைகளை முயற்சித்தாரோ, அவ்வளவாய் தீமைக்குள் சிக்குண்டிருந்தார். விவேகமற்ற தீர்மானங்கள் அவரை பல கோடி டாலர் இழப்புக்குள்ளாக்கியிருந்தன. அவர் திட்டமிட்டு உழைத்தும் நெருக் கடிகளே மிஞ்சின. அவரது தொழிலுக்கான லாப ஈட்டை அவரால் பெற்றனுபவிக்க இயலவில்லை. அவரது தொழில் நாளுக்கு நாள் பெலவீனமடைவது அவரை தூக்கமிழக்கச் செய்தது. அவரது உணர்வு களை சோர்வு ஆட்கொண்டது. இதனிமித்தம் அவரது மனைவிக்கும் அவருக்குமிடையே விழுந்த நீண்ட இடைவெளிகள் இறுதியாக அவரது இரண்டாவது திருமணத்தையும் பிரிவு வரை கொண்டு வந்து நிறுத்திவிட்டன.

நான் சங்கை பில் மற்றும் ஜூன் டியூலிப்பை சந்தித்தேன். அவரால் என்னை விடுதலைக்குள் நடத்த இயலவில்லை என்று ஜிம் தெரிவித்தார். குற்றவுணர்வு அவரை ஆழமாய் ஆவியில் பாதித்திருந்தது. இச்சைகள் அவரது உணர்வுமண்டலத்தில் அலைமோதின. தற்கொலை எண்ணங்கள் அவரது சிந்தையை நிரப்பலாயின. அவரது வெளிப்புற சரீரத்திற்கடுத்த

உணர்வுகளில் மனநிலையில், ஆவியில் என அனைத்து நிலைகளிலும் அவரை ஆக்கிரமித்திருந்த வெறுமை அவரது நரம்பு மண்டலத்தை பாதிப்படையச் செய்து ஆபத்தான கட்டத்தில் அவரைக் கொண்டு வந்து நிறுத்தியது. ஜிம் தமது வாழ்வின் விளிம்புக்கே வந்துவிட்டார். அவர் தம்மைத் தாழ்த்தி உதவிக்காய்க் கதறினார். தமக்குள் எழுந்த எதிர்மறையான உணர்ச்சிக் கொந்தளிப்புகளை மேற்கொள்ளவே அவர் உதவி கேட்டுக் கெஞ்சினார்.

இது விஷயமாய் ஜிம் எங்கு அவரை அணுக வேண்டுமென முடிவெடுத்து இவ்விதமாய்க் கூறினார்.

என்னை அலைக்கழிக்காமல் தெளிவுற எனக்கு வழிகாட்டிய ஒரே போதகர் நீங்கள்தான். நான் எப்போதும் இலக்கை எட்டிப் பிடிக்க இயலாமலே நின்றுவிடுபவன். பலமும் உத்திரவாதமும் மிக்க ஒருவர் எனக்கு அவசியப்பட்டார். நான் என் பாவங்களை அறிக்கை செய்ய வேண்டியிருந்தது. மட்டுமின்றி நான் எனது வாழ்வை ஒழுங்குபடுத்த என்ன செய்ய வேண்டியிருந்தது என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள் என நான் அறிந்து கொண்டேன். எனவே நான் இண்டியானாவிலுள்ள உங்களது எண்ணை சுழற்றிய வேளையில், ஜிம் ஆண்டவரோடும் என்னிடத்திலும், என் மனைவியிடத்திலும் நீங்கள் நேர்மையாய் நடந்து கொள்வீர்களா? என்ற கேள்வியே நீங்கள் என்னுடன் பேசிய முதல் வாக்கியமாகும்.

ஒரு வாரத்திற்குள் கிங்ஸ்லி இன்னிலுள்ள எங்களது அறையில் அவர் எங்களைச் சந்திக்க நானும் எனது மனைவியும் அவருக்கு ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தோம். ஜிம் சொன்னார்.

நான் ஒருபோதும் எந்த சந்திப்பிற்கும் பிந்திப் போவதை விரும்புவதில்லை. எனது காலதாமதம் எனக்கு கஷ்டத்தை உருவாக்கிவிடாதபடி எப்போதும் சற்றுநேரம் முன்னற்கூட்டியே இடத்தில் இருப்பது எனது வழக்கம். அன்றும் அவ்விடம் மட்டும் சற்று நின்று பின் ஏற்ற நேரத்தில் அறைவாசலின் கதவைத் தட்டினேன். ஆயினும் உள்ளிருந்து சத்தம் வரவில்லை. எனவே கிட்டத்தட்ட சோர்ந்து அன்றைய சந்திப்பு நடைபெறாமற்போகுமோ என எனக்குள் கலங்கி விட்டேன். ஆயினும் இதுநிமித்தம் உண்டான நரம்புத்தளர்ச்சி எனக்கு ஓய்விடம் தேவை என உணர்த்தியதால் வெளியேறவும் மனமின்றி திகைத்து நின்ற அவ்வேளையில் தானே ஜீவனுண்டானது போல ஆங்கே கதவு திறந்தது. எதிரே பாப் ஸ்வான்க் நின்றுகொண்டிருந்தார். நான் கிட்டத்தட்ட மயக்கமுறும் நிலைக்கு வந்துவிட்டேன்.

நாங்கள் சின்ன சுகவிசாரிப்புக்குப்பின் ஆலோசனை வேளைக்குள் நுழைந்தோம். ஜிம் தமது சோகக்கதையை முற்றிலும் விளக்கமாய்

எடுத்துரைத்தார். அங்கு தான் எத்தனையெத்தனை பயங்கள், குற்றவுணர்வுகள், தோல்விகள், பாவங்கள் மண்டிக்கிடந்தன.

அவர் தமது பிழையை அடையாளங்காட்டினபின் நாங்கள் அவரை மனந்திரும்புதலுக்கடுத்த மறுமுனைக்கு எடுத்துப்போனோம். அவரது மற்றும் அவரது முன்னோரின் பாவங்களை அறிக்கையிடும்படி அவரைப் பணித்தோம். மட்டுமின்றி இச்சைகள் குற்றங்களுக்கடுத்த சுய வெறுப்பு, தற்கொலை எண்ணங்கள், பில்லிசூனியம், மனத்தளர்ச்சி, முந்திய விவாகம், விவாகரத்து இது குறித்த அவரது தவறான உணர்வுகள் அனைத்தினாலுமுண்டான அவருக்கெதிரான சாபங்களை முறித்து விட்டோம்.

அடுத்து ஜிம்மின் இரட்சிப்புக்கு வேலி போட்டோம். இது தேவனது மன்னிப்பைப் பெறுதல் தம்மைத்தாமே மன்னித்தல், மற்றவர்களை அவர் மன்னிப்பது, அவருக்கு விரோதமாய் செயல்பட்ட அவரை காயப்படுத்தின, அவரைத் தாக்கின, சோர்வுறச் செய்த, ஏதோ ஒருவிதத்தில் அவரைப் பாதித்த உயிரோடிருக்கும் அல்லது ஏற்கனவே மரித்துப்போன எல்லோரையும் அவர் மன்னிப்பதை உள்ளடக்கியிருந்தது. அவர் அவ்வாறே செய்து முடித்தார். பின்னர் அவர் கிறிஸ்துவுக்கும் தமக்குமுரிய உறவை உறுதிப்படுத்தி கிறிஸ்து தமக்காக சிலுவையில் நிறைவேற்றி முடித்த கிரியையை விசுவாசத்துடன் அறிக்கையிடச் செய்தோம். இயேசுவின் மரணம், மீட்பு, மன்னிப்பு, சுத்திகரிப்பு, நீதிமானாக்கப்படுதல், இயேசுவின் இரத்தத்தினால் கிட்டும் பரிசுத்தம், இயேசுவின் உயிர்த்தெழுதல் அத்தனையையும் ஜிம் ஏற்றுக்கொண்டார். ஆண்டவராகிய இயேசு தமக்கு ஒரு புதிய இதயத்தையும் அதில் புதிய ஆவியையும் அதனாலுண்டான புதிய உடன்படிக்கையையும் (எசே. 36:26) இன்படி தந்தருளும்படி ஜிம் இயேசுவை தமக்குள் வருந்தி அழைத்தார்.

நானும் எனது மனைவியும் இணைந்து, தற்கொலையின் ஆவி, சோர்வுகளின் ஆவிகளை விரட்டி, விடுதலைக்கு வழிவகுத்தோம். மற்ற அனைத்து தீய ஆவிகளின் சேனைகளும் ஒன்றன்பின் ஒன்றாய் வெளியேறின.

ஜிம், நான் விடுதலை பெற்ற போது எனக்குள் உண்மையான ஆவிக்குரிய துக்கம் உண்டாயிற்று என்றார். எனக்குள் ஏதோ உயிரிழந்தது. நல்லவனாய்க் காட்ட முயற்சிப்பது கொடுமையானது. பின்னொரு நாளும் நான் அப்படியிருக்கவில்லை. பாப், நீங்கள் அதே நாளில் என் வாழ்வைக் காப்பாற்றினீர்கள். அதை தேவனே செய்தார் என்று நானறிவேன். எனினும் அதற்கென அவர் உங்களை பயன்படுத்தினார்.

அவரது விடுதலைக்கான ஊழியம் முடிவுக்கு வந்தபோது சாதாரணமாய் சில வேளைகளில் செய்யாததை நாங்கள் அவருக்குச் செய்தோம். பொதுவாக பொல்லாத ஆவிகள் நபர்களை விட்டு வெளி யேறுகையில் அவை மறுபடியும் மனிதருக்குள் நுழையாதபடி வனாந் தரத்திற்குத் துரத்தி விடுவோம். மட்டுமின்றி அந்த ஆவிகள் விடுதலை பெற்ற நபரின் குடும்ப அங்கத்தினர்களையோ மற்ற மனிதரையோ உட்புகுந்துவிடாதபடி இயேசுவின் நாமத்தில் அவைகளுக்கு கட்டளை யிடுவோம். பின்னர் பரிசுத்த ஆவியானவரை அந்நபர் தமக்குள் வருந்தியழைக்க கற்றுத் தருவோம். ஜிம் விஷயத்தில் நாங்கள் அவர்மேல் கைகளை வைத்து அவர் அபிஷேகம் பெறும்படி ஜெபித்தோம். அவர் உடனேதானே ஆவியில் நிறைந்து நடனமாடி அந்த ஹோட்டல் அறை முழுவதும் சுற்றிவரத் தொடங்கினார். தமக்குள் நிறைந்த தெய்வீக சந்தோஷத்தால் என்னைத் தூக்கிக் கொண்டே துதித்து, சிரித்து ஆடி ஓடி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தார். நான் தற்போது ஒரு சிறுவனல்ல. ஜிம்மைக் காட்டிலும் உயரத்திலும் எடையிலும் கூடியவன். எனினும் அவருக்குள் ளிருந்த தேவ ஆவியினிமித்தம் தீய ஆவிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட சந்தோஷத்திலும் இது அவரால் கூடிற்று.

தொடர்ந்து நாங்கள் அவரது அலுவலகத்தில் இருக்கையில் ஜிம் சம்பவங்களை நினைவுகூர்ந்து அடுக்கினார். "அந்த நாளுக்குப்பின் நான் ஜனங்களை வித்தியாசமாய்ப் பார்க்க ஆரம்பித்தேன். ஜனங்களைக் குறித்து இதுவரை இல்லாதிருந்த அன்பு என்னில் இப்போது உண்டாயிற்று. எனது திருமண வாழ்வு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அன்றைய சம்பவம் என்னையும் ஜேனையும் மறுபடி இணைத்து விட்டது. இது எனது ஆவிக்குரிய அனுபவத்தின் உச்சகட்ட நிலைக்கு என்னை எடுத்துச் சென்ற ஏணியாகும் நான் ஜேனை எப்போதும் பிழையற்றவளாகவே கண்டிருந்தேன் ஆனால் இப்போதோ என் பார்வை மாறுபட்டது. அவள் ஒரு தேவனுடைய பிள்ளை எனினும் பாவத்தில் கர்ப்பந்தரிக்கப் பட்டவள்தான் என்னைப் போலவே அவளும் விடுதலையை அவசியப்படுபவள் என உணர்ந்தேன். எங்கள் நெருக்கம் அதிகமானதை உணர்ந்தேன். அவள் பாவம் மன்னிக்கப்பட்டு தேவ அன்பின் பிரவாகம் அவளை நிரப்பக்கண்ட ஜேன் என்னை தனக்குள்ளும், வீட்டிலும் ஏற்றுக்கொள்ள முன் வந்தாள். எங்களுக்குள் ஒரு புதிய நம்பிக்கை பிறப்பெடுத்தது. ஆண்டவர் ஆவியில் எங்களை ஒருமுகப்படுத்திய அதே வேளையில் எங்களது குடும்ப வாழ்வின் பரிசாக எங்களது மகள் ஜெஸி எங்களுக்குக் கிட்டினாள். நான் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் ஆசீர்வதிக்கப்பட்டவனாய் என்னை உணர்ந்தேன். நான் உயிர்மீட்சி பெற்றவுடன் தானே அதுவரை செய்ய முடியாதிருந்த பணியை நான் மேற்கொண்டேன். அதாவது எனது சகோதரனுக்கு ஆவிக்குரிய

அறிவுரைகளைக் கூறலானேன். இப்போது தேவனுக்கு ஊழியஞ் செய்ய விரும்புகிறேன். அந்தகாரம் இனி என்னை துரத்த முடியாது. இப்போது கிறிஸ்துவுக்குள் சகல எண்ணங்களையும் கீழ்ப்படுத்தி சிறையாக்கும் ஆற்றலை நான் பெற்றிருக்கிறேன்.

இப்போது எனது தொழில் அபிவிருத்தி அடைந்து வருகிறது. இப்போது நான் ஆவிக்குரிய நிலையில் கருத்துடையவனாகவும் நீதியாலோசனைகளை சற்றே கட்டுப்படுத்தி வழங்குகிறவனாகவும் காணப்படுகிறேன். மக்கள் தங்களது ஆன்மீக வாழ்வை நிலைப்படுத்தி பொருளாதாரத்திலும் வெற்றி காண்பதையே நான் தற்போது அறிவுறுத்துகிறேன்."

ஜிம் தற்போது ஆண்டவருக்காக தன்னார்வத் தொண்டு புரிவதுடன் எதிர்காலத்தில் சபையிலும் சேவை செய்ய விழைவு கொண்டுள்ளார். கிறிஸ்தவர்களின் ஆன்மீக, பொருளாதார வாழ்வுக்கடுத்த திட்டமிடுதல் குறித்த காரியங்களில் அவர் ஜனத்திற்கு உதவி செய்ய விரும்புகிறார். இக்கால முறையின்படி ஞானமாய் அவர் அனைத்தையும் கையாள விரும்புகிறார். கிறிஸ்தவர்கள் பொருளாதார சாபத்திலிருந்து விடுபட்டு பொருளாதார செழிப்படைய உதவி செய்கிறார். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி ஆகாரம் புசிப்பது மனிதனுக்கு தேவன் தந்த சாபம் (ஆதி. 3:17-19) தேவனுக்குக் கீழ்ப்படிந்து சத்தியத்தைக் கைக்கொண்டு உண்மையாய் உழைக்கையில் சாபமே ஆசீர்வாதமாகி விடுகிறது.

ஜிம்மிடமிருந்து திரும்பியபோது நாங்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்களாய் உணர்ந்தோம். ஜிம் இப்போது எங்களுக்கும் அவரது குடும்பத்திற்கும், சபைக்கும் ஆசீர்வாதமாயிருக்கிறார். கர்த்தர்தாமே தொடர்ந்து நித்தியம் மட்டும் அவரை வழிநடத்துவாராக.

புகையிலையிலிருந்து விடுதலை

தேவைகளுடன் எதிர்பார்த்து நிற்கும் ஜனங்களுக்கு எப்பொழுதும் எங்கள் வீடு நிறந்தே இருக்கும். ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு பெண்மணி எங்கள் வீட்டைத் தேடி வந்தாள். தேவையுள்ளவளாக அல்ல, தான் தனது ஜீவிய காலத்தின் பெரும்பகுதியை புகையிலைக்கு அடிமையாகவே கழித்ததையும், அதிலிருந்து கிடைத்த விடுதலையையும் சாட்சியாகப் பறைசாற்றவே அங்கு அவள் வந்திருந்தாள்.

கேத்தி கோல் எனும் அப்பெண்மணி புன்முறுவலுடனும், மகிழ்ச்சி கலந்த நட்புணர்வுடனும் காணப்பட்டாள். எங்களது அறைக்கு வந்த அவள் வசதியாக அமர்ந்து கொண்டு தனது பேட்டிக்கு ஆயத்தமானாள்.

கேத்தி உண்மையாகவே தேவனுடைய ஒரு அற்புதப் படைப்புத்தான். அவள் தற்போது தான் பேட்டிக்கென வந்திருப்பினும், அவளுடனான எங்கள் குடும்ப நட்புப் பழக்கம் இப்பெண்ணுக்குண்டான அற்புத விடுதலையின் மூலம் வெளிப்பட்ட தேவ அன்பின் பிரவாகத்தை எங்களுக்கு ஏற்கெனவே விளங்கப்பண்ணியிருந்தது. அதுபோல் இவளுக்குள் ஆழமாய் வேரூன்றி வெளிப்பட்ட ஆவிக்குரிய எழுச்சியைக் கண்டு களிகூர்ந்திருந்தோம் நாங்கள்.

சற்றுநேரம் நானும் எனது மனைவியும் இப்பெண்மணியும் அவருடன் ஆரம்ப வார்த்தைகளை, சுக விசாரிப்புகளை பகிர்ந்து, கொண்டிருக்கும்போது தானே என் மனைவி அவருக்குத் தேநீர் கொண்டு வந்து கொடுத்தார். அதன்பின் கேத்தி தனது நீண்டகால புகையிலைப் பழக்கத்தைக் குறித்து எங்களுடன் பகிர்ந்து கொள்ளத் துவங்கினார்.

கேத்தி கூறுவதைக் கேட்போம், ''எனது தகப்பனாரும், எனது தாத்தாவும் தான் முதலாவது எனக்குப் புகையிலையை அறிமுகப்படுத்தியவர்கள். அப்பொழுது எனக்கு நான்கு வயது இருந்திருக்கலாம். அவர்கள் எனக்கு ஒரு சிகரெட்டைக் கொடுக்க, நான் அதனை இருமாமலே புகைத்து முடித்தேன். அவர்கள் மிகுந்த சிரிப்புடன் என்னைப் பாராட்டி உற்சாகப்படுத்தினார்கள். பன்னிரண்டு வயதில் லக்கி ஸ்டிரைக்ஸ் சிகரெட்டை நான் புகைக்கத் துவங்கியதிலிருந்து நான் நிக்கோடின் எனும் போதை வஸ்துக்குப் பெரிதும் அடிமையானேன். சிகரெட் புகைப்பதின் மூலம் என் தகப்பனாரைப் பிரியப்படுத்த நான் விரும்பினேன். எனவே கேள்விக்கு இடமின்றி நான் கடைக்குள் போகையில் ஒரு பாக்கெட் சிகரெட்டோடு வெளிவரும் நிலைக்குள்ளானேன்.

பின்னர் எனது தகப்பனாராலும், பள்ளி மாணவர்களாலும் நான் ஒதுக்கி வைக்கப்படும் ஒரு காலகட்டம் வந்தபோது, இந்த நிக்கோடின் தான் எனக்கு ஆறுதல் தந்தது.

அந்நிலையில் ஒரு கிறிஸ்தவப் பெண் உயர்நிலைப் பள்ளிப் படிப்பின்போது இயேசு கிறிஸ்துவின் பாடு, மரணங்கள் மூலமாய் எனக்குக் காத்திருக்கிற தேவ கிருபையை என்னுடன் பகிர்ந்து கொண்டாள். ஆயினும் எனது பாவக்கிரியையை விட முடியாததினால் இச்சத்தியத்தை கேட்டபின்னரும் அதிகமதிகமாய் புகைத்துக் கொண்டிருந்தேன். உண்மையில் சத்தியத்தை கேட்ட பின்னர், அதிகமாய் பாவஞ்செய்யலானேன்.

இவ்வாறு புகையில் கெட்டழிவது கண்டு எனது தகப்பனாரே என்னை வெறுத்து ஒதுக்க நானோ அது நிமித்தம் மனமுறிந்து பதினெட்டு வயதில் குடிப்பழக்கத்துக்கும் ஆளானேன்.

எனக்கு மிகச் சீக்கிரமே திருமணமாகி மூன்று பிள்ளைகளும், பிறந்த பின்னர் எனது திருமண வாழ்க்கை விவாக ரத்தில் முடிந்து போனது

திருமண முறிவின் விளைவாக கத்தோலிக்கப் பெண்ணாகிய நான் மிகவும் சோர்வுக்குள்ளானேன். தள்ளி விடப்பட்ட நிலை என்னை நெருக்கடிக்குள்ளாக்கியது. என் இஷ்டப்படி நடக்க எனக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை என்ற காரியம் என்னைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியது. நான் அனைத்து நிலைகளிலும் புறக்கணிக்கப்பட்டவளாகவே என்னை உணர்ந்தேன். எனவே என் வாழ்க்கைக்கு அர்த்தங் கண்டுபிடிக்க வேண்டுமென்று துடித்தேன்.

எனது இரண்டாவது திருமணம் எனக்கு மிகுந்த இடர்பாடுகளையும், அதிக புகைபிடித்தலையுமே தேடித்தந்தது. எனது இரண்டாவது கணவர் சரீரப்பிரகாரமாக என்னை விரும்பக் கூடியவராகவே இருந்தார். எனினும் அவருடனான எனது திருமண உறவில் ஆரம்பமே கோளாறாயிருந்தது. எனவே நான் நம்பிக்கையற்றவளாகவும், வாழத் தகுதியற்றவளாகவும் என்னை உணர்ந்தேன். அதினிமித்தம் ஒவ்வொரு நாளும் இரண்டரைப் பாக்கெட் சிகரெட் புகைக்க ஆரம்பித்தேன். பிரச்னைகள் அதிகரிக்க அதிகரிக்க எனது புகைபிடிக்கும் பழக்கமும் அதற்கேற்ப இன்னும் அதிகரித்து எனது நரம்பு மண்டலம் பாதிக்கப்படக்கூடிய நிலைக்கு என்னை கொண்டு போய் நிறுத்தியது. ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து ஒரு கப் காப்பியும், ஒரு சிகரெட்டும் அருந்தும் இளங்காலை நேரம் தான் எனக்கு மனரம்மியமளிப்பதாயிருந்தது.

இந்நிலையில் முதன்முறை நான் உங்களையும், திருமதி மேரிலோவாவையும் சந்தித்தபோது தான் ஆண்டவரை ஏற்றுக் கொண்டேன். ஒரு ஸ்தல சபையில் நடந்த விடுதலை ஆராதனை வேளையில் தான் நீங்கள் எனக்கு விடுதலையைக் குறித்த நம்பிக்கையை ஊட்டினீர்கள். நான் எனது இரண்டாவது கணவர் இரட்சிக்கப்பட்டவராயிருப்பார் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். தேவனுக்கும் எனக்கும் இடையில் நிற்கும் மீட்கிறவராக அவர் எனக்குத் தென்பட்டார். இரட்சிக்கப்பட்ட கணவர் குடும்பத்திற்கு ஆசாரியனாக, தீர்க்கதரிசியாக விளங்கி மனைவியை உற்சாகப்படுத்தக் கூடியவராயிருக்க வேண்டுமென நான் எதிர்பார்த்தேன். ஆனால் இரட்சிப்பிற்கான கனிகள் அவரில் ஒன்றுமே காணப்படவில்லை என்பது பின்னர் தான் எனக்கு விளங்கியது. அந்த காலகட்டத்தில் அவரை எனக்கும், என் பிள்ளைகளுக்கும் மிக மோசமானவராகவே பட்டது.

நான் குறிப்பிட்ட விடுதலை ஊழியப் பயிற்சி சாலையில் நீங்களும், திருமதி மேரிலோவாவும் என்னை ஓரளவு விடுதலைக்குள் நடத்தினீர்கள். கர்த்தர் என்னில் கிரியை செய்ய ஆரம்பித்தார். ஆயினும் எனது மதப் பின்னணி என்னை ஆண்டவருக்குக் கீழ்ப்படியக் கூடாதவளாக தடுத்து நிறுத்துவதாக நான் கருத வேண்டியிருந்தது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாக எனது தொண்டையில் ஒரு அறுவை சிகிச்சை நடந்து முடிந்த வேளையில், புகைபிடித்தல் தேவனுக்கு அருவருப்பானது என்று ஏற்கெனவே என்னிடம் சொல்லியிருந்தீர்கள். அந்த வேளையில் அது என்னை மிகவும் குத்திப் பேசுவது போல் தெரிந்தது. ஆயினும் பரிசுத்த ஆவியானவர் என்னை ஒரு ஆழமான பாவ உணர்வுக்குள் வழிநடத்தினார். அப்படியிருந்தும், நான் தொடர்ந்து புகைத்துக் கொண்டும், அதே வேளையில் புகையை விட முடியாமை குறித்து சாக்குப்போக்குகளைச் சொல்லிக் கொண்டுமிருந்தேன். எனக்கு விடுதலை கிட்டுவதற்கான வாய்ப்புக்கு இடமில்லாதிருந்தது. எனது சரீர நிலை மிகவும் பாதிப்புக்குள்ளானது. நான் எனது ஜீவனைக் குறித்து அதிகமதிகமாய் பயப்படலானேன். அந்நிலையில் தான் புகைப்பதிலிருந்து விடுதலை வேண்டி இண்டியானா வந்திருந்தேன்.

நிக்கோட்டின் அடிமைத்தனத்தினின்றும் விடுதலை

பிரவுண் நிற கூந்தலுடன் கூடிய அந்த நடுத்தர வயது நங்கை சற்றே கஷ்டப்பட்டு, உள்ளே வந்து உணவறையிலுள்ள ஆசனத்தில் அமர்ந்த போது, போதகர் இல்லம் அமைதலுடனும், பிரகாசமாகவும் தான் காணப்பட்டது. அவர் போதகர்களுக்கு அப்புறத்திலுள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்த விதமே அவரது பெலவீனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தது. போதை வஸ்துக்களால் பாதிக்கப்பட்டிருந்த அவரது சரீர நிலையும், அவளுக்குண்டாயிருந்த இருமலும், மூச்சிரைப்பும் அவளை பரிதாபத்துக்குரியவளாக காட்டிக் கொடுத்தன. தனது நீண்டகால நிக்கோட்டின் பழக்கத்தாலுண்டான நரம்புத் தளர்ச்சி உள்ளிட்ட கோளாறுகளோடு அவள் போராடிக் கொண்டிருந்தாள்.

ஒரு வருடத்திற்கு முன்பதாக கடைசியாக கேத்தி மரணத்தருவாயில் உதவி வேண்டி வந்திருந்தார். புகைபிடித்தல், அழுத்தம், மாறுபட்ட நிலைகள் பலவற்றின் தாக்கத்தால் அவர் மிகவும் சோர்வுற்றவராய் காணப்பட்டார். தோற்கடிக்கப்பட்டவளாக, விடுதலைக்காகவும், சுகத்திற்காகவும் ஆண்டவரிடம் மன்றாடக் கூடியவராக அவர் அங்கே வந்திருந்தார். நம்பிக்கையின்மை, சோர்வு இவற்றால் அவர் இறுகக் கட்டப்பட்டிருந்தார். நிக்கோடின் இப்பெண்ணை அடிமைப்படுத்தி வைத்திருந்தது. தனது பாவங்களையும், தோல்விகளையம் அறிக்கையிட்டவராக அவர் அங்கே வந்திருந்தார். அவர் மனந்திரும்புதலுடன் வந்திருந்ததால் அன்று பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டார். தாழ்மையுடன் வந்த அப்பெண் வெற்றியுடன் வெளியேறிப் போனாள். நானும் எனது மனைவியும் அப்பெண்ணுக்குள்ளிருந்த நிக்கோட்டின் பிசாசை இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் விரட்டியடித்தோம். அந்த நிக்கோட்டின் அசுத்த ஆவி அவளிலிருந்து வெளியேறுகிற வேளையில், அவளது சரீரத்தின் ஒவ்வொரு அவயவங்களிலும் நிக்கோட்டின் வாசனை வெளிப்பட்டது. நிக்கோட்டின் பிசாசு அவளை விட்டு நீங்கியபோது அவளது தளர்ச்சிகளும் மயக்கங்களும் அந்த ஆவிகளோடேயே போய் விட்டன. புகை பிடித்தலிலிருந்து விடுதலை பெறும் வரை அவள் தனது மயக்க நிலையின் உச்ச அல்லது ஆழ நிலையை அறிந்திராதவளாயிருந்தாள்.

நிக்கோட்டினிலிருந்து விடுதலை உண்டானதைத் தொடர்ந்து கேத்தியின் சிந்தனைப் பகுதியில் தெளிவுண்டானது. புகையிலையிலிருந்து தான் பெற்றுள்ள இவ்வெற்றியே தனது வாழ்வில் தான் உணரும் முதலாவது வெற்றி என அவள் எங்களுக்குத் தெரியப்படுத்தினாள்.

கேத்தியின் பேட்டி தொடர்கிறது : ''நான் வீட்டுக்குத் திரும்பிப் போய் சோதனையினூடே நிக்கோட்டின் பிசாசினால் மேற்கொள்ளப்பட்டு ஒரு சிகரெட்டைப் புகைத்தேன். பின்னொரு முறை நீங்களும் திருமதி மேரிலோவாவும் என்னைப் பார்க்க வீட்டுக்கு வந்திருந்து இரண்டாம் முறை எனக்காக ஜெபித்தீர்கள். அந்த வேளையில் நீங்கள் எனக்காக மறுபடியும் இனி ஜெபிக்க மாட்டோம் எனக்கூறியது என்னை மிகவும் பயமுறுத்தினது. நான் எனது கண்ணியிலிருந்து விடுபட விரும்பினேன். காரணம் என் வீட்டுக்கு வரும் அநேகர் அங்கேயே புகைத்தனர். நான் புகைபிடித்தலின் கேட்டை உணரலானேன். எனவே நான் இன்டியானா போய் என் மகளோடும் அவள் குடும்பத்தோடும் தங்க எண்ணினேன்.

பின்னர் புகைப்போர் மத்தியில் இருந்தாலும் நான் அந்த சோதனைக்குள்ளாகவில்லை. ஆண்டவர் அந்த கெட்ட பழக்கத்தை முற்றிலும் என்னை விட்டு தூரப்படுத்தி விட்டார். எனது சரீரத்தளர்வு உள்ளிட்ட பெலவீனங்களிலிருந்தும் சுகத்தை நான் பெற்றுக் கொண்டேன். எனது மனம் புதிதானதினால் ஒதுக்கப்பட்ட உணர்விலிருந்தும் விடுதலை பெற்றுள்ளேன்''.

இயேசுவும், அவளது போதகர்களும் ஏனைய சகோதரர்களும், சகோதரிகளும் தன்னை நேசிப்பதை இப்போது கேத்தி தெரிந்து வைத் துள்ளார். அவர் இப்போது வேத வசனங்களை வாசித்து விளங்கிக் கொள்ளும் நிலையிலும் ஆவிக்குரிய காரியங்களிலும் வளர்ந்து வருகிறார். கேத்தி இப்போது மற்றவர்களை ஆண்டவருக்காக சந்திக்கும் பெலனுடைய வராயிருக்கிறார். சோதனைகளும், உணர்ச்சிகளும் அவளைத் தொடர்ந்து தாக்கினாலும் அவைகளிலிருந்து விடுதலையும், சுகமும் அருளுகிற ஆண்டவர் தன்னோடுண்டு என நம்பி அவர் முன் செல்கிறார். கர்த்தருக்கே மகிமை.

தற்காலத் தடுமாற்ற இசையிலிருந்து விடுதலை

புதிய பிலதெல்பிய சபையை சேர்ந்த வாலிபர் சிலருக்குள் ஆவியானவரின் கிரியை அதிகமாய் நடந்து கொண்டிருந்தது; எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பேரிலும், ஒருவரிலொருவரிலும் நாங்கள் மிகுந்த அன்பை விளங்கப் பண்ணி வந்தோம்.

முதலாவதாக எங்களது சகோதர அன்பு ஒருமித்து முடிவெடுக்கச் செய்த காரியம் எங்களது சிறிய சபையின் கூரையை மாற்றியமைக்கும் விஷயம் குறித்ததாகும். நாங்களே இரவு முழுவதும் பிரயாசப்பட்டு, கிறிஸ்துவின் நிறைவான அன்புடன் ஒன்று சேர்ந்து நின்று வேலையை கச்சிதமாக முடித்தோம்.

எங்களது ஐக்கியமும் அன்பும் பெரிதாய் வளர, வளர நாங்கள் வீடு சந்திப்பு, திருச்சபை கூட்ட நாட்கள், மற்றும் வாலிபர் சுற்றுலா என நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி காரியங்களை மேற்கொள்ளலானோம். சில வேளைகளில் பாஸ்டர் பாப்க்கு சொந்தமான இடங்களில் தனிமையில் பல காரியங்களை கற்றுத் தேர்ந்திட நல்ல ஆவிக்குரிய பயிற்சி பெற்றோம். எங்களது நடவடிக்கைகள் ஒவ்வொன்றுமே ஆண்டவர் பேரிலுள்ள எங்கள் அன்பை நாளுக்கு நாள் அதிகரிக்கவே செய்தன.

தெற்கு இன்டியானாவில் உள்ள மான்ரோய் ஏரிப் பகுதியில், அண்மையில் ஒரு இளைஞர் சுற்றுலா முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அம்முகாமுக்கான முக்கிய கருப்பொருள்களில் ஒன்று "வேதத்தை வாசிக்கும் வேளையில் தேவ சத்தம் கேட்பது" என்பதாகும். ஆண்டவரது வார்த்தையின் மூலம் வாலிபர்களாகிய நாங்கள் சரியான நடத்துதலை கிடைக்கப் பெற்றோம். ஆரம்பத்தில் அங்கு நிலவிய அமைதல் தேவ சத்தம் கேட்க இயலாத நிலையிலுள்ளவர்களாக எங்களை அடையாளங்காட்டியது. அங்கு நடபபிககபபட வேண்டிய அவசியமிக்க ஒரு ஊழியத்தை அப்பொழுது நாங்கள் உணர்ந்தோம். உணர்ச்சிகளைத் தடுமாறச் செய்யும் தற்கால கிறிஸ்தவ இசையின் அடிமைத்தளையே தேவ சத்தம் கேட்கக் கூடாமல் மௌனித்திருக்கும்படி எங்களை கட்டிப்போட்டுள்ளதை நாங்கள் கண்டு கொண்டோம். ஒரு காலைப்பொழுது குழுப்பரிமாற்ற வேளையில் தற்கால கிறிஸ்தவத் தடுமாற்ற இசை குறித்து பல காரியங்களைப் பகிர்ந்து கொண்டோம். அதன் முடிவாக நிறைவேற்றி முடிக்கப்பட்ட ஊழியம் இந்த அடிமைத்தளையிலிருந்து எங்களை விடுதலையாக்கியது. அது முதல் அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கத் துவங்கினோம்.

போதகர் பாப்பின் மனைவி பாஸ்டர் மேரி லோவா ஒரு மாலை தியானக்கூட்டம் நடத்திக் கொண்டிருந்த வேளையில், வளருவதற்கான வேளை இதுவே என பரிசுத்த ஆவியானவர் அவசரப்படுத்துகிறதாக அவர் உணர்ந்துள்ளார். நாங்கள் என்ன செய்ய வேண்டுமென கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்று நாங்கள் ஆண்டவரைக் கேட்க வேணடியிருந்தது. (கர்த்தருடைய வழிகளில் முதிர்ச்சியுறக் கூடாதபடி எங்களை பின்னுக்கு இழுப்பது எது என நாங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டியிருந்தது).

அடுத்த நாள் மாலை வேளையில் ஆண்டவர் தங்களுக்கு வெளிப்படுத்தின தெய்வீக அக்கினியைக் குறித்த காரியங்களை பிரஸ்தாபிக்க வாலிபர்கள் ஆயத்தமானார்கள். எரிந்து கொண்டிருக்கும் நெருப்பில் ஒரு மரக்கட்டையைப் போட்டால் அது எப்படி பற்றிக் கொள்ளுமோ, அவ்வாறாக எங்கள் இருதயங்கள் கொழுந்து விட்டெரிந்தன. எங்களது தனிப்பட்ட தேவையுள்ள பகுதிகளை பரிசுத்த ஆவியானவர் மிக உண்மையாய் எங்களுக்கு சுட்டிக் காட்டினார்.

எங்களது தனிப்பட்ட மண்டலத்தின் ஆக்கிரமிப்புக்களான தவறான எண்ணங்கள், பெருமை, சுயநலம், முன்னேற்பாடில்லாமை, கசப்பு, மிதமிஞ்சிய உணர்வு, முரட்டாட்டம் ஆகியவையும் ஆவியானவர் இடைபட்ட காரியங்களில் அடங்கும். தனிப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் நிலைகளை அறிக்கையிடத் துவங்கியபோது அதனாலுண்டான பலன் மிக அற்புதமாய் அமைந்தது. குடும்ப உறவுகளுக்குள் காணப்பட்ட சீர்குலைவுகள் நீங்கி நற்சீர் உண்டானது மட்டுமின்றி தற்காலத்தின் தடுமாற்றத்திற்குரிய கிறிஸ்தவ இசையின் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்ற உணர்வு ஒவ்வொரு தனி நபருக்குள்ளும் மேலோங்கி நின்றது. இயேசு கிறிஸ்துவின் குறைவற்ற அன்பை உள்ளடக்கிய தேவ பிரசன்னம் எங்கள் இருதயங்களில் அலையலையாய் பாய்ந்தது. (நாங்கள் கண்ணீர் உகுத்தோம்)

ஒரு குறிப்பிட்ட மாலையில் ஆரம்பித்த கிரியை ஒரு நிலையைக் கடந்து வளர்ந்து பெருகியது. எங்களது சிறு குழுவில் ஆண்டவர் புதிது புதிதாய் வாலிபர்களைக் கொண்டு வந்து சேர்த்தார். இளைஞர்களில் ஆரம்பித்த கிரியை பெருகி, சபையிலுள்ள பெரியோரையும் பற்றிப் பிடித்தது. நாங்கள் தேவனுடைய தொடர்ந்தேர்ச்சையான இனிய தொடுதலின் கீழ் கர்த்தருடைய வழிகளைக் கற்றுத் தேறுவதிலும் அவரது வசனத்தின் ஆழமான வெளிப்பாடுகளுக்குள்ளும் கடந்து சென்றோம்.

அதைத் தொடர்ந்து புதிய பிலதெல்பியா சபையிலுள்ள வாலிபர்களின் இருதயங்களில் பரிசுத்த ஆவியானவர் செயல்பட்ட விதம் குறித்த சாட்சிகள் தனித்தனியே பகிர்ந்து கொள்ளப்பட்டன.

வாலிபர் குழு

ஆரோன் சாட்சி

நான் பதினைந்து வயது நிரம்பியவனாயிருந்த போது கர்த்தர் பலத்த விதத்தில் என்னுடன் இடைபட்டு என் இருதயத்தை மாற்றி அமைக்கத் துவங்கினார். எனது போதகர்கள் ஆவியானவரால் நடத்தப்பட்டு, இன்டியானாவிலுள்ள தங்களது இல்லத்தில் இரண்டு வாரங்கள் தங்கியிருக்கும்படி என்னை அழைத்திருந்தனர். போன்ட்டியாக்கிலிருந்து லாபோர்ட்டிக்குப் போகிற வழியில் நாங்கள் மார்ஷலுக்கருகில் வசித்த ஏற்கெனவே எங்கள் போதகருக்குக் கீழ் இருந்து போன ஒரு குடும்பத்தை சந்திக்கச் சென்றோம். அவர்கள் எங்களை விருந்துக்கு இருந்துபோகும்படி கூற நாங்கள் அதனை ஏற்றுக் கொண்டோம்.

விருந்துக்கு முன்பதாக அவர்களது இளைய மகன் என்னிடம் தனது காரைக் காண்பித்து, ஒரு சவாரி போய் வரலாமா? என்று கேட்டான். சில நிமிடங்களில் திரும்பி விடலாம் என்று அவன் சொன்னதால் நானும் ஒத்துக்

கொண்டு கிளம்பினேன். நான் அவ்வாறு புறப்படுகையில், பாஸ்டர் பாப் அவர்களிடம் அனுமதி கேட்கவில்லை. அப்படிச் செய்யக் கூடாதென தெரிந்தும் அவர் அனுமதியில்லாமலேயே போய் விட்டேன். நாங்கள் திரும்பி வந்தபோது சாப்பாட்டுக்கு நேரமாகியிருந்தது. எங்களது சின்ன சுற்றுலாவைக் குறித்து நான் பாஸ்டர் பாப் அவர்களிடம் ஒன்றும் சொல்லிக் கொள்ளவில்லை.

நான் வயிறுபுடைக்கச் சாப்பிட்டு முடித்தபோது மீண்டும் எங்கள் பயணம் லாபோர்ட்டி நோக்கித் துவங்கியது. நான் ஊர் சுற்றி வந்தது போதகருக்கு தெரிந்திருக்குமோ என சற்றே நான் பவ்வியமாய் அவரைப் பார்த்தேன். நாங்கள் எங்களது நண்பரது வீட்டிலிருந்து வெகுதூரம் போயிருக்க மாட்டோம். பாஸ்டர் பாப் என்னை அழைத்து தமக்கும், மேரி லோவாவுக்கும் நடுவில் அமரச் சொன்னார். பின்னர் சாந்தமாக என்னிடம், எனது ஊர் சுற்றுதலைக் குறித்துத் தமக்குத் தெரியும் என்று கூறி நான் அவரோடு வந்திருக்கையில் என்மேல் அவருக்குள்ள பொறுப்பை எடுத்துச் சொன்னார். என் பெற்றோர் அவர்களை நம்பியே என்னை அவர்களுடன் அனுப்பி வைத்ததாக அவர் சொன்னார். நான் முன்பின் அறியாத ஒருவருடன் காரில் சுற்றி வந்தது தவறு என்பதை எனக்குத் தெளிவுற சுட்டிக் காட்டினார். ''ஒரு வேளை உன்னுடன் வந்தவர் நல்ல ஓட்டுனராயிருக்கலாம். ஆனால் அவர் உனக்கு அந்நியர் தானே'' என்று எடுத்துரைத்தார். எனக்கேதாகிலும் ஆகியிருந்தால் தாமல்லவா உத்தரவாதம் பண்ண வேண்டியிருக்கும் என்று உணர்த்திக் காட்டினார். நான் மனஸ்தாபப்பட்டேன். எனது முரட்டாட்டத்தை நான் உணர்ந்து கொண்டேன். நான் மன்னிப்புக் கேட்டபோது பாஸ்டர் பாப் அவர்களும் திருமத மேரி லோவாவும் என்னை மன்னித்தனர். பரிசுத்தாவியானவர் என்னை மனந்திரும்புதலுக்குள் கொண்டு வந்தார். பின்னர் பாஸ்டர் பாப் எனது சாப்பாட்டு பழக்கத்தைக் கண்டித்தார். புதிதாய் ஒரு வீட்டுக்குப் போகும்போது சாப்பாட்டு மேஜையில் எவ்வளவு நாகரீகமாக நடந்து கொள்ள வேண்டுமென்று எடுத்துச் சொன்னார். அவ்விஷயத்திலும் நான் மன்னிப்புக் கேட்டேன். நான் மன்னிப்புக் கோரியபின் தெய்வீக சமாதானம் என் உள்ளத்தை நிரப்பியது.

நாட்கள் செல்லச் செல்ல ஆண்டவர் என்னைப் போதகர் இல்லத்திற்குக் கொண்டு வந்த காரணத்தை நான் விளங்கிக் கொண்டேன். தேவனது அழைப்புக்கு பதில் கொடுக்கும் வண்ணமாய் ஆண்டவருடைய நற்செய்தியைப் பிரசங்கிக்கும் வேலைக்கென முதற்படி எடுத்து வைத்தேன். தேவன் எனது வாழ்க்கையை முற்றிலும் மாற்றி அமைக்க விரும்பினார். அன்புடன் என்னை கடிந்து கொள்ளக் கூடிய, தேவனுக்குக் கீழ்ப்படியும் நல்ல போதகர் மூலம் கர்த்தர் இக்காரியத்தை நிறைவேற்றி, தமது பூரண சமாதானத்தினால் என்னை சூழ்ந்து கொண்டார். ஆயினும் தெரிந்து

கொள்ளும் வாய்ப்பு என்னுடையதாயிருந்தது. நான் முரட்டாட்டம் பண்ணி பின்வாங்கிப் போகலாம் அல்லது கடிந்து கொள்ளுதலை ஏற்றுக் கொண்டு தேவ கிருபையை பெற்றுக் கொள்ளும்படி முன் செல்லலாம். நான் முன்னேறிப் போவதையே தெரிந்து கொண்டேன்.

ஒரு பிற்பகல் வேளையில் நான் எனது கணிதப் பாடத்தில் சில தவறுகள் செய்து விட்டதாக உணர்ந்தேன். நான் கணிதத்தை நன்றாக விளங்கிக் கொண்டிருந்தேன். எனினும் நான் எனது தாள்களை சரிபார்த்தபோது அங்கு பல பிழைகளை நான் காண நேர்ந்தது. நான் இது குறித்து பாஸ்டர் மேரி லோவாவிடம் வினவியபோது, உடனே அவர்கள், ''இது பிசாசின் வேலை.. . .மனதை அவன் கட்டியுள்ளான்'' என்றார்கள்.

பாஸ்டர் பாப் அவர்கள் மதிய உணவு வேளையில் அப்பிரச்னையை அடையாளங் காட்டினார். தற்கால தடுமாற்ற இசைக்கும் இன்னும் பிற மறைவான குற்றங்களுக்கும் நான் என்னை விட்டுக் கொடுத்திருந்ததே சாத்தான் என் மனநிலையில் அடித்தளமிட காரணமாயிற்று. எனது மறைவான பாவங்கள் மற்றும் தடுமாற்ற இசையின் மீது எனக்குள்ள கவர்ச்சி இவைகளை அறிக்கையிட்டு மனந்திரும்பும்படியான ஜெபத்திற்குள் பாஸ்டர் பாப் என்னை நடத்தி எனக்குள்ளிருந்த அசுத்த ஆவிகளை இயேசுவின் நாமத்தில் துரத்தினார். உடனடியாக எனது பிரச்சனைக்கு தீர்வு உண்டானது. போதகரது வீட்டில் நான் தங்கியிருந்த அந்த இரண்டு வார காலத்தில் தான் நான் முதல் முறையாக வேதத்தை மிகுந்த விருப்பத்துடன் தானாகவே வாசித்தேன். வேதத்தை முன் அட்டையிலிருந்து பின் அட்டை வரை முழுவதுமாக வாசித்து விட எண்ணித் தீர்மானித்தேன். எனினும் நேரக் குறைவினிமித்தம் வேதத்தை முடிக்க எனக்கு இரண்டு ஆண்டுகள் பிடித்தது.

இயேசு என்னை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை நான் போதகர் வீட்டிலிருந்த அந்த இரண்டு வாரங்களில் அதிகமாய் உணர்ந்து கொள்ளும்படி தேவன் எனக்கு அனுக்கிரகம் பண்ணினார். அவரது பராமரிப்பில் நான் எவ்வளவு பத்திரமாயிருக்கக்கூடும் என்பதையும் ஆண்டவர் அந்நாட்களில் எனக்கு வெளிப்படுத்தினார்.

அந்நாட்களில் ஆண்டவர் என் எதிர்காலத்தைக் குறித்து உலகம் திட்டமிடுவதுபோல் நான் திட்டமிடாமல் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி இயங்கத்தக்கதாக கற்றுக் கொடுத்தார். நான் போதகரது வீட்டிலிருந்த இரண்டு வார காலத்தில் எனது எதிர்கால ஏற்ற துணையை கண்டடைவது குறித்து, ஆண்டவரையே பூரணமாய் நம்பி சார்ந்து கொள்ள என்னை அர்ப்பணித்தேன். தேவ கிருபையினால் நான் ஒரு சரியான நபரை கண்டடைய விரும்புகிறேன். ஆவிக்குரிய, சரீரப்பிரகாரமான மற்றைய

நிலைகளில் எவ்விதத்திலும் குற்றப்படுத்தப்படக் கூடிய எந்த பெண்ணையும் நான் விரும்பவில்லை. 1கொரி.7ஆம் அதிகாரத்தை நான் வாசிக்கையில் மாம்சீக நிலைக்குட்பட்டிருப்போரால் தேவனைப் பிரியப்படுத்த இயலாது என்ற காரியம் எனக்கு தேவனால் வெளிப்படுத்தப்பட்டது. எனவே எவ்வித சலனமுமின்றி ஆண்டவருக்காக என்னால் காத்திருக்க முடிந்தது. நான் அவருக்குக் காத்திருப்பேனாகில் ஏற்ற வேளையில் அவருடைய திட்டப்படி எனக்கு அவர் ஒரு நல்ல மனைவியைத் தருவாரென்று முழு நிச்சயமாய் நம்பினேன். இக்காரியம் என் வாழ்வில் எதிர்காலத் துணையைக் குறித்து எனக்கிருந்த பாரத்தை முற்றிலும் என்னை விட்டு அகற்றிப் போட்டது.

ஆம்பர் கூறுகிறார் . . .

என் நினைவுக்கெட்டிய நிலையில் தேவனுடைய கரம் என்மேல் இருப்பதை நான் தொடர்ந்து உணர்ந்து வருகிறேன். குறிப்பாக கடந்த மூன்றாண்டு காலமாக ஆண்டவர் என் இருதயத்தைப் பக்குவப்படுத்தி, தம்மோடு எனக்கு தனிப்பட்ட நெருக்கம் உண்டாயிருக்க வேண்டுமென்று சுட்டிக் காட்டுவதைப் பெரிதும் அறிந்திருக்கிறேன். குறிப்பாக நாங்கள் எந்தப்பகுதியில் வளர்ந்து முதிர்ச்சியுற வேண்டுமென ஆண்டவரிடம் கேட்கும்படி பாஸ்டர் மேரி லோவா எங்களுக்கு கற்பித்தார். அதன்படியே ஆண்டவரும் ஒரு குறிப்பிட்ட இரவு தியான வேளைக்கு முன்பாக எனது சுயத்தை எனக்குச் சுட்டிக்காட்டி, ஆண்டவரது காரியங்களுக்கு நான் நேரம் ஒதுக்கும்படி என்னை அறிவுறுத்தினார்.

நான் என்னை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்த போது, தேவ அன்பின் பிரவாகம் என்னைச் சுற்றிச் சூழ்வதை உணர்ந்தேன். தேவ பிரசன்னத்தினால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டேன். பாஸ்டர் மேரி லோவா ஊழியத்தின் வாயிலாக எனக்குள் விடுதலை ஊழியம் நடப்பிக்கப் படுவதையும் எனக்குள்ளிருந்து ஏதோ ஒன்று வெளியேறுவதையும் எனது வயிற்றுப் பகுதியில் உணர்ந்தேன். கர்த்தர் தொடர்ந்து எனக்குள்ளும், வாலிபர்களிடையேயும் கிரியை நடப்பித்து வருகிறார்.

பிரிட்டோன் கூறுகிறார்

நான் சுய நீதியைக் குறித்து பெருமை பாராட்டுபவனாகவும், சிறு வயதிலேயே இரட்சிக்கப்பட்டு விட்டேன் என்று கூறுபவனாகவும் ஐக்கியத்தில் இணைந்த ஆரம்பத்தில் காணப்பட்டேன். ஆனால் உண்மையில் நான் மறுபிறப்பின் அனுபவத்தை அறியாதவனாகவும் தேவனுக்கு முன் என்னை தாழ்த்தாதவனாகவுமே காணப்பட்டேன்.

ஒரு இரவு சபை ஆராதனையின் முடிவில் நான் தேவனிடம் இன்னும் நெருங்கிச் சேர வேண்டுமென்ற அவா எனக்குள் உண்டாயிற்று. நான் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற வேண்டுமென்று ஆசைப்பட்டு, அதுகுறித்து வினவ பாஸ்டர் பாப்ஐ அணுகினேன். அவர் எனது குறைவை எனக்குச் சுட்டிக்காட்டி நான் இரட்சிக்கப்பட வேண்டுமென்று கூறினார். இது என்னை மிகவும் குத்தினபடியினால் நான் என்னை தேவனுக்கு முன் தாழ்த்த ஆயத்தமானேன். மனந்திரும்புதலின் ஜெபத்திற்குள் போதகர் என்னை நடத்தியபடியே, நான் இயேசுவை என் இரட்சகராகும்படி கேட்டு அறிக்கையிட்டு இரட்சிப்பை சுதந்தரித்தேன்.

பாஸ்டர் பாப் அவர்களின் போதனைகளும், வேதவாசிப்பும் எனக்குள் ஆவிக்குரிய அறிவையும் தெய்வீக காரியங்களை விளங்கிக் கொள்ளும் சத்துவத்தையும் ஏற்படுத்தித் தந்தன.

நான் என்னுடையவைகளை மட்டுமின்றி, மற்றோருக்குரியவைகளையும் கவனித்து முன்னேற ஆவியானவர் எனக்கு அதற்கேற்ற அனுபவங்களைக் கொடுத்து கற்பித்து வருகிறார்.

கிறிஸ்டல் கூறுவது

தேவ கரம் என்னை சிட்சித்துப் போதித்து நடத்துவதை கடந்த காலங்களில் எனக்கு நடந்தேறிய சம்பவங்கள் மூலம் நான் கண்டு கொண்டேன் (எபி.12:5-11)

எனது தற்போதைய வாலிப கட்டத்தினிடையே, எனக்குள் ஒரு விசேஷித்த எதிர்பார்ப்பு தெய்வீக காரியங்களில் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாள் காலையிலும் ஆண்டவர் என் கண்களை, காதுகளைத் தொட்டுத் திறந்து என்னை வித்தியாசமாய் நடத்தும்படி நான் கதறி ஜெபித்து வருகிறேன்.

பாஸ்டர் பாப் மற்றும் பாஸ்டர் மேரி லோவா இருவரும் என்மேல் தங்கள் கைகளை வைத்து ஜெபித்தபோது ஆவியானவருடைய விசேஷித்த தொடுதலை நான் உணர்ந்தேன். தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க அத்தியாவசியமான பாடங்களை நான் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அவரது நுகம் மெதுவாகவும் சுமை லேசாகவும் உள்ளது என்பதை நான் கண்டறிய வேண்டியிருந்தது. இப்புதிய விடுதலையின் ஊழிய வாயிலாக நான் கடந்து செல்லத்தக்கதாக தேவனது ஒத்தாசை எனக்குத் தேவைப்பட்டது. அதற்கென 1பேதுரு 5:7 என்னை உற்சாகப்படுத்தக் கண்டேன்.

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் பாரங்களையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள்.

நான் எனது எல்லாக் காரியங்களிலும் வெற்றியைக் கண்டுவிட வில்லை. எனினும் எனது தவறுகளில் நான் பாடங்கற்று, முன்னேற என்னை விட்டுக் கொடுத்துள்ளேன். கர்த்தருக்காக வாழ வேண்டுமென்ற ஆழமான ஆசை எனக்குள் ஏராளம் இருக்கிறது.

டேனில்லி கூறுகிறார்

பரிசுத்த ஆவியானவர் கடந்த சில வருடங்களில் பல்வேறு விதங்களில் எனக்குள் கிரியை செய்துள்ளார். கர்த்தரோடு இசைந்து வாழ்வதை சபையின் மூலம் அதிகமாய் நான் கற்றுக் கொண்டேன். 1995 ஆகஸ்ட் முகாம் முடிந்து வீட்டுக்குச் செல்லும் நேரம் வந்தபோது நான் கூறியது ''பாஸ்டர் பாப் உங்களைப் பிரிந்து போவது எனக்கு வருத்தமளிக்கிறது. குடும்பத்தை விட்டுப் பிரிவது போல் உணருகிறேன்'' என்றேன்.

1996 மே மாதத்தில் இன்டியானா, லாபாஸில் நடந்த முகாம் என்னை மிகவும் எழுச்சிக்குள்ளாக்கிய ஒன்றாகும். அதுபோல 1996 செப்டம்பரில் தெற்கு இன்டியானாவில் நடந்த முகாமின்போது எங்கள் தாலந்துகளை தேவனுக்காக பயன்படுத்துவது பற்றி போதகர்கள் கற்பித்த விதம் எங்கள் வாழ்க்கையையே மாற்றி அமைத்து விட்டது.

மட்டுமின்றி தற்கால தடுமாற்ற இசையின் மயக்கத்திலிருந்து நாங்கள் விடுவிக்கப்பட்டோம். அது போலவே என் மேலிருந்த யேசபேலின் ஆவி எ னும் சாபக்கட்டிலிருந்து நான் விடுவிக்கப்பட்டேன்.

கர்த்தருடைய கிருபை என்னில் அதிகமாய் பெருகிற்று.

ஜேக்கப் கூறுகிறார்

நான் புதிய பிலதெல்பியன் வேத பாடக் கூட்டத்திற்கு முதல்முறையாக வந்த போது தானே, அதனைப் பெரிய ஆசீர்வாதமாக உணர்ந்தேன். அதற்கு முன்பாகவே எனது பெற்றோரும் என் அண்ணனும் அவ்வேதபாட வகுப்பில் பங்குபெற்று வந்தார்கள். அதனை ஆசீர்வாதமாய்க் கண்ட பெற்றோர் முழுக் குடும்பத்தோடும் அதில் பங்குபெற விரும்பியதின் விளைவாகவே, என் வாழ்விலும் ஒரு திருப்புமுனை உண்டாகத்தக்கதாக இவ்வேது உண்டாயிற்று.

நான் வேதபாட வகுப்பில் பங்குபெறத் துவங்கி சிலமாதங்களில் குடும்பமாய் நாங்கள் தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டோம். இது என் வாழ்வில் நிகழ்ந்த மிக முக்கிய சம்பவமாகும். அந்நாள் முதல் என் நிலையில் பெரும் மாற்றங்கள் உண்டாகி விட்டன.

நான் ஆரம்பத்தில் சபைக்குள் வந்தவுடனேயே வேதம் வாசிப்பதில் மிகுந்த பிரியமுள்ளவனாய் மாறி விட்டேன். அவ்வாறு நான் வேதம் வாசித்தபோது, பிசாசை எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவனாகவும் கர்த்தரோடு நடக்கக் கூடிய அனுபவத்திற்குரியவனாகவும் அது என்னை மாற்றி விட்டது.

மட்டுமின்றி நான் மற்ற வாலிபர்களை அறிந்திருந்த போதிலும், அவர்களிலொருவனாக காணப்படும்படி அவர்களுடன் ஐக்கியங் கொள்ளாதிருந்தேன். ஆனால் தெற்கு இன்டியானா வாலிபர் முகாமுக்குப் போய் வந்தபின்னரே நானும் அவர்களிலொருவனாகி விட்டதுமல்லாமல் ஒருவரையொருவர் நேசிக்கிற, கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுகிற அனுபவமும் எனக்குக் கிட்டியது. இப்பொழுது எனக்குள் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்றே என்னால் விவரிக்க முடியவில்லை.

ஜெரேமியா கூறுகிறார்

ஐக்கியத்தில் தற்போது தான் அங்கமானவன் நான். 1996 நவம்பரில் தான் நான் என் பாவங்களிலிருந்து மனந்திரும்பினேன். நான் மனந்திரும்பியவுடன் தானே வேத வசனத்தைக் குறித்த ஒரு தாகம் எனக்குள் உண்டாகிவிட்டது. நான் அதனைப் படிக்க படிக்க நான் அதற்கு அடிமையாகத் துவங்கினேன். நான் இரட்சிக்கப்படுமுன் வேத வாசிப்பில் இவ்வளவு தீவிரம் காட்டியது கிடையாது. இப்போதோ நான் வேத வசனங்களின் ஆழத்தை விளங்கிக் கொள்ளவும் துவங்கியுள்ளேன். நான் தற்போது வாலிபர்குழுவின் ஓர் அங்கம். குழுவாக நாங்கள் கிராண்ட் டேட்டன்ஸீக்குப் போயிருந்தோம். அங்கு நாங்கள் திருச்சபை வளாகத்திலுள்ள மரங்களை வெட்டி அவைகளை விற்றோம். நான் இரட்சிக்கப்படாதிருந்திருப்பேனாகில் எங்களது பயணத்தை வெறும் சுற்றுலாவாகத் தான் கருதியிருப்பேன். இப்போதோ பொறுப்புள்ளவனாகவே நான் என்னை விளங்கப் பண்ணினேன். எனவே அவர்களது எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வண்ணம் நான் உழைத்தேன். எனது பயணம் அவர்களுக்கு பயனுள்ளதாயிருக்கும்படி அப்படிச் செய்தேன்.

நான் கிறிஸ்தவனான போது எனது அனைத்து நிலைகளிலும் என்னைச் சுற்றியுள்ள மக்கள் வித்தியாசத்தைக் கண்டார்கள். இன்னமும் நான் எவ்வளவோ காரியங்களில் சீர்பொருந்தி முன் செல்ல வேண்டியிருந்தது. இதனிடையே என்னை வருந்தச் செய்த காரியம்,

இரட்சிக்கப்படாத அநேகர் தங்களைக் குறித்து மிஞ்சி எண்ணியது தான். நான்கூட இரட்சிக்கப்படாத காலத்திலேயே இதுபோல ''நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்'' எனத் தவறாக அறிக்கையிட்டுள்ளதை அப்போது உணர்ந்தேன்.

மேத்யூ கூறுகிறார்

1995ஆம் ஆண்டின் ஆரம்ப நாட்களில்தான் நான் கர்த்தருடன் நடக்கத் துவங்கினேன். என்னுடைய பெற்றோருடன் புதிய பிலதெல்பியன் சபை வேதபாடக் கூட்டத்துக்கு போகத் துவங்கியதிலிருந்துதான் ஆண்டவருடனான தொடர்பு எனக்கு உண்டாயிற்று. தேவனுடைய திட்டத்தைக் குறித்தும், தெய்வீக காரியங்களைக் குறித்தும் நான் சிறிதளவு விளங்கிக் கொண்ட நிலையில், அவ்வருடம் மே மாதம் நானும் எனது பெற்றோரும் தண்ணீரில் முழுகி அங்கு ஞானஸ்நானம் பெற்றோம். அப்போது தான் மற்றவர்களுடனான நட்பும், ஐக்கியமும் எனக்கு கிட்டத் துவங்கியது.

குறிப்பாக இன்டியானா, லாபாஸிலுள்ள ஆலய மேற்கூரை மாற்றும் பணியின் போது அதிக நெருக்கம் எங்களுக்குள் உண்டாயிற்று. பின்னர் தெற்கு இன்டியானா முகாமின்போது அது அதிகம் பெலப்பட்டது.

1996 எங்களனைவருக்கும் ஒரு பெரும் மறுமலர்ச்சியின் ஆண்டாகும். ஆவியானவர் மூலம் என் வாழ்வில் பெரும் அசைவு உண்டானது. எங்கள் குடும்பமே கர்த்ருடைய காரியங்களில் பெரிதும் முன்னேறி வரலாயிற்று. உலக காரியங்களிலிருந்து தூரமாய் ஒதுங்கி வர ஏது உண்டானது. பிரிட்டனும், ஜெரேமியாவும் இரட்சிப்படைந்து குழுவில் சேர்ந்தனர். தேவ வசனத்தின் மீது மிகுந்த தாகமும், ஏக்கமும் என்னில் உண்டாயிற்று. வரும்நாட்களில் இன்னுமதிகம் ஆண்டவரோடு நெருங்க வாஞ்சை உண்டாயிற்று. நீங்களும் அதுபோல் ஆண்டவரை நெருங்க உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

வாலரி கூறுகிறார்

1996 மே மாதத்தில் இன்டியானாவிலுள்ள லாபாஸ் எனுமிடத்தில் ஆவியானவரின் நடத்துதலோடு எங்கள் வருடாந்திர குடும்ப முகாம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. புதிய பிலதெல்பியன் சபையின் மூன்று ஐக்கியங்களில் லாபாஸ் ஐக்கியமும் ஒன்று. வீடு வீடாக சென்று நற்செய்தி பரப்பிய எங்கள் ஊழியத்தின்போது அநேக இருதயங்களை தேவன் தொட்டார். ஆயினும் எனக்குள் ஏதோ குறைவுபட்டது போல் தோன்றியது. பின்னர் தான் நான் விளங்கிக் கொண்டேன். அது ஆவியானவருடைய அபிஷேகத்தை நான் பெறாமலிருப்பதே என்று. எனக்குள் ஒரு குறைவை வைத்துக் கொண்டு

நற்செய்தி பரப்பமுயன்ற என் நிலை எனக்குள் ஆவியில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது. அதன் விளைவாக நான் தேவ சமூகத்தில் என்னைத் தாழ்த்திய போது அதற்கான மன்னிப்பையும், ஆவியின் அபிஷேகத்தையும் ஆண்டவர் எனக்குத் தந்தருளினார். அபிஷேகம் பெற்றபோது என் மனதை நிரப்பிய சமாதானத்துக்கு ஒப்பான ஒன்றை நான் அதற்கு முன் அனுபவித்திருக்கவில்லை. எனக்குள் பெரும் சுத்திகரிப்பும் மாற்றமும் உண்டாயின.

எங்களது தெற்கு இன்டியானா முகாமில் நாங்கள் கற்றுக் கொண்ட காரியங்களில் மிக முக்கியமானது ஆண்டவரது சத்தம் கேட்பது குறித்ததாகும். ஆயினும் நாங்கள் சில தடைகளை எங்களில் கொண்டிருந்தபடியால் தேவ சத்தம் கேட்க இயலாதவர்களாயிருந்தோம். குறிப்பாக தற்கால தடுமாற்ற இசைக்கு எங்களில் அநேகர் அடிமைகளாயிருந்தோம். இந்நிலையில் போதகர், எங்களை கட்டி வைத்திருந்த அந்த அசுத்த கட்டிலிருந்து இயேசுவின் நாமத்தில் விடுதலை உண்டாகும்படி சத்துருக்கெதிராக தமது அதிகாரத்தைப் பிரயோகித்தார்.

எனது அண்ணனுடைய வாழ்விலும் தேவன் கிரியை செய்தார். அவருக்குள்ளிருந்த பெருமையின் ஆவியிலிருந்து கர்த்தர் அவரை விடுவித்தார். எங்கள் குடும்பத்திலேயே ஒரு பெரும் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று எனலாம்.

கிறிஸ்துவுக்குள்ளான எங்கள் குடும்பத்திலும், குழுவிலும் அதிகமாய் அது பெருகிற்று.

உடன்படிக்கையின் மகத்துவம்

உடன்படிக்கையைக் குறித்த காரியத்தின் கடைத்தொகை யாது? அது உடன்படிக்கையின் மகத்துவமே. நமது தேவன் உடன்படிக்கையின் தேவனாயிருக்கிறார். நீங்கள் உங்கள் துணைவியாருடன் திருமண ஒப்பந்தத்தில் உடன்படிக்கை செய்தபடியே வாழ்க்கையை காத்து நடக்கிறீர்களா? உயில் எழுதியவர் உயிர்போன பின்னரே உயில் உயிர் பெறுகிறது. நீங்கள் சுயத்திற்கு மரித்திருக்கிறீர்களா?

கடைசிக்கால திருச்சபைக்கு ஆண்டவர் தாம் எடுத்துக் கொள்ளப்போகும் மணவாட்டியின் நிலை எப்படியிருக்க வேண்டுமென இந்நாட்களில் வெளிப்படுத்துகிறார். கறைதிரையற்ற தூய்மையான வஸ்திரந்தரித்த மணவாட்டியை தமது வருகையில் தம்மோடு சேர்த்துக் கொள்ளவே ஆண்டவர் விரைவில் வரப்போகிறார் என்று வேதம் தெளிவுபடுத்துகிறது (வெளி.19:7,8; எபே.5:27)

ஆதியாகமம் 24ஆம் அதிகாரத்தில் மணவாட்டியின் ஆயத்தம் குறித்த ஓர் அற்புத சித்திரத்தை நாம் கண்ணுற முடிகிறது. தகப்பனாகிய ஆபிரகாம் தனது குமாரனுக்குப் பெண் தேடும்படி தனது நம்பிக்கைக்குரிய ஊழியக்காரனை அனுப்புகிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவ்வாறு அனுப்புகையில் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவருக்கு முன்பாக தனது வேலைக்காரனை உடன்படிக்கைக்கு உட்படுத்தியே அவனை அவர் அனுப்புவிக்கிறார்.

''நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண் கொள்ளாமல்;'' ஆதியாகமம் 24:3

தகப்பனது வார்த்தைகளுக்கு ஊழியக்காரன் அளித்த உத்தரவாதமும் எழுப்பிய கேள்வியும் நமக்கு அதிக விளக்கங்களை அள்ளித் தருகின்றன.

''அதற்கு அந்த ஊழியக்காரன் அவ்விடத்துப் பெண் என் பின்னே இந்த தேசத்துக்கு வர மனதில்லாதிருந்தால், நீர் விட்டுவந்த தேசத்திற்குத் தானே உம்முடைய குமாரனை மறுபடியும் அழைத்துப் போக வேண்டுமோ என்று கேட்டான். ஆதி.24:5

அதற்கு தகப்பனளித்த பதில் அச்சுறுத்தல் நிறைந்த ஒன்றாகும்.

பெண் உன் பின்னே வர மனதில்லாதிருந்தாளேயாகில், அப்பொழுது நீ இந்த என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்; அங்கே மாத்திரம் என் குமாரனை மறுபடியும் அழைத்துக் கொண்டு போக வேண்டாம் என்றான். ஆதி.24:8

தேவன் நமது அத்துமீறல்களை ஆமோதிப்பதில்லை. அவர் தேவனுடைய குடும்பத்திலிருந்தே தமது குமாரனுக்கான மணவாட்டியைத் தெரிந்தெடுக்கிறார். ஆண்டவருக்கு மணவாட்டியைக் கண்டெடுக்கும் பொறுப்பு பரிசுத்தாவியானவருடையது. பிதாவின் ஆணைக்குட்பட்டு அவர் அம்மணவாட்டியை ஆயத்தப்படுத்துகிறார். குமாரன் இருக்குமிடத்திற்கு மணவாட்டியை அழைத்து வர வேண்டியதே உடன்படிக்கையின்படி ஆவியானவருடைய பொறுப்பு. குமாரன் தமது பிதாவின் ராஜ்யத்தில் வீற்றிருக்கிறார். பிதா நிர்மாணித்த ஆவிக்குரிய விதிமுறைகளால் தேவனுடைய ராஜ்யம் ஆளுகை செய்யப்படுகிறது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராகிய திரியேக தேவனே பரலோக ராஜ்யத்தின் ஆளுநராயிருக்கிறார். அவரது செயல் திட்டங்களைப் பொறுத்தே அவரது கிரியைகளுக்கான வேளைகளும் அமையப் பெறுகின்றன. எனவே தேவ பிள்ளைகளாகிய நாம் அவரது செயல்திட்டங்களுக்கு உட்பட்டதாய் நமது வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

குமாரன் இருக்குமிடத்திற்கு வர வேண்டும் : இச்சரித்திர சம்பவத்தில் ஊழியக்காரனின் எதிர்பார்ப்புகளுக்கேற்றவளாக மணவாட்டி தன்னை விளங்கப்பண்ணுகிறதை நாம் கண்ணுற முடிகிறது. கிறிஸ்துவின் மணவாட்டியும் அப்படியே ஆவியானவரின் எதிர்பார்ப்புகளுக்கேற்றவளாக தன்னை விளங்கப் பண்ண வேண்டும். நீ இந்த மனிதனோடே போகிறாயா? என்று அவளிடம் கேட்கப்பட்ட போது, நான் போகிறேன் என்று அவள் பதில் சொன்னதாகவும் நாம் அங்கே காண்கிறோம். சந்தேகத்திற்கிடமின்றி, உண்மையான மணவாட்டி ஆவியானவரைப் பின்பற்றிப் போக ஆயத்தமும் அர்ப்பணிப்புமுடையவளாகவே இருப்பாள். இதிலே மிக முக்கியமான மற்றொரு காரியம், மணவாளன் இருக்குமிடம் நோக்கி மணவாட்டி போகிறாள் மாறாக அவள் பிறந்து, வளர்ந்து, வாழுமிடம் நோக்கி அவர் வந்து சேருவதில்லை.

மணவாட்டி எழுந்து போனாள் : அவளும் அவளது வேலைக்காரிகளும் ஊழியக்காரனைப் பின்பற்றிப் போனார்கள். ஊழியக்காரன் அவளைத் தனது எஜமானின் குமாரனிடத்தில் அழைத்துக் கொண்டு போனான். அவர்கள் நெருங்கி வருகையில் எதிர்ப்பட்ட நபரைக் குறித்து அவள் ஊழியக்காரனிடம், ''நம்மை எதிர் கொண்டு வரும் அம்மனிதன் யார்? என்று கேட்க அவ்வூழியக்காரனோ, ''அவரே என் எஜமான்'' என்றான். மட்டுமின்றி நடந்த அனைத்தையும் ஊழியக்காரன் குமாரனுக்கு விளக்கிச் சொன்னான்.

முடிவாக ஆண்டவர் உங்களோடு இடைபட இடங்கொடுங்கள். ஆவியானவர் உங்களை ஆட்கொண்டு வழி நடத்தட்டும். அவர் உங்களுக்குள் கிரியை செய்யட்டும். பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்தட்டும். அவர் உங்களை இயேசுவிடம் இட்டுச் செல்லட்டும். அவர் இயேசுவையே மகிமைப்படுத்துபவர். அவர் உங்களுக்கு இயேசுவைக் குறித்த காரியங்களை விவரித்துக் காண்பிப்பார். அவர் உங்களில் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவார். நீங்கள் இந்த பரிசுத்த ஆவியானவரை பின் செல்ல உங்களை ஒப்புக் கொடுக்கையில் கிறிஸ்துவுக்குள் புதிய சுதந்தரத்தை ஆண்டவர் உங்களுக்குத் தந்தருளுவார். ஆமென்! கர்த்தாவே வாரும்!

''ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்''. வெளி.22:17

ஆண்டவருடைய நாமம் மகிமைப்படுவதாக. கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

7. பிரதி பலிப்புக்கள்

எண்ணங்களும் கேள்விகளும்

அதிகாரம் 1

உருவாக்குதலின் ஆண்டுகள்

அவர்கள் எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின் சென்றார்கள்

வாசிக்க : லூக்கா 5:1-11

எனது ஆரம்பம் சரியானதே. நான் ஊழியத்திற்கான அழைப்பை தேவனிடமிருந்து பெற்றிருந்தேன். கர்த்தர் எனக்களித்த அழைப்புக்கு என்னை அர்ப்பணிக்குமுன் அதைக் குறித்து பல மாதங்கள் யோசித்துக் கொண்டிருந்தேன்.

எனது அர்ப்பணிப்பு உண்மையானது. நான் செய்த காரியம் பொதுவாக அழைப்புப் பெற்ற அனைவருமே செய்யக்கூடியது தான். நான் அழைப்பை ஏற்றதுடன் அதற்கான ஸ்தாபன ரீதியான பயிற்சியையும் பெற்றுக் கொண்டேன். எனது ஸ்தல சபையும் என்னை அங்கீகரித்து என்னை ஊழியத்தில் ஏறபடுத்தி வைத்தது.

சபையின் மூப்பர்கள் என்மேலும் என் மனைவியின் மேலும் கைகளை வைத்து எங்களை ஊழியத்திற்குப் பிரித்து விட்டார்கள். நாங்கள் ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டோம். கர்த்தரும் எங்களை இரக்கமாய் பயன்படுத்தி வந்தார்.

1) ஸ்தல சபையின் அங்கீகாரம் தேவனுடைய அதிகாரத்தை எப்பொழுது செயல்பாட்டுக்குரியதாக்குகிறது?

2) கிறிஸ்தவ ஊழியத்தில் சபையினால் அனுப்பப்படுவதே போதுமானதாயிருக்க முடியுமா?

3) எல்லாவற்றையும் விட்டுப்பின் செல்லுதல் என்பதன் உள்ளான அர்த்தம் என்ன?

4) எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின் செல்ல நமக்கு உத்தரவாதமளிப்பவர் யார்?

5) அரண்களை எதிர்த்து நிற்க வேண்டிய (2கொரி.10:36) அவசியம் நமக்கு உண்டானது ஏன்?

6) நீங்கள் பாதிக்கப்படாதபடி உங்களை தற்காக்கும் உடன்படிக்கை எவ்விடத்திலுள்ளது?

7) தேவனுடைய வார்த்தையை நாம் எங்ஙனம் கேட்டு, விசுவாசிக்க வேண்டும்?

அதிகாரம் 2

வனாந்தர வருடங்கள்

நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்

வாசிக்க : லூக்கா 13:22-30; 21:8மு

இயேசு சொன்னார், ''ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான். ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்'' (யோவான் 3:3பி, 5பி)

எனது ஆரம்பகால ஊழியம் காண்கிறதற்கேதுவான ஊழியமாயிருந்ததே தவிர பிரவேசிக்கிறதற்கேதுவான ஊழியமாயிருக்க வில்லை. நான் மறுபடியும் பிறந்த அல்லது இரட்சிக்கப்பட்ட ஊழியனாயிருந்தேன். எனினும் ஜலத்தினால் பிறந்திருக்கவில்லை. அநேக ஆவிக்குரிய நிலைப்பாடுகளை ஆத்துமாவில் அடங்கப் பெற்றிருந்தேன். ஆயினும் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் (எபே.5:26) உண்டாகும் சுத்திகரிப்பின் அனுபவத்தை நான் பெற்றிருக்கவில்லை. ஆத்தும இரட்சிப்பிற்கேதுவான சுத்திகரிப்பை நிறைவேற்றுவதில் திருவசனமே பிரதான பங்கை வகிக்கிறது என்பதை (யாக்.1:21) அனுபவப் பூர்வமாய் நான் அறியாதிருந்தேன்.

நான் ஆவியினாலும் பிறந்திருக்கவில்லை. ஆவியானவரை அனுபவரீதியாகவும், ஆக்கப்பூர்வமாகவும் நான் சரிவர விளங்கிக் கொண்டிருக்கவில்லை. பரிசுத்தமாகுதலுக்கேதுவான அன்பின் பிரவாகத்தை ஆவியானவருக்குள் நான் ருசித்திராதிருந்தேன். நான் இறையியலில் பட்டம் பெற்றிருந்தேன். எனினும் சத்தியத்தை விவரித்துக் காண்பிக்கும்படி ஆவியானவருக்கு நான் இடங்கொடுத்ததேயில்லை. கிறிஸ்துவின் நெருக்கி ஏவும் அன்பை ஆவியானவர் என் உள்ளத்தில் வைக்க நான் அவரை அனுமதிக்கவேயில்லை. இவ்வாறாக நான் பெற்றிருந்த அனுபவங்கள் அனைத்துமே என்னை பெலவீனத்திற்குள்ளாக்கக் கூடியவை தான். நான் வஞ்சிக்கப்பட்டிருந்தேன்.

1) யார் மறுபடியும் பிறக்க வேண்டும்? ஏன்?

2) ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது என்றால் என்ன? அது எவ்விதம் நிகழுகிறது?

லூக்கா 8:22-25 வாசிக்கவும்

3) ''அக்கரைக்குப் போவோம்'' என்று சொன்னது யார்?

4) கிறிஸ்துவோடுகூட நாம் எங்கே கடந்து போகிறோம்?

5) இயேசுவை நாம் எந்த இடத்தில் தூங்க விட்டோம்?

6) நாம் ஏன் எரிந்து போகிறோம்?

7) நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குட்படக் கூடாமல் வஞ்சிக்கப் பட்டுப்போவது எங்ஙனம் நிகழுகிறது?

அதிகாரம் 3

ஆண்டவரைப்பற்றும் அன்பு

இதை வாங்கி உங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ளுங்கள்

வாசிக்க : லூக்கா 13:1-13, 22-30; 22:17,42

தேவனுடைய ராஜ்யத்தில் அனைத்தும் ஒழுங்குக்குட்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அரசமைப்புக்கும் ஒரு ஆளுநர், ஒரு கால அட்டவணை (நாட்காட்டி) மற்றும் விதிமுறைகள் உண்டு. தேவனுடைய ராஜ்யத்தில் நாம் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன் நம்மைத் தாழ்த்தி, அவர் சத்தம் கேட்டுக் கீழ்ப்படிய வேண்டியவர்களாயிருக்கிறோம். அவருடைய கற்பனைகளுக்கு இணங்கி அவைகளைக் கைக்கொள்வதன் மூலம் நமது ராஜாவின் மேல் நமக்கிருக்கும் பற்றையும் ராஜவிசுவாசத்தையும் நாம் அவருக்கு முன் விளங்கப் பண்ணுகிறோம்.

இயேசு கூறுகிறார், ''இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள் அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்''.

தேவ சமூகத்தில் நாம் புசிக்கிற, பருகுகிற ஆவிக்குரிய ஆகாரங்களால் நம்மை நாம் வளப்படுத்திக் கொள்கிறோம். குறிப்பாக வேதபாட வகுப்பு மற்றும் ஜெபக் கூட்டங்களை நாங்கள் மிகவும் முக்கியப்படுத்துகிறோம். வேத பாடக் கூட்டங்கள் மூலம் நாங்கள் அதிகமாய் ஆசீர்வதிக்கப்படுகிறோம். மற்றவர்களும் வந்து, ஆசீர்வாதம் பெறும்படி,

நாங்கள் இதுகுறித்து அனைவருக்கும் அழைப்புக் கொடுத்து அவர்களை ஐக்கியத்திற்குள் கொண்டு வருகிறோம். எனினும் இதற்குப் பின்னரும் ஆண்டவர் இயேசு இப்படி சொல்லக்கூடும், ''அக்கிரமச் செய்கைக்காரரே நீங்கள் யாவரும் என்னை விட்டு அகன்று போங்கள். நான் உங்களை அறியேன்''

தாம் குடிக்கும்படி இயேசு பிதாவிடமிருந்து ஒரு பாத்திரத்தைப் பெற்றார். நாம் பருகும்படிக்கு இயேசுவும் நமக்கொரு பாத்திரத்தை தந்து போயிருக்கிறார். அது நம்முடைய மீட்பு மற்றும் பாவ மன்னிப்புக்கேதுவான இரகசியத்தை உள்ளடக்கியது. தேவ பார்வையில் நாம் பெற்றனுபவிக்கும் சுத்திகரிப்பு மற்றும் நீதிகரிப்பை அது விளங்கப்பண்ணுகிறது. நாம் பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்படுவதைக் குறித்து அது சாட்சி கொடுக்கிறது.

1) தேவனுடைய ஜனங்கள் எனப்படுபவர்கள் யார்? (2கொரி.6:16)

2) தேவனுடைய ஜனங்களாய் நாம் உண்மையில் உருவாக்கப் படுவது குறித்த தேவனுடைய திட்டம் எப்படிப்பட்டது? (எபி.8:10)

3) இந்தத்திட்டம் எப்பொழுது செயல்பாட்டுக்குள் வருகிறது? (வெளி.2:11)

4) தெய்வீக திட்டம் எனக்கு வெளிப்படுத்தப்படும்படி நான் எங்கே போக வேண்டும்?

5) நான் ஏன் ஆண்டவரே?

6) நாம் எப்படி தேவனிடம் அன்பு கூருகிறவர்களாக முடியும்?

7) தேவ பயம் அற்றுப் போகக்கூடிய ஒன்றா அல்லது அதிகரிக்கக் கூடியதா?

8) நாம் எப்பொழுது உணர்வுப் பூர்வமாக நம் நடைமுறை வாழ்க்கையில் நம்மை அவருக்கேற்றவர்களாக விளங்கப் பண்ணக் கூடும்?

அதிகாரம் 4

தவறுகளை சரிசெய்தல்

எல்லாவற்றையும் துறத்தல்

வாசிக்க : லூக்கா 5:17-26; 13:20,21; 14:33; லேவி.5:16

பூமியில் என் பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரன் அதிகாரம் பெற்றிருப்பதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எப்படியோ இதுவே தேவனுடைய ராஜ்யத்திற்கான ஒரே திறந்த வாசலாம். மனந்திரும்புதலின் மூலம் கிறிஸ்துவை என் வாழ்வின் ஆண்டவராக நான் அடையாளங் காட்டுகிறேன். இறுதியாக உடைக்கப்பட என்னை ஒப்புக் கொடுப்பதினிமித்தம் அவருடைய வழிகளுக்கு என்னை விட்டுக் கொடுக்கிறேன். அவருடைய சீஷனாகும்படி எனக்குண்டான யாவற்றையும் நான் விட்டுவிட வேண்டியதாக்கும்; நான் அவருடைய வார்த்தைக்கு நிபந்தையின்றிக் கட்டுப்படுகிறவனாகவும் அதை நம்பிக் கீழ்ப்படிகிற வனாகவும் என்னை விளங்கப் பண்ண வேண்டும்.

1) தேவனுடைய ராஜ்யத்தில் அநேகர் உட்பிரவேசிக்கக் கூடாமற்போகும். (லூக்.13:24). இந்நிலையில் இழப்பீடு செய்ய வேண்டியது யார்?
2) தேவ ராஜ்யத்தில் பிரவேசிப்பதில் இழப்பீடு முக்கியப் பங்கு பெறுவது எப்படி?
3) நான் என் பாவங்களுக்கான மன்னிப்பை தேவனிடமிருந்து பெற்றிருக்கிறேன் எனில் அதற்கான ஈட்டுக்காரியம் எப்பொழுது நிகழ்ந்தது?
4) தண்டத்தீர்வை செலுத்தப்பட்ட இடம் எது?
5) இழப்பீடு செலுத்தும்படி நான் யாரை, எந்த விதிமுறைகளின் கீழ் அணுகுகிறேன்?
6) இழப்பீட்டை நிகழ்த்துவது எது?
7) இழப்பீடு செய்யும்படி நான் கடைபிடிக்க வேண்டியவை யாவை?
8) இழப்பீடு நிகழ்வின்போது எனக்கு என்ன சம்பவிக்கிறது?
9) நான் இழப்பீடு செய்யாத பட்சத்தில் எனக்கு சம்பவிப்பதென்ன?
10) பாவத்தின் அதிகார வல்லமையிலிருந்து நான் விடுவிக்கப்பட விருப்பமுள்ளவனாயிருக்கிறேனா?
11) நான் வஞ்சிக்கப்படுவது சாத்தியம் தானா?
12) வஞ்சிக்கப்படாமலிருக்க நான் என்னை தற்காத்துக் கொள்ளுவது எப்படி?

அதிகாரம் 5

கிறிஸ்துவுக்குள்ளான மனிதன்

யாரோ ஒருவர் என்னைத் தொட்டார்

வாசிக்க : லூக்கா 8:43-48

எனது இலக்கும் என் இருதயத்தின் ஆவலும் நான் என் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் என் ஆண்டவருடன் நடக்கிறவனாயிருக்க வேண்டும் என்பதே. தேவனுடைய ராஜ்யத்திற்குட்பட்டு நடப்பதை வாழ்க்கை முறையாக்கிக் கொள்வது அவசியம். ஆதி கிறிஸ்தவர்களில் காணப்பட்ட விலையேறப்பெற்ற விசுவாசத்திற்காக நாமும் போராடுகிறவர்களாயிருக்க வேண்டும். தெய்வீக சுபாவத்திற்கு நாம் பங்காளிகளாக வேண்டும். அந்தகாரத்தின் அதிகாரத்தினின்று அவர் நம்மை விடுதலையாக்கி, ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரமாகிய தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்குட்படுத்தினார் என்று வேதம் நமக்கு தெளிவுபடுத்துகிறது. (கொலோ.1:13) இயேசுவின் இதயக்கதறல் கர்த்தருடைய ஜெபத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. *உம்முடைய ராஜ்யம் வருவதாக. பரலோகத்தில் உம்முடைய சித்தம் செய்யப்படுவதுபோல பூமியில் உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக. (லூக்கா 11:2)* நமது அனுதின வாழ்க்கையில் பரிசுத்த ஆவிக்குள் நடக்கிறவர்களாய் நம்மை நாம் விளங்கப் பண்ண வேண்டும்.

நான் கற்று நிச்சயித்துக் கொண்ட ஒரு மாபெரும் ஆவிக்குரிய உண்மை என்னவெனில் நமது பூரண அர்ப்பணித்தலை ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார் என்பதே. மட்டுமின்றி தேவனில் அன்பு கூருவதென்பது மற்றவர்களில் நாம் பாராட்டும் அன்பையும் உள்ளடக்கியே கிரியை செய்கிறது என்பதையும் நான் கண்டு கொண்டேன். (1யோவா.4:20)

இந்த அன்பினாலேயே இயேசு சொன்னார், ''நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதினால் என் சீஷர் என்று அறியப் படுவீர்கள்'' (யோவான் 13:35)

1) தேவனுடைய ராஜ்யத்திற்கு ஒத்தபடி நடந்து கொள்ள யாரை நாம் அணுக வேண்டும்?

2) நாம் தேவனைத் தொடுகையில் நமது மனப்பான்மையில் என்ன நிகழுகிறது?

3) நாம் அவரைத் தொடுகையில் நமது சித்தத்தில் என்ன சம்பவிக்கிறது?

4) அவரோடுள்ள தொடர்பில் எவ்வாறு நாம் அவருடைய நிந்தைகளை நம்மேல் ஏற்கிறோம்? (லூக்.6:22,23)

5) பிரதான கற்பனையைக் குறித்து இயேசு கூறியது என்ன? (மாற்கு 12:29,30,31)

6) நாம் அவரைத் தொழுகையில் மற்ற விசுவாசிகளைக் குறித்து என்ன மனப்பான்மையுடையவர்களாய் காணப்படுகிறோம்? (பிலி.2:2,3,4)

அதிகாரம் 6

நிலைப்படுத்தப்படுதல்

அறுவடையின்போது அவர் ஒரு வேலையாளை அனுப்பினார் (லூக்கா 20:10)

வாசிக்க : லூக்கா 7:18-30; 9:1-6,23-26; 14:27

ஊழியக்காரன் கற்றறிந்திருக்க வேண்டிய முதன்மையான பாடம் சீஷத்துவவாழ்வு கனி கொடுத்தலை உள்ளடக்கியது என்பதையே (யோவா.15:8). மாம்ச மனிதன் உருவழிந்து ஆவியின் மனிதன் எழுச்சி பெறும் போது தான் கனிதருதல் சாத்தியமாகிறது. மாம்ச மனிதனை ஒடுக்கி உடைப்பதில் சிலுவை முக்கியப்பங்காற்றுகிறது. எனது பிடிவாதம், சுயம், விருப்பங்கள், வழிகள் உட்பட எனக்கென்றுள்ள அனைத்தையும் சிலுவை சுக்குநூறாக்கி விடுகிறது.

பழைய மனுஷன் உடைக்கப்படுகையில் எனது புதிய மனிதன் உயிர்பெற்று தேவ பிரசன்னத்தில் அமருகிறான். (எசே.36:26,27). நம்முடைய ஆவியுடனே தேவனுடைய ஆவியும் சாட்சி பகருகிறார் (1யோவா.5:8,9,10)

1) தமது சீஷர்களாக விரும்புவோரிடம் கிறிஸ்து எதிர்பார்க்கும் காரியங்கள் என்னென்ன?

2) நாம் சிலுவைக்கு நம்மை அர்ப்பணிக்கையில் நமக்கு தந்தருளப்படும் வாக்குகள் என்னென்ன? (பிலி.3:10; 2தீமோ.2:11,12; 1பேதுரு 4:12,13,14)

3) கர்த்தர் ஏன் நம்மை சிட்சித்து, திருத்துகிறார்? (எபி.10:11,12)

4) கிறிஸ்து எதற்காக நமக்கு மாதிரியை விட்டுச் சென்றார்? (1பேதுரு 2:21)

5) ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கான வாக்குத்தத்தம் யாது? (வெளி.3:21)

முரட்டாட்டத்தை மேற்கொள்ளுதல்

நூலாக்கியோன் மற்றும் அவரது துணைவியாரைப் பற்றிய ஒரு குறிப்பு :

பாப் அவர்களும் திருமதி மேரி லோவா ஸ்வாங்க் அவர்களும் பல ஆண்டுகளாய் உள் நாட்டிலும் வெளி தேசங்களிலும் ஆண்டவரது திருப்பணியை சிரத்தையுடன் மேற்கொள்ளும் ஊழியத் தம்பதிகளாவர். கடந்த இருபது ஆண்டுகளாக தேவனது முழுமையான ஆலோசனைப் பணியை அவர்கள் திறம்பட நிறைவேற்றி வருகின்றனர். தேவனுக்கு முன்பாக ஆவிக்குரிய நிலையிலும் சிந்தனை மற்றும் உணர்ச்சி மண்டலங்களிலும் சரீரப்பிரகாரமாகவும் குற்றமற்றவர்களாய் இருக்க வேண்டியதன் அவசியத்தை இவர்கள் தங்கள் போதனைகளில் மிகவும் வலியுறுத்துகிறார்கள். அடிப்படை வேத சத்தியங்கள், பரிசுத்தம், அர்ப்பணிப்பு, கனிதருதல் போன்ற ஆதி சீஷர்களின் ஆழமான போதனைகளை இவர்களது ஊழியத்திலும் நாம் காண முடிகிறது. கிருபையினாலுண்டாகும் தெய்வீக சுபாவங்களுக்குப் பங்காளி களாகும்படி பாப் தம்பதியினரின் போதனைகள் நம்மை அறைகூவி அழைக்கின்றன. இருதயத்தில் உண்டாகும் தெய்வீகக் கிரியைகளே விசுவாசத்தின் அடிப்படை வளர்ச்சிக்கு ஆரம்ப ஏதுக்கள் என்பது இவர்களது செய்தியின் சாராம்சமாகும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும், நடத்துதலினாலும் விசுவாசியின் வெற்றி வாழ்க்கை சாத்தியமாகிறது என்பதனை இப்புத்தகம் நமக்குத் தெளிவுற விளக்கிக் காண்பிக்கிறது.

நன்றியறிதலோடு கூடிய துதி ஆராதனையும் ஆவியின் நிறைவோடு கூடிய அர்ப்பணிப்பு வாழ்க்கையும் இவர்களை சாதனை மனிதர்களாய் அடையாளங் காட்டுகின்றன.

Distributed by
பாஸ்டர் K.P. மைக்கேல்சாமி
ஏலிம் - கிறிஸ்துவின் தேவ சபை,
50 L, திருவனந்தபுரம் ரோடு,
பாளையங்கோட்டை - 627 002
இந்தியா